பெரிய அட்டவணைச் சுவடி

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
...தி மகால் நூலகம்
...ம் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

T. 24724

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண்.577

பெரிய அட்டவணைச் சுவடி

பதிப்பாசிரியர்

மருத்துவர் ச. அரங்கராசன்,

சிறப்புக்கேணமைப் பதிப்பாசிரியர்,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

மற்றும்

ஆய்வு மையம்,

தஞ்சாவூர்.

2016] [விலை: ரூ. 200-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	பெரியசுவடி அட்டவணை
பதிப்பாசிரியர்	:	மரு. ச. அரங்கராசன் சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்,
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	:	577
ISBN	:	978-93-85343-15-5
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல்பதிப்பு
வெளியீட்டு நாள்	:	2016
தாள்	:	TNPL 18.6 கி. கி
நூல் அளவு	:	21 X 14 செ.மீ.
பக்கங்கள்	:	384
படிகள்	:	500
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	:	லேமினேசன் அட்டை
பொருள்	:	மருத்துவம்
விலை	:	ரூ. 200/-

வெளியீட்டாளர் முகவுரை

பல்வேறு மொழியில் அமைந்த நூல்கள், பனை ஓலைச்சுவடிகள், காகிதச்சுவடிகள் மற்றும் பழங்கால நிகழ்வுகள், வாழ்வியல் முறைகள், மருத்துவக் குறிப்புகள் கொண்ட ஓவியத் தொகுப்பினையும், இன்ன பிற வரலாற்று தகவல்களையும் தன்னகத்தே கொண்டு திகழ்வதும், தஞ்சை மாநகருக்கு உலக அரங்கில் ஒரு தனிச்சிறப்பினைப் பெற்றுத் தரக்கூடியதும், கல்வி சார்ந்த நிறுவனமானதும் ஆகிய அறிவுக் கருவூலம் தஞ்சை சரசுவதி மகால் நூலகம் ஆகும்.

இந்நூலகத்தில் தமிழ் ஓலைச்சுவடித் துறையில் இலக்கணம், இலக்கியம், மருத்துவம், சோதிடம், மந்திரம் போன்ற துறைகளில் பனை ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப் பெற்று வருகின்றன. அத்தகு சுவடிகளில் இருந்து பல்வேறு தலைப்புக்களில், பல்வேறு பொருண்மைகளில் நூல்கள் பதிப்பிக்கப்பெற்று, நூலகத்தின் வழியாக அச்சாக்கம் பெற்று, ஆய்வாளர்கள், அறிஞர்கள், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வெளியீடு செய்யப்பெற்று விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

அவ்வகையில் இந்நூலகத்தின் புதிய வெளியீடாக மலரும் பெரிய அட்டவணைச்சுவடி என்ற மருத்துவ நூலை தொகுப்பு நூல் என்றே கூறலாம். பாட்டு, உரைநடையுமாக, எளிதாகச் செய்யக்கூடிய கசாய வகைகள், வடகம், நெய் போன்ற அக மருந்துகளும், புற மருந்துகளான புகை, நசியம் என்பனவும், அறுவை மருத்துவத்தில் பயன்படும் காரசிலை, புண்ணுக்கு வெள்ளை சேர்வை என்பனவும் கூறப்பட்டுள்ளது. சித்த மருத்துவ நூல்களில் காணப்படாத ஊர்க்குருவி தைலம் செய்யும் முறை கூறப்பட்டுள்ளது. மகப்பேற்றுக்கான மந்திர மருத்துவம், தலைகுளிக்கத் தைலம் முதலினவும்

கூறப்பட்டுள்ளது. உதட்டுப்புழு, நரம்புச்சிலந்தி, புழு விரோதம், கப விரோதம், குழந்தை மாந்தக் கசாயம், பொருள்களை தூய்மை செய்யும் முறைகளும் கூறப்பட்டுள்ளன. இந்த நூலை சிறப்பாகப் பதிப்பித்தளித்த மருத்துவர் அரங்கராசன் அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திருமதி **அ. பூங்கோதை,** M. A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M. A., B.Lit. M.L.I.S. Ph.D அவர்களுக்கும், சரசுவதி மகால் நூலக ஒளி அச்சுப்பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் மக்களுக்கும், மருத்துவர்களுக்கும் துறைசார்ந்த வல்லுநர்களுக்கும் ஆய்வு மாணவர்களுக்கும் பெரும்பயன் நல்கும்.

ஆ. அண்ணாதுரை, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்.

தஞ்சாவூர்,
22-09-2016

பதிப்புரை

சரசுவதி மகால் நூலகத் தமிழ்ப்பிரிவில் வைத்திய அட்டவணைச்சுவடி என்ற தலைப்பில்238 என்ற எண்ணில் பதிவாகி உள்ளது. இதில் 194 ஏடுகள், 36+3 செ. மீ. நீள, அகலத்தில் பக்கத்திற்கு சுமார் எட்டுவரிகள் உள்ளன.

இதைத் தொகுப்பு நூல் என்றே கூறலாம் 173 வகையான மருந்து செய்முறைகள் உரைநடையில் உள்ளன. பாட்டும், உரைநடையுமாகக் கலந்து வருகின்றது. எளிதாகச் செய்யக்கூடிய கசாய வகைகள், வடகம், நெய் போன்ற அக மருந்துகளும், புற மருந்துகளான புகை, நசியம் என்பனவும் கூறப்பட்டுளளன. அறுவை மருத்துவத்தில் பயன்படும் காரசிலை, புண்ணுக்கு வெள்ளை சேர்வை என்பனவும் உள்ளன.

மலட்டுத்தனத்தின் நான்கு வகையான காரணங்கள்

1. குன்ம தெய்வ விரோதம், 2. புழு விரோதம், 3.விந்து விரோதம், 4. கப விரோதம். குழந்தை மாந்த நோய்க்குக் கசாயம், பொருள்களை தூய்மை செய்யும் முறைகள் மகப்பேற்றுக்கான மந்திர மருத்துவம், தலை குளிக்கத் தைலம், வேறு சித்த மருத்துவ நூல்களில் காணப்படாத ஊர்க்குருவி தைலம் செய்யும் பெரு மருந்துமுறை, பால் தைலம் செய்முறையில் ஒன்பது மாதங்கள் தின்ன அவுலியாக்களைக் காணலாம் என்று இசுலாமிய மதம் தொடர்பான கருத்தையும் காணலாம். இலக்கிய நயமுள்ள பாடல், சௌபாக்கிய சுண்டியின் மருந்து தயாரிப்பில் வருகின்றது. மானிறத்தோன் அரன் என்ற சொற்றொடருக்கு அழகிய பயனளிக்கும் சிவன்

என்றும், விலங்கின் தோலை உடுத்திய சிவன் என்று இரு பொருள்பட அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

உதட்டுப்புழு, நரம்புச் சிலந்திக்கான மருத்துவ எண்ணெய் என்ற தலைப்பின் கடைசியில் உணவுப் பொருள்களைத் தருவது பற்றி வருகின்றது. எட்டு நாட்கள், ஆண்டி, பிராமணர் போன்ற ஏழைகளுக்கு நாழி அரிசி, மிளகு, புளி என்பன தருதல் வேண்டும். இது உலுப்பை என்றழைக்கபடும் முறையாம். மெலிந்த பிள்ளைக்கு நெய் என்ற மருந்து முறைக்கு புலால் உண்போரில் ஆண். பெண் நண்டையும், பெண், ஆண் நண்டையும் உண்ணும் புதிய பத்தியம் கூறப்பட்டுள்ளது. அசுவகந்தி லேகியத்தில் மென்தால் எனப்படும் புதினா உப்பு சேர்க்கப்படும் முறை கூறப்படுகின்றது. மென்தால் என்ற பெயர் ஆங்கில மருத்துவப்பெயர். எனவே, இம்மருத்துவமுறை மிகவும் அண்மைக்கால வழக்காதல் கூடும். தாளகச் செந்தூர முறைக்கு ஆட்டுக்கடா இரத்தம் விட்டரைப்பது புதுமையானதாம். மாந்த கணம் தீர ஆனந்தனும், விதை வீக்கம் தீர, திருச்சி சுப்பையனும், கிராணிக்கு குளத்தூர் அச்சனும் மருந்து கூறி உள்ளது, இது ஒரு தொகுப்பு நூல் என்பதற்கு சான்றாகும்.

பீனிசம் என்ற நோய்க்கான மூக்குத்துளி மருந்துகள், நசியம் கூறப்பட்டுள்ளது. தீராத இரத்தத்துக்கு என்ற தலைப்பின் முடிவில் தாகம் என வந்துள்ளது. ஓந்தியை வைத்து செய்யும் முறையால் தீரா நீர்வேட்கை அடங்கும் எனக் கூறப்பட்டுள்ளது. விரால் மீன் மருந்துத் தைலம், உடும்பு நெய், முயல் நெய் போன்ற விலங்குகளின் மூலம் செய்யப்படும் மருந்து வகைகளும் உள்ளன.

173 வகை மருந்துகளைப் பற்றி சித்த மருத்துவர்கள், ஆர்வலர்கள், மருந்து தயாரிப்பாளர்கள் ஆகியோர் ஆய்வு செய்தல் அவசியமாகும்.

நிறைவுரை

இதைத் திறனாய்வு செய்த முனைவர் பேராசிரியர் வே. இரா. மாதவன் அவர்களுக்கும், மரு. அர. தேவநாதன்,எம்.டி.,(ஆயுர்) அவர்களுக்கும், படி எடுக்க உதவிய திருமதி அபர்ணா,எம்.எஸ்.சி.,(எண்டமாலஜி) அவர்களுக்கும், என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நிறைவாக, இத்தகையதொரு தமிழ்ச்சுவடி நூலினைப் பதிப்பித்து வெளியிட மகிழ்வுடன் அனுமதி வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் உயர்திரு **ஆ. அண்ணாதுரை, இ. ஆ. ப.,** அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்நூல் வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திருமதி. **அ. பூங்கோதை,** M. A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M.A., B.Lit. M.L.I.S. Ph.D அவர்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை நன்கு அச்சிட்டளித்த சரசுவதி மகால் நூலக ஒளி அச்சுப்பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவர் ச. அரங்கராசன்

சரசுவதி மகால் நூலக வெளியீடுகள்

தமிழ் எண்ணும் எழுத்தும்	150-00
தமிழ் ஆய்வுக் கடடுரைகள்-1	100-00
தமிழ் ஆய்வுக் கட்டுரைகள்-2	150-00
சரபேந்திர பூபால குறவஞ்சி	100-00
தமிழறி மடந்தை கதை	80-00
அறப்பளீசுர சதகம்	150-00
திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்	160-00
தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு	450-00
பாபநாச க்ஷேத்திர மகாத்மியம்	250-00
கணபதி உபாசனை	120-00
தல வரலாற்று ஆய்வுக்கட்டுரைகள்	180-00
காலவிதான பத்ததி	150-00
காலப்பிரகாசிகை	250-00
பலதிரட்டு வைத்தியம்	140-00
அகத்தியர் ஆயுர்வேத சாத்திரம்	400-00
வைத்திய பலதிரட்டு	200-00
மகாமகம் - 2016 சிறப்பு மலர்	250-00
அருணாசல புராணம்	150-00
மதுரைவீரன் அம்மானை	120-00
கர்ப்பிணி பால ரோக சிகிச்சை	300-00
சரநூல்	200-00
சிற்ப ரத்தினம்	500-00
நட்சத்திர சிந்தாமணி பாகம்-1	310-00
நடசத்திர சிந்தாமணி பாகம்-2	200-00
நடசத்திர சிந்தாமணி பாகம்-3	250-00
வராகர் ஓரா சாத்திரம்	500-00
அகத்தியர் லோக மாரணம்	150-00
நீதித்திரட்டு	600-00
காலவிதான பத்ததி	150-00
கார்த்தவீர்யார்ஜுன-உபாஸ-பத்ததி	100-00
நீதி நூல்	100-00

பெரிய அட்டவணைச் சுவடி

தமிழ்ச் சுவடி எண்.238

உரைநடைப்பகுதி

1. தாளிச வடகம்

தாளிசபத்திரி	பலம் 5	சிறுநாகப்பூ பலம் 5
மிளகு	பலம் 5	விலாம்மிச்சம் வேர் பலம் 5
செவ்வியம்	பலம் 5	திப்பிலி மூலம் பலம் 5
சுக்கு	பலம் 5	ஏலம் -- பலம் 5
கிராம்பு	பலம் 1	சீனி சேர் 15
இலவங்கப்பத்திரி பலம்1		

2. சகல கிரந்திக்கும், கையின் சூலைக்கட்டுக்கும், மது மேகத்துக்கும் களிம்பு

கந்தகம் 14 பலம் பொடிசெய்து ரசம் 21 விட்டரைத்து துத்தம்புடமிட்டு மாடையிடை போட்டரைத்து, வெள்ளைக் குங்குலியம் வராகனெடை 4 போட்டரைத்து பசுவின் வெண்ணெய் பலம் 3 போட்டு மத்தித்து உடம்பில் தடவிக்கொண்டு மோரும் சோறும் அசனம் பண்ணவும். மூணுநாள் பிடிப்பிக்கவும். சகல சிரங்கும், கிரந்தி ஆறும். அரிதாரம் மனோசீலை, துத்தம், துருசியிவை பொடி செய்து சீலையில் தூவி திரியாகத் திரித்து பசுவின் நெய்யில் தோய்த்துக் கொளுத்தி அவித்துப் புகை பிடிக்க புண் ஆறும்.

திப்பிலி வராகனெடை 1 1/2 , காரீயம் வராகனெடை 1 உருக்கு முகத்தில் திப்பிலி பொடியும் போட்டுப் பின்னெடை முக்கழஞ்சு வீதம் விட்டுப் பின்னெடை இரண்டும் கந்தகம் நுணுக்கிப் போட்டு இறக்கி

ஆறவிட்டு அம்மைப்பாலில் உரைத்துக் காவிமண்போட்டு நிறமாக்கிக் கொள்ளவும். இந்த சிந்தூரம் கொடுக்கும் போது ஒரு பணவெடை தேனிலாதல் கருப்பட்டியிலாதல் வாழைப் பழத்திலாதல் கொடுக்கவும்.

பத்தியம் கோழிக்கறி, முட்டை, முருங்கைக்காய் .. கருவாடு ஆகும்.

3. மதுமேகம் சுக்கில மேகத்துக்கு

பருத்திப்பால் பசுவின்பாலுடன் கோவைக் கிழங்கு அரைத்த விழுது எலுமிச்சம் காயளவு உருட்டி மூணு நாள் கொள்ள சர்வமேகமும் தீரும்.

4. பிரமியத்துக்கு சீழ்பிரமியத்துக்கு

பொடுதலைச்சாறு சிரங்கை, நல்லெண்ணெய் சிரங்கை கலந்து வெள்ளைக்குங்குலியம் இட்டு அரைத்துக் கலந்து காலையில் ஒருநாள் கொள்ளச் சகல பிரமியமும் தீரும். கிரந்தியும் சூலையும் தீரும்.

பத்தியம் உப்பு வறுத்து கால் வாசி கூட்டவும். துவரம் பருப்பு அரைக்கீரை கூட்டவும். கை கண், இதுவும் அம்மான் பச்சரிச்சாறு சிரங்கை நல்லெண்ணை சிரங்கை கலந்து கூட்டி ஏழுநாள் கொடுக்கவும். மற்ற பிரமியமும் தீரும்.

5. சீழ்பிரமியத்துக்கு

ஆவாரை வேர் சனிக்கிழமை காப்புக்கட்டி ஞாயிற்றுக் கிழமை வடக்கே போகும் வேர் வெட்டி வந்து மணல்கொட்டி அதில் புதைத்து தண்ணீரைத் தெளியவைத்து வைத்து அன்றாடம் புன்னைக்காய் அளவு அரைத்து ஒரு காசு தயிர் வடிகட்டி அதில் நடுவே மருந்தை வைத்துத் தின்னவும் இப்படி இரண்டு நேரமும் ஏழுநாள் கொள்ளவும். சீழ்பிரமியமும் தீரும். கை கண்டது.

கைப்பு, புளிப்பு, உப்பு, தவிர்க்கவும், பதினாலு நாளைக்கும் சீழ்பிரமேகத்துக்கு பருத்திப் பால் அதில் கல்நார் அரைத்த விழுது, புன்னைக்காய் அளவு சீரகம் அவ்வளவு, வெல்லம் பாக்களவு கலந்து மூணு நாள் காலையில் கொடுக்க சீழ்பிரமேகம் தீரும். கை கண்டது.

விட்ணு கிரந்தி பிடி ஆறு சேர் தண்ணீர் விட்டு 1 சேராகக் குறுக்கிக் காலையில் எழுநாள் கொடுக்கவும் சர்க்கரை கூட்டவும். பிரமியம் அத்தி சுரம் நீர் சிக்கல், எரிவு இவை தீரும்.

ஒன்பது வகைப் பாசாணமும் வகைக்கு மூணு வராகனெடை ஒவ்வொன்றாய் எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு நாழிகை ஊறவைத்து பிறகு மிகுதியாக பழ மரைத்து எல்லாம் அதில் வைத்துப் பொதிந்து எட்டு வரட்டியில் புடமிட்டு எடுத்து இதுக்குச் சரிக்கு கருங்குங்கலியம் எல்லாம் ஒரு எண்ணெய் கலயத்தில் போட்டு சிலரித்துரைத்து அப்பால் அடுப்புக் கூட்டி பானைச் சாறு பட்டி போலே இருப்புக் குழாய் வை. இருப்புக் கிண்ணம் வைத்து ஆவாரம் விறகு கொண்டு வந்து தீபாக்கினியாக ஒரு சாமம் தயிரும் மோரும் சாப்பிட்டு ஈர வெங்காயமும் சீரகமும் நறுக்கிப் பொட்டணம்கட்டி மெள்ள எரிக்கவும். தைலம் விழும். காரசீலை சகல கருமானத்துக்கும், புண்ணுக்கும், வெள்ளைக்கோவை புண் வாய், அந்தத் தைலம் சகலவித ரோகத்துக்கும் கிடுக்கிக் கொண்டு சீலையில் தோய்த்துப் போடவும். முப்பத்திரண்டு ரோகமும் இருபத்தெட்டு நாளில் ஆறும். கை கண்டது.

6. காரச்சீலை, சகல கருமானத்துக்கும்

மஞ்சள் வராகனெடை 2, துருசு வராகனெடை 1, சுண்ணாம்பு வராகனெடை 5, கஞ்சி வார்த்தரைத்து வெள்ளைச் சீலையில் பிடிபித்து உலர்த்திச் சகலமானதக்கு சீலையைக் கசக்கிப் போடவும் ஆறும். படிகாரம் காசுக் கட்டி கடுக்காய்

சமபாகம் பொடி செய்து பாத ரோகத்தில் எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்துத் தடவி பொடிப் போட்டு மாத்திக்காண மாறும். கந்தகம், அரிதாரம், மனோசீலை, துத்தம், துருசு, வங்காளப்பச்சை இவை வகைக்கு வராகனெடை 1, வெண்ணெய் விளாங்காயளவு இதில் அரைத்து மத்தித்து வைத்துக் கொண்டு சகல மானத்துக்கும் சீலையில் தடவிப் போட ஆறும். வெள்ளைக் குங்குலியம் பலம் 10, நல்லெண்ணெயில் உருக்கி குளிர்ந்த தண்ணீரில் சாய்த்து அலம்பி வெண்ணை எடுத்து துத்தம் வராகனெடை 1, துருசு வராகனெடை 1, பசுவின் வெண்ணெயும் கூட்டி அரைத்துப் போடப் புண் ஆறும்.

7. புண் வாய் துலக்கமாக ஏழு வியாதிக்குக் களிம்பு

எருக்கங்கரி பலம் 1, துத்தம் வராகனெடை 2, பொடி செய்து விளக்கெண்ணெய்விட்டு அரைத்துப் புண் வாயில் போட புண் வாய் துலக்கமாம்.

8. ஆறாத புண்ணுக்கு மெழுகு

கோவை வேப்பெண்ணெய் படி 5, மெழுகு பலம் 5, துத்தம் வராகனெடை 2, துருசு வராகனெடை 2, பொடி பண்ணிக் கூடப் போட்டுக் காய்ச்சி புண் வாய்க்கு சீலையில் தடவிப் போட புண் ஆறும்.

9. சகல கிரந்திக்கும் களிம்பு

துத்தம் புடமிட்டு வராகனெடை 1, துருசு புடமிட்டு வராகனெடை 1, அரைத்து ரசமுறித்து வராகனெடை 1, விட்டரைத்து மனோசிலை மாடை எடை போட்டரைத்து வெள்ளைக்குங்குலியம் விட்டு போட்டரைத்து பசுவின் வெண்ணையில் மத்தித்து எழுகின்ற வியாதிக்கெல்லாம் அமுங்கும். கிரந்திக்குமாம்.

10. மலடி சாத்திரம்

பிள்ளை பெறும் உத்தேசம் சொல்லுகிறேன். மாகேந்திர மாமுனியா காணப்பட்ட மீதிசை மலடிகள் விலக்கமானால் குன்ம, தெய்வ விரோதம், புழு விரோதம் விந்து விரோதம், சேத்துமத்தின் விரோதம் ஆக நாலு விரோதம். இந்த விரோதம் நாலுக்கும் குணம். தெய்வ விரோதமானால் நாபிக்குங் கீழேநோகும், புழுவின் விரோதமானால் மாதவிலக்கில் இரத்தம் போலே விழும். விந்து விரோதமாகில் வயிறு நெஞ்சு எரிக்கும். நீர் வெதும்பிக் கழியும். சேத்து மத்தின் விரோதமாகில் பச்சரிசி கழுவின தண்ணீர் போலவிழும். இப்படி நாலு வகை குணமும் கண்டு இதற்கு வயிறு கழிய மருந்து மிதிபாகல் இலையும் விளக்கெண்ணெயும் சுடவைத்து மூன்று நாளைக்குக் கொடுக்கவும். இப்படி வயிறு சோதித்து பின்பு பஞ்ச கலசமாடி பஞ்ச கவ்யம் மட்டும் படி நாலு, பால் மரத்தின் துளை நீருமாங்கு, அந்த நீருடன் ஆற்று நீர் குளத்துநீர் கிணற்று நீர் வண்ணான்துறையின் நீர் மடையில் நீர் வெவ்வேறு புதுக் குடத்தில் எடுத்து வந்து தரையில் வைக்காமல் உறியில் வைத்து இந்த அஞ்சு குளத்தின் நீரும் நால் பால் மத்தின் நீரும் கூட்டி வார்த்து ஓதி நீராடுவது.

நீரோத மந்திரம் ஓம் நமோ பகவதே தாராய ஒறமு விடுதவி வேச வருச விவர ஓம் நமோ என்று மந்திரத்தைச் சொல்லி நீராடுவது பெண்சாதியும் புருஷனுடன் கூட வைத்து நீராடவும். முன்பு சொன்ன குணாகுணங்களை அறிந்து தெய்வ விரோதம் ஆகாத மருந்து. அமுக்கராவேர் ஒரு எலுமிச்சங்காய் அளவு பசுவின் நெய்யிலே ஏழுநாள் முழுங்க விழும். தெய்வங்களையும் அமுது செய்யப் பண்ணுவது. புழுவின் விரோதமாகில்

சீந்தில் இலையும் சாரணை இலையும் பழுபாகல் காயளவு மூன்று நாள் பசுவின் பாலில் கொடுக்கவும். புத்திர தீபனம் பண்ணிரெண்டாம் நாள் பசுவின் பாலில் கொடுக்கவும். பின்னும் துளிர் தாளி இலை ஒரு விளாங்காய் அளவு மூன்று நாள் பசுவின் பாலில் கொடுக்கவும். விந்துவின் விரோதமாகில், பொன்னாங் காணி வேரை அரைத்துப் பசுவின் பாலில் கொடுக்கவும். சிறுகீரை வேரை அரைத்துப் பசுவின் பாலில் மூன்று நாள் கொடுக்கவும். அப்பைக் கிழங்கை அரைத்துப் பசுவின் பாலில் மூன்றுநாள் கொடுக்கவும். சேத்துமத்து விரோதமாகில் கழுதைமானவேர் அரைத்து காடித்தெளிவில் மூன்றுநாள் கொடுக்கவும். பொடுதலை கையாந்தகரையை தீட்டான நாலு நாள் கொடுக்கவும். நாலு மாதத்தில் இரத்தம் கண்டால் சதகுப்பை சிரங்கை அரைச் சேர் கசாயத்தில் அரைத்துக் கொடுக்க நிற்கும். இது கை கண்ட மருந்து.

11. தாப சுரத்துக்கு தக்கிறத் தைலம்

எருமைத் தயிர், தண்ணீர் படாமல் கையால் குழப்பின மோர் 4 படி நல்லெண்ணெய் 4 படி, சுக்கு கோட்டம், அரத்தை, சந்தனம், மரமஞ்சள், அதிமதுரம், திப்பிலி, அரக்கு, பெருங்குரும்பை, தேவதாரம், சதகுப்பை, கடுகு ரோகிணி, செவ்வள்ளிக் கொடி, கடல் நுரை இவை நாழி எண்ணெய்க்கு ஒரொன்று காசிடை, சிற்றாமுட்டி வேர் நொச்சி, முத்தக்காசு, விலாம்மிச்சம், இருவேலி வேர் செங்கழுநீர்க்கிழங்கு, தாமரை வளையம் இதுவெல்லாம் ஒரொன்று காசெடை தயிர் வார்த்து அரைத்துக் கரைத்து பதத்தில் வடித்து பதினைந்து நாள் தானிய புடம் வைத்து எடுத்துக் கொள்ளவும். இதுக்குக் குளிர், கொதிப்பு தாப சுரத்துக்கு, மேல் பூசத் திரும்பும்.

12. கர்ப்பிணி சுரத்துக்கு

மஞ்சள், மிளகு, வெங்காயம், வசம்பு கூட்டிப் பிராய வேரும் அஞ்சுமியிலை பசுவின் பாலில் அரைத்துக் கொண்டு எண்ணெய் வினே பஞ்சினடியார் தனிலெரித்து வஞ்சமறவே கடுகு திரளவார் எடுத்தனர்க் கர்ப்பம் சுரம் பார்க்கும் மூன்று பொழுதில் கர்ப்ப சுரம்விடும்.

13. வாத சேத்தும சுரத்ததுக்கு வாத சுரத்துக்கு

கொன்றைக் கொழுந்து ஒருபிடி, திப்பிலி மூலம் பலம் 1 , கடுகு ரோகிணி பலம் 10 இவை ஒரு நாழி நீர் விட்டு அரைத்துக் கரைத்து உரியாகக் காய்ச்சிக் கொடுக்கவும். வாத சுரம் சூலை சேத்தும சுரம் இவை தீரும். வாத சுரத்துக்கு ஆலம் பழுப்பு சிற்றாமுட்டி வேர், அவுரி வேர், தழுதாழை வேர், மஞ்சள், சுக்கு, தான்றிக்காய் இவை சமன் கூட்டி எட்டில் ஒன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும். வாத சுரம் தீரும்.

நற்சந்தனம் முத்தக்காசு, திப்பிலி, சுக்கு, சிறுகாஞ்சொரி, வெள்ளுள்ளி இவை சமன் கூட்டி எட்டிலொன்றாய்க் கொடுக்கவும். வாத சுரம் தீரும். வாத சுரத்துக்கு சிற்றாமணக்கு வேர், பன்றைவேர்[1], தழுதாழைவேர், செருப்படி, சுக்கு இவை சமன் கூட்டி எட்டிலொன்றாய் காய்ச்சி கொடுக்கவும். வாதசுரம் தீரும்.

வாத சுரத்துக்கு

தழுதாழை வேர், நெல்லிமுள்ளி, உத்தாமணி வேர், விட்ணுகிரந்தி, சுக்கு இவை சமன் கூட்டி எட்டிலொன்றாய்க் காய்ச்சி திப்பிலியின் மென்பொடி போட்டுக் கொடுக்கவும். வாத சுரம் தீரும்.

---

1. பன்றை - நெய்க்கொட்டான்

14. சன்னி வாதத்துக்கு

கண்டங்கத்திரி, நிலவேம்பு, தாமரைக் கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, அரத்தை, சீந்தில் தண்டு, சிறுதேக்கு, கற்கடகசிங்கி, அகில், சடாமஞ்சி, சிறுகாஞ்சொரிவேர், ஆடாதொடை வேர், முத்தக்காசு இவை சமன் கூட்டி கசாயம் வைத்துக் கொடுக்கவும். சன்னி வாத சுரம் தீரும்.

15. பித்த சுரத்துக்குக் கசாயம்

வெட்டி வேர் தண்டு, நெல்லிமுள்ளி, நிலவேம்பு, விலாமிச்சம் வேர், பற்பாடகம், முத்தக்காசு இவை சமன் கூட்டி நாழி நீர்விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும். பித்த சுரம் தீரும். வேப்பம் புண்ணாக்கு, பேய்ப்புடல், சீந்தில் தண்டு, கடுகு ரோகிணி, முத்தக் காசு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி இவை வகைக்கு பதினைந்து பணவெடை போட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும். பித்த சுரம் தீரும். கொன்றை வேர், திப்பிலி மூலம், முத்தக்காசு, கடுகு. ரோகிணி, கடுக்காய் இவை சமன் கூட்டி எட்டில் ஒன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும். பித்த சுரம் தீரும்.

16. பித்த சுரத்துக்கு

நன்னாரிவேர், விலாமிச்சம் வேர், ஆடாதோடை இலை, பேய்ப்புடல், நற்சந்தனம், அதிமதுரம், கடுகு ரோகிணி, முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம், கொத்த மல்லி, சுக்கு இவை சமனாய் பன்னிரெண்டு காசெடை சரியாய்க் கூட்டி இருநாழி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும். பித்தசுரம் தீரும். தண்ணீர் விட்டான் கிழங்கு. முத்தக்காசு, வெட்டிவேர், சிற்றாமுட்டி வேர், பெருமுட்டி வேர், சுக்கு, திப்பிலி, சீரகம்

இவை சமன் கூட்டி எட்டிலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும். பித்த சுரம் தீரும். பேய்ப்புடல், நீர்முள்ளி, சிறுவழுதலை வேர். வெள்ளுள்ளி, விலாமிச்சை வேர், முத்தக்காசு, நெல்லிமுள்ளி, கொத்தமல்லி, சுக்கு சமன் கூட்டி எட்டில் ஒன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும். பித்த சுரம் தீரும்.

17. சிலேட்டும சுரத்துக்கு

சுக்கு, திப்பிலி, அதிமதுரம், ஏலம், அரத்தை, முத்தக்காசு, கோதுமை இவை சமன் கூட்டி ஒருநாழி தண்ணீர் விட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும். கோதுமை முடித்து போடவும். சிலேட்டும சுரம் தீரும். கண்டங்கத்திரி வேர், ஆடாதொடை வேர், முட்காவேளை வேர், சுக்கு, திப்பிலி இவை சமன்கூட்டி இருநாழி நீர் எட்டில் ஒன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும். ஆடாதோடை யிலை நடுநரம்பு (நீக்கியது) அமுக்குரா வேர், நொச்சிக் கொழுந்து, சுக்கு, வசம்பு, கடுகு ரோகிணி இவை சமன் கூட்டி இருநாழித் தண்ணீர் விட்டு நன்றாகக் காய்ச்சிக் கொடுக்கவும்.

கீழாநெல்லி வேர், கடுக்காய், சிறுதேக்கு, செவ்வியம், திப்பிலி, சுக்கு, சங்கம்வேர், ஆடாதோடை இலை, சீந்தில் தண்டு, சிறு வழுதலை வேர், மிளகு இவை வகைக்கு பலம் 1 கூட்டி இடித்துத் தூளாகப் பண்ணி வைத்துக்கொண்டு இரண்டு வராகனெடை 2 பிரமாணம் தூளைப் போட்டு இருநாழி நீர் விட்டு நன்றாகக் காய்ச்சிக் கொடுக்கவும். சிலேத்துமசுரம் தீரும். மிடரு நோவு தீரும். மிளகு, கையாந்தகரை, சுக்கு, சங்கம் வேர், பொன்னா வாரை இலை, ஆடாதோடை இலை, தேள் கொடுக்கு இலை, சிறுதேக்கு இவை வகைக்குப் பலம் 1 கூட்டி இடித்து இரண்டு வெரு கடி இருநாழி தண்ணீரில் போட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும். திப்பிலி மேல் பொடி தூவிக் கொடுக்கவும். சிலேத்தும சுரம் உழப்புத் தீரும்.

18. சேத்தும சுரம் உழப்புக்கு சுரக்காசத்துக்கு

கடுக்காய், கொத்தமல்லி, முத்தக்காசு, சுக்கு நிலவேம்பு, பற்பாடகம், குமிழ் வேர், வசம்பு, சிறுதேக்கு, வசம்பு, புளிச்சை வகைக்கு பலம் 1 1/4 கூட்டி இடித்துக் கொண்டு வெருகடி பிரமாணம் இருநாழி நீர் விட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும். சிலேட்டும சுரம் வயிறு நோவு தீரும். வெட்டி வேர் தண்டு இலவம் வேர், சிவ்னார்கிழங்கு, விலாமிச்சுவேர், சந்தனம், கொத்த மல்லி, ஆடாதோடை பற்பாடகம், முத்தக்காசு, பேரீச்சம் பழம், முந்திரிகைப்பழம் இவை வகைக்கு வராகனெடை 5 கூட்டி இருநாழி நீர்விட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும். சுரக்காசம் தீரும். சிற்றாமுட்டி வேர், இழைச்சீவி இருநாழி நீர்விட்டு உழக்காகக் காய்ச்சி ஒரு காசெடை தேன் கூட்டிக்கொடுக்க காசம்தீரும். தாப சுரத்துக்கு பெரிய பூசணிக்காய் சாறும் சர்க்கரையும் கூட்டிக்கொடுக்க தாபசுரம் தீரும். உழலை, சீதசுரம் தீரும்.

19. தாப சுரத்துக்கு உழலை சுரம், வாத சேத்தும சுரத்துக்கு

சிற்றிலை நாகயிலையும் சம்பாநெல் பொரியுங் கூட்டி இடித்து குறுணி தண்ணீர் விட்டு நானாழியாகக் காய்ச்சிக் கொடுக்கவும். உழலை தாப சுரம் தீரும். முத்தக்காசு, சந்தனம், சுக்கு, பற்பாடகம், விலாமிச்சை வேர், கொடி வேலி வேர், சீந்தில் தண்டு வகைக்கு 15 கூட்டி இருநாழி தண்ணீர் விட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும். தாபசுரம் தீரும். வெட்டி விலாம்மிச்சம்வேர், நன்னாரிவேர், சிறுவழுதலை வேர், சிறுகாஞ்சொரி வேர், முத்தக்காசு, பேய்ப்புடல், சந்தனம் சமன் கூட்டி இடித்து இரண்டு பலம் நாழி நீரில் போட்டு உரியாகக் காய்ச்சிக் கொடுக்கவும். தாபசுரம், உழலை தீரும். முத்தக்காசு

உழப்பு-வருத்தம்

பற்பாடகம் விலாம்மிச்சம் வேர், அதிமதுரம், பேய்ப்புடல், ஆடாதோடை சமன் கூட்டி இருநாழி தண்ணீர் விட்டு உழக்காகக் காய்ச்சிக் ஒரு முட்டை (ஒரு கரண்டி) தேனும் விட்டுக் கொடுக்க தாப சுரம் தீரும்.

20. வாத சிலேட்டும சுரத்துக்கு

சீந்தில் தண்டு, முத்தக்காசு, ஆடாதோடை, சிறுவழுதலை வேர், சுக்கு, சிறுகாஞ்சொரி, பற்பாடகம், கடுகுரோகிணி இவை சமன் கூட்டி இடித்து நாழி தண்ணீர் விட்டு உழக்காகக் காய்ச்சி மூணு பொழுது கொடுக்க வாத சேத்தும சுரம் தீரும்.

21. பித்த சேத்தும சுரத்துக்கு நாள்பட்ட சுரத்துக்கு, சீத சுரத்துக்கு

முத்தக்காசு, இலுப்பைப் பூ, முந்திரிகைப் பழம், பேரீச்சம்பழம், சந்தனம், நன்னாரிவேர், தண்ணீர் விட்டான் கிழங்கு, விலாம்மிச்சம் வேர், அதிமதுரம். திப்பிலி சமன் கூட்டி இரண்டு பலம் கூட்டி நாழி நீர் விட்டு உரியாகக் காய்ச்சிக் கொடுக்க பித்த சுரம், மூர்ச்சை, சித்தபிரமை இவை தீரும். கண்டங்கத்திரி வேர், சீந்தில் தண்டு, ஆமணக்கு வேர், சுக்கு இவை சமன் கூட்டி இருநாழி தண்ணீர்விட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும். பித்த சேத்தும சுரம் தீரும். அரிசியுடன், கடுகு ரோகிணி, முத்தக்காசு, திப்பிலி, கொடிவேலி வேர், சிறுகாஞ்சொரி வேர், பற்பாடகம், வேப்பம்பட்டை, நாணல்கிழங்கு, கசப்புப் புல்லு, காவட்டம் புல்லு, கொன்னைப் பட்டை, திரிகடுகு, இலுப்பைப்பூ வகைக்கு பலம் 2 கூட்டி இடித்துத் தூள் பண்ணி இரண்டு வெருகடி இருநாழி நீர்விட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்க நாள்பட்ட சுரம்தீரும்.

22. குளிர்க்காய்ச்சல் தாகத்துக்கு சீரகாதி கசாயம்கடுப்பு சுரத்துக்கு சகல சுரத்துக்கும் கசாயம்

பேராமுட்டியை, தேனில் அரைத்து வெள்ளுள்ளி, மிளகு நாழி வெந்நீரில் கரைத்துக் கொடுக்க சீத சுரம் தீரும். ஆடாதோடையிலை, நன்னாரி வேர், சிறுதலை வேர், பற்பாடகம், வட்டத் திருப்பி வேர், சுக்கு வகைக்கு பலம் 5 கூட்டி இருநாழி நீர் விட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும். குளிர் காய்ச்சல், தாகம் தீரும்.

23. சீர காதி கசாயம்

சுக்கு பலம் 2, மிளகு பலம் 3, திப்பிலி பலம் 6, கடுக்காய்ப் பலம் 6, சீரகம் பலம் 15 ஆக பலம் 30 சூரணம் பண்ணி வைத்து தினம் ஒரு பலம் சூரணம் இருநாழி நீரில்போட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும். குளிர் குலைப்பு விசப்பாகம் வீக்கம் அரோசகம் இவை தீரும். இதன்படி முப்பது நாளுக்கு கொடுக்கவும். சங்கம் பழம் தீரும் கலங் கொம்பு[1] வகைக்கு பாக்களவு காவிக்கல் அரைப்பாக்களவு சீரகம் 3/4 கோரோசனை அரைக் காசிடை கொடுக்கவும் சகல சுரமும் தீரும்.

24. சகல சுரத்துக்கு கசாயம்

முத்தக்காசு, பற்பாடகம், சிறுவழுதலை வேர், சுக்கு, நிலவேம்பு, திப்பிலி, கோட்டம், சீந்தில் தண்டு, ஆடாதோடை, பார்புனுகு ஓரொன்று மூன்று தூக்குப் போட்டு இடித்து நாழி நீர் விட்டு உரியளவு காய்ச்சி கொடுக்கவும். பொடி மூன்று பொழுது கொடுக்கவும். காய்ச்சலும், சுரமும் தீரும்.

25. ரத்த பித்த சுரத்துக்கு அதிகார சுரத்துக்கு

தூதுவளை வேர், கண்டங்கத்திரி வேர், சுக்கு நில வேம்பு, திப்பிலி, கோட்டம், சிந்தில்தண்டு, ஆடாதோடை பாரங்கு ஓரொன்று மூன்று தூக்குப் போட்டு இடித்து நாழி நீர் விட்டு உரியாகக் காய்ச்சிக் கொடுக்கவும். இப்படி மூன்றுபொழுது கொடுக்கவும். சகல சுரமும் தீரும்.

---

1. கலங்கொம்பு- மான்கொம்பு

தூதுவளைவேர், கண்டங்கத்திரி வேர், சிறுவழுதலை வேர், பாதிரி வேர், முத்தக்காசு, நிலவேம்பு, திரிபலை, சுக்கு, கடுகு ரோகிணி, சமனாகக் கூட்டி இருநாழி நீர்விட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும். சகல சுரமும் தீரும்.

நில வேம்பு, முக்காவேளை வேர், விட்ணுகிரந்தி, கொடுவேலிவேர், செவ்வியம், வெள்ளுள்ளி, திப்பிலி இவை சமன்கூட்டி ஒரு நாழி நீர்விட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும். சகல சுரமும் தீரும்.

நிலவேம்பு, சாரணைவேர், பேய்ப்புடல், பற்பாடகம், திரிகடுகு, கடுகு ரோகிணி சமனாகக் கூட்டி இருநாழி நீர்விட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும். சகல சுரமும் தீரும்.

மூங்கிலிலை வேர்..... வேர் முத்தக்காசு, கோதுமை அரிசி, விலாமிச்சம் வேர், மாதுளம் பூ, சுக்கு இவை சமன்கூட்டி இரு நாழி நீர்விட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும். இரத்த பித்த சுரம் தீரும்.

26. பழுத்த சுரம் விட அதிசார சுரத்துக்கு

அதிவிடையம், முத்தக்காசு, நிலவேம்பு, சீந்தில்தண்டு குடசப்பாலை, சீதப்பட்டையிலை சமன் கூட்டி இரு நாழி தண்ணீர் விட்டு உழக்காகக் காய்ச்சிக் கொர்டுக்கவும். அதிக சுரம் தீரும்.

கடுக்காய், சுக்கு, பற்பாடகம், ஆடாதோடை, நிலவேம்பு, திப்பிலி சமூலம், சிறுவழுதலை வேர், கண்டங்கத்திரி வேர், சீந்தில்தண்டு இவை சமன் கூட்டி இருநாழி நீர்விட்டு உரியாகக் காய்ச்சி திப்பிலி மென் பொடி போட்டுக் கொடுக்கவும். பழஞ் சுரம், அரோசகம், இருமல் குலைப்பு, உப்புசம், அக்கினி மந்தம் இவை தீரும்.

கொக்கிறகு, சீந்தில் தண்டு, சுக்குத்தோல், அதிவிடையம், நிலவேம்பு, முத்தக்காசு இவையெல்லாம் நறுக்கி இடித்து ஓரொன்று பலமாகக் கொண்டு மிக்க குடிநீரிட்டுக் கொடுப்பீராகில் விடும். அதிசார சுரம் விட்டுப்போமே.

சிவந்த நாயுருவி வேரை அரைத்து முலைபாலில் குழப்பித் தடவ நீருண்டாய், நிலவேம்பு, வெள்ளுள்ளி வேர், வேப்பம்புண்ணாக்குத் தான்றிக்காய் இவை சமன் கூட்டி இருநாழி நீர்விட்டு உழக்காகக் காய்ச்சி கொடுக்கவும். விசசுரம் தீரும்.

27. விசசுரத்துக்கு பதிஇரு தோசத்துக்கு தேர்ந்த சுரத்துக்கு, தசமூலக் கசாயம்

முந்திரிகைப்பழம், சீந்தில் தண்டு, பற்பாடகம், கடுகு ரோகிணி இவை சமன்கூட்டி இருநாழி நீர்விட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்க தாரு தோச சுரந்தீரும்.

கொன்றை வேர் ஒரு காசெடை மென்பொடி தூவிக் கொடுக்க தோசம், தாகம், சோபம், மூர்ச்சை இவை தீரும்.

28. தோச சுரத்துக்கு

முசுமுசுக்கை, முத்தக்காசு, நிலவேம்பு, சிறுவழுதலை, பன்றிவேர், சுக்கு, திப்பிலி, கடுக்காய், மஞ்சள் கூட்டி இருநாழி நீர் விட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்க தோச சுரம் தீரும்.

29. தசமூல கசாயம்

முன்னை, பாதிரி, பெருவாகை, பெருங்குமிழ், சித்தமல்லி, பேராமல்லி, சிறுவழுதலை, கண்டங்கத்திரி, நெருஞ்சில், வில்வபத்திரி, இந்த பத்துவகை வேரும்

சமன் கூட்டி, இடித்து வைத்து ஒருபலம் தூள்போட்டு நாழி நீர் விட்டு உரியாகக் காய்ச்சிக் கொடுக்க வாத பித்த சேத்தும சன்னி வாத சுரம் தீரும்.

30. மாந்தசுரம் தீர

சீந்தில் தண்டு கடுக்காய்
சிவனார் வேம்பு களிப்பாக்கும்
மாந்த சுக்கு, ரோகிணி,
யுமடுவில் நீரில் கலந்திட்டு
ஏந்து முலைப்பால் தானரைத்து
எட்டொன்றாய்க் கொடுப்பீராய்
மாந்த சுரமது தீர்ந்து வயிறும்
கழியுங் கண்டீரே.

உரை: சீந்தில், கடுக்காய், சிவனார் வேம்பு, களிப்பாக்கு. சுக்கு. கடுகு ரோகணி-முலைப்பாலில் அரைத்து நீர்விட்டுக் காய்ச்சி 1/8 பங்குதர, மாந்தசுரம் தீரும், பேதியாகும்.

31. மாந்த சுரத்துக்குச் சன்னிக்கு பழங் காய்ச்சலுக்கு, சுரத்துக்கு (சன்னிக்கு)

உத்தாமணி சமூலத்லைதத் தூள் பண்ணி வெருகடி அளவு கொடுக்க சன்னி தீரும்.

32. சிந்துஞ்சளிக்கு

சீரவெள்ளக்கும்[1] சோம்பலுக்கும் பாந்தஞ்சொல, நாரத்தை, நொச்சி, துளசி, பரித்துடனே, வெந்துங்கல் நீர் தன்னை, முக்காட்டுமிட்டு வேதுகொள் சுந்தஞ்சலங் கழன்றே கடுநோய் பருமேல் பசுக்குச் சீந்தில் துளவு தீரும் பாருமே.

1. ஒரு சீர் இல்லை.

33. சளி சுரம் விலக

உழக்கு கொள்ளுப்பொடி உள்ளங்கால், உள்ளங்கை, உடம்பெங்கும் தேய்க்கவும். சளி சுரந் தீரும்.

34. பழங்காய்ச்சலுக்கு எண்ணெய்

நெய், நல்லெண்ணெய், சந்தனம், பழச்சாறு, உரி, கஞ்சாங் கோரைச்சாறு நாழி, இதிவேர் வெள்ளுள்ளி, முத்தக்காசு, கொன்றை, வகை கரு, முக்கழஞ்சு, எருமைப் பாலிலரைத்து, நாழிப் பாலும் விட்டு, நாழி இளநீரும் விட்டு மதத்தில் தலையில் தேய்க்க பழவெதுப்பு தாபசுரம் விசசுரம் தீரும்.

35. சுரத்துக்கு நெய்

புளித்த மோர் 4, கோட்டம், சுக்கு, பெருங்குரும்பை, அரக்கு, சடாமாஞ்சில் கடுகுரோகிணி, அதிமதுரம், செவ்வல்லி குறுந்தொட்டி, திப்பிலி, சித்திரமூலம், மிளகு, கடுகு, சீந்தில்தண்டு, சாரணைவேர், ஆடாதோடை இலை, கண்டங்கத்திரிவேர் வகைக்கு பலம் 1/4, பசுவின் நெய் 4. கூட்டி அரைத்துக் கரைத்து பதத்தில் வடித்து எட்டுநாள் உள்ளுக்கும் நக்கி மேலும் பூச வெதுப்புத் தீரும்.

36. தோசத்துக்கு கண்டூசம்

கலங்கொம்பு[1] அக்கிராகாரம், உருத்திராட்சம், முத்து, பவழம், பொன் இவை முலைப்பால் வார்த்து இழைத்து குழம்பாய்க் கரைத்து வைத்து அடிக்கடி நாக்கில் தடவ தண்ணீருண்டாம். தாகமும் நாக்கு வரட்சியும் மிகுதியானால் பச்சைக் கற்பூரம், சாதிக்காய், சாதிப்பத்திரி,

1. கலங்கொம்பு- மான்கொம்பு

கிராம்பு, ஏலம், அதிமதுரம், இவை சமன்கூட்டி இதுக்குச் சமன் சீனிசக்கரை சமன்கூட்டி இளநீர் வார்த்தரைத்து குழம்பாய் வைத்து அடிக்கடி நாக்கில் தடவ தாகமும் வரட்சியும் தீரும்.

37. வேறு

திரிக்கடுகு, வெள்ளுள்ளி, ஓமம், நார்த்தம்பழ விதை, தும்பைப்பூ இவை சமன் கூட்டி, இரண்டு வராகனெடை வெந்நீரில் விட்டுக் கொள்ள நவசுரம், சன்னிவாதம் கறுத்துப் பெருக்கும் விரலில் சீலையைச் சுற்றி, இந்த மருந்தைத் தடவி வாய் நாக்கு பல்லடி, வயிறு இதுக்கெல்லாம் தேய்த்து ஆடாதோடையை வெந்நீரில் வார்த்துக் கொப்பளித்தால் வாயிலுள்ள துன்மாங்கிசம் தீரும். சன்னி வாத சுரம்தீரும்.

38. சன்னிக்குப் புகை

பாம்புத்தோல், ஆலஞ்சருகு, நாணல் புல், வெள்ளுள்ளி, ஓமம், மயிலிறகு, துளசி, கழுதைவிட்டை, குங்குலியம் இவை சமன்கூட்டிப் புகைபோட சன்னிவாதம் தீரும்.

39. சன்னிக்கு நசியம்

ஒருபலம் சுத்தமான நீறு, எருக்கம் பால் வார்த்து எட்டுத் தரம் ஊட்டி மிளகுப் பொடி நாலு பணவெடை குழலிலூட்டி நாசியிலூத சன்னி வாதம் தீரும்.

40. நசியம்

பேய்ப்பீர்க்கம் விதை பணவெடை 1. மிளகு பணவெடை 1. நாபி பணவெடை 1. எட்டும் கூட்டி சூரணம் பண்ணி முலைப்பாலில் நசியமிட சன்னி வாதந்தீரும்.

அத்திப் பழுப்பு திரிகடுகு சைந்த லவணம் இவை சமன்கூட்டி முலைப் பாலிலூட்டி நசியம் பண்ண சன்னிவாதம் தீரும்.

41. சன்னி வாதத்துக்குத் தயிலம்

வேப்பெண்ணெய் நாழி எருக்கம்பால் தெ எருக்கம் சாறு தெ சோமநாதப் பெருங்காயம். கழஞ்சு காலிங்கம் கழஞ்சு கவுரி கழஞ்சு இவை பொடி செய்து எண்ணெயில் போட்டுக் குழப்பிக் காய்ச்சி மெழுகுபதத்தில் எடுத்து வைத்து ஒரு காசெடை உட்கொள்ளவும். மேலும் பூசவும். புற சன்னி உடனே நிற்கும்.

42. சன்னி வாதக்குலாந்தகத் தைலம்

வேப்பம் விரை சர்ப்பகந்தம், திரிகடுகு, வசம்பு, சதகுப்பை, அரத்தை, கோரோசனை, குக்குலு, நிலவேம்பு, பூனாகம், தேவதாரம், எருக்கம் பழுப்பு, பச்சைப் பாம்பு, கடுகுரோகிணி, வட்டத்திருப்பிவேர், ஊசிமல்லிகை வேர், குன்றிவேர், சடாமாஞ்சில், ஓரொன்றுக்கு ஒரு வராகனெடை கூட்டித் தராய்ச் சாறு வார்த்தரைத்து எண்ணெய் கூட்டி பதத்தில் வடித்து உள்ளுக்கும் கொடுத்து தலைக்கும் தேய்த்து உடம்பிலும் தடவி நசியம் பண்ணிட சன்னிவாதம் தீரும்.

நொச்சி, ஆடாதோடை, சிறுவழுதலை, பேய்ப்புடல் வகைக்குச் சாறுபடி 2, நல்லெண்ணெய் படி 2, திரிகடுகு, திரிபலை, கடுகுரோகிணி, தேவதாரம், வசம்பு, கோட்டம், சிகைவிரை, அதிமதுரம், நல்ல சந்தனம், மரமஞ்சள், இலவங்கம், ஏலம், இருவகை சீரகம், கற்கடசிங்கிக் கண்டுபாரங்கி திப்பிலிமூலம், சங்கம்வேர், கண்டங்கத்திரி வேர், அரத்தை, அதிவிடையம், மஞ்சிட்டி, வசம்பு,

பூனாகம், ஆடாதோடை வேர், கொன்றை, நிலவேம்பு, முட்காவேளைவேர், அவுரிவேர், மிளகரணைவேர், வேப்பம் வேர், மஞ்சள், கடுகு, முசுறுமுட்டை இவை யெல்லாம் இருபத்துநாலு தூக்குங்கூட்டி அந்த சாற்றிலரைத்துக் கரைத்து முலைப்பாலில் படி 2 மூணுநாள் இளங் கொதியிட்டு நாலாம்நாள் பதத்தில் வடித்து வடிக்கிற போது நாலு பணவெடை சர்ப்பகண்டம் செய்து போட்டு வடித்து நசியம் பண்ணி உள்ளுக்கும் கொடுத்து மேலும் பூசவும். பதிமூணுவகை சன்னி வாதமும் தீரும். இது கைகண்டது.

மீன் நெய், முதலை நெய் 3/4, பேய்மிரட்டிவேர், அழிஞ்சிவேர், விழுதிவேர், நன்னாரிவேர், வெதுப்படக்கி வேர் இவை ஒன்றுக்கு வராகனெடை 2 கூட்டி இடித்துத் தூள் போட்டு மெழுகுபதத்தில் வடித்து சன்னிவாதம் பதிமூணுக்கும் மேலிலும் பல்லிலும் தடவ உடல்கனம் சன்னி வாதம் தீரும். கை கண்டது.

43. சன்னி வாதத்துக்குப் பூநாகத் தைலம்

நல்லெண்ணெய் விளக்கெண்ணெய் மணத்தக் காளிச் சாறு, பூநாகம் அரைச்சேர், உள்ளி, வசம்பு கூட்டி காயவைத்து வடிக்கும்போது மஞ்சள் பொடி 3/4 மிளகுபொடி 3/4 கருங்குங்குலியம் பொடி 3/4 இது மூன்று பொடியும் போட்டு பதத்தில் வடிக்கவும். அந்தத் தைலம் உள்ளுக்கும் கொடுத்து நசியம் பண்ணவும். இருகாசெடை தலைக்குத் தேய்க்கவும். நாடியிலும் தேய்க்கவும். சன்னிவாதம் உடனே தீரும்.

44. சன்னி வாதத்துக்குத் திரிகசாயம்

இரசம் விராகனெடை 10. நொச்சியிலைச் சாற்றில் ஒரு சாமமரைத்து வெள்ளைய்ச் சீலையில் நாலுவிரல்

கனம் ஆறுவிரல் நீளம் கிழித்து அதில் தடவி திரியாயுருட்டி அந்தத் திரியிலே நாலில் ஒன்று கிழித்து சுங்கானில் போட்டு புகைவெளியிலே புறப்படாமல் குடிக்கவும். இந்தப்படி மூன்றுபொழுது குடிக்க சன்னி உடனே குறையும். கைகண்டது.

முரிமுரி வேர். கொடிவேலி வேர், அமுக்கரா வேர், பூசணி வேர், எருக்கம் வேர், இவற்றை சமன்கூட்டி எட்டிலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்க சன்னி வாத சுரம் தீரும்.

எந்த சன்னிக்கும் கொடிவேலிவேர், நொச்சிவேர், பேய்ப்புடல், செவ்வியம், திரிக்குச் சமன் கூட்டி எட்டிலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும். அந்த சன்னி தீரும்.

45. சித்தவிப்பிரம சன்னிக்கு கறி உப்புப் பற்பம்

நொச்சி சமூலம், முருங்கை விதை, கையாந்தகரை விதை, வெள்ளுள்ளி, திரிகடுகு இவை சமன்கூட்டி இருநாழி தண்ணீர்விட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்க சித்த விப்பிரம சன்னி தீரும்.

46. தந்திரீக சன்னிக்கு

தேவதாரம், திப்பிலி மூலம், செவ்வியம், சித்திர மூலம், முருவிலி வேர், குங்குலியம் இவை சமன்கூட்டி எட்டிலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்க தந்திர சன்னி தீரும்.

47. சன்னிக்குக் குடாடை கிருதம்

கறிஉப்பு பலம் 2, பேய்கும்மட்டிச் சாறு விட்டு ஒருநாழி அரைத்து புடம் போடவும். இதன்படி ஏழு தினம் அரைத்துப் புடம்போடவும். பற்பமாகும். அரிதாரம் பலம் 1, சுண்ணாம்பு,

அண்ட ஓடு பலம் 1 சேர்த்து, பிரண்டைச் சாறுவிட்டு நாலு சாமம் அரைத்து அகலில் வைத்து சீலைமண் செய்து சாண்புடம் போடவும். பற்பமாகும். நாலாகக் காய்ச்சி உப்பு பலம் 1, ஆலத்தி கற்பூரம் வராகனெடை 2, எருமைபாற்சொந்தி சோறு விட்டு நாலு சாமம் அரைத்து வில்லை பண்ணி உலரப்போட்டு அகலில் அரிதாரம் கந்தகம், மனோசிலை, செண்பகப்பூ, வங்காளபச்சை, கொடிவேலி, கோட்டம், அரிதார பற்பம், கார்போக அரிசி, கல்மதம், கருங்குங்குலியம், துத்தம், துருசு வகைக்கு வராகனெடை ரெண்டரை நல்லெண்ணெய், கருங்குருவை நெல் சோறு பலம் 4. பரங்கிப்பட்டை வேர் 25. முன் மருந்தெல்லாம் மூணுபங்காய் இடித்து கீழ் சட்டியைப் புடைத்து வேடுகட்டி, பரங்கிப்பட்டையை இடித்துத் தூள் பண்ணி, வெட்டின மேல் வைத்து மேல் சட்டி கொண்டு மூடிச் சீலை மண் செய்து தீபாக்கினியாக ஒண்ணரை சாமம் எரித்து அப்படியே வைத்து மறுநாள் அடிசட்டியில் தீய்ந்த மருந்தை யெடுத்துப் போட்டு அதன் மறுபங்கை வைத்து அத்துடன் மூணு தரமும் எரித்து இந்த மருந்தைக் கலயத்தில் வைத்து சீலை மண் கொண்டு மூடி இந்த மருந்து வேகம் போகாமல் கட்டிவைத்துக் கொண்டு தினம் ஒருகாசிடை ஒரு மண்டலம் தின்னவும். இதுக்குப் போகும் வியாதிகள் மேகம், கிரந்திப் புண், சூலைப் பிடிப்பு.

பத்தியம்: அகத்திக் கீரை, புளிப்பு தவிர்க்கவும்.

வேறு

48. அரக்கெண்ணைத் தைலம்

சிற்றரத்தை, செண்பகப்பூ, சிறுநாகப்பூ, அதிமதுரம், கோட்டம், ஏலம், இலவங்கம், பட்டை, தேவதாரம், நெல்லிமுள்ளி, அமுக்கராக்கிழங்கு வேர், கிராம்பு,

சடாமாஞ்சில், சந்தனம், பலம் 4. பெருஞ்சீரகம், சமுத்திரப்பச்சை, பூலாங்கிழங்கு, கிளியூரல் பட்டை, புனுகுச் சட்டம் விட 3, செவ்வல்லிக்கொடி, கருஞ்சீரகம், கத்தூரி மஞ்சள், சதகுப்பை, குங்குமப்பூ வராகனெடை 1. கோரோசனை வராகனெடை 1, கார்போக அரிசி வகைக்கு பலம் 3. கொம்பரக்கு பூ 10. நாகம் தாமரை வளையம் அமுக்கராவேர், மஞ்சள் கிழங்கு, சிற்றாமுட்டி வேர், நன்னாரி வேர் வகைக்குப் பலம் 4, நல்லெண்ணெய் சேர் 10 இது அரக்கெண்ணெய்த் தைலம் என அறியவும்.

அமுக்கரா வேர் வெருகம் கிழங்கு, சிற்றாமுட்டி வேர், கஞ்சாங்கோரை, சிறுகாஞ்சோரி வேர், கோரைக் கிழங்கு, சீந்தில்கொடி, மரவள்ளிக் கிழங்கு, சங்கம்வேர், கழற்சி வேர், பேராமுட்டி, தண்ணீர்விட்டான் கிழங்கு, கொட்டை கரந்தைவேர், செம்முள்ளிவேர், முட்கா வேளைவேர், நீர்முள்ளி வேர், ஒட்டப்பட்டை, வேப்பம் பட்டை, மூக்குத்திப் பூண்டு, வேப்புடரி வேர், நார்த்ததை இலை, செம்மணத்திவேர், நன்னாரி வேர், வில்வ வேர், பொன்முசுட்டை வேர், பாதிரி வேர், சீதா செங்கழு நீர், கண்டங்கத்திரி வேர், ஆடாதொடை வேர், விட்ணு கிரந்தி வேர், தாமரை வளையம், கற்றாழை வேர், தூதுவளை வேர், இதுவகைக்குப் பலம்.. செங்கழுநீர், கிழங்கு பலம் .. ஆதண்டை, வேம்பு சமம் மேல்படி, சாறுபடி 5. ஏலக்காய் மற்ற வகை மூலிகை வகைக்குப் பலம் ... ஆறுமாதக் காடி படி, தாய் பசுவின் பால்படி ரெண்டு தயிர்த் தண்ணீர் படி 2 கலக்கவும், சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், சித்திரமூலம், விலாம்மிச்சம்வேர், வெட்டி வேர், கோட்டம், சிற்றரத்தை, மஞ்சள், கத்தூரி மஞ்சள், மரமஞ்சள், சுரை, நகம், பெருமரப்பட்டை, நாகணம், ஒத்தைப் பொடியில் இலவங்கப்பட்டை, இலவங்கப் பத்திரி, ஆனைத்திப்பிலி, நல்ல சந்தனப்பொடி, பூலாங்கிழங்கு பலம் 5, சமுத்திரப்

பச்சை 5, வகைக்கு பலம் 1/8, கோரோசனை, குங்குமப்பூ, கற்பூரம் வகைக்கு 1, புனுகு சட்டம் 1 பலம், கத்தூரி பணவெடை, கஞ்சா இலை சாறு படி 1/8, எண்ணெய் எடுத்து முழுகவும்.

வேறு

49. மேகனாதித் தைலம்

பழம்பாசி இலை, பாற்சோத்தியிலை, சிறுசெருப்படி இலை, நாகமல்லிகை இலை, ஊசி மல்லிகையிலை, பெருங்செருப்படி இலை, இண்டு இலை, விடதாரியிலை, வட்டக்கிலுகிலுப்பை, மணத்தக்காளி, ஓரிலைத் தாமரை, கஞ்சாங் கோரை, பசரி தூதுவளை, தகரை, கையாந்தகரை, விட்ணு கிரந்தி, பற்பாடகம், வெள்ளைச்சாரணை, கற்றாழை, முசுமுசுக்கை, செம்முள்ளி, துளசி, வில்வ இலை, கடல் பூண்டு, தென்னம்பாளை, புள்ளடி, வல்லாரை, புளியாரை, செப்பு நெருஞ்சில், நெருஞ்சில் ஆனை, நெரிஞ்சில், மாதுளை, மாங்கொழுந்து, நரளிக்[1] கொழுந்து, புளியங்கொழுந்து, மைக்கொன்னை, கோவை, நுணா, மணத்தக்காளி, வாகை, நில வாகை, நெய்சட்டி வெளி[2] பொன்னாங்காணி சிறுகுருஞ்சா, நாயுருவி, சிறுகுரட்டை, சின்னியிலை, சங்கயிலை, அழிஞ்சில், ஊழலாத்தி, நாகயிலை, பச்சரிசி, கீழா நெல்லி, சிறுகீரை, கத்திரி, நாயகம், மணலி, கற்பூரவல்லி, செங்காரைப் பழம், காரையிலை, கிளுவையிலை, சங்கம்பழம், கொட்டைக்கரந்தை, நார்க்கரந்தை இலை, கழற்சி, கோழியவரை, சங்கங் குப்பியிலை, வெள்ளருகு முருக்கிலை, முருங்கையிலை, அகத்தி பொடுதலை, பேய் பீர்க்கு, அவுரி, தலைசுருளி இலை, வெதுப்படக்கி, தாழம்

---

1. நரளி-மருட்டி, கிலுகிலுப்பை, கடலை. 2.வெளி-கரும்பு

விழுது, ஆலம் விழுது, இந்தச் சாறு வகைக்குப் படி 4, அப்பைக்கிழங்கு சேர் 5, ஆகாச கருடன் கிழங்கு சேர் 5, சத்தி சாரணைக் கிழங்கு சேர் 5, பூமிசர்க்கரை கிழங்கு சேர் 5, நிலப்பனைக் கிழங்கு சேர் 5, தண்ணீர்விட்டான் கிழங்கு சேர் 5, குளப்பாசிக் கிழங்கு சேர் 5, மெருகன் கிழங்கு 2 சேர் 5, சீந்தில் கிழங்கு சேர் 5, காட்டுக் கருணைக் கிழங்கு சேர் 5, கருணைக்கிழங்கு சேர் 5, பிரண்டைக் கிழங்கு சேர் 5, மாங்கிழங்கு சேர் 5, மெருகன்கிழங்கு சேர் 5, நீர்வள்ளிக் கிழங்கு சேர் 5, தாமரைக் கிழங்கு சேர் 5, வள்ளிக்கிழங்கு சேர் 5, செங்கழுநீர்க் கிழங்கு சேர் 5, சங்கம் வேர், சாரணை வேர், நிலக்கடம்பு, புங்கம் வேர், அவுரி வேர், செங்கத்தாரிபட்டை, அழிஞ்சில் வேர், வேப்பம்பட்டை, நிலவேம்பு வேர், சிவனார் வேம்பு, வேர்பூலா வேர், வரட்சுண்டி வேர், விடத்தலை வேர், வில்வவேர், நன்னாரி வேர், தூதுவளை வேர், பூவரசம் பட்டை, பூகாய், ஆவாரை, சமூலம் கழற்சி வேர், கொன்றைபட்டை, சங்கம் வேர், பரங்கிப் பட்டை, நுணாப்பட்டை, ஊழலாத்திப்பட்டை 2, காயவேர், நமுகம்பட்டை, நறுவிலிப்பட்டை, சித்திரமூலம், குண்டுமணி வேர், நார்த்தம் வேர், எலுமிச்சம் வேர், கொழுஞ்சிவேர், பனைவேர், பீளைவேர், பூனைக்காலி வேர், துத்திவேர், இவை வகைக்கு சேர் 2, விளக்கெண்ணெய் 3 சேர், பசுவின் பால் 3 சேர், வெள்ளாட்டுப்பால் 3 சேர், பூவந்திப்பட்டை, மாவிலங்கம் பட்டை, சிற்றாமணக்கம் பட்டை, சிற்றகத்திப் பட்டை, தேற்றன்பட்டை, குட்டி விளாவேர், பெருமருந்து வேர், உசிலம்பட்டை, பிரமியிலை, விழவியிலை, ஈரவெங்காயச் சாறு சேர் 5, எலுமிச்சம்பழம் 100, சித்தரத்தை சீரகம், கண்டத்திப்பிலி மூலம். (செய்முறை முழுமையாக இல்லை),

பரங்கிப்பட்டைச் சூரணம் புகை

சாதிப்பத்திரி, முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், அதிமதுரம் 1, கசகசா, நீர்முள்ளி விரை, கொத்தான் விரை சேர் 2, கோரோசனை பலம் 1, குங்குமப்பூ பலம் 1, கருஞ்சீரகம், கடுகுரோகிணி, கடுக்காய், நெல்லிமுள்ளி, தான்றிக்காய், வெட்பாலை அரிசி, நீரடிமுத்து, ஓமம், திப்பிலி, சேங்கோட்டை, சேர்க்கம் பிசின், கார்போக அரிசி, நிலாவாரை சேர் 2, கல்மதம், கல்கொம்பு சேர் 2, முள்ளிவிரை, துத்திவிரை, கையாந்தகரை விரை, பூனைக்காலி விரை, உள்ளி சேர் 2, மற்றது நிரை காணாத மருந்துவகை சேர் பலம் 5, சங்கங்குப்பி வேர், வத்திரகாயம் பண்ணினது, வராகனெடை 10, கொவுளம் பட்டை வராகனெடை 4, சங்கம் வேர் வராகனெடை 8, நுணாப்பட்டை வராகனெடை12, வத்திரகாயம் பண்ணி எடுத்துக்கொண்டு பரங்கிப்பட்டை சேர்க்க பட்டையில் ஊழலத்தியிலேச் சாறு, சங்கயிலைச்சாறு, நுணாயிலைச் சாறு, இந்த மூன்று சாற்றில் பட்டை மாத்திரம் ஊற வைத்து மறுபடி காயவைத்து வத்திரகாயம் பண்ணி முன்சொன்ன வகைத் தூளில் கலந்து திருகுகள்ளி மூணு தூக்கு கொண்டு வந்து பெருஞ் சட்டியில் போட்டு பசுவின் கோமியம் படி 2 விட்டு தண்ணீர் படி 2 விட்டு சட்டி வாயில் வேடுகட்டி அதின் மேல் முன் மருந்தெல்லாம் வேட்டில் வைத்து மேல் சட்டி மூடி சீலை மண் செய்து ஒரு சாமம் எரித்து ஆறின பிறகு முன் பட்டை எட்டுவகைத் தீந்நிரிலும் முன்நிறைபோக உதியம் பட்டையில் மூன்று புகையேற்றவும். மறுபடி கருங்குங்கலியம் பலம் 3 மலாக்கா[1] சாம்பறாணி பலம் 3, கார்போக அரிசி பலம் 3, காட்டு சீரகம் பலம் 3, செங்கதாரி பட்டை பலம் 3, சாதிலிங்கம் வராகனெடை 9, இந்த மருந்தெல்லாம் பொடி செய்து சட்டியில் போட்டு

1. மலாக்கா-மலேசியா

வேடுகட்டி முன் மருந்தை வேட்டின் மேல் வைத்துக் கட்டிக் கொண்டு மூடி சீலை மண் செய்து ஒரு சாமம் எரித்து ஆறின பிறகு அந்த வேட்டு மருந்தை யெடுத்து வைத்துக் கொண்டு தினம் வெருகடி பிரமாணம் உண்ண நாற்பது நாள் தின்றால் தீரும் வியாதிகள் மேகங்கள், சூலைகள், மேகவெடிகள், கிரந்திப்புண், மேகத்தின் மேல் இரணங்கள், இவைகலெல்லாம் தீரும்.

பத்தியம்: இச்சாப்பத்தியமாய் இருக்கவும். புளிப்பு தவிர்க்கவும்.

வேறு

51. விக்கலுக்கு மருந்து கிராணிக்கு அண்டபற்பம்

ஏலரிசி, சாம்பிராணி, கலைமான் கொம்பு, இந்த மூன்றையும் சமன் கூட்டி, அரைத்து வர்த்திப் பண்ணி, நாசியில் பிடிக்க, விக்கல் நிற்கும். சாதிக்காய் கொண்டு வந்துத் துளைத்து அதுக்குள்ளே அபின் வராகனெடை 4 போட்டு தூள் கொண்டு மூடி எலுமிச்சம் பழம் 1 அதைத் துளைத்து அதுக்குள்ளே வைத்து அறுத்துசில்லு கொண்டு மூடி சீலைமண் செய்து பழம் கருகப் புடம் போடவும் அதை எடுத்து பழத்தை எரித்துப்போட்டு அந்த சாதிக்காயை அரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை பண்ணி கிராணிக்கடுப்புக்கு கொடுக்கவும். வெள்ளைப் பாசாணம் 5, ஈர வெங்காய சாறுவிட்டு தினம் அரை சாமம் பத்து நாள் அரைக்கவும். மறுபடி எடுத்து குக்குட புடம் போடக் கட்டும். சகல சுரங்களுக்கும் கொடுக்கலாம். கோழி முட்டை ஒருபலம் 1, இந்துப்பு வராகனெடை 2, பிரண்டைச் சாறுவிட்டு இரண்டு சாமம், அரைத்து உலர்ந்த பின் எடுத்து முழுப்புடம் போடப் பற்பமாம். சகல வாயுவுக்கும் அனுபானம் அறிந்து கொடுக்கவும்.

52. விருத்திக்கு மருந்து, அப்பிரக சுத்தி, விசப்பாண்டுவுக்கு மருந்து

வெள்ளை வெங்காயம் சேர் 2 1/2, இலவங்கப்பட்டை வராகனெடை 2, கிராம்பு வராகனெடை 10, அப்பிரகமும், நெல்லும் இரண்டும் ஒருடையில் போட்டு காடியில் ஒரு ராத்திரி ஊறப் போட்டு மறுபடி எடுத்து தண்ணீர் விட்டுத் தேய்க்கவும். வெண்ணை போல விழும்.

53. கிருட்டின அப்பிரகச்சுத்தி

கனகுழிவெட்டி, குழியை மெழுகிக் குழி ரொம்ப கரியைக் கொட்டி அதுமேல் அப்பிரகம், வைத்து பக்கவெட்டில் துருத்திக் கொண்டு ஊத கீழே சத்தாய் இறங்கும். மஞ்சள் பலம் 2, நீர்முள்ளி விரை பலம் 2, ஈரவெங்காயச் சாறு வகை, கையாந்தகரைச் சாறு எருமை கோமியம், சங்கங்குப்பி இலைச் சாறு, எலுமிச்சம்பழச் சாறு, எலுமிச்சம் பழச்சாற்றில் அரைப்பொடி சுத்தி பசுவின் கோமியத்தில் கிட்டம் சுத்தி.

54. மேகத்தின் மேல் கண்ட மேகக்கட்டிக்கு , அரையாப்புக் கட்டிக்கு, மேகத்தில் மேல் கண்ட கட்டிக்கு மருந்து

குக்குலு பலம் 4, பறங்கிப்பட்டை பலம் 4, கந்தகம் பலம் 2 நறுக்கி மூலம் சுக்கு சித்திரமூலம்,ஓமம், வாய்விளங்கம், திப்பிலி, பேய்ப்புடல், பொன் முசுட்டை, செம்புளிச்சம் கட்டை, சீரகம் வகைக்கு பலம் 15, கடுகுரோகிணி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லி முள்ளி, வகைக்குப் பலம் 1/8, சிவனார் வேம்பு, வெள்ளருகு, சங்கம் வேர், ஊழலத்திப் பட்டை வகைக்கு பலம் 1/4 இந்த படி கொண்டு வந்து இடித்து வத்திரகாயம் பண்ணி வேளைக்கு இரண்டு வராகனெடை சாப்பிடவும். இப்படிக்கு இருபது நாள் சாப்பிடவும்.

பத்தியம்: புளி, புகையிலை தவிர்க்கவும். கத்திரி பிஞ்சு, புடலம் பிஞ்சு, வெள்ளாட்டு உப்புக்கண்டம், குரவை மீன், விரால் மீனைக் கூட்டவும். இதுக்குப் பற்று கொடி வேலிவேர், கார்த்திகை கிழங்கு, சூதம் நாபி, அவுரி வேர், வசம்பு, குண்டுமணி பருப்பு, பெருங்காயம், வெள்ளை பாசாணம் வகைக்கு வராகனெடை ஒன்று இதை இடித்து வத்திரகாயம் பண்ணி கோழி முட்டை வெண்கரு விட்டு மத்தித்து பற்றுப் போடவும். சகலமேக கட்டிகளும் தீரும்.

55. இருபத்தொரு வகைக்குக் கசாயம்

சுரத்துக்குக் கசாயம் பரங்கிப் பட்டை சேர் 1/4. நாட்டு திப்பிலி மூலம் பலம் 1, திப்பிலி பலம் 1/2, கோட்டம் பலம் 1/2, கொத்தமல்லி பலம் 2, தேசாவரம் சீரகம் பலம் 1/2, ஓமம் பலம் 1/2, வாய்விளங்கம் பலம் 1/2, நிலாவாரை பலம் 1/2, கண்டத்திப்பிலி பலம் 1/2, கண்டங்கத்திரி வேர் பலம் 1/2,முட்காவேளை வேர் பலம் 3/4, வாலுளுவை, அரிசி பலம் 2, சங்கம் வேர் பலம் 1, இந்த மருந்தெல்லாம் இரும்படியாய் இடித்து 11, பாங்காய் பண்ணி ஒரு பங்கைச் சட்டியில் போட்டு கால்படி தண்ணீர் விட்டு வீசம் படியாகக் காய்ச்சிக் கொடுக்கவும். அந்த சக்கையில் மறுபடி தண்ணீர்விட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும். இவ்வாறு பதினொரு நாள் கசாயம் கொடுக்கவும். வாதசுரம், பித்தசுரம், மேகத்தின் மேல் கண்ட சுரம் யாவும் தீரும்.

56. சன்னிக்கு புகை கர்ப்பந்தரிக்க ஆயிலியத் தைலம்

உளுந்து, கடுகு, நுனிமஞ்சளுடன் உயர்ந்த
புழுங்கலரிசி தவிடு தனில் கால்
சேர்ந்த வசம்பு, வேப்பிலை, காயம் உள்ளி,
தேவதாரம், கொத்தமல்லி பெரும்

மாட்டு கொம்புச்சீவி ராவி நல்லோர் நடக்கும்
நால்சந்தி மண்ணும் நலமாய்க்
கூட்டிப்பொடி செய்து பொல்லாப்புடையகனி அகலும்
பொடியைப் போடுங் கண்டீரே.

பதிப்பாசிரியர் உரை: கடுகு, நுனி நுனிமஞ்சள், புழுங்கலரிசி, தவிடு-114, வசம்பு, வேப்பிலை, பெருங்காயம், பூண்டு, தேவதாரம், கொத்தமல்லி, மாட்டுக் கொம்புத்துாள் 4 தெருக்கள் கூடுமிடத்து மண். பொடியாக்கித் தீயிலிட, விலகும்.

57. கர்ப்பந்தரிக்க

நாவல் மரத்தின் வடக்கே போகிற வேர்ப்பட்டையை எடுத்து உலத்தின தூள் படினு பாகலிலைச் சாறு படி 1/8. பசுவின் கோசலம் படி1/8 இப்படிக் கூட்டிக் குளித்த நாலா நாள் சாப்பிட கர்ப்பமாம். ஆயிலிப் பட்டை பலம் 10. குருந்தொட்டி வேர் பலம் 10, அமுக்குறா வேர்பலம் பலம் 10. வேலம்பட்டை பலம் 50. வேங்கைப்பட்டை பலம் 15. இவையெல்லாம் இடித்துத் தூள் பண்ணிக் கொண்டு கடுகுரோகிணி, சாதிக்காய், முத்தக்காசு பற்பாடகம். நன்னாரி வேர், கருஞ் சீரகம். நற்சீரகம் விலாமிச்சம் வேர் இது வகைக்கு பலம் கூட்டி அரைத்து நல்லெண்ணெய் நாழி விட்டு எரித்து மெழுகு பதத்தில் வடித்து முழுகி வரவும்.

58. விரேசனத் தைலம், வெளுத்தத் தைலம்

இதுக்குத் தீரும் வியாதி நாற்பது வகைப் பித்தம் கண்ணோவும். மண்டையிடி ஈளை, வரள் சூலை மண்டைச் சூலை, கால் கை எரிவு தீரும்.

அரிதாரம் பணவிடை 1, கந்தகம் பணவிடை 2, நேர்வாளம் பண விடை 3, வெட்பாலை 5 பணவிடை,

வெங்காரம் பணவிடை 5. ஆமணக்கு முத்து பணவிடை 6 . கார்போகரிசி பணவிடை 7, புரசம் விதை பணவிடை 8, கடுக்காய் பணவிடை 6. சிவதை வேர் 10 பணவிடை, புங்கம் விதை பதினொரு பணவிடை இது சேர்த்துக் கூட்டிக் கள்ளிப்பால் விட்டு ஒரு சாமம் நன்றாய் அரைத்து இந்தப் படி மூன்றுநாள் அரைத்துக் கொட்டைத் தேங்காயிலிட்டு நிறுத்திப் போடாமல் மூடி வெய்யிலிலே அஞ்சு நாள் வைத்து எடுக்க தைலமாம். அதை எடுத்துப் பிழிந்து தைலத்தைப் பரணியிலே வைத்துக் கொண்டு அரைப்பணவிடை தைலம் எடுத்துத் தொப்புளில் தடவவும். நன்றாய் பேதியாய் போதுமென்றால் சந்தனம் பூசிக்கொள்ள நிற்கும். இதை மல்லிகைப் பூவைப் பந்து கட்டி, கால் பணவிடை தயிலம் பூப்பந்தில் தடவி பத்துத் தரம் பூப்பந்து முகர்ந்தால் பத்து தரம் பேதியாகும். போது மென்றால் சந்தனம் கையில் தடவி முகர்ந்து பார்க்க பேதி நிற்கும். இதுவெகு சோதனை உசிதம். இது இப்போ தேங்காய்த் தைலம். இது உசிதமான தைலம்.

59. வெகு படைக்குத் தைலம், சம்பீரத் தைலம்

வெருகின் சமூலமும் பாலிலரைத்து, நாழி நல்லெண்ணெயுங் கூட்டி நாழி பசுவின் பாலுங் கூட்டி வடித்து உள்ளுக்கு சாப்பிட்டு மேலும் பூசவும். சர்வ சுரமுந்தீரும்.

எருக்கம் பாலுழக்கு, வெள்ளாட்டுப் பாலுழக்கு, நொச்சியிலைச் சாறு உழக்கு, இளி இலைச் சாறு உழக்கு, நல்லெண்ணெய் நாழி கூட்டி உள்ளி பலம் 2, வசம்பு பலம் 2, கூட்டி எரித்து இந்த எண்ணெய் இட்டு உடம்பு பிடிக்கச் சர்வ வாதமும் மாறும்.

உசிதம் – நன்மை; வெருகு–ஆண் பூவரசு மரம்.

எலுமிச்சம் பழச்சாறு நாழி, நல்லெண்ணெய் நாழி, இது இரண்டுங் கலந்து கொதி இட்டு இந்த எண்ணெய் நெருப்பிலிட்டால் எரிகிற பதத்திலிறக்கி இதுக்கு கற்கம், நாகப்பூ, கருங்குங்குலியம். கடுகு, வேப்பம், விரை மஞ்சள், மரமஞ்சள், திரிகடுகு, சதகுப்பை, வெள்ளுள்ளி இவை சமன் கூட்டி உள்ளியை அரைத்து மத்தித்து மருந்தெல்லாம் பொடி செய்து தூவி வைக்கவும். ஒரு கரண்டி எண்ணெய் உள்ளுக்கு கொண்டு மேலும் பூசவும். இதுக்கு வாத விகாரம், பயித்திய விகாரம், பயித்திய விச பாகம் உடம்பு கடுப்பு புருடை ஆடு சன்னி, அத்தி சுரம், சந்து வாதவீக்கம், கர்ப்பிணி வீக்கமும் குணமாம்.

60. கிரந்தி விகாரத்துக்குத் தைலம்

கிரந்திப்புண் குடாரத்துக்கு கிரந்தினாலே சேத்துப் புண்போல் பிளவைக்கு, வண்டு கடிக்குத் தைலம்.

கையாந்தகரை கழற்சிலை இண்டிலை, சிறு செருப்படி இலை, கோழிஅவரை இலை, கொட்டைக் கரந்தை, காட்டு மல்லிகையிலை, சிறு புள்ளடி இலை, தவசி முருங்கை இலை, அவுரி இலை, கருநொச்சி இலை, செங்கதாரிப் பட்டை 3, ஈரவெங்காயம் பலம் 3. அனல் கரி ...... பலம் 3. இது பச்சிலை வகைக்கு சாறு படி1/4. கடைச்சரக்கு, பரங்கிப் பட்டை, திப்பிலி, வாய்விளங்கம், கொத்தமல்லி, கருஞ்சீரகம், ஏலம், இலவங்கப்பட்டை, சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு அதிமதுரம், செவ்வியம், பூதகரப்பான் பட்டை இது வகைக்கு பலம் 2, சிற்றாமணக்கெண்ணெய் படி 1½. பச்சிலைச் சாறும் கூட்டி விட்டு செங்கத்தாரி பட்டையும் ஈர வெங்காயம் சிரமம் போக்கி நறுக்கி 1, கூடப் போட்டுக் காய்ச்சி மெழுகு பதமாயி எண்ணெவெந்த உடன் இறக்கி வடிகட்டி மறுகலசத்திலே வறுத்துக் கொண்டு கடைசரக்கெல்லாம்

இடித்து வத்திரகாயம் பண்ணி இந்த எண்ணெயில் போட்டு மறுபடிக் கொதிக்க வைத்து இறக்கிக் கொள்ளவும். ஒரு சிறு கரண்டிப் பிரமாணம் சாப்பிடவும்.

பத்தியம்: உப்பு, புளி ஆகாது. துவரம் பருப்பு, பசுவின் நெய், பால் கூட்டிக் கொள்ளவும். புதுச்சட்டி புதுபானையில் சமைத்துச் சாப்பிடவும்.

61. மேகவெட்டை கண்ணெரிவுக்குச் சந்தனாதித் தைலம்

நல்லெண்ணெய் படி 1, சிற்றாமணக்கெண்ணெய் படி1, பசுவின் நெய் படி 1, பசுவின் பால் படி 1, முலைப்பால் படி 1/8, சிறுகீரைச் சாறு படி 1, பொன்னாங்காணிச் சாறு படி 1/8, வெள்ளைச்சாரணை படி 1/8, வரள் பூலாக் கொழுந்துச் சாறு படி 1/8. அதிமதுரம் வராகனிடை 2, செண்பகப்பூ வராகனெடை 2, நற்சீரகம் வராகனெடை 2, நல்ல சந்தனம் வராகனெடை 2, இந்தக்கடை அவிழ்தம் சூரணம் பண்ணி எண்ணெயில் போட்டு மெழுகு பதத்தில் எரித்துக் கொள்ளவும். இந்த தைலம் கலசத்தில் வார்த்துத் தானியப் புடம் 15 நாள் வைத்து பின்பு எடுத்து மூழ்கவும். உசிலம் பொடியிட்டு மூழ்கவும்.

பத்தியம்: கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

62. மேக வெட்டையின் பேரிலெடுத்த பீனசத்துக்கு

நல்லெண்ணெய் படி 1, சிற்றாமணக்கெண்ணெய் படி 1, பசுவின் நெய் படி 1, பசுவின் பால் படி 3, முலைப்பால் படி 1/2, ஆயில்ப்பட்டை பலம் 5, சீந்தில்தண்டு பலம் 3, சிற்றாமுட்டி வேர் பலம் 3, கையாந்தகரைச் சாறுபடி 1/2, ஆதண்டைச் சாறு படி 1, கொட்டைக் கரந்தைச் சாறு படி 1, நொச்சிச் சாறு 1, பொன்னாங்காணிச் சாறு படி 1,

சிறுகீரைச்சாறு வறள் பூலாக் கொழுந்துச் சாறு படி 1, சிற்றரத்தை பலம் 1, தேவதாரம் பலம் 1, சதகுப்பைப் பலம்1, அதிமதுரம் பல 1/4, செண்பகப்பூ பலம் 1, வெந்தயம் பலம் 1/4, இலவங்கப்பட்டை பலம் 1, சடாமாஞ்சில் பலம் 1, இலவங்கப்பத்திரி பலம் 1/4, கோட்டம் பலம் 1/4, வெட்பாலை அரிசி பலம் 1/4, ஏலம் பலம் 7, வெட்டி வேர் பலம் 1/4, இலாம்பிச்சம் வேர் பலம் 1/4, மரமஞ்சள் பலம் 1/4, செவ்வள்ளிக் கொடி பலம் 1/8, செவ்வியம் பலம் 1/4, கொத்தமல்லி பலம் 1/2, வாய் விளங்கம் பலம் 1/2, திப்பிலி பலம் 1, பூலாங்கிழங்கு 1/4, சாதிக்காய் பலம் 1/4, சாதிப்பத்திரி பலம் 1/8, நல்ல சந்தனம் பலம் 10, குங்குமப்பூ வராகனெடை 2, பச்சை கற்பூரம் வராகனெடை 1/2, கோரோசனை வராகனெடை 1/2, நெல்லிமுள்ளி பலம் 1, வெட்டுவகை மருந்து நறுக்கிப் பானையிலே போட்டு முக்குறுணி தண்ணீர் வார்த்து மூணு படியாய் காய்ச்சி இறுத்துக் கொண்டு அதன் பேரில் பச்சிலைச்சாறு விட்டு கொதிக்கச் செய். கடை சரக்கை சூரணம் பண்ணிப் பாலில் கரைத்து அதன் பேரில் விட்டு எண்ணெயும் விட்டு சந்தனம் அரைத்துப் போட்டு மெழுகு பதத்திலிறக்கி இறுத்துக் கொண்டு கலயத்தில் சாம்பிராணிப் புகையைப் பிடித்து இந்த எண்ணெயை கலசத்திலூற்றி வைத்துக் கொண்டு அதன் பேரில் குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக் கற்பூரம் பொடி செய்து போட்டு வைத்துக் கொண்டு எட்டுநாளைக்கு ஒருக்கால் முழுகவும்.

தீரும் வியாதி: மேகவெட்டை, இருமல், பீனிசம், சுவாசகாசம், இரத்தகாசம், இரத்தப் பீனசம் இது வெல்லாம் தீரும்.

பத்தியம்: இச்சாப்பத்தியம்.

63. அசுவகந்திச் சூரணம்

கிராம்பு வராகனெடை 1, சிறுநாகப்பூ பலம் வராகனெடை 1/4, ஏலம் பலம் 1/2, சுக்கு பலம் 1, திப்பிலி பலம் 1/2, தாளிச பத்திரி பலம் 1/2, கண்டங்கத்திரி பலம் 1/4, கண்டத்திப்பிலி பலம் வ, கருஞ்சீரகம் பலம் 1/4, மிளகு பலம் 1/2, சீரகம் பலம் 1/2, சர்க்கரை பலம் 4, கடுக்காய் பலம் 1, இவையெல்லாம் சுத்தி பண்ணிக் கொண்டு இடித்து வத்திரகாயம் பண்ணிக் கொள்ளவும். அதுக்கு மேல் இடித்து வத்திரகாயம் பண்ணிக் கொள்ளவும். அமுக்கிரா வேர் கொண்டுவந்து வில்லை வில்லையாக நறுக்கிப் பசுவின் பால் விட்டுக் காய்ச்சி உலர்த்தி மறுபடி வெள்ளாட்டுப் பாலில் காய்ச்சி உலர்த்தி மறுபடி செவ்விளநீர் விட்டுக் காய்ச்சி உலர்த்தி இந்த படி மூன்று சுத்தி பண்ணி நிழலுலர்த்திக் கொண்டு இடித்து வத்திரகாயம் பண்ணி முந்தின தூளும் சர்க்கரையும் கலந்து கொண்டு நெய்யிலோ, தேனிலோ, தேகபிரகிருதி[1] அறிந்து கொண்டு வெருகடிப் பிரமாணம் கொள்ள சூசிகா வாயு அத்தி[2] சுரம், இருமல், பழஞ்சுரம் இதுவெல்லாம் தீரும். பசியுண்டாயிருக்கும்.

பத்தியம்: கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

64. கற்பூராதிச் சூரணம்

கற்பூரம் பணவிடை 2, வெள்ளிலோத்திரம் (லோத்ரா) பணவிடை 4, தக்கோலம் பணவிடை 4, சாதிக்காய் பணவிடை 4, பச்சிலை பணவிடை 7, கிராம்பு பணவிடை 8, நாகப்பூ பணவிடை 9, திப்பிலி பணவிடை 10, மிளகு பணவிடை 11, சுக்கு பணவிடை 12, இவை எல்லாம் இடித்து வடித்துக்கொண்டு இதுக்குச் சரி சீனி

---

1. பிரகருதி–வலிமை 2. அத்தி–எலும்பு.

சர்க்கரை கூட்டிக் கொள்ளவும். கொள்ளும் போது வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். பிரமியம் மூத்திர கிரீச்சரம் இளைப்பு உள்காய்ச்சல் இவை எல்லாம் தீரும்.

65. சூரண ராசன்

திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், சுக்கு, சித்திரமூலம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய். பெருங்காயம், மிளகு, கட்டுக்கொடி, வேர் வசம்பு, வெள்ளை வெங்காயம், ஓமம், பேய்துமட்டி வேர், தலை சுருளிக் கொடி, ஆனைத் திப்பிலி, நேர்வாளம், கடுகு ரோகிணி, முட்காவேளைவேர், வெள்ளைச்சாரனை வேர், நொச்சிவேர், கையாந்தகரை, நிலவேம்பு, காட்டு மல்லிகை வேர், மணத்தக்காளி வேர், ஆயிலிப்பட்டை, கோட்டம், நற்சீரகம், கருஞ்சீரகம், குரோசாணி ஓமம், பிரண்டை வேர், மண்டூரம், பொற்கொன்றை, நல்ல கொன்றை, மஞ்சள் கொன்றைக் கிழங்கு, சத்திச்சாரம், யவச் சாரம், நவச்சாரம், வெடியுப்பு, நல்ல உப்பு, இந்துப்பு, காய்ச்சியுப்பு[1], வளையலுப்பு, இது வகைக்கு வராகனெடை 1. கூட்டிச் சுத்தி பண்ணிக் கொண்டு இடித்து வத்திரகாயம் பண்ணிக்கொண்டு வெந்நீரில் பெரியவர்க்குஒரு வராகனெடை குழந்தைக்கு அரை வராகனெடை கொடுக்கவும்.

தீரும் வியாதி: குன்மம், மகோதரம், கிரந்தி, வாதகுணம், வயிற்று வலி, பீலிகை, மலபந்தம், நீராமை வயிறு உப்பல், மார்புவலி, இளைப்பு, பாண்டு ரோகம், சோகை விசபாகம், வறுமை அஞ்சு வகைக் காசம், சீதசுரம், பூரணசுரம், அசீரணம், சத்தி தோசம், குரல் நெரிவு, பித்தஞ் சூலை இவை எல்லாம் தீரும்.

---

1. காய்ச்சியுப்பு-காய்ச்சிலவணம், சவட்டுப்பு

66. சவுபாக்கிய சுண்டி

சுக்கு பலம் 8, மேல்புறணி போக்கிக் கரணை கரணையாக நறுக்கி, முருங்கைப் பட்டைச் சாறும் இந்த வகையில் மாவிலங்கச் சாறும், கண்டங்கத்திரிச் சாறும், தூதுவளைச் சாறு, முக்காவேளைச் சாறு, துளசிச்சாறு, ஆடாதொடைச் சாறு இந்தவகையில் நாளொன்றுக்கு ஒரு சாறுவிட்டு உலர்த்தவும். இந்த வகைச் சாறு எல்லாம் விட்டு உலர்த்தவும். மறுபடி எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு நாள் உலர்த்தவும். இப்படி உலர்த்திச் சூரணம் பண்ணிக் கொள்ளவும். இலவங்கப்பட்டை பலம் 1/8, மிளகு பலம் 1/8, திப்பிலி மூலம் 1/8, சீரகம் பலம் 1/8, ஏலம் பலம் 1/8, ஓமம் பலம் 1/8, இவையெல்லாம் இடித்துச் சூரணம் பண்ணி ரெண்டு சூரணமும் கூடக் கலந்து கொண்டு சட்டியைக் காயவைத்துப் பொய்வரையாக வறுத்து வைத்துக் கொண்டு லோக செந்தூரம் இரண்டு வராகனெடை கலந்து கொண்டு அசீரணம், பேதிக்குத் தேனில் சாப்பிடவும்.

67. ஸ்ரீ திரிகண்டாத்திரி சூரணம் சர்வ மேகத்துக்கு

சீதமந்தம், விழுகிற பேதிக்கு சர்க்கரையிலாகிலும்நெய்யிலாகிலும் சாப்பிடவும். இதில் தீரும் வியாதிக்கு சூதக வாய்வு மேல் கண்ட சுரம் அரோசகம், சூலை, தாகம், தலைவலி, அசீரணம், சுரம், சயம், சகல கிராணியும், சோகை, பாண்டு காமாலை இவைவெல்லாம் தீரும்.

பத்தியம் : உப்பு வறுத்துக் கூட்டிக் கொள்ளவும்.

68. நல்ல சந்தனம்

இலுப்பைப்பூ, அதிமதுரம், பூலாங்கிழங்கு, சீரகம், விலாமிச்சம் வேர், செங்கழுநீர்க்கிழங்கு, கோட்டம், மாதுளம்பிஞ்சு, மஞ்சள், மலாக்கா சந்தனம், சாதிக்காய், எலுமிச்சம் விரை, தக்கோலம், தண்ணீர் விட்டான் கிழங்கு, தேத்தான் விதை, இலந்தைப் பிஞ்சு, நெருஞ்சில்காய், நிலப்பனைக்கிழங்கு, சீந்தில் கொடி, அத்திப்பிஞ்சு, அறுகன் வேர், ஆவாரம் பஞ்சாங்கம், இவை வகைக்கு பலம் 1/2. குங்குமப்பூ வராகனெடை 1, இதுவெல்லாம் உலர்த்திச் சுத்தி செய்யத் தக்கது. சீந்தில் மேல் செரமம் போக்கவும். தண்ணீர்விட்டான் கிழங்கின் செரமும், நரம்பும் போக்கவும். இப்படி சுத்தி செய்து இடித்து வத்திர காயம் பண்ணிச் சமன் சர்க்கரைக் கூட்டிச் சாப்பிடவும். சூரிய உதயத்துக்கு வெண்ணெயில் மத்தியானத்தில், நெய்யில் சாயுங்காலந் தேனில் கொள்ளவும்.

தீரும் வியாதி: சர்வாங்க வாதம், கடின மேகம், வெகு மூத்திரம் தாகம், பைத்தியம், வாந்தி, கல்லடைப்பு, துன் மாங்கிசம், மேகத்திலெடுத்த வியாதி சகலமும் தீரும். பெரும்பாடுப் பைத்தியப் பிரமை முதலானதும் தீரும். இச்சாபத்தியம். வெல்லம், பால், கரப்பான பண்டம் தவிர்க்கவும்.

69. சவுபாக்கிய சுண்டி

சுக்கு பலம் 8, ஏலம் பலம் 1, இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, வாலுளுவை, அரிசி வாய் விளங்கம், திப்பிலி, மிளகு, சீரகம், ஓமம், கிராம்பு, போளம், கையாந்தகரை, சூரணம் இதுவெல்லாம் வகைக்கு ஒரு பலம். சதகுப்பை பலம் 5, கொத்தமல்லி பலம் 5, கடுக்காய் பலம் 10, தான்றிக்காய் பலம் 10, சர்க்கரை

பலம் 200, இந்தக் கடைச் சரக்கைச் சூரணம் பண்ணி, சுக்குப் புரணி சீவிப் போட்டு அதுவும் சூரணம் பண்ணி அந்தச் சர்க்கரைக்கு அளவாய் தண்ணீர் விட்டுக் கம்பி பதமாய்க் காய்ச்சி அதில் சூரணத்தைப் போட்டுக் கிண்டி அதன் மேல் அரைப்படி தேன் விட்டு இலேகியம் பண்ணி வைத்துக் கொண்டு கழற்சிக்காய் அளவு சாப்பிடவும்.

தீரும் வியாதி: சூசிகாவாய்வு, கர்ப்பசூலை, உதரவாயு, பிள்ளைப் பெற்ற சீழ்கட்டு, உடம்பில் வலி, அக்கினி மந்தம் இதுவெல்லாம் தீரும். காணம் (கொள்), பன்றி மாமிசம், பாகற்காய், பரங்கிக் காய் ஆகாது. மற்றும் கரப்பான், பண்டம் தவிர்க்கவும்.

70. அமுல கிருதம்

நிலப்பனைக் கிழங்கு, கொடிவேலி வேர், நெருஞ்சில், நன்னாரி, சத்திச் சாரணை, தூதுவளை, கண்டங்கத்திரி, அமுக்கராக் கிழங்கு, சிற்றாமுட்டி, பேராமுட்டி, சீந்தில்தண்டு, பாதிரி சாரணை, இலுப்பை, தண்ணீர்விட்டான் கிழங்கு, தாமரை வளையம், சிறுநாகப்பூ, இவை வகைக்கு பலம் 3. வேர்கள் இடித்து தூணி நீர்விட்டுக் குறுணியாக வடித்து நெல்லிக்காய்ச் சாறு கருப்பஞ் சாறு, தேங்காய்ப் பால், வாழைக் கிழங்குச் சாறு, பொன்னாங்கண்ணிச் சாறு, சங்கம் வேர்க் கசாயம், ஆடாதொடைச் சாறு, கொத்தான் சாறு, சீந்தில் தண்டு சாறு, நிலப்பலைக் கிழங்குச் சாறு, இவை வகைக்கு ஒரு படிச் சாறு விட்டு, நெய் படி 2, பால் படி 2, கிராம்பு, செவ்வியம் மஞ்சட்டி, இலுப்பைப்பூ, கோட்டம், நல்ல சந்தனம், தேவதாரு 2, தக்கோலம் நன்னாரி சிற்றாமல்லி வேர், பேராமல்லிவேர், முத்தக்காசு, சடாமாஞ்சில், அதிவிடையம், காகோளி விதை 2, திப்பிலி மூலம் ஆடுதீண்டாப் பாளையும், சாரணை வேர், முந்திரிகைப்

பழம், நெய்தலக் கிழங்கு, ஈச்சங் குருத்து விடத் திரை திரிக்கடுகு, இந்துப்பு, சாரத்துயம் வகை 2, ஆனைத் திப்பிலி ஏலம், தாளிச பத்திரி, செண்பக மொட்டு, இவை வகைக்கு ஒரு வராகனெடை, அரைத்துப் போட்டுப் பதத்தில் வடித்து தினம் ஒரு கரண்டி நெய் சாப்பிடத் தீரும் வியாதி: சயம், உள் மாந்தம், காசம் சுவாசகாசம், வலிப்பு, பாண்டு, சிரங்கு, மேகம், மேகசுரம் அத்திசுரம், வீரியவிருத்தி, அதிகமாகி இருக்கும். முயல் வலிப்பு நாலும்போம். அனேக தோசம் தீரும். சயம், சயப் பாண்டு, சயகுன்மம், துன்மாங்கிசம், யோனிச் சூலை கர்ப்ப தோசம் இவை முதலாகிய வியாதிகள் தீரும்.

கர்ப்பமுண்டாம், ஆயுள் உண்டாம் விட்ணுவுடைய சக்கரத்தினாலே அடிபட்டு போனாற்போலே இந்த மருந்துக்குச் சகல வியாதியும் அசுநாளில் தீரும்.

பத்தியம்: கார்ப்பு புளிப்பு கரிப்புப் பண்டம் தவிர்க்கவும்.

71. சந்தனாதிக் கிருதம்

சந்தனம், நன்னாரி, விலாமிச்சம் வேர், தண்ணீர் விட்டான் கிழங்கு, வெட்டிவேர், சிறுகீரைவேர், நெல்லிமுள்ளி, திராடசாதி. கத்தூரி மஞ்சள், தாமரை வளையம், செங்கழுநீர்க் கிழங்கு, மருக்காரை வேர், வரள் சுண்டி பற்பாடகம், சீந்தில், காணாசொரி வேர், மண்சட்டி சிற்றாமுட்டி பேராமுட்டி, கண்டங்காரி, கண்டங்கத்திரி, முள்கத்திரி சிற்றாமல்லிவேர், மல்லி, நெருஞ்சில், வட்டத் திருப்பி, பேய்ப்புடல், அறுகு, நாலுமரப் பட்டை, பெருமுத்தக் காசு இவை வகைக்கு மூணுகாசிடை கூட்டி நெய் குறுணி விட்டுப் பதத்தில் வடித்து இந்த நெய் சாப்பிடத் தலைமுழுகத் தீரும் வியாதி இரத்தபித்தம்,

மூக்கால் விழுகிற இரத்தம், காது கேளாத பேர்க்கு காது கேட்க்கும். கண்ணிலேற்றம் மூல இரத்தம், யோனி இரத்தம், பெரும்பாடு, அத்திசுரம் பயித்தியம் இப்படி சர்வரோகமும் தீரும்.

72. தசமூலாதிக் கிருதம்

மிளகுக் கொடி, தூது வளை வேர், நிலாவரை வேர், சங்கம் வேர், நெல்லிமுள்ளி, கடுக்காய், தான்றிக்காய், மரமஞ்சள், தேவதாரம், அரத்தை, அமுக்கரா வேர், கோரைக்கிழங்கு, இவை ஒவ்வொன்றும் மூன்று பலம் தசமூலம் மூன்று பலம், மாவிலங்கப் பட்டை, குறிஞ்சான் வேர், தண்ணீர்விட்டான் கிழங்கு, கொடிவேலி வேர், விழுதியிலை, வில்வவேர், ஆடுதின்னாப்பாளை, முள்ளி வேர், கண்டங்கத்திரி, ஆயில்பட்டை, புங்கம்பட்டை, முன்னை வேர், தழுதாழை வேர், தர்ப்பப் புல், சென்பாலைக் கிழங்கு இவை ஒவ்வொன்றுக்கு மூன்று பலம் இவை கூட்டி அதற்குச் சரி ஆடாதோடையிலை இவையெல்லாம் பலத்துக்கு ஒருபடி தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி, அந்தக் கசாயத்தை இறுத்து நானாழி நெய்கலந்து முயல் மாங்கிசம்முப்பத்து ரெண்டு பலம் நிறுத்து நானாழி தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி இதற்குக் கடை மருந்து திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், சுக்கு கற்கடசிங்கி, சிறுதேக்கு, சடாமாஞ்சில் கடுகுரோகிணி, சீரகம், கருஞ்சீரகம், ஓமம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கிராம்பு, அரத்தை, மிளகு, செங்கழுநீர், கோட்டம், இந்துப்பு, வாலுளுவை, அரிசி, அரிசித் திப்பிலி, முந்திரிகைப் பழம், பேரீச்சம் பழம், ஏலம், இலவங்கப் பட்டை, பச்சிலை இது வகைக்கு ஒரு பலம் கூட்டி அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்துத் தினமும் முக்கழஞ்சு கொள்ள.

தீரும் வியாதி: காசரோகம், விக்கல், வாந்தி, சுரம், சயம் இவை எல்லாந் தீரும். இது சந்திரனுக்குச் சயம் போக விரும்பாவாதியான பெரியவர்கள் உண்டாக்கின அமிழ்தம்.

அசுவகந்திக் கிருதம்

அமுக்கரா வேர் சிற்றாமுட்டி வேர், தண்ணீர் விட்டான் கிழங்கு, சித்தமல்லி வேர், இலை, வேர் நெருஞ்சிவேர், இதுவகைக்குப் பத்துபலம் கூட்டியிடித்து நாலு மரக்கால் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி வடித்து இதில் பசுநெய் மூன்று நாழி, உரிபாலறு நாழி கூட்டி நல்ல சந்தனம், அதிமதுரம், திப்பிலி, முந்திரிகைப் பழம், கொட்டிக்கிழங்கு, கெடகடை தேவதாரம், நாழிகூட்டிக் குகை நீர், தாமரைத்தாது, சிறுகாஞ்சொரி வேர், ஆடாதோடை வேர், அக்கிராகாரம், கற்கடகசிங்கி, சிறுதேக்கு, சாரணைவேர், வரட்சுண்டி, அதிவிடையம், வட்டத்திருப்பி வேர், வெட்டி வேர், விலாமிச்சம் வேர், இது வகைக்கு வராகனெடை 5. கூட்டிப் பால்வார்த்தரைத்துக் கரைத்து எரித்து மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு ஒருசிறு கரண்டி மாத்திரம் கொள்ளவும்.

தீரும் வியாதி: அத்தி சுரம். மூன்றுவகை விசபாகம், விடாத காய்ச்சல், *எலுமிச்சப்பதத்தின் சுரம், எலும்புருக்க இளைத்த உடம்பு, பிள்ளைப்பெற, மெலிதாகிற சாகிற பேருக்குப் பிள்ளை, பிழைக்கும், கர்ப்பிணி கொண்டால் பிள்ளை வளரும். திரளான அத்தம், ஆதி நோவார். வீரிய அத்தி உண்டாம். இரத்தம் பாய்ந்து பிள்ளையுண்டாம். எரிப்புத் தீரும். வெள்ளைவிடாதீரும், கல்லெரிப்பு ஒவ்வொரு சொட்டாகி நீர் விழுகிறது. சிலந்திப் பெருக்கு, அதிக வீரியமுண்டாம். பின்னும் சகல வியாதியும் தீரும். சரீரமெத்தப் பலனுண்டாம். புளிப்பு தவிர்க்கவும்.

---

*எலும்பித்த என்றாதல் வேண்டும்

74. கண்டங்கத்தரிக் கிருதம்

கண்டங்கத்தரிக்காய் படி, காய் விரை போகாமல் நறுக்கிக் கொண்டு படி நெய் விட்டுக் காய்ச்சி, காய்ச்சி வந்த பதமானவாறு பார்த்து சீரகம் பலம் 2, மிளகு பலம் 2, வெவ்வேறு சட்டியில் பொடியதாக்கித் தக்கதாகச் சிறுகப் பொரித்து வெவ்வேறே பொடி பண்ணி வெவ்வேறாய் தூவிக் கிளறி பிறகு அரைப்படி சர்க்கரை தூவிக் கிளறி வைத்துக் கொண்டு மணத்தக்காளி இலை நல்லதாய் மூன்று இலை பூச்சிப் பார்த்துக் கசக்கி அந்தச் சாற்றில் மூன்று சொட்டு விட்டுப் பிள்ளையார் பிடித்து வைத்துத் தூபதீபங் கொடுத்து இருபது நாள் சாப்பிட ஈளை, இருமல் சந்தேகம் இல்லாமல் தீரும். உப்பு. துவரம் பருப்பு வறுத்துக் கூட்டவும். பசுவின் நெய் கூட்டவும். மாமிசம் தவிர்க்கவும்.

75. வில்வாதி லேகியம்

வில்வ வேர் பலம் 100 சிற்றாமுட்டி வேர் பலம் 50. பேராமுட்டி வேர் பலம் 30. நெற்பொரி பலம் 6, சீரகம் 16, முத்தக்காசு பலம் 16, ஏலம் 16, சுக்கு பலம் 16. நெல்லிப் பருப்பு பலம் 16, பருத்திப் பருப்பு பலம் 16, இது எல்லாவற்றையும் இடித்துப் பதினாறு மரக்கால் நீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி இறுத்துப் பச்சைப் பயறு முன்னாழிக்கு குறுணித் தண்ணீர் விட்டுக் காய்ச்சி இறுத்துக் கொண்டு கறுப்பு வெற்றிலைச் சாறு இருநாழி எலுமிச்சம் பழச்சாற்றில் நானாழி நொச்சிச் சாறு இரு நாழி, நெல்லிக்காய்ச் சாற்றில் இரு நாழி இவற்றை எல்லாம் கசாயத்தில் விட்டு இதுக்கு கற்கம், மிளகு பலம் 10, திப்பிலி, திப்பிலி மூலம், சுக்கு இவை வகைக்கு பலம் 1, தாளிசபத்திரி, கிராம்பு, சிறுநாகப்பூ, கொத்தமல்லி, சீரகம், ஏலம் வகைக்கு பலம் 2, சித்திரமூலம் பலம் 1,

செவ்வியம் பலம் 1, இவை இடித்துச் சூரணம் பண்ணி படி வெல்லம் பலம் 100, அந்தக் கசாயத் துடனே வடிகட்டிக் கொண்டு காய்ச்சிப் பாகு பதத்தில் இந்தச் சூரணத்தைப் போட்டு கிண்டி தேனாழி பசுவின் நெய் முன்னாழி விட்டுக் கிண்டி லேகியத்தைப் பதத்திலிறக்கிக் கலசத்திலிட்டு தானிய புடம் வைத்துக் கொண்டு அலகு பாக்கு பிரமாணம் அந்திசந்தி கொள்ளவும்.

தீரும்வியாதி: கைகால் எரிவு, கூலை எரிவு, குன்மக்கிராணி, பாண்டு ரோகம், வாந்தி மயக்கம், மயக்கம், ஆம்பல் பித்தம் அதின் மேலெடுத்த வாய்வு சுவாசகாசம் மரு; திரள் வாய்வு, இரத்த பித்தம், பீலிகை அக்கினி மந்தம், அன்னதாறு விசம், பித்த சுரம், தாகம் இன்னமும் பல பித்த ரோகம் தீரும். பைத்திய வாய்வுக்கு ஆகாத பொருள் தவிரப் பத்தியத்துடன் இருக்கவும். தூதுவளை வேர் இம்பூரல், ஆடாதோடை வேர், கண்டங்கத்திரி வேர், சிறு காஞ்சொரி வேர், பொன் முசுட்டை வேர், இதுவகைக்கு பலம் 1, சுக்குத் திப்பிலி, தாளிச பத்திரி, கிராம்பு, கொத்தமல்லி, சீரகம், கோட்டம், ஏலம், மிளகு, சிறுதேக்கு, அரத்தை, கத்தூரி மஞ்சள். இது வகைக்கு வராகனெடை 1, கூட்டி இடித்துச் சூரணம் பண்ணிச் சர்க்கரை சமன் கலந்து நெய்யில் தின்னவும்.

பத்தியம்: நெய், உப்பாம்.

76. செங்கா நோவுக்கு

செங்கா நோவுக்கு குணம் மூக்கால் இரத்தம் விழும் இதுக்கு மருந்து மூணு வருசத்து அவரை வேரும், அமுக்கரா வேர், சீனி கிழங்கு, உள்ளி, வசம்பு கூட்டி நசுக்கி முலைப்பாலில் பசுவின் நெய் கூட்டி நசியம் பண்ணவும். உள் மருந்து புண்ணுக் கீரை ஒரு எலுமிச்சம்

காயளவு மோரில் கரைத்துத் தினை அரிசி பொங்கி, நெய் கருப்புக்கட்டி கூட்டி உண்ணவும். எருவைச் சுட்டுப் புகையை நாசியில் காட்டவும். முட்டைச் சாம்பலைத் தயிரில் பிசைந்து தலையில் கட்டவும். சிறுகீரை வசம்பும் கூட்டி நசுக்கிச் சீலையில் திரித்து நாசியில் புகை காட்டவும்.

77. சகல குன்மத்துக்கும்

குன்மத்துக்கு குட்டித் தக்காளியிலை, தினை அரிசியில் இடித்து மாவைத் தின்னவும். செங்கா நோவு தீரும்.

பத்தியம்: கார்ப்பு, புளிப்பு, தவிர்க்கவும்.

காப்பிரண்டை தூக்கு 1, கல்லுப்பு படி 1, காப்பிரண்டையை விரல் நீளமாக நறுக்கி வேகவைத்து உலர்த்திக் கணப்புச் சட்டி போலே ஒரு உடைச்சுப் பிரண்டையும் உப்பும் கீழ் மேலுமாயி மூணு அடுக்காய் வைத்து மேலே புளியம் புரணி தூக்குக்குத் தக்கதாய் போட்டு மேலே நெருப்புப் போட்டு ஊதவும். எல்லாம் எரிந்து பற்பமானால் அந்த சாம்பலெடுத்துக் கலசத்தில் வைத்துக் கொண்டு வயிறு வலிக்கும் நேரத்தில் ஒரு கடிப்பிரமாணம் கொள்ளவும்.

பத்தியம்: கார்ப்பு, புளிப்பு, தவிர்க்கவும்.

தேன், நெய், பால், காணாங்கிச் சாறு, கள்ளிப்பால், கோமூத்திரம் வகைக்கு உழக்குக் கூட்டிக் குறுகக்காய்ச்சி இதில் மிளகுப்பொடி, உழக்குத் திப்பிலி ஆழாக்கு வெங்காயம், ஆழாக்கு வெங்காரம், கழஞ்சு எல்லாம் கூட்டிக் காய்ச்சி கடுகு திரண்டபதத்தில் இறக்கி வைத்து அவரை விதை மருவாதி பேயன் பழத்தில் கொள்ளவும். குணம் மாறும்.

சிறுவழுலைப் பழம் நல்ல பெரும் பழம் நாற்பது, உப்பு நாழி இதில் குறுணி மோர்விட்டு ஒரு பாண்டத்திலிட்டு மூடிச் சீலைமண் செய்து முப்பது நாள் நெல்லில் புதைத்து எடுத்து வைத்துக் சிறுகாலையில் ஒரு பழமும் தின்று குழம்பு ஒருபலம் தின்னவும். குன்மம்தீரும். இப்படி விடாமல் தின்ன குன்மம் கூண்டொடுவிழும். இந்தப் பழத்தினைப் பல்லில் படாமல் தின்னவும்.

78. வயிற்றில் திரட்சியான வாய்வுக்கு

விளக்கெண்ணை படி 1, ஈரவெங்காயச்சாறு படி 1, கும்மட்டிக்காய்ச் சாறு படி 1, வெள்ளை வெங்காயம் பலம் 1/4, சுக்கு, திப்பிலி, வசம்பு, கருஞ்சீரகம், நற்சீரகம், வெந்தயம், கொத்தமல்லி வகை ஒண்ணுக்கு வராகனெடை 3, பெருங்காயம் வராகனெடை 2 இது வெல்லாம் அரைத்து எண்ணையில் போட்டுக் கொதிக்க வைத்து மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு தலைமுழுகின பிறகு மறு நாள் சின்னக் கரண்டியால் ஒரு கரண்டி கொடுக்கவும். விரேசிக்கும். அதன் பிறகு வெந்நீர் வைத்து அரிசி போட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும். மறுபடி மிஞ்சினால் மோர் கொடுக்கவும். மட்டுப்படும். அன்றைக்கு உப்பு, புளி தவிர்க்கவும்.

79. வாயு முதல் சகல உதர வியாதிக்கும் அண்டவாதத்துக்கும் பற்பம்

சதுரக்கள்ளிப்பால் படி 1, பனி இலைச் சாறு படி 1/2, ஆவாரை இலை சாறு படி 1/2, கூட்டி ஒரு புதுக் கலசத்திலிட்டு மேல் மூடிச் சீலைமண் செய்து எரியூட்ட பற்பமாம், ஆழாக்கு விளக்கெண்ணையில் ஒரு வராகனெடை பற்பம் பொடி செய்து போட்டு வெச்சென்ன வைத்துக் கொடுக்கப் பேதியாம். மாற்று மோர் சாதமும் மிளகு நீரும் சாதமும் கொடுக்க நிற்கும்.

80. சிற்றாமணக் கெண்ணை

முடகத்தான் சாறு உழக்கு, கள்ளிச்சாறு உழக்கு, திருகு கள்ளிச்சாறு உழக்கு, வெள்ளை வெங்காயம் பலம் 5, சுக்கு பலம் 1/2, மிளகு பலம் 1/2, திப்பிலி பலம் 1/2, சிவதை வேர் பலம் 1/2, திப்பிலி மூலம் பலம் 1/2, அரத்தை பலம் 1/2, இது செப்பிலைச்சாறு[1] விட்டரைத்து எண்ணெயில் கரைத்து மீந்தசாறு கூடவிட்டு எரித்து மெழுகு பதத்தில் வடித்து நாற்பது நாள் சாப்பிடவும். அண்ட வாதம் தீரும். கார்ப்பு, புளிப்பு விடவும்.

ஆ-வின் பால். சாதிலிங்கம், அதிமதுரம், இலவங்கம், இலவங்கப்பத்திரி, ஏலம், வாளம் முத்து, இலவம் பிசின், நறுவிலிப் பிசின், கிராம்பு, சாதிக்காய், ஆயில் பட்டை, பெருமாப்பட்டை, விளாம்பிசின், அத்திப்பிஞ்சு இவை சமன் ஆ-வின் பாலில் புடமிடவும். இவை கூட்டிப் பொடி செய்து நாலு நாள் நிழலிலுலர்த்திப் பொடி செய்து தேனிலிடவும்.

பத்தியம்: தயிரும் சோறும் இடவும்.

81. வயிற்றுக் கடுப்பு பனிரெண்டுக்கும்கிராணி குளிகை நாழியின் சலக் கழிச்சலுக்கு

கிராம்பு, சாதிக்காய், அசமதாகம், சுக்கு, இலவம் பிசின் இவை சரிகூட்டி, ஊமத்தை இலைச்சாறு விட்டரைத்து, கடலை அளவு உருண்டை பண்ணி, மோரிலிடவும். தேனிலிடவும். அல்லது தயிர்த் தண்ணீரிலிடவும் உடனே நித்திரையும் தீபனமும் செரித்து நெடுநாளைய கிராணியும் தீரும்.

---

1. செப்பிலை – தும்பை.

தண்ணீர்விட்டான் கிழங்கு, ஆவாரை முற்றின வேர்ப்பட்டையைச் சமன் கொண்டு பசும் பால் விட்டரைத்துக் கொண்டு சாதிக்காய், கிராம்பு, சாதிப்பத்திரி, ஏலம், சுக்கு, மிளகு, சாத்திர பேதி வகை ஒன்றுக்கு வராகனெடை 1, கூட்டி இதுவும் பசும் பால் விட்டரைத்துக் கொண்டு பத்து படி பசும் பால், தன் பால்விட்டுக் காய்ச்சி உரைக்குத்திக் கடைந்து வெண்ணை எடுத்துநித்தியம் சூரிய உதயத்துக்குமுன் எலுமிச்சங்காய் அளவு சாப்பிடவும்.

பத்தியம்: பாலும் சாதமும், முளைக்கீரையை உப்பில்லாமல் மிளகுப் பொடி போட்டு சாப்பிடவும். அவபத்தியம் புளி ஆறு மாதத்திற்கு ஆகாது. இதன்படி சாப்பிட நீரழிவு, சலக்கழிச்சல் தீரும்.

82. மேகனாதி மாத்திரை சேத்துமம் விழுந்து போவதற்கு

இரசம் கந்தகம், நாபி சுக்கு, மிளகு, திப்பலி, அரத்தை, பூசணிப் பருப்பு, முயிறு, முட்டை நாகப் பாம்பு[1], நேர்வாளம் இவை சமன் கூட்டி இஞ்சிச் சாற்றில் இரண்டு சாமம் அரைத்து உளுந்தளவு உண்டை பண்ணி இஞ்சிச் சாற்றில் உண்ண சன்னிபாதசுரம் தீரும். ஆனைகுழல் பருப்புப் படி 1/4, முற்றின வெள்ளைச் சாரணை வேர் பொடிப் படி 1/4, கலந்துப் பிசறிக் கலத்தில் வைத்து வெய்யிலில் சாய்த்து வைக்க தைலம் விழும். அந்தத் தைலம் சாப்பிடப் பற்களிலுண்டான சேத்துமம் விழும்.

83. பச்சை ரசம் வியாபிச்சு கட்டினால் முறிய

மனிதருக்குப் பச்சைரசமாக அவிழ்தம் சாப்பிட்டால் சரீரத்தில் ரசம் வியாபிக்கும். அது வியாபித்தால்,

1. நாகப்பாம்பு – மண்புழு..

கீல்களில் கட்டி அடுத்து உள்ளங்கால் அடிவைச்சு நடக்கப்போகாது. குண்டுகட்டி சொக்குப்படி போடும். இதுக்கு மருந்து புங்கம் வேர் கொண்டு வந்து கரணையாக வெட்டி இடித்து ஒரு சாலிலுள்ளடங்கப் போட்டு நிறையத் தண்ணீர்விட்டு இரண்டுபடி தண்ணீர் இருக்கக் காய்ச்சி இறக்கித் தினம் கால் படி தண்ணீர் குடிக்கவும். குருணையெல்லாம் எடுத்துப் போட்டு குளிர்ந்து போகாமல் எருமுட்டை ஆகிலும் எருவாயிலும் உமி ஆகிலும் போட்டு வெதும்பல் வாங்காத படிக்குக் குடிக்க வெதவெதன்னு குடிக்கவும். களவிடும் விட்ட பேர்கு ரசம் வாங்கி விக்கவும். விக்க அகத்தியிலை, சிறுக்கீரை சமூலமும், அரைக்கீரை வகைக்கு தேங்காய் அத்தனை மூணுவகையும் ஏகமாயிடித்து நாலுபடி பசுவின் பாலில் போட்டுப் பிசைந்து உழக்குக் குடிச்சு மீந்தச் சாறு ராத்திரிக்குச் சாப்பிட்டு அதன் பிறகு மூலை வீட்டில் நிர்வாணமாக இருந்து விறகு போட்டு எரிக்க முப்பது நாழிகை குளிர்காய்ந்து விடிய, கல் தொட்டியிலிருந்து இரண்டு சால் வெந்நீரில் குளிக்கவும். ரசம் தொட்டியில் இறக்கவும். கசாயம் பத்துநாள் சாப்பிடவும்.

பத்தியம்: உப்பில்லாமல் வெந்நீரும் சாதமும் சாப்பிடவும். ரசக் கட்டு வாங்கும்.

84. பாசாணம், ரசம் மருத்திடு சுரத்துக்கு கற்பூராதிக் குளிகை வல்லாதி மாத்திரை.

மூவட்டைப் பருத்தியிலை, நாயுருவி இலை, கோவை இலை, இவை மூன்றும் துவைத்து பூசணிப் பழச் சாறு உழக்கு இவை யெல்லாங் கலந்து இரண்டு காசிடை சீரகமும், எலுமிச்சம் சாறு வார்த்தரைத்து இதில் கலந்து சர்க்கரையும், கலந்து இப்படி மூன்று நாளைக்குக் கொடுக்க சகல பாசாணமும் தீரும்.

ரசம், கந்தகம், பச்சைக் கற்பூரம், இலவங்கம், சாதிக்காய் இவை தனியாகப் பொடி செய்து சுத்தி பண்ணி செவ்வாலங் கொட்டை 2, இவை கற்றாழைப் பாலில் வார்த்தரைத்து, உளுந்து பிரமாணம், குளிகை பண்ணி சரீரப்பலமறிந்து ஒரு உண்டை ஒன்றரை உண்டை இடவும். அனுபானம் சர்க்கரையிலிடவும். மூன்று நாழிகையில் எழுவகைச் சுரமும் விட்டொழியும்.

பத்தியம்: பச்சையான போசனம், நல்ல கருணைக் கிழங்கு அரிந்து காயம் போட்டு இடிச்சதூள் பலம் 6, சேங்கொட்டை சுத்தி பண்ணினது பலம் 8, சுக்கு பலம் 4, கார்த்திகைக் கிழங்கு தூள் பலம் 2, திப்பிலி மூலம் பலம் 2, இதன் சாரம் பலம் 2, அரிசித்திப்பிலி பலம் 1, சித்திரமூலம் பட்டை பலம் 5, கடுக்காய் பலம் 10, ஆகப் பலம் 42. காயப் போட்டு இடிச்சு வத்திரகாயம் பண்ணி நல்ல வெல்லம் இளகினதாக பலம் 42, கல்லுரலில் போட்டுக் கடப்பாறை கொண்டு இடிக்கப் பிசின் போலே ஆகும். கொட்டைப் பாக்களவு உண்டை பண்ணவும்.

அனுபானம்: நல்ல மோராய் அறுபது நாழிகை மோராய் படி 1/8. அந்த மோரில் ஒரு உண்டை அரைத்துக் கரைத்து விழுங்கவும்.

தீரும் வியாதி: மூலம் ஆறுவகையும் கிராணி சங்கிர கிராணி, குட்டம் 18, பவுத்திரம், சிலேத்துமம் 10, பைத்தியத்தில் ஆறு, வாதத்தில் 40, வண்டுகடியில் பதினொன்று, பிரமியத்தில் இருபது, சிரரோகமாவது இடைக்குக் கீழ்படாது ரணவியாதிகள், பிள்ளையில்லாத வளுக்கு புருசன் இந்த உண்டையைத் தேனில் குழைத்துப் பூசிப் புணரவும். கர்ப்ப விப்புருதியும் அந்தப் புழுவும் செத்துப் போம். பிள்ளையுண்டாகும். கிழவனுக்குத் தாது விருத்தியை உண்டாக்கும்.

85. கத்தூரி தைலம்

வெள்ளச் சாரணை வேர்பலம் 1/4, வெள்ள சாரணை இலைச்சாறு படி 1/4, வெற்றிலை கொடி பலம் 1/4, படிவ ஆதண்டை வேர் பலம் 1/4, ஆதண்டை இலைச் சாறு, நொச்சி வேர் பலம் 1/4, நொச்சி இலைச்சாறு படி 1/4, சிறுசெருப்படி வேர் பலம் 1/4, சிறுசெருப்படி இலைச்சாறுப் படி 1/4 வேர் வகை யெல்லாம் நொச்சியிலைச் சாறு வார்த்தரைத்துக் கரைத்து நல்லெண்ணை ஒண்ணரைப் படி விட்டு இதுக்குக் கரகம் கத்தூரி பணவிடை 1, குங்குமப்பூ பணவிடை 1, கிராம்பு விட 1, சாதிக்காய் விட 1, சாதிபத்திரி வராகனெடை 1, மிளகு பலம் 2, ஆயில்பட்டை பலம் 2, இதுவெல்லாம் பசுவின் பாலில் அரைத்துக் கரைத்து ஒரு விறகு தீயிட்டு எரித்துப் பதத்தில் வடித்துத் தானியபுடமிட்டு வைத்து தலைக்கிட்டு உசிலை அரைப்பிட்டு ஒரு வெந்நீராக வைத்து முழுகவும்.

தீரும் வியாதி: சகல பீனசமும் சுவாசமும், இருமலும், காசரோகமும், அத்தி சுரமும், கபால வலியும், கபால சன்னியும், சர்வ வாய்வும் தீரும்.

பத்தியம்: பொரிச் சாறும் சாதமும் கொடி வழுதலைப் பிஞ்சும் ஆகும்.

86. கர்ப்ப குழியில் பிடுங்கின தானப் புழுவுக்கு, கண்ணில் நீர் விழுகிறதுக்கு

மாம்பட்டை தட்டை எருமை பாலில் போட்டு உரைக்குத்தித் தயிர் குடிக்க விக்கல் மாறும்.

குன்றிவேர், செங்கதாரி வேர், புங்கம் பட்டை சன்ன காமபட்டை, வனமரை, வேர்க்கடுக்காய் இருபது, உள்ளி,

வசம்பு கூட்டி வேப்பெண்ணையில் கொதிக்க வைத்து காசத்தினை நக்கவும். கண்ணாலே வடி இறகத்துக்கு இந்துப்பு, அதிமதுரம், வெள்ளோத்திரம், சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லிக்காய், தான்றிக்காய் சமன் கொண்டு எலுமிச்சம் பழச்சாற்றில் வைத்து நிழலுலர்த்திக் நீரிலுரைத்திக் கண்ணிலிடவும். கண்ணால் விழுகிற தண்ணிர் மாறும். கொடிவேலி வேர், பாக்குப் பிரமாணமரைத்து ஒரு சிரங்கை கொள்ளோடு தண்ணீர் வார்த்து அதிலே அந்த மருந்துபோட்டு தண்ணீர் நீர்க்க வேகவிட்டு இறக்கித் தண்ணீரை இறுத்து வெந்த கொள்ளைத் தின்னவும் சில் விசமுண்டானதும் பட்டை வண்டுகடி உள்பட தீரும்.

பத்தியம்: கார்ப்பு, புளிப்புத் தவிர்க்கவும்

87. காணாக்கடி விசத்துக்கு சஞ்சீவிகாணித் தைலம்

கிலுகிலுப்பை வேர், நன்னாரி வேர், கோட்டம், நாகப்பாம்பு, ஊசி மல்லிகைவேர், பச்சைப் பாம்புக் கண்டம், நல்லப்பாம்பு[1] கண்டம், உடும்புக் கண்டம், வசம்பு, கருஞ்சீரகம், சந்தனம், நுனி மஞ்சள், வெள்ளைக் குண்டுமணி வேர், கருங்குங்கிலியம், இந்துப்பு, திரிகடுகு, விலாம்மிச்சை வேர், முருங்கை வேர் பட்டை, நார்த்தம் வேர், ஊமச்சி[2] ஆக மருந்து இருபத்திரண்டும் சரி பண்ணித் தனித்தனியாக ஆடாதோடையிலைச் சாறு விட்டரைத்து எடுத்து வேப்பெண்ணை உரி நல்லெண்ணை, உரி நல்லெண்ணை உரி, புங்கெண்ணை உழக்கு, இலுப்பை எண்ணை உரி, ஆமணக்கெண்ணை உழக்கு, ஆடாதோடையிலைச் சாறு உரி, ஒக்கக் கூட்டிக் கலந்து மருந்தெல்லாம் நன்றாய்க்

1. நாகம்–நாவல்,புன்னை, நாகப்பாம்பு–மண்புழு, நல்லம்–இஞ்சி,
2. ஊமச்சி–நத்தை.

கரைத்து கோழி முட்டையை உடைத்து வெள்ளைத் தாதுவிட்டு மெழுகுமரித்து இறக்கி மகா சன்னிக்கு உள்ளும் கொடுத்து மேலும் பூச வாத சன்னி சிலேட்டுமம், சுரசன்னி, சூசிகா வாதசன்னி பிராண சன்னி, கிரிச்சரம் பாத சன்னி அபிகாதவாத சன்னி சகலமும் தீரும்.

88. ஊர்க் குருவித் தைலம்

ஈசுவரன் பண்ணினதாகக் கொள்ள அமோகமாக யிருக்கும். இதுக்கும் சன்னி குறையாமலிருந்தால் தேக அவத்தைப் பரிகாரம் சொற செந்தல் இறைவன் குளிகை கூட வடித்து உள்ளும் கொடுத்து மேலும் பூசவும்.

ஊர்க்குருவியின் மயிர் போக்கிப் பதக்கு நீர்விட்டு இருநாழியாகக் காய்ச்சி வடித்து எலுமிச்சம் பழச்சாறு நாழி, முலைப்பால் நாழி, மணத் தக்காளிச் சாறு, தராயிச் சாறு, நன்னாரிச்சாறு, ஆடாதோடை இலைச்சாறு இவை வகை ஒன்றுக்கு உரி நல்லபாம்புக் கண்டம், உள்ளி, வசம்பு, பேய்மிரட்டி விரை, தேவதாரம், திரிகடுகு, மாடப்புறா எச்சம், முசுறுமுட்டை கடாக்குறும்பி பச்சைப் பாம்பு இவை வகை ஒன்றுக்குக் கழஞ்சு அரைத்துக் கரைத்து அஞ்செண்ணெயும் கூட்டிப் பதத்தில் வடித்து நக்கவும். பூசவும்,நசியும் பண்ணவும். சன்னி பதிமூன்றுந் தீரும்.

தசமூலம், செம்முள்ளி, நீர் முள்ளி, ஆயில் பட்டை, முருங்கைப் பட்டை, சிற்றாமணக்கு வேர், ஆமணக்கு வேர், செவ்வியம், சித்திரமூலம், முருங்கம்பட்டை, தேங்காய்ப் பால் சேர்த்துத் துழவி வேர்விடத் திரம்,

---

கண்டம்-முட்டை, கண்டங்கத்தா, நல்லம்-இஞ்சி, கடா-ஆட்டின்பொது, குறும்பி-புத்தான் சோறு, பாம்பு-கண்புழு. பச்சை-திருநீற்றுப் பச்சை

வேர்கடுக்காய், அழிஞ்சி வேர்ப்பட்டை, ஆடாதொடை, இலை கள்ளிக் கொழுந்து,துவரை, கொள்ளு, உளுந்து, தேவதாரம், வெள்வேலம்பட்டை, கொன்றை பட்டை, நொச்சியிலை, நிலக்கடம்புச் சமூலம், பருத்தி விரைப் பருப்பு, உத்தாமணி, முடக் கொத்தான், தூதுவளைவேர், அவுரிவேர், கருங்காலிப்பட்டை, நிலாக்குராவேர், காசாம்பட்டை, குழலாதண்டை, சணப்பம் விரை, கொத்தமல்லி, புங்கம் பட்டை பெரும்பட்டை இவை ஒவ்வொன்றுக்கு பலம் 10, இடித்து இதில் ஒரு தூணி நீர்விட்டு பதக்காகக் காய்ச்சிப் பசுவின் பால், பதக்கு நல்லெண்ணை, இவையெல்லாம் ஒன்றாய்க் கூட்டி இதில் கற்கம் செய்து, முத்தக்காசு, கீழாநெல்லி வேர், தேவதாரம், பச்சிலை, குக்குலுக் கடுகு, சிற்றாமுட்டி வேர், அரத்தை, தாமரைவளையம், ஓரிலைத்தாமரை, சாதிக்காய், 8. அரேணுகம், வசம்பு, தக்கோலம், தாமரைத்தாது, புனுகு, நெய்தல் கிழங்கு, கத்தூரி மஞ்சள், கல்நார் கல்மதம், ஏலம், இலவங்கப்பட்டை, கிராம்பு, மரமஞ்சள், அக்கிரகாரம், சந்தனம், சிற்றவரைக் கிழங்கு, பேரேலம், செங்கழுநீர்க் கிழங்கு, விலாம்மிச்சம் வேர், நன்னாரி வேர், முழி மஞ்சள், இந்துப்பு, சுவர்ச்சிகை, கொட்டிக் கிழங்கு, மஞ்சிட்டி, வட்டத்திருப்பி, சுக்கு, திப்பிலிமூலம், ஆனைத் திப்பிலி, வாய்விளங்கம், சித்தாமல்லி, பேராமல்லி, வாலுளுவை அரிசி, கடுகு ரோகிணி, செவ்வியம், அதிவிடையம், கருஞ்சீரகம், செம்முள்ளி வேர் இலை, ஒவ்வொன்றுக்கும் நாலு காசு எடை அரைத்துக் கரைத்து ஒரு வெள்ளாட்டை குடல், தோல் தலை போக்கி நின்றதைக் கண்டங் கண்டமாக நறுக்கி அதில் தூணி நீர்விட்டுப் பதக்காய்க் காய்ச்சி இறுத்து வடிகட்டிக் கூடவிட்டு மூன்று நாள் இளங்கொதி யிட்டு நாலாம்நாள் பதத்தில் வடித்து ஒரு சிறுகரண்டி சாப்பிடவும். பூசவும், நசியம் பண்ணவும், தலைக்கிடவும்,

தீரும் வியாதி: எண்பது வாதமும் தீரும். சந்துவிட்டுப் போனது எலும்பொடிந்தது கூடும் குமரகண்ட வலி உடன் மாதம் விப்புருதி தாதுநட்டம், நரம்புகள், இழுத்துக் கொண்டிருக்கிறது, முழங்கால் வாதம், சந்துவாதம், உள்ளங்கால் வாதம், சந்துகள் போனது, பவுத்திரம், கிரந்தி முதலான வியாதிகள் எல்லாம் தீரும்.

89. தேற்றான்கொட்டைத் தைலம்

பெண்களுக்குக் கர்ப்பமுண்டாம். விளாஞ்சி ராயி பதக்கு, புளியம் சிராய் குறுணிவன்மரை வயிரஞ் சிறுக நறுக்கினது குறுணி, கொடிவேலி வேர், நறுக்கினது படிக்கு வேப்ப முத்தினமரத்தின் வயிரங் குறுணி, அழிஞ்சி விரைபடி, கருகுன்றுமணி வரைபடிக்கு தேத்தான் கொட்டை படிக்கு காஞ்சிரை விரைபடி கழுநீர்வெட்டி முத்துபடி 5 இவை சேர்த்து இடித்துப் பானையிலிட்டு ஆட்டெருவில் மூட்டம் போடத் தைலம் விழும். இதுக்கு மருந்து நெல்லிக்காய் கந்தகம் இரு கழஞ்சு அரிசி கழஞ்சு இரு பொடியும் பொடி செய்து மென்பொடியாகத் தூவிச் சாரித்து இந்தத் தயிலம் ஒரு பணவிடை உள்ளுக்குங் கொண்டு, புண்ணிலும் போடவும். இதுக்குத் தீரும் வியாதி கண்டமாலை, தெந்தாளி, கன்னப்புற்று, பிளவை, அரையாப்பு, தொடைவாழை, சந்துவிப்புருந்தி இவை யெல்லாம் தீரும்.

90. கரு நொச்சித் தைலம்

கரு நொச்சி கொண்டு வந்து பத்து மரக்கால் தண்ணீர் வார்த்து பதக்குத் தண்ணீராய்க் காய்ச்சித் தழை எடுத்துப் போட்டு அதைச் சட்டியிலே வடித்துக் கொண்டு விக்கினேசுரரை நினைத்துக் கொண்டு திப்பிலி பலம் 5, வெள்ளுள்ளி பலம் 5, ஓமம் பலம் 5, ஆகப் பதினைந்து

பலமும் கசாயத்துடன் கூட்டி வெள்ளைப் பூண்டு உரித்துப் போட்டுக் கொதிக்க விட்டு நானாழி கூறெள்ளு எண்ணையும் கூடவிட்டு நன்றாய் நீர்வற்றிய அடையாளம் பசுவின் நெய் வாசனையாம் கற்கத்தை உருட்டிச் சுவரிலே போட்டால் சுவரிலே ஒட்டாமல் தரையில் விழுந்தால் அதுபதமென்றறிந்து தைலம் வடித்துக் கொண்டு நெல்பானையிலே வைக்கவும். வைத்துக் கொண்டு அந்த விடிஞ்சு இரண்டு நேரமுடன் ஒரு கரண்டி உள்ளுக்கொன்று மேலுக்கு ஒரு கரண்டி பிடித்துக் கொள்ளவும். மேலுக்கு வெந்நீர் வார்த்துக் கொள்ளவும்.

பத்தியம்: முருங்கைப் பிஞ்சு முருங்கைக்கீரை ஆம்துவரம் பருப்பை வறுத்துக்கூட்டிக் கொள்ளவும். பருப்பு ஆகாது தண்ணீர் இறுத்துக் கொள்ளவும்.

தீரும் வியாதி: சகலவாய்வு தீரும். பத்தியத்துடன் இருக்கவும்.

91. பால் தைலம்

விளாம்பழம் கொண்டுவந்து துடைத்து விரை எடுத்து உலர்த்தி அரிசி பண்ணி, பானையில் போட்டுத் தைலமிறக்கி வைத்துக் கொண்டு ஒருபடி தைலத்துக்கு ஒருபடி தேனும், ஒருபடி பாலும் கூட்டிக் கலந்து காய்ச்சி முறுகாமல் பதத்தில் தைலமிறக்கி வைத்துக் கொண்டு இருபது நாள் கலசத்தோடு நெல்லுக்குள்ளே வைத்து எடுத்து முதல்நாள் ஒரு வராகனெடை மறுநாள் இரண்டு வராகனெடை இப்படி தினம் ஒவ்வொரு வராகனெடை அதிகமாகத் தின்றுவரவும். இந்தப்படி எட்டு நாள் மட்டும் எட்டு வராகனெடை தின்று வரவும். அப்பால் அதிகம் தின்ன வேண்டாம். தினம் அந்த எட்டு வராகனெடையே

திட்டமாகச் சாப்பிட்டு வரவும். தின்னப் பதினெட்டுக் குட்டமுந் தீரும். இரண்டு மாதத்தில் கண்ணொளி உண்டாம். மூன்று மாதம் தின்ன எத்தனை (ஸ்திரி)பெண்களுடனே கூடிப் போகிக்கலாம். நாலு மாதந் தின்ன காயசித்தி உண்டாம். அஞ்சு மாதந்தின்ன யாதொரு படிப்பும் வரும். ஆறுமாதந் தின்ன வயறு நீளிக்கும். ஏழு மாதந்தின்ன எழுவான் படுவான் காண்பிக்கும். எட்டு மாதந்தின்ன மெத்த காயத்து உண்டாம். ஒன்பது மாதந்தின்ன அவுலியாக்களைக்[1] காணலாம். பத்து மாதந்தின்ன மெத்தப் புதுமை காணலாம். பதினொரு மாதந்தின்ன மெய்யதி உண்டாம். பனிரெண்டு மாதந்தின்னக் கூராணியன் காணலாம். பதிமூணுமாதந் தின்ன மெத்த மெத்தக் காணலாம்.

குருபாதந் துணை.

மிளகரணைவேர், கருக்குவாய் வேர், நெல்லிவேர் புங்கம் வேர், தேற்றா வேர், பிராய வேர், கருஞ்சூரை வேர், குறிஞ்சாவேர், குட்டி விளா வேர், முன்னைவேர் நற்குருந்தம் வேர், பரங்குருந்தம் வேர், வீழி வேர், சாங்கம் வேர், இலுப்பை வேர், பட்டை மாவிலங்கப் பட்டை 2, வாப்பட்டை, பெருமருந்து வேர், அரளி வேர், பாச்சட்டி வேர், முடக் கொற்றான் வேர், குப்பைமேனி வேர், அவுரி வேர், நாயுருவி வேர், சாரணை வேர், சத்திச்சாரணை வேர், சங்கங்குப்பி வேர், நாற்காசா வேர், அழிஞ்சி வேர், பனைவேர், வாகைப்பட்டை இவை சேர்க்க கொண்டு வந்து ஒன்றுக் கொன்று எறுமல் சமன் கொண்டு இதனுடன் சுக்கு, வசம்பு வகைக்கு பலம் 3/4. மிளகரணை பலம் 1, வெங்காயம் பலம் 1, கருஞ்சீரகம்

---

1. அவுலியா – இசுலாமிய ஞானிகள்

பலம் 1, ஓமம் பலம் 3/4, கருங்குங்குலியம் பலம் 1/2, கோட்டம் பலம் 3/4, திப்பிலி பலம் 3/4, பொன்னரிதாரம் கழஞ்சு இந்துப்பு, துத்தம் கழஞ்சு, துருசு கழஞ்சு இது கோவேர் பட்டை, கடைச்சரக்கு இது சேர், முருக்கிலைச் சாறு செருப்படிச்சாறு, பொடுதலைச் சாறு, சமன் கொண்டு விட்டரைத்து நல்லெண்ணைபடி 1 1/2, ஆமணக் கெண்ணை படிக்கு நெய்படி 1 1/2, கூட கலந்து பதத்தில் வடித்து பதினைஞ்சு நாள் அரை, மணல் வீக்கம் வாதகரப்பான் சன்னிவாதம், புறவாதம், இசிவாதம், சுருட்டு வாதம், சந்துவாதம், வாதசூலை மொழிச்சூலை, நகச்சூலை, நெற்றிக் கரப்பான், மண்டைக் கரப்பான், கன்னக் கரப்பான், செங்கரப்பான், கருங்கரப்பான், ஊறுகரப்பான், வீங்கு கரப்பான், மண்டைக் கரப்பான், இது முதலாகிய வியாதி எல்லாம் தீரும்.

பத்தியம்: கைப்பு புளிப்பு தவிர்க்கவும்.

92. இஞ்சிக் குழம்பு

இஞ்சிச் சாறு படி 4, பனைவெல்லம் பலம் 25, அதில் கரைத்துச் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கடுகுரோகணி, கருஞ்சீரகம், நற்சீரகம், செவ்வியம், வெள்ளிக் கொடி, சிற்றரத்தை, கிராம்பு, இந்துப்பு, மரமஞ்சள், ஏலம், இலவங்கம், கார்போக அரிசி, பெருங்காயம், இவையெல்லாம் சமனாகத்தூளி பண்ணி, பாகுஞ்சாறும் காய்ந்துக் குறுகி இரண்டுபடி யானால் இந்தப் பொடியிட்டு பற்றாமல் கிளரி லேகிய பதத்தில் இறக்கி வைத்துக் கழற்சிப் பிரமாணம் கொள்ளத் தீரும். வியாதிவிசை பீலிகை, நீராமை, வெப்புப் பாவை, பெரு வயிறு ஆகிவை கிருமி சூல குடாரம் குடகரி வாயு, பக்க வாயு, பக்க சூலை, அட்ட குன்மம், மகோதர மந்தாகினி வாயு, சூசிசா வாயு,

பயித்திய வாயு, மூலவாயு, சன்னி வாதம், பாண்டு ரோகம், வரள் காமாலை, மஞ்சள் காமாலை, அதிசார வாயு, அதிசாரக் கிராணி, இதுவெல்லாம் தீரும்.

93. கையாந்தகரை லேகியம்

கையாந்தகரை, பொடுதலை, குப்பைமேனி, வேலிப்பருத்தி, மிகுதக்காளி, நாயிரஞ்சி, கீழாநெல்லி, முருங்கையிலை, செருப்படி, அவுரிஇலை, கழற்சியிலை, நரியான பெரியரிசி, புனல் மருங்கை, கிரந்தி, நாயகம் இது வகைக்குச் சாறு உழக்கு காடி புளியிலைச் சாறும் இதுக்கு மென்பொடி சுக்கு, மிளகு உன்னி திப்பிலி, ஓமம், கடுக்காய், தான்றிக்காய், இவை வகைக்கு பலம் 1, நெல்லி வற்றல் பலம் 1/2, வெட்பாலை அரிசி, 3, இந்துப்பு 3, காயம் வராகனெடை 3, சீனிக் காரம் 3, வெங்காரம் வராகனெடை 3, வளையலுப்பு வராகனெடை 3, ஊசி காந்தம் 3, அரபொடி[1] ஆழாக்கு கிட்டப் பொடி ஆழாக்கு இவையெல்லாம் இடிச்சு வடிக்கொண்டு போட்டுப் பாகு இறக்கி காய்ந்த பிறகு பொடியைப் போடவும். தேன் விட்டுக் கிண்டி, பாகுபோலே பண்ணிக் கொள்ளவும்.

தீரும் வியாதி: காமாலை, சுரப்பாண்டு, இள நோய் இளைப்பு, கால்கை கடுக்கிறது. முதலான ரோகந் தீரும்.

பத்தியம்: கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

உணவு: காடைச்சாறு, கிள்ளுக்கீரை சிறுகீரை, திருக்கைக் கருவாடு, சுருகருவாடு ஆகும்.

94. உள்ளாதி லேகியம்

சாதிக்காய், சாதி பத்திரி, இலவங்கம், ஏலம் வகைக்கு பலம் 1, கோரோசனை, ரத்தமனோசிலை, கல்நார், கற்பூரம், கல்மிசம், கிட்டிணா அப்பிரகம்,

1. அரப்பொடி–இரும்புத்தூள்

சடாமஞ்சில், சீரகம், கருஞ்சீரகம், வகைக்கு பலம் ஓமம், திப்பிலி மூலம், தும்பராட்டம், கொடி வேலி வகைக்கு பலம் 3/4, சிறுகுறிஞ்சான் பலம் 2, மிளகு பலம்1, கடுக்காய் பலம் 5, தான்றிக்காய் பலம் 5, தேற்றாங்கொட்டை பலம்3, சர்க்கரை பலம் 10, வேப்பம் பட்டை பலம் 10, நாவல்பட்டை பலம் 10, அத்திப்பட்டை பலம் 10, ஆலம்பட்டை பலம் 10, வெள்ளைச் சாரணை பலம் 10, மாம்பட்டை பலம் 10, வெள்ளைக் காக்கண வேர் பலம் 10, பொன்னாங்காணிச்சாறு, மணத்தக்காளிச் சாறு வகைக்குப் படி 2, பசுவின் கோமியம் குறுணி, பசுவின் நெய், பால், தேன் வகைக்கு ஒருபடி கூட்டி தேன் யோகங்கூட்டி, லேகியம் பண்ணி வைத்துக் கொண்டு சாப்பிட தீரும்.

தீரும் வியாதி: சுவாசம் காசம், பீனிசகாசம், பித்தகாசம், மேககாசம், சூதக வாயு தீரும்.

பத்தியம்: கார்ப்பு, புளிப்புத் தவிரவும்,

95. அட்டமங்கள் கிருதம்

கண்டங்கத்திரி சமூலம், சீந்தில் கொடி, ஆடாதோடை பேய்ப்புடல், பொன்னாவாரை இலை, நொச்சிஇலை, கொட்டக்கரந்தை, கையாந்தகரை சங்கம் இலை, ஆதண்டை இலை, இவை துவைத்துச் சாறு படி 1, பால் படி 2, நெய்படி 1, கிராம்பு பச்சிலை திரிகடுகு, ஓரிலைத் தாமரை வேர், கற்கடக சிங்கி, சிறுதேக்கு, வாய்விளங்கம் வகைக்கு வராகனெடை 2, இவையெல்லா மரைத்துக் கரைத்து வடிகட்டிக் கொண்டு சாப்பிட இருமல், சயம், இரத்தபித்தம் மார்புநோவு, விச சுரம், வாதகுன்மம் 7, காலை சயம், இரவு சயம் இவை எல்லாம் போம்.

96. மகாதண்டுக்கு எரிக்கும் கிருதம்

கண்டங்கத்திரி பலம் 10, ஆடாதோடை பலம் 50, சங்கம் வேர் பலம் 15, கீழா நெல்லி வேர் 25, தூது வளைவேர் பலம் 4 1/4 நெருஞ்சில்வேர் பலம் 25, சிறு தேக்கு சித்திரமூலம், தேவதாரம், திப்பிலி மூலம், நாய்வேளை, இவை ஓரொன்றுக்கு பலம் 5. செவ்வியம் பலம் 25, இவையெல்லாம் இடித்து மருந்துக்கு நாலு பங்கு தண்ணீர்விட்டு நாலில் ஒன்றாய்க் காய்ச்சி கசாயத்துக்கு நாலிலொன்று நெய்விட்டு சங்கிலை, நொச்சிஇலை, கையாந்தகரை, பொரும்பி இலை, ஓரொன்று, தனசாறு நெய். இரட்டிப்புக் கூட்டி கற்கம், கண்டங்கத்திரி வேர், தூதுவளை வேர், பொரும்பி விதை, சிற்றாவரை விதை, கற்கடகசிங்கி, கோட்டம், இவை நாழி நெய்க்கு வகைக்கு முக்கழஞ்சு அரைத்துக் கரைத்து பதத்தில் வடித்துக் கொள்ள காச சுவாசம் பீலிகை, விக்கல், குன்மம், வயிற்றுக் கழிச்சல், சயம் இருதய ரோகம், இரைத்த சிலேத்துமம், அக்கினி மந்தம், பொருமல், சர்வரோகமும் தீரும். உப்பு வறுத்துக் கூட்டவும்.

97. வல்லாதி லேகியம்.

சேங்கோட்டை பலம் 10, வெட்டிப் பதக்கு நீரில் போட்டு நானாழியாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு அதில் காடிமோர் இஞ்சி சாறு, நெய் வகைக்குக் கூட்டி, திரிகடுகு, சித்திரமூலம், சிறுதேக்கு, அரிசித் திப்பிலி, காயம், ஓமம், கல்லுப்பு, சவுக்காரம், செவ்வியம், துவரைப்பிசின் 1, இந்துப்பு, வெங்காரம் வகைக்கு 1/2 வராகனெடை 1, கூட்டி அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்துக் கொள்ள அக்கினி மந்தம் ஆறு வகை மூலம், கிரந்தி, கிராணி, காமாலை, பாண்டுரோகம், மகோதரம் இவை தீரும்.

பூசணிக்காய்ச் சாறு தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு 3, பால், நெய், திரிபலை, பேராமுட்டி வேர், சிற்றாமுட்டி வேர், தேவதாரம், வாலுளுவை அரிசி, சீரகம், கருஞ்சீரகம், நன்னாரி வேர், மஞ்சள், மரமஞ்சள், சித்தமல்லி, பேராமல்லி, ஞாழல்தாது, தகரம், கோட்டம், சிறுவழுதலை வேர், மஞ்சட்டி தாழம்பு, செங்கழுநீர்க் கிழங்கு, சந்தனம், மாதுளை, விழலரிசி, தாளிச பத்திரி, கருமுகை, இவை வகைக்கு 1 கழஞ்சு, அரைத்துக் கரைத்து பதத்தில் வடித்துக் கொள்ள அங்க தாகம் அபிகாதம், சுரதாகம், உச்ணம், விகாரம், ரசபாசாணம், விகடம், பயித்திய விகாரம், இருமல், புகைச்சல் இவையெல்லாம் தீரும்.

98. ஆடாதோடைக் கடுகு பரங்கிப்பட்டை சூரணம்

ஆடாதோடை இலையைத் துவைத்துப் பிட்டுக்கட்டி அவிச்சு சீலையில்வடித்துக் கொண்டு அந்தச் சாற்றில் சுக்கு, மிளகு, திப்பிலி, கோட்டம், நற்சீரகம், ஏலம், இலவங்கம், கத்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், செவ்வல்லி செடி, இந்துப்பு, பெருங்காயம், கடுக்காய், உள்ளி, வசம்பு, அரத்தை, ஓமம், சதகுப்பை, வாய்விளங்கம், இவை சமன் கூட்டிச் சாறு வறுத்துப் பொடி செய்து கசாயத்தில் தூவிப் பசு நெய் அரைப்படி விட்டு லேகியம் பண்ணிப் பின்பு இரண்டு காசிடை தேன்விட்டுக் கிளறித் தின்னவும். தீரும் வியாதி ஈளை இருமல், உளைப்பு, காசம், இளைப்பு இவையெல்லாம் தீரும். கைப்பு, புளிப்பு தள்ளிர்க்கவும்.

பரங்கிப்பட்டை பலம் 16, சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், சிறுதேக்கு, 15 ஓமம், 15 சீரகம், விளங்கம், சதகுப்பை, கொத்தமல்லி, அமுக்கரா, சித்திரமூலம், சாரணை வேர், சிறுநாகப்பூ, இலவங்கப் பட்டை, இலவங்கப்பத்திரி, செவ்வியம், ஏலம் வகை ஒன்றுக்கு

பலம் 1/8 கூட்டி சூரணம் பண்ணி தேனில் கொள்ள சூலைக்கட்டு, வெடிசூலை, பக்கசூலை, பரங்கிப்புண், கிரந்தி, சூலை சயம், இவை தீரும். இச்சாப்பத்தியம்.

99. நீரிழிவுக்கு சனச்சவுந்தரரசம் தாவாய்ப் பல்லுக் கிட்டினால் வடகம்

ரசம் முக்கழஞ்சைச் சுத்தி பண்ணிக் குழிக்கல்லில் வார்த்து செவ்வகத்திப்பூச் சாற்றில் ஏழுநாளரைத்து இதில் வெங்காரம் இரு கழஞ்சு காசுக்கட்டி கழஞ்சு, கற்பூரமும் கழஞ்சுகூட்டிச் சந்தனச்சிராய் கசாயத்தில் நான்கு சாமமரைத்து ஒருகாசு எடை வடகம் பண்ணி, நிழலில் உலர்த்திக் காலையிலும், மத்தியானமும், சாயங்காலமும் இப்படி மூன்று நேரமும், பலன்கண்டு கொடுக்கவும். நீரழிவு வியாதியெல்லாந் தீரும்.

பத்தியம்: உப்பு, புளியைத் தவிர்க்கவும்.

100. குளிகை

சாதிலிங்கம், கந்தகம், மிளகு, திப்பிலி, வெங்காரம், நாபி, ஊமத்தை விரை இவை சமன் கொண்டு கஞ்சாச் சாற்றிலொரு சாமமரைத்துக் கடலை அளவு குளிகை பண்ணி தேனில் உண்ண அதிசாரம் 30, சுரம் மந்தாகினி போம்.

தயிராம், வெள்ளுள்ளி, பலம் 8, சாரணை வேர் பலம் 1, முருங்கைவேர் பட்டை பலம் 1, இவை தேங்காய்ப் பாலிலரைத்துச் சீலையில் வைத்து தண்ணீரில் பூசிப் பிடித்துப் பிழிய தைலம் விழும். இந்தத் தைலத்தைச் சுடவைத்து சன்னதாரையாகச் செவியிலிடத் தூள் நிற்கும்.

101. சவுபாக்கியச் சுண்டி-மூலங்கரைய

சர்க்கரை பலம் 100, தண்ணீர் படி 1, பசுவின் பால் படி 8, இதில் பாகு காய்ச்சி ஏலம் வாலுளுவை, விடத்திரை விரை, திரிகடுகு, சீரகம், ஓமம், கையாந்தகரைப் பொடி, கிராம்பு, பேரீச்சம் பழம், வெள்ளை போளம் வகைக்குப் பலம் 1, சதகுப்பை பலம் 5, கொத்தமல்லி பலம் 3, சுக்கு பலம் 8, எல்லாம் சூரணமாகப் பண்ணி பாதியில் போட்டுக் காய்ச்சி இறக்கி வைத்து தினம் பாக்களவு கொள்ளச் சூசிகா வாயு, குன்மம் மார்புவலி தீரும். சத்திரியர்களுக்கு[1] பிள்ளைப் போளம் கூட்டிடவும். புருசருக்கு வில்வவேர் கூட்டவும்.

மானிறத் தோன் அரன் வாகனத்தின் போம்
மருந்து அங்கி செய்து சவ்வீரம் கூட்டி
மருவு சீலைவேணல் இம்புமணியுங்கூட்டி
வெல் காதத் தோன் கொட்டிருந்தும் வேலிகூட்டி
வெள்ளை வெண்சீலை எல்லாம் வெண்ணையுருக்கி
பாலெடுக்கும் குழல் மடவீர். தேனிலாது பதையாமல்
தடவ மூலங்கரைந்து விழும். ஆலமரத்தில் துயிலுகின்ற
ராமபாணம் அறிந்துசெய். வீராமாகில் பெரியோர் தாமே.

102. மந்தாரகாசம்- பீனிசத்துக்கு

வேப்பெண்ணைஇருநாழி ஏலம், இலவங்கப் பட்டை, அதிமதுரம், செண்பகப்பூ, கற்கடகசிங்கி, அரத்தை, கிராம்பு, மிளகரணைப் பட்டை வகைக்கு வராகனெடை 3, பெருங்காயம் வராகனெடை 100, இவையெல்லாங் கூட்டி எண்ணெயில் போட்டுப் பொடிபண்ணி கொதிக்க வைத்து மெழுகு பதத்திலிறக்கிக் கடுகுகூட வைத்துக்கொண்டு உள்ளுக்குங்கொண்டு மேலும் பூசவும், சந்தேகமல்லாமல் நீங்குமாம்.

---

1. சத்திரியா;-அரசர்

வெள்ளாட்டுப் பாலில் இந்துப்புப் போட்டு பொடி செய்த பாலை கிண்ணியில்விட்டு இந்துப்பு பொடிப் போட்டுக் கொடுக்கவும். முந்திரிகை பழம், சந்தனப் பொடி, சர்க்கரை, மாதுளங்காய் சமன்கூட்டி தேன் சாறு விட்டு மறுபடி நீரில் கொடுக்கவும்.

103. வாத சர்த்தி பயித்திய சர்த்தி சேத்தும, சர்த்தி சகலவிக்கலுக்கு பாரிச குன்மத்துக்கு

நாய்வேளை, அரிசிபடி 2, காயப்போட்டு எந்திரத்திலரைத்துப் பசுநெய்யில் லேகியம் பண்ணிக் கொண்டு அந்தி சந்தி இரண்டு நேரமும் கொட்டைப் பாக்களவு தின்னவும்.

பத்தியம்: காார்ப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

பழைய தேய்ந்த செருப்புத் தோலைச் சுட்டு அரைத்துக் கொடுக்கச் சர்த்திமாறும். இளநீர் மட்டையைத் துவைச்சு சாறுகொண்டு இடிக்கச் சர்த்தி[1] எடுக்கும் இலுப்பைப் புண்ணுக்கு அரைத்து இளவெந்நீரில் கொடுக்கச் சர்த்தி எடுக்கும்.

வெள்ளுள்ளியும் பிரமியிலையும் கூடப் போட்டு அரைத்து விழுங்கவும். கொடிவேலி வேர்ப்பட்டை பலம் 30 இடித்து ஒருபானையில் அடைத்து நான்கு வள்ளம் தண்ணீர்விட்டு நாலத்தொன்றாய், தாணிக்காய், நெல்லிமுள்ளி, முத்தக்காசு, விழலரிசி, திப்பிலி, மூலம், நெருஞ்சில் விரையும், வெருப்பச்சிலை, தேவதாரம், கொத்த மல்லிகை, வசம்பு,சிறுதேக்கு, நன்னாரி வேர், அரிசித்திப்பிலி; அசமதாகம், நற்சீரகம், காயம், இந்துப்பு, கடுகு ரோகிணி இது ஒவ்வொன்றும் பத்து வராகனெடை

1. சர்த்தி – வாந்தி

கூட்டியிடித்து கசாயத்துடன் கலந்து பசு நெய் ஒருபடிவிட்டு நெய்யிருந்த கலசத்திலே ஒரு மாதம் வைத்து கொண்டு அதுக்கு மேலேடுத்து தலைமுழுகி விரோசனங் கொண்டு பிறகு ஒரு புன்னைக்காயளவு தின்னவும். இப்படி ரெண்டு நேரமும் தின்னவும்.

பத்தியம் : பசும் பால் வார்த்துண்ணவும். புளிப்புத் தவிரவும்.

தீரும் வியாதி : உள்மூலம், பாண்டு ரோகம், ஈளை, இருமல், வீக்கம், வயிறு பொருமல், காமாலை மேலிளைக் காமாலை,குட்டம் பதினெட்டு, அட்ட குன்மம், பவுத்திர சிலந்தி, மூத்திர எரிச்சல், வாத சூலை, சோம்பல், வீக்கம், வயிறு பொருமல் தீரும். மூன்று மண்டலத்தின் நரைதிரை மாறும். வயது தெரியாது. மகாசு வாத்தியங்[1] கொடுக்கும். இத்துடன் பரங்கிபட்டை பலம் 2, சுக்கு பலம் 1, கூட்டி இடித்துக் கொள்ளவும்.

104. அட்ட குன்மத்துக்கு சாரநாரி சாதி லேகியம்

இந்துப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, பொட்டுலுப்பு, கரி உப்பு, எவ சாரம், நவசாரம், சத்திச் சாரம், சீனாக்காரம், வெண்காரம், காயம், அன்னபேதி, சவுக்காரம், சவுட்டுப்பு இவை வகைக்கு பலம் 1/2, வெள்ளுள்ளி, வசம்பு, பெருமருந்து, வேர்புங்கரு, வேர்பட்டை மருள் கிழங்கு பொன்முசுட்டை வேர், வெள்ளைக் காக்கரட்டான் வேர், சாரணைவேர், சதக்குப்பை, மிளகு, துத்தம் சித்திர மூலம் தேசாவரம் சீரகம், சீரகம், சுக்கு, திப்பிலி, ஆனைத்திப்பிலி, வாய்விளங்கம், நேர்வாளம், கடுகுரோகிணி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, பரங்கிப்பட்டை, ஓமம், குரோசானி ஓமம், கடுகு, கோட்டம், நறுக்கு மூலம்,

---

1. சுவாத்தியம் – கல்வி

சிறுதேக்கு, இவை வகைக்குப் பலம் 1, இதுவெல்லாம் சதுரக் கள்ளிப்பால் படி 1/2, பேய்த்தும்மட்டிக் காய்ச்சாறு படி 1/2, ஈரவெங்காயச் சாறு படி 1/4, பசும் பால் படி 1/4, இதுவெல்லாம் விட்டு அரைத்து தேங்காயில் பொதித்து எருமை சாணி கொண்டு மூடி புடமிட்டு அரைத்து விளக்கெண்ணை அரைக்கால் படிவிட்டு அரைத்து பிறகு அஞ்சு புட்டி நறுக்கி கூடப் போட்டு கிளறிச் சாப்பிடவும். தூதுவிளங்காய் பிரமாணம் சாப்பிடவும்.

தீரும் வியாதி: அட்ட குன்மம் அழுகின கிரந்தி மேகச்சூலை, மகோதரம், நீர்க் கோவை, கவுசை வெப்பு பார்வை முதல் உதவியாதியுங் வெட்டுப் புழுவும் தீரும். வாதவாய்வு, பித்த வாய்வு, சிலேத்தும வாயு தீரும்.

105. மந்தார காசம் பீனிசத்துக்கு

ஆதண்டையிலைச் சாறு, எருக்கம் பழுப்புச் சாறு, வெருஇலைச் சாறு, பீனிசக் கிழங்கு சாறு, ஆடாதோடைச் சாறு, கையாந்தகரைச்சாறு, கருப்பு வெற்றிலைச் சாறு வகைக்கு 1, இச்சாறு படி பழம் நல்லெண்ணை சேர் 5, இதுவிட்டுக் காய்ச்சிக் கடுகு திரளும் பதத்தில் கடைத்திரவியம். சிற்றரத்தை, சிறு தேக்கு, சதகுப்பை, கத்தூரி மஞ்சள், கற்கடசிங்கி, இலவங்கப்பட்டை, வேம்பாடம்பட்டை, கோட்டம், (கிரந்தித்த காம) சாதிக்காய், ஆகவகைக்கு வராகனெடை 1, இதுவெல்லாங் கூட்டி எரித்துப் பதத்தில் வடித்துத் தலை முழுகவும்.

பத்தியம்: புளி தவிர்க்கவும்.

106. குன்மத்துக்குச் சத்தி குன்மத்துக்கு

பேய்க்கும்மட்டிக் காய், தூதுவளையாக அறுத்து ஊறிய உப்புப் பிசறி ஒரு பானையிலிட்டு மூடிப் புகை செய்து ஒரு மண்டலம் கிடந்து பிறகு அறுத்து ஒரு பாக்களவு. கருப்பட்டியில் தின்னத் தீரும்.

குன்மத்துக்குக் கடுக்காய், தான்றிக்காய் 15, சாதிக்காய் 15, நற்சீரகம், கருஞ்சீரகம், அசமதாகம் (ஓமம்), காயம், இவை வகைக்கு இரு கழஞ்சு, மிளகைப் பிடி கூட்டி இந்த மருந்தெல்லாம் கூட்டிப் பொடி செய்து ஒரு வெகடிப் பிரமாணம் தேனில் கொள்ளத் தீரும். கற்பம், ஆவாரை சமூலமும் சூரணம் பண்ணி பாலிறக்கி குடிக்க மண்டைச் சூலைத் தீரும். சர்க்கரையில் கொள்ளத் நித்தம் வலிக்கிற தலைவலி நிற்கும். மஞ்சள் பொடியில் சமன்கூட்டி ஆழாக்குத் தேனில் முப்பது நாள் கொள்ள எட்டு நாள் வலி எடுக்கும். ஒன்பதாம் நாள் தலைவலி நாசி யினாலே விழுகிற சீழும் நிற்கும்.

107. குன்மம், சூலைக்கட்டு, நரம்புச் சிலந்தி உதட்டில் புழுவுக்கு, ஆவாரங் கற்பம்

வெள்ளை வெங்காயம் பலம் 1, மிளகு பலம் 1, வாய்விளங்கம் பலம் 1, கடுகு ரோகிணி பலம் 1, இந்துப்பு பலம் 1/2, கார்த்திகைக் கிழங்கு புங்கெண்ணை, விளக்கெண்ணை, வேப்ப எண்ணெய் விட்டுக் கொதிக்க வைத்து மேலேவிட்டுப் பிடிக்கவும். சூலைக் கடுப்பு மற்ற கடுப்புகளெல்லாம் நிற்கும். வெள்ளெருக்கம் பாலும், கோழி எச்சமும், துணியிலூட்டி விளக்கில் கொளுத்திக் கொட்டு வாயில் வைக்கவும். பசுமஞ்சள் வெள்ளெருக்கம் பால் வறுத்தரைத்துக்கட்டவும். அரப்பழத்தை எடுத்துப் போட்டுப் பாதிப்பழமும், திப்பிலியும், அயிர கருவாமே அரைச்சு மந்திரிச்சு உதட்டில் கட்டவும். புழுச்சாக, நரம்புச் சிலந்திக்கு மாட்டுக் கறியை வைத்துக் கட்டவும். கபால சூலைக்கு நன்னாரி பலம் 2, பசும் பால் நானாழி இள நீர் நானாழி, ஆலம்விழுது துவைத்துத் தண்ணீர் அரைப்படி முசுமுசுக்கைச் சாறு அரைப்படி, கற்பூர வல்லிச் சாறுப்படி 1/2, நல்லெண்ணெய் நானாழி, அரசம் பட்டைச் சாறுபடி

1/2, கோட்டம் வராகனெடை 2, அதிமதுரம் வராகனெடை 2, ஈரவெங்காயச் சாறுப்படி 1/2, மரமஞ்சள் பலம் 1/2, கிளியூரல்பட்டை பலம், நெல், தான்றிச்சாறு பலம் 1/2, சுக்கு வராகனெடை 2, மிளகு வராகனெடை 2, திப்பிலி வராகனெடை 2, சந்தனம் பலம் 2, செண்பகப்பூ வராகனெடை 2, கத்தூரி வராகனெடை 2, நல்ல மஞ்சள் வராகனெடை 2, கொள்ளுக் காயாகியலும், நார்த்தம் பழச்சாறாகிலும் அரைப்படி மஞ்சள்; இந்த மருந்தெல்லாம் இளநீரும், அந்தந்த வகைச்சாறும் விட்டு அரைத்து மர மஞ்சள், சந்தனத்துடன் போட்டுக் கலந்து அரைத்துக் கொள்ளவும். இந்தவகை எல்லாம் எண்ணெயைப் புறம்பாக வைத்துக்கொண்டு அரைப்படித் தரம் சாறு காய்ச்சினத்துக்குப் பிறகு கரண்டி போட்டு நல்லெண்ணெயிட்டுக் காய்ச்சவும் முதல் காய்ச்சல் கால்வாசி இரண்டாங் காய்ச்சல் அரைவாசி மூணுநாள் காய்ச்சல் முக்கால் வாசி, நான்காம் நாள் காய்ச்சல் முழுவாசியும் நல்ல பதம் பார்த்து மெழுகி பதமாயிறக்கி எண்ணெயை வடித்துக் கொண்டுந் தூபங்கொடுத்து கலையத்தில் வார்த்து வேடுகட்டி நாள் எட்டு ஆண்டு பிராமணர்களுக்கு நாழி அரிசி, மிளகு, புளியும் வைத்துக் கொடுத்து அந்த எண்ணெயைத் தேய்த்து முழுகவும். பாசிப் பயறு சீயக்காய் தேய்த்து மூழ்கவும். கைப்பு புளிப்புத் தவிர்க்கவும்.

108. நீரழிவுக்கு எண்ணெய்

பசும் பால், பசுவின் நெய், முருங்கைப் பிஞ்சு, முளைக்கீரை, துவரம் பருப்பு, சிறுபயிறு ஆம் வியாதி தீரும் முன்னே மூக்குனீர்ப் பாய்ச்சல், மூக்கடைச்சல், சென்னி நோவு அபானபாகம், சிவந்தே விலகும். பலமாக அடிக்க காதே வலிக்கும்; கபாலந்தனை

நோவும், அய்யெட்டு நாற்பது வியாதியும் முடங்கும், தொண்ணூத் தாறும் வெந்நீரில் முழுகிவர அகத்தியர் வாக்கு தப்பாதே.

தண்ணீர்விட்டான் கிழங்கு பலம் 1, நிலப்பனைக் கிழங்கு பலம் 1, அமிர்த வல்லிக் கிழங்கு பலம் 1, நன்னாரி வேர் பலம் 1, கபால நாசிப்பட்டை பலம் 1, மருதம்பட்டை பலம் 1, சிற்றாமுட்டி வேர் பலம் 1, நாவல்பட்டை பலம் 1, அத்திப் பட்டை பலம் 1, இலந்தப்பட்டை பலம் 1, பூவரசம் பட்டை பலம் 1, விலாம்மிச்சம் வேர் பலம் 1, வன்னிப்பட்டை இந்த மருந்தெல்லாமிடித்து ஏழு மரக்கால் தண்ணீர் விட்டு ஊற விட்டு அதில் பனிரெண்டு பலம் ஆவாரம் விரை போட்டுக் குறுணியாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு கடுக்காய் நெல்லிமுள்ளி, தான்றிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, ஏலம், இலவங்கம், பட்டை, செண்பகப்பூ, அதிமதுரம், கோட்டம், வெட்பாலை அரிசி, விளாவரிசி, வாலுளுவை அரிசி, இந்துப்பு வகைக்கு முக்கழஞ்சு இதுவெல்லாம் அரைத்து கசாயத்திலிட்டுக் குறுணிப் பசும் பாலில் கரைத்து மருந்து மிஞ்சின சகாயமும் சாரித்து பத்துக்கோணி முட்டையும் உரைத்துக் கடுகு திரளாகக் காய்ச்சி, அதில் நானாழி நல்லெண்ணைவிட்டுப் பதத்தில் வடித்துப் பதமறிந்து இறக்கி வைத்துக் கொண்டு தினமொரு புன்னைக் காயளவு தின்னவும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

109. நவச்சாரம் கட்டு மெலிந்த பிள்ளைக்கு நெய் எண்ணெய் வைக்க

நவச்சாரம் வராகனெடை 20, இதுக்குப் பலகை வெங்காரம் வராகனெடை பொரித்துக் கால் படி பச்சரிசியைக் கூழாக்கி நாய்வேளைச்சாறும் பொரித்த வெங்காரமும், அந்தச் சோற்றிலிட்டுப் பிசைஞ்சு

நவச்சாரத்தின் பேரிலே கவசங் குடுத்து காய வைத்துச் சீலைமண் செய்து காயவைச்சு புளியம்பட்டைச் சாம்பலாகுதல் ஆறுபடி சேர்த்து ஒரு தோண்டியில்[1] மூணுபடி கீழே வைத்து நடுவே அதை வைத்து மேலும் மூன்றுபடி சாம்பல் வைத்து வாய்க்கு ஒருபடி ஓடுவைத்து சீலை மண் செய்து காயவைத்து பத்துநாழிகை எரியிடவும். அதை எடுத்துப் பத்து வராகனெடை ஈயத்துக்கு வராகனெடை கொடுக்கவும். வத்து வெள்ளியாம். நிலைக்கடம்பு இலை, ஒருபிடி, பெரும்பூசணி ஒருபிடி கொண்டு அரைப்படி பசுநெய்யும், அரைப்படி நல்லெண்ணெயும் புறம்போடு வெவ்வேறே வைத்துக் கொண்டு இலையைச் சமனாய்ப் பிரித்துப் பாதி எண்ணெயுடனே எரித்து இறுத்து வைத்துக்கொள்ளவும். நெய்யுடனே பாதி மருந்து இலையைப் போட்டு எரித்து இறுத்து வைத்துக் கொள்ளவும். இப்படி வைத்துக் கொண்டு காலையில் எண்ணெயும் சாயங்காலம் நெய்யும் சாப்பிடவும். மாமிசம் சாப்பிடுகிறவர்களானால் பெண்ணுக்கு ஆண்நண்டும், ஆணுக்குப் பெண் நண்டும், ஒவ்வொரு கெண்டை மீனும் ஆக்கிப் போடவும். மாமிசம் சாப்பிடாதவருக்கு துவரம் பருப்பு வறுத்து அரைத்துக் கூட்டவும்.

110. மருந்தீட்டுக்கு மருந்து

பேய்பீர்க்கங்காயில் இளங்காய் கொண்டுவந்து உரலில் போட்டுத் துவைத்துச் சாறு பிழிந்து கொண்டு கொதிக்க வைத்து உரியச்சாறு உழக்கு அரைப்பலம் ஊசிக்காந்தம் போட்டுக் க்ளிபோல ஆனபிறகு உண்டையாகப் பண்ணிக்கொள்ளவும். மருந்தீட்டுக்கு மறுமுறை வந்தால் சரீர பிரகருதி அறிந்து

வாத்து-பொருள் கோணி-சாக்கு. 1.தோண்டி-குடம் "கொண்டு வந்தான் ஒரு தோண்டி" சட்டைமுனி-பெரியஞானக் கோவை.

இளைத்தவனுக்குப் பாசாணத்து நெய்யும் பேய்க் கரும்பஞ்சாற்றிலேயும் இட்டாள் என்று அறியவும். சரீரம் பருத்திருந்தாலுங் கொப்பரைத் தேங்காயிலும் பணியாரத்திலேயும் இட்டாளென்று அறியவும். அவனுக்கு வெள்ளாட்டுப்பாலிலே ஒண்ணரை உருண்டையிடவும். இளைச்சவனுக்கு ஒரு உருண்டை யிடவும். இருமலெடுத்தால் இளநீரை முகர்ந்து திறந்து ஓட்டைச் சிறுக வெட்டிப்போட்டு மூன்று நாள் இளநீர் கொடுக்கவும்.

111. மருந்து முறிவுக்கட்டுக்கு விசத்துக்கு ராமபாண தைலம்

புளியம்பட்டை, வேப்பம்பட்டை, விழவிப்பட்டை, உசிலம் பட்டை, சங்கம் பட்டை, சதுரக்கள்ளி, நொடிபாவட்டை வேர், புங்கிலை, அவரியிலை, நத்தைச்சூரி, துளசி, பொடுதலை, முசுமுசுக்கை, தழுதாழை, செருப்படி, கொட்டைகரந்தை, கையாந்தகரை, கோவைத்தண்டு, பாவட்டை இலை இடித்து ஒரு விறகு போட்டு எரித்து மூன்றுநாள் வேதுபிடிக்கவும்.

நாபி வராகனெடை 1, ரசம் வராகனெடை 1, அரிதாரம் வராகனெடை 1, மனோசீலை வராகனெடை 1, துத்தம் வராகனெடை 1, துருசு வராகனெடை 1, சாதிலிங்கம் வராகனெடை 1, பூவந்திப் பழம் வராகனெடை 1, மகிழம் பருப்பு வராகனெடை 1, கத்தரி நாயகம் வராகனெடை 1, ஆகவகை பதினொன்றும் வேப்பெண்ணைவிட்டு மூன்று நாளரைத்து மாட்டுக் கொம்புச் சிமிழில் அடைத்து விசத்துக்கு ஒரு பருத்திக்கொட்டைப் பிரமாணம் கொடுக்கவும்.

பத்தியம்: உப்பு, புளி, வெந்நீரும், சோறும். நாபியைச் சாணியிலே கரைக்க சுத்தி, ரசம், குப்பைமேனிச் சாற்றில் சுத்தி, அரிதாரம், பசுவின் பாலில்

சுத்தி, மனோசிலையும் பசும் பாலில் சுத்தி, இந்த நாலும் சுத்தி பண்ணி எல்லாம் போட்டு நேர்வாளமும் கூட்டிப்போட்டு வேப்பெண்ணையில் அரைத்துக் கொடுக்கவும். பேதி கண்டால் பத்தியம் இருக்க நிற்கும். நில்லாமல் வாந்தி, பிராந்தி, கண்டால் வசம்பை சுட்டு வெந்நீரில் கொடுக்க நிற்கும். விரியன் கடியானால் வயறு பேதி கண்டதென்றால் வசம்புத் தண்ணீர் கொடுக்கக் கூடாது. பத்தியம் கொடுக்க வாந்தி நிற்கும். விசம் கண்விசமானால் குணமாகிற வரைக்கும் தைலம் கொடுக்கவும். பத்துப் பருத்திக்கொட்டை கொஞ்சம் கொஞ்சமாகக் குணத்துக்குத் தக்கபடிக் கொடுக்கவும். பத்துக்கடி அவிழதத்துக்கு மேல் கொடுக்கக்கூடாது. வாந்தி பிராந்தி வயிறு வலி கண்டால் வசம்பு தண்ணீரில் கொடுக்கவும்.

112. சந்திரகார ரசம்

ரசம், தாம்பிர பற்பம், வெள்ளி பற்பம், வங்கபற்பம் வராகனெடை 3, கந்தகம் பொடி, கோரைக்கிழங்கு கசாயம் விட்டு ஒரு நாளரைக்கவும். மாதுளம் பழச்சாறு விட்டு ஒருநாளரைக்கவும். தண்ணீர்விட்டான் கிழங்கு, சாறுவிட்டு ஒருநாளரைக்கவும், பற்பம் கசாயம், ஒருநாள் அரைக்கவும். கண்டங்கத்திரி வேர் கசாயம் ஒருநாள் அரைக்கவும். சித்திரமூல கசாயம் ஒருநாள் அரைக்கவும். தாழம் பழத்துக் கசாயம், ஒருநாள் அரைக்கவும். கடுக்காய் கசாயம் ஒருநாள் விட்டரைக்கவும். இந்த எட்டு வகையும் தினம் ஒருசாமம் அரைக்கவும். முந்திரிப் பழம் நித்தியம் இரண்டு பலம் கசாயம் வைச்சுரைக்கவும். இப்படி எட்டுநாள் கசாயம் வைத்து நித்தியம் ஒருசாமம் அரைக்கவும். சந்தனத்தூள் 24 விட்டு முந்திரி பழக் கசாயம் விட்டரைக்கக் கொஞ்சம் கொஞ்சம் போட்டரைக்கவும். வடகம் பண்ணி நிழலுலத்தி இரண்டு பணவிடை இஞ்சிச் சாற்றிலிட்டு சிலேட்டும சுரம்,

கன்னிதோசந் தீரும். நொச்சிக் கசாயத்திலிட வாத சுரம், சன்னி தோசம் தீரும். சீந்தில் கசாயத்தில் விட பயித்திய சுரம் தீரும். சந்தனம் பொடி கசாயம், முந்திரி பழக் கசாயத்தில் விட மூத்திர எரிச்சல், தாகம் அத்தி சுரம், மேகவெட்டை, உட்டினவாயு, பயித்தியம், சித்த பிரமை, துன்மாங்கிசம், நீரடைப்பு, நீரிழிவு, வாதபித்த சிலேட்டும மேகம், நாள்பட்ட மேகந்தீரும்.

பத்தியம்: கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

113. தாது புட்டிக்கு அசுவகந்தி லேகியம்

மாம்பட்டை, நெல்லிப்பட்டை, இலுப்பைப்பட்டை, வாகைப்பட்டை, இலந்தைப்பட்டை, வேப்பம் பட்டை, முருங்கைப்பட்டை, கல்லிச்சிப் பட்டை, பூவரசம் பட்டை, சங்கமப்பட்டை, வேப்பம் பட்டை, புங்கம் பட்டை, பொன்முசுட்டை வேர், கருங்காலி வேர்பட்டை, அமுக்கரா வேர், சிறுகுறிஞ்சா வேர், அத்திப்பட்டை, பிராம்பட்டை, நாயுருவி வேர், அவுரி வேர், முட்காவேளை வேர், சீந்தில் கொடி இலை வகைக்கு பலம் 10, இவற்றையெல்லாம் கூட்டிக் *காவேரித் தண்ணீர்விட்டு ரெண்டுபடியாகக் காய்ச்சி வாங்கிக்கொண்டு அதை மறுசட்டியில் வைத்துக் காய்ச்சி அரைப்படி ஆன பிறகு கல்கண்டு சேர் 1/2, அதில் போட்டு நெய்சேர் விடவும். சீரகம் பலம் 1, ஏலம் பலம் 1/4, குரோசாணி ஓமம் பலம் 1/4, அதிமதுரம் பலம் 1/4, அரேணுகம் பலம் 1/4, கற்கடகசிங்கி பலம் 1, சாதிக்காய் பலம் 1, சாதிபத்திரி பலம் 1/4, கிராம்பு பலம் 1/4, கசகசா பலம் 1/2, அச்சுக்கஞ்சா பலம் 1/4, பூனைக்காலி விதை பலம் 2, சிறிய அபின் பலம் 1/4, நறுக்கி மூலம் 1/4, சிறுதேக்கு பலம் 1/4, சித்திரமூலம் பலம் 1/4, முத்தக்காசு பலம் 1/4, நீர்முள்ளி விதை பலம் 1/2, முசுமுசுக்கை விதை

---

*நூலாசிரியர், சோழ நாட்டவராதல் கூடும், காவிரிப் பற்றிக் கூறுவதால்.

பலம் 1/2, நாயிராஞ்சி விதை பலம் 1/4, கையாந்தகரை விதை பலம் 1/4, கொட்டைக் கரந்தை விதை பலம், ஓமம் பலம் 1, மெந்தால் சதடி பலம் 1/4, சாலாமிசிரி பலம் 1/4, ரூமிமஸ்தகி பலம் 1/4, ஆவாரம் விரை பலம் 1, பேரீச்சம் பழம் பலம் 1, இதுவெல்லாம் இடித்து வத்திரகாயம் பண்ணி பாகில் போட்டுக் கிளறி சுண்டைக்காய்ப் பிரமாணம் சாப்பிடவும். தீரும்வியாதி: கிராணி, மேகம், அத்தி சுரம் தீரும். மேகப்புண் மாறும். தாதுபுட்டி உண்டாம்.

பத்தியம்: கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

114. சூதசலம் நாசரிமேகக்குலாந்தக பற்பம்

வெங்காரம் பலம் 1/2, சவ்வீரம் விராகனெடை 1, பச்சைக் கற்பூரம் விராகனெடை 1, இது மூன்றும் அரைத்து உருக்கிக் காய்ச்சி எடுத்து வைத்துக் கொண்டு அனுபானங்களிலே கொடுக்க சலக்கட்டு, நீர்கோவை, மேகவாயுத் தீரும்.

வங்க பற்பமாசம், தாளகம், அண்ட ஓடு இவை சமன்கூட்டி கள்ளிப்பால், எருக்கம் பால், கருஊமத்தஞ் சாறு, ஆகாசத் தாமரைச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு இவையெல்லாம் ஐந்து நாளரைத்து அகலில் வைத்து மேல்கலசம் கொண்டு மூடிச் சீலைமண் செய்து ஐம்பது வரளியில் புடம்போட பற்பமாம். அனுபானம் விசேசங்களிலே கொடுக்க மேகஞ் சூலை, கிரந்தி சுவாசம், இருமல், இளைப்புத் தீரும். கந்தகம் வராகனெடை 5, அரப்பொடி 5, சிலாமுள்ளங்கிச் சாறு, வார்த்தரைத்து வில்லை பண்ணி காடைப்புடம் போடவும். செந்தூரமாம் அனுபான விசேசங்களிலே கொடுக்க குன்மம், சுரம், அக்கினி மந்தம், கிராணி வாதம் தீரும்.

குலா-மகிழ்ச்சி. மென்தால்-புதிரை உப்பு-ஆங்கில வழக்கு. இச்செய்முறை பிற்காலத்தது எனலாம்.

115. கந்தகச் செந்தூரம், வெள்ளைப் பாசாணச் செந்தூரம், கௌரி பாசாணச் செந்தூரம், சாதிலிங்க செந்தூரம்

வெள்ளைப் பாசாணம் வராகனெடை 5, அரைப்பொடி வராகனெடை 5, கூட்டிச் சிலாமுள்ளங்கிச் சாறு அரைத்து வில்லை பண்ணி காடைப் புடம் போடவும். செந்தூரம் பாலில் சங்கிலே கொடுக்க சகல சரும நோய்களும் தீரும்.

கௌரி பாசாணம் வராகனெடை 5, அரைப்பொடி வராகனெடை 5, கூட்டிச் சில முள்ளங்கிச்சாறு விட்டு அரைத்துப் புடம் போட செந்தூரம் அனுபானங்களிலே கொடுக்க சகல சுரமும் சன்னியும் தீரும்.

சாதிலிங்கம் வராகனெடை 5, அரைப்பொடி வராகனெடை 5, சிலா முள்ளங்கிச் சாறு விட்டு அரைத்து வில்லை பண்ணிப் புடம்போட செந்தூரமாம் அனுபானங்களிலே கொடுக்க அக்கினி மந்தம், உட்டிண வாயு, சுரம், சன்னி போம். தாது புட்டி உண்டாம்.

116. தாளக செந்தூரம், கரப்பான் விராந்திக்கு

தாளகம் வராகனெடை 2, சீனாக்காரம் வராக னெடை 2, தேசிப்பழம் 1, பூவரசங்காய் பலம்3, காந்தம் பலம் 3, தண்டவாள் எஃகு பலம் 3, ஆட்டுக்கடா உதிரம் விட்டு குழவி ஆடி ஒரு கலசத்திலே மூன்று நாள் வைத்து மறுபடி உதிரம் விட்டு அரைத்து வில்லை பண்ணி ஏழு குக்குடப் புடம் போடச் செந்தூரமாம். இந்த செந்தூரம் பணவிடை தேனிலிட சன்னிசுரம் சுவாச காசம் தீரும்.

சேட்டுமம், இது வெல்லாம் தீரும். கையாந்தகரை, கொட்டைகரந்தை, காட்டுவெள்ளரி, சின்னியிலை, நிலவாரை இலை, மணத்தக்காளி, ஆதண்டை,

முத்துருக்கஞ்செவி, பிரமியிலை, கோடகசாலை, சமம், உத்தாமணி பாகல் இலை, சிறுசெருப்படி, சிறுக்கீரை. கழற்சிஇலை, கற்பூரவள்ளி, மாந்தக் குருத்து, நல்ல குருந்து, பேய்மருட்டி, இண்டிஇலை, சித்தித்து விழுதி இலை, செப்பு நெருஞ்சில் இலை, தகரையிலை, சங்கிஇலை, ஈர வெங்காயம், சங்கங்குப்பி, தூதுவளை, காட்டுக்குருஞ்சான், பொடுதலை, கருநொச்சிஇலை, சாணாக்கிலை, முருக்கிலை, கிரந்திநாயகம், தழுதாழை, துளசி, அவுரிஇலை, நுணாயிலை, வெள்ளறுக்குத் தாழை, சவுரி, பிரண்டை, வெதுப்படக்கி, பவழக் குன்றியிலை, பாவட்டை யிலை, இது வகைக்குச் சாறுபடி 1, விளக்கெண்ணெய் குறுணி, புளிதொடைக்கி வேர், நரிவிளாத்திப் பட்டை, காட்டுமல்லிகை வேர், சிற்றாமல்லிகை வேர், செங்கதாரி பட்டை, நுணாவேர், தூதுவளைவேர், பெருந்தழை, சிறுதழை, காட்டுக்கருணை, கொணாசிவேர், மருள் கிழங்கு, சாரணைவேர், புளியந்தழை யிலையும், கிழங்கு அகத்திக்கரணை கடைத் திரவியம், கருஞ்சீரகம், க்த்தூரி மஞ்சள், உள்ளி பூத விருட்சம், சதகுப்பை, வெளிச்சைப் பிசின், அரத்தை, பரங்கிப்பட்டை, வசம்பு, கோட்டம், அதிமதுரம், இவை வகைக்கு பலம் 1/2. கூட்டி முன்சாறு வார்த்தரைத்து எரித்துப் பதமானவாறு எண்ணெய் வார்த்தரைத்து மறுநாள் வடித்து மெழுகு பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு அஞ்சு மாதம் முதல் பத்து மாதம் வரை மாதம் மூணுநாள் கொடுக்கவும். ஆறு நாள் பத்தியம் இருக்கவும்.

பத்தியம்: உப்பு, புளிப்பு, கசப்பு, கிரந்திப் பண்டமாகாது.

தீரும் வியாதி: செங்கிரந்தி, கிரந்தி எல்லாம் தீரும்.

117. உலோகச் செந்தூரம்

பிள்ளைக்கு அஞ்சு வயது வரை இந்த எண்ணெயைப் புழங்கினால் வியாதி வராது. மாந்தம் கணத்துக்கு எல்லாம் மாசிக்காய், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, ஏலம், பஞ்சதிரவியம், இவை வகைக்கு பலம் கூட்டிப் பொடி செய்து எண்ணெயில் போட்டு வைத்துக் கொண்டு கொடுக்கவும். காய்ச்சல் மாந்தங்கண்டு மூணு நாளில் போகும்,

அரபொடி பலம் 1, நெல்லிக்காய் கந்தகம் பலம் 1, சிலா முள்ளங்கிச் சாறு வார்த்தரைத்து துட்டுப் போலே வில்லை பண்ணி உலர வைத்துக் காடைப்புடம் போட செந்தூரமாம். அதுயெடுத்து இரத்த விருத்திக்கும் கிராணிக்குத் தரவும். பித்தபாண்டு போக்கும். கிராம்பு, சீரகம், திப்பிலி, அனுபானம் பண்ணித் தின்னவும் தீரும்.

118. விரைவாதத்துக்கு வாசனைத் தைலம்

வெள்ளுள்ளி பலம் 15, அஞ்சுசேர் தண்ணீரில் போட்டுக்காய்ச்சி, வடிகட்டிப் பிழிந்து கொண்டு இரண்டு சேர் விளக்கெண்ணை விட்டுக் காய்ச்சி ஆனதும் விடவும். கடுகு, குழம்பு, பசும்பாலிலே உப்பு பலம் 1, கழற்சிப் பருப்பு பலம் 1, சோமனாதி பெருங்காயம் பலம் 1/2, இந்த மருந்தெல்லாம் பொடி பண்ணிப் போட்டு எரித்து வடிக்கட்டிப் பிழிந்து கலயத்தில் வைத்துக் கொண்டு காலையில் இரு வராகனெடை எண்ணெய் குடிக்கவும். இதற்குப் புளி கூட்டி கொள்ளவும். கசப்புத் தவிர்க்கவும். இந்த எண்ணெய் திருச்சிராப்பள்ளி சுப்பய்யன் சொல்படி எழுதியது.

119. வாயுவின் மலபந்தனம்

கோதையே! சீனிப் பாகு கூட்ட புவிமீதிலாச் சூரணத்தைச் சொல்லக் கேள். பேதமுறு பட்டையிரு நான்குபலம் பாங்காகவே சீவி இட்டமுடன் குப்பி சாற்றிட்டு பின் கட்டாய் நிழலில் உலர்த்தலாய் உலர்த்தி நேர்விளங்க காந்தம், திரிகடுகு, வால்மிளகு, அழகுடைய அரிதாரம், கந்தகமுமான சாதிலிங்கம் பொரிகாரம் ஓமமொடு பூவையே அரிதாம் செய்து துருசு, துத்தம் சேர். சாதிக்காய் பூ, வரும் துய்யதோர் சாரம் ஐந்தும் தொகை இமைதீர் விளங்கி இருசீரகமும் மேலானக் கோல அரிசி வளரும் குறுங்காணி, அபின் மருந்தும் குக்கில் குளவிந்தம் (தேன்), கொடுவேலி வேர் தோலும், நற்கடுகு, வெந்தயமும்நால் மதமும்நக்கால் அரிசி வகை ஆகுமாம்.

சோமனுக்கும் வரிசிவதை ரோகணி மருந்தொன்று உரிய நிறை கால் பலம் கொண்டுவந்து கடுகு இடித்து கடுந்திடித்து இம்மருந்தை மாப்போல நன்றாய் வடித்தெடுத்து கொப்புளதம் பட்டை போய் மடன பாங்காக வேலிரவி பெட்டைக் கருங்கோழி தன் பின்குணர்ந்து கட்டாய் கால்தலை ரோமங்கள் இளைத்துக் கண்டுகுடல் போக்கி மேல்மருந்து கோவிரவி இட்டு நூல்கொண்டு தேய்த்து ஒருநாழி வேக கோசலம் குறுணி சுத்தி நடைக் காணும்சாறுகுறுணி குற்றமில்லா சித்திர மூலம் சார் சேர் தும்பை நொச்சி கள்ளி முத்தின நாபி வெடை முதிரி பொடுதலை இத்தனையும் இரண்டு நீர் நாழி ஒக்கவே தாளிதனை நேராக விட்டு நிகழ்த்தக் கேள். சீராக கேணி அப்பட்டாலே வேடு கட்டி முக்குடத்தைப் பேணி அவிழாதே பின் மூடிவிட வாய்மண் பூசி மிக கனம் தரித்துமிடவாச்சி வாச வேடு எடுத்து வர அதை எடுத்து உடன் எலும்பெல்லாம் போக்கி உலர்த்தி இடித்து நலம்பெறவே.

இம் மருந்து நாற்பது நாள் துலங்கியதோர் ....கடிநீண்டு பிழி கசப்பி இவைகள் ஆனவிதமெல்லாம் ஆறக் கொண்டு உரைத்தேன் கேள்.

வெள்ளாடுமே முயல்மேவு கெளதாரி உள்ளான், சேவல், காடை, ஊர்க்குருவி, தில்லா, திருக்கை சேர் சுறா, தே ....அயிரை விருந்துளரு மெலி கோழியும் ஏனை பருத்த துவரம் பருப்புடனே தூதுவளம்ங் காய், சுரை, அவரை, முருங்கை அதன் பிஞ்சு ....ருசியில்லா கீரை இடந் தண்டு கிளைத்த சூரை கொழுந்தும் சீதக் கதலிப் பிஞ்சு, சிறுகீரை, நேரான கோழிமுட்டை, உகள நெய் இவை அருந்த தாளரை ஆமணக்கெண்ணைதான் முழுகா ஊழ்வினையின் குட்டம் பதினெட்டோடு குத்தலை கடுப்பு இவைகள் முட்டினை முக்கு வராமல் முக்குளை கட்டியிடு சூலை படுதாமரைகள் காந்தளைகளாலே செரிவு சீழ் புரைகள் ஓடுதறகள் விண்டிடு கிரந்தி வரண்றிடு தலை வந்திடு பவுத்திரம் கொள் வலிவாதமொடு சோம்பல் ஊது தலையாத வெடிமேவு கடிபிராண வலிதான் பிடருதலை வாயளவு போடு போடேன் இருமியிரு மண்டையிடி துண்டமதில் கலங்க ரொடு தொண்டையிரு புரைகள் கண்டமதில் வந்திடுதல் போத்திகடி அத்தி சுரம் ஒத்த கபம் விக்கலொடு நீரடைத்தல் காதடைதிடுதல் வீழ் தலை சொரிகள் நீராமை பிளவைகள் அகலுமென்று உரைக்கும் எனக் கேள்.

120. பிள்ளைமுழுங்கி முத்துனாயகன் மருந்துக்கு விவரம்

நிலவேம்பு, பூதகரப்பான் பட்டை, செவ்வல்லிக் கொடி, ஈரவெங்காயம், சிறுகுருஞ்சான் வேர், பெருமருந்து வேர், பேய்க்கும்மட்டி சமூலம். பாலொடு குழா தண்டை ஆகாச கெருடன் 3, கிழங்கு மிளகரனை, மருதம்பட்டை, வண்டு கொல்லி பட்டை, வறுத்து ஊற்றின விளக்கெண்ணய்.

121. நல்ல பாம்பு, விரியன் பேனாய், பேய்நரி, சன்னி இதுக்கு மருந்து

கந்தகம், நிர்விசம், கருத்தநாபி, கருஞ்சீரகம், அரிதாரம், தாளகம், பெருங்காயம், மனோசிலை, இந்துப்பு, நவச்சாரம் வகைக்கு வராகனெடை 1, வாளம் வராகனெடை 10, தேங்காய் கரி 4, பனைவெல்லம் வராகனெடை 15, உத்தாமணி சாறு, ஒருநாள் அரைத்த தேங்காய்ப் பால், ஒருநாள் அரைத்து முழுக்கடிக்கு, ஒரு உளுந்துப் பிரமாணம், வெற்றிலையில் வைத்துக் கொடுக்கவும். விரியனுக்கு மூன்று நாளைக்குக் கொடுக்கவும். கை கண்டது. இது மருந்து மாட்டுக்கு விசந் தீண்டினால் தேற்றாங்கொட்டை பிரமாணம் எடுத்து வேப்பெண்ணையில் கரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். தீரும்.

122. உச்சிவாதம் சூரிய வாதம்

உற்றதொரு உச்சி தன்னில் முகனிதமாகத் தேனில் பற்றிய சொரிய வேண்டிப் படரும் சொங்கை போல் சுற்றியநிலை தெரிந்து கழன்றிடும்போ. நீயும் சிற்றாமணக் கெண்ணை சிறந்த நல்லெண்ணை தன்னில் ஒத்ததோர் பிற்றலிகை சமூலமும் குப்பைமேனி பித்த பேய்பீக்கன் சாறு பெரியதோர் ... நொச்சிச் சாறு சிற்றிலைப் பிலாவிலை நிறுத்துழாய் பேய்த்தும்மட்டிப் பழம் கத்ததோர் கிராம்பு காவிளை காரந் தானும் துத்தமேதுருசுக் கோட்டம் துய்யதோர் கள்ளிச்சாறு வெற்றிலை ஒருபடி வேக வைத்து இறுத்துக் கொண்டு சத்தறப் போகுமென்றுதான் வாரருளிச் செய்தார். சூரிய வாதந் தோனில் தும்பலும் கலுமுந்தோணும், பாரிய தலைகனத்து பரிந்திடுமழுத்தி யுண்டாம். சீரியவலிக்கு மெத்தத் திண்ணணியே வலிப்பும் உண்டாம். சூரிய காலம்

போலச் சுழந்திடுந் தலை இயங்கு ஆறவேயறிந்து நீயும் ஆந்திலைனொச்சி வேளை தேறியவரிகத் தாழை தேழைக் கடைசிற்றாமுட்டி ஊறிய அஞ்சில் உழத்தி அமுக்குரா கடல் குறிஞ்சி மூலம் கூறவேசரியுங் கூட்டிக்குளிர்ந்த நல்லெண்ணை நாழி கூறிய ஆவின் பால் குறுணிவிட்டரைத்து மெள்ள சாறிய பேர் உழுது தன்னில் தப்பாமல் வெந்து அப்பாலும் சூரியவாத மென்று பரமனாருரை செய்தாரே.

123. காமாலைச் சூலை

தலைகளில் வலியுதாக தாகமுந்தோன்றியிப் போகு
தலை செவிக்காது கன்னம் முறியத்தளைகள் னோகும்
நிலைபெற அறிந்து நீயும் நிச்சயமாகவே தான் தலை
தனிலெண்ணை தேய்க்க தானினிமருந்து கேளே.

காரிய வசம்பு உள்ளி,........காக்கண வேரைக் கூட்டித்
தெரிய செங்கத்தாரி, திருத்துளாய், முசுறு முட்டை
கூறிய குமிளம் வேரும் கொக்கின்முதியார் கூந்தல்
செறுதாய் அரை நல்லெண்ணை சேர்த்துடன்
வேகவைத்து ஆறி கபாலந்தன்னில் இத்துடன் தேய்க்கப்
போமே.

மண்டைக்குள்ளே எழுந்து மயிர்க்கால் லெங்கும் அழி
புண்ணாய் மண்டைக்குள் சீயாய்ஓர் நாசிக்குள் வழியுஞ்சீயும்
மிகவிழுந்து
அண்டசுத்தம் முகலுமாய் அதிக வலியாய் முளைவது
கண்டயிதனை அறிந்து கொண்டு கபால சூலைக்குச்
செய் மருந்தே ....

சிற்றாமணக்கெண்ணை பசுவின் நெய்யும் சீறிய
அரத்தை சதகுப்பை கொத்தான கரந்தை யாதண்டை கூறு

மிலந்தையிண்டேன் வெ.... அத்தாயஞ் சீலை
நொச்சியிலை ஆனபசுமஞ்சள் இருனாழி தேத்தங்
கொட்டை, அதிமதுரம், சிறக்க கூட்டியரைத்து வார்த்தாய்.
வடித்துச் சிரசில் வார்க்க மாறுங் கபால சூலையுமே.

ஆனால் நீகேள் சந்திரி வாதம் அலகிலொரு புறம் வாங்கு நிற்கும். தேனுந்தேய் பிறைபோலெனவே சிறந்து இருக்கும் ஒரு புறமும் ஆனாலடிக்கு வாங்கி செவி இரண்டு புடைக்குமப் போ புனங்கொடி மாவிலங்கை பண்ணு மருந்து யிளமுஞ் சொல்லுவமே ....

124. சந்திரவாததுக்கு மந்தத்துக்கு மருந்து

சீறிய பாதரிய இஞ்சியுடன் தேன்கடை சிற்றாமுட்டியுடன்
ஊறிய கடுகு மிளகுடனே உகந்தவேர் பாலையரிசியுடன்
நாறிய வசம்பு, பெருங்காயம் நல்ல பூத விருட்சமுடன்
நெறியரைத்துக் கரைத்திதனை சிறந்த எண்ணெயில்
மூன்று நாள்சாறும் பொழுதினில் வடித்திறக்கித் தள்ளும்
தலைகள் நாடியுடன் அருமறிந்து நினைப் பீராய்
சந்திரவாதம் ஓடிடுமே.

125. அக்கினி மந்தத்துக்கு மருந்து

கையாந்தகரை வெள்ளறுகு நிலாவாரை, ஓமம், இது நாலுஞ் சமன் கூட்டி இடித்து வத்திரகாயம் பண்ணி காலையில் வெருகடிப்பிரமாணம் தின்னவும். இந்தப்படி இருபதுநாள் தின்னவும். இதற்குப் பத்தியம் கத்திரிப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, அரைக் கீரை, முளைக்கீரை இந்தப்படி தின்னவும். கை கண்டது.

சகல வாயு பிடிப்புக்குக் குடாதி லேகியம்

வெள்ளுள்ளி சேர் 2, கையாந்தகரைச்சாறு வேர் 1/2, குக்குலுபலம் 1, பசுவின் நெய் சேர் .., கருங்கோழி

ஒண்ணு 1, தேன் சேர் 2, எருக்கிலைச் சாறு சேர் 1/2, சீரகம் வராகனெடை 5, கொத்தமல்லி வராகனெடை 2, சாதிபத்திரி வராகனெடை 3, கிராம்பு வராகனெடை 3, குங்குமப்பூ வராகனெடை 2, மிளகு வராகனெடை 1, சன்னலவங்கப்பட்டை வராகனெடை 2, சிறுநாகப்பூ வராகனெடை 1, இதுவெல்லாம் வத்திரகாயம் பண்ணி வைத்துக்கொண்டு நெய்யைச் சட்டியில் விட்டுப் பச்சிலைச் சாற்றில் பாதிச்சாறு விட்டு நெய் சேர்விட்டுக் கோழியைப் போட்டுப் பொரித்து உரலில் போட்டு இடித்து மறுபடி நெய்யும் பச்சிலைச்சாறு விட்டு இடித்துக் கோழி போட்டு வறுத்து இடிக்க மறுபடி நெய்ச் சாறும்விட்டு கடை மருந்தும் கூடிப் போட்டு இடித்து கோழியும் போட்டு வறுத்து இடிக்கவும். இந்தப்படி திரவியம் போட்டு மூன்று தரம் வறுத்து இடிக்கவும். தேனும் கூடவிட்டு விட்டு வறுக்கவும். மருந்தை எடுத்து வைத்துக் கொண்டு அந்தி சந்திக் கழற்சிக்காய் பிரமாணம் தின்னவும். பத்தியம் இச்சா பத்தியம்.

127. மூலத்துக்கு நெய் கைகண்டது.

.........நத்தூர் அச்சன் சொல்படி கிராணிக்கு

நாயிராஞ்சிச்சாறு சேர் 1/2, ஈரவெங்காயச் சாறு சேர் 1/2, சீரகம் பலம் 2, சீனி சர்க்கரை சேர் 1/2, கருணைக் கிழங்கு சேர் 1 1/2, பசுவின் நெய் சேர் 1/2, இதுவெல்லாம் அரைத்து நெய்யில் போட்டும் பதமாய் எரித்து வைத்துக்கொண்டு காலையில் ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் தின்னவும்.

பத்தியம்: கசப்பு, புளிப்பு, கார்ப்பு பண்டம் தவிர்க்கவும். அட்ட மூலத்துக்கு கொடுக்க கைகண்டது.

கிராம்பு வராகனெடை 1, சாதிக்காய் 1, சீரகம் 1, மிளகு வராகனெடை 1, கச்சாயிலை ஆக அஞ்சு மருந்தும் பதமாய் வறுத்துக்கொண்டு அரைத்துப் பொடி பண்ணி அந்த மருந்தை மூன்றாய் பிரித்துக் கொண்டு தினம் ஒரு கோழிமுட்டையின் கரு நீக்கி வெள்ளைக் கருவில் பொரித்துத் தின்னவும். சிறிது மயக்கம் வரும். பத்தியம் எருமைத் தயிர் வார்த்து அசனம் பண்ணவும். நான்காம் நாள் மூழ்கி தலைகுளித்து ஏழுநாளைக்குப் பிறகு எல்லாக் கறியும் உண்ணலாம். கசப்பு, புளிப்பு தவிர்க்கவும். பலவிதக் கழிச்சல் நெடுநாள் இருப்பதற்குக் கொடுப்பது. கை கண்டது.

128. தாது விருத்திக்கு, மாந்தம் கணத்துக்கு ஆனந்தன் சொல்படி எண்ணெய்

நெல்லி முள்ளிச் சாறு பலம் 1/2, உளுந்துமாவு பலம் 1, எள்பலம் 1, சர்க்கரை பலம் 1, நெய் பலம் 1, தேன் பலம் 1, கடலைமாவு பலம்1, ஈர வெங்காயச் சாறு இது கூட்டித் தின்ன விருத்தி.

கருஞ்சீரகம் வராகனெடை 4, கடுக்காய் பலம் 5, பரங்கிப்பட்டை பலம் 1, இவை மூன்றும் அஞ்சனம் பண்ணிக் கொள்ளவும். விளக்கெண்ணெய் சேர் 8, கிரந்தினாகம் உரித்த தேங்காய்ப் பிரமாணம் எண்ணெயில் ஒக்கச் சேர்த்து ஒருநாள் வெய்யிலில் வைத்து மறுநாள் அடுப்பில் வைத்து மெழுகு பதத்தில் வடிக்கவும். இதுக்குப் போம்.

மாட்டுக்குக் குதிரைக்கு பூவுக்கு பீனிசத்துக்குத் தைலம் உள்ளுக்கு மருந்து கைகண்டது.

வியாதி வரள் கணம் முக்கு கணம் மாந்த கணம் இவைவெல்லாம் போம் காலையில் ஒரு துட்டிடை (காலணா அளவு) கொடுக்கக் கைகண்டது.

129. கண்ணுக்கு மருந்து

மிளகு வராகனெடை 1/2, சுக்கு, கோழிமுட்டை ஓடு வராகனெடை 3, இது வெல்லாம் பொடி செய்து கண்ணுக்கு அரைப்பணவிடை பொடி போடவும். கைகண்டது. மனிதருக்குத் தேறலப் பூவுக்குப் பொடி போடவும். கைகண்டது. அல்லா உதவி செய்யவும்.*

மருள்சாறு படி 1/4, பச்சை மஞ்சள் சாறுபடி 1/2, கொம்பரக்கு பலம் 1, மிளகு பலம் 1, கடுகு ரோகணி வராகனெடை 1, நல்லெண்ணை சேர் 3, இதுவெல்லாம் கூட்டி மெழுகு பதத்தில் எரித்து மூழ்கவும். பீனிசம் சுவாசம் இருமல் இவையெல்லாம் தீரும். இதற்கு உள்ளுக்கு மருந்து கூடத் தின்று வரவும். கடுக்காய் தான்றிக்காய், நெல்லிமுள்ளி, சுக்கு, திப்பிலி, மிளகு, தேவதாரம், சிற்றாமுட்டி வேர், அரத்தை, தூதுவளைவேர், பரங்கிப்பட்டை அரப்பொடிவகைக்கு பலம் 1, சாதிக்காய் பலம் 1/4, சாதிபத்திரி பலம் 1/4, தேன் சேர் 1/2, இதுவெல்லாம் இடித்து வத்திரகாயம் பண்ணித் தேன் கலந்து லேகியம் பண்ணி ஒரு தேற்றங்காய் சேங்கொட்டை பிரமாணம் தின்னவும். கசப்பு, புளிப்பு, தவிர்க்கவும். சிறு காஞ்சொரி வேர் போட்டுப் பால் கூட்டவும்.

130. விசபாக வீக்கத்துக்கு மருந்து சகல பீனிசத்துக்கு மருந்து கைகண்டது

சங்கம் வேர் வராகனெடை 2, அரைத்து உத்தாமணி இலைச் சாறு பலம் 1 1/2, குழப்பி அந்தி சந்தி இரண்டு வேளைக்கும் குடிக்கவும். இந்த பிரகாரம் மூன்றுநாள் ஆறுபொழுது குடிக்கவும். உப்பு இல்லாமல் பத்தியம் பண்ணவும். மறுபத்தியம் மூன்று நாள் உப்பு

*இச்செய்முறை இசுலாமியற் எழுதியதாக இருக்கலாம்.

வறுத்துக் கூட்டவும். துவரம் பருப்பு அரைக்கீரை, முருங்கக்காய் இதில் இந்த வறுத்த உப்பு வறுத்த மிளகு, இவைகூட்டித் தின்ன ஏழுநாள் ஆன பிறகு பத்தியம் விட்டு வரவும். சாதிலிங்கம், மிளகு வராகனெடை 1, மஞ்சள் வராகனெடை 1, சாதிக்காய் வராகனெடை 1, எருக்கம் கறி வராகனெடை 1, இவை எல்லாம் மாறகப் பொடி பண்ணி வத்திபோலத் திரிபண்ணி அந்தி சந்தி இரண்டு நேரமும் நெருப்பு பற்றவைத்துப் புகை வாங்கவும். மோர் கூட்டிக் கொள்ளவும். விளக்கெண்ணைத் தேய்த்து தலை முடிக்கவும். சிரரோகமெல்லாம் தீரும். கை கண்டது.

131. மேகத்துக்கு கை கண்டது

கருவேலிலை அரைத்த விழுது இரண்டு எலுமிச்சங்காய், சீரகம் அரைத்த விழுது, ஈரவெங்காயம், கருப்பட்டி இவையெல்லாம் இரண்டு எலுமிச்சங்காய், நல்லெண்ணை சேர்க்க. இவை எல்லாம் இளம் பக்குவமாய் எரித்து ஏழுநாள் தின்னவும். உப்பு வறுத்துக் கூட்டவும். மேகம், வயிற்றில் இரணம் கிரிச்சரம், கைகால் எரிச்சல், அத்தி சுரம், இவை வெல்லாம் தீரும். கைகண்டது.

வேறு

ஆவாரம் வேர் பலம் 1, இதைக் குறுக்கி ஆறுசேர் தண்ணீர் விட்டு இரண்டாகச் சிவக்க காய்ச்சி அதில் அரிசி 3 போட்டு சேர் 5, வெந்த பதத்தில் இரண்டு பலம் உள்ளி சருகு போக்கிப் பருப்பு போலே அரிந்து சோற்றில் போடவும். நல்லெண்ணெய் இரண்டு பலம் விடவும். சேர் 1/2, புழுங்கி பதமான போது தயிர் அரைப்படி கூட்டித் தின்னவும். இராத்திரிக்கு கத்திரி பிஞ்சு, முருங்கை பிஞ்சு, துவரம் பருப்பு இவை புளியில்லாமல் தின்னவும்.

மூன்றுநாள் காலையில் இந்தச் சோறு தின்னவும். கை கண்டது.

132. வாத மேகத்துக்கு கைகண்டது

முருங்கைப்பட்டை சேர் 1, மூன்றுசேர் தண்ணீர் விட்டுத் துவைத்து வடிக்கட்டிக் கொண்டு அந்தத் தண்ணீரில் படிவப்படி அரிசிப் போட்டு சேர் 5, நெத்துப்பதமாக வருகிறபோது வெள்ளுள்ளி பலம் 2, நல்லெண்ணை பலம் 2, கூடவிட்டு சேர் 5, தின்கிறபோது தயிர் அரைப் படி விட்டுச் சேர் 5, தின்னவும். இராத்திரிக்கு சேர் 5, தின்கற போது பத்தியம் கத்திரி பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, துவரம் பருப்பு, அரைக்கீரை, சிறு பயரு இது வெல்லாம் தின்னலாம். கை கண்டது. வாத மேகம் தீரும்.

133. மேகத்துக்கு மருந்து

வில்வப் பத்திரி இலைச்சாறு பலம் 1, மிளகு பலம் 1/2, சாதிக்காய் வராகனெடை 1, நல்லெண்ணெய் பலம் 2, இதுவெல்லாம் சேர்த்து, அரைத்துக் காலையில் குடிக்கவும். இருபத்தைந்து நாழிகைக்கு மேல் உடம்பு அனல் காணும். இராத்திரிக்கு தயிர் சோறு தின்னவும். இதன்படி மூன்றுநாள் தின்னவும். மறுபடி காலையில் சீரகம் வராகனெடை 1, தேற்றான் விழுது வராகனெடை 1, சர்க்கரை வராகனெடை 1, தயிர் பலம் 1, இவை வெல்லாம் கூட்டி ஏழுநாள் காலையில் தின்னவும்.

வேறு

கோவைத் தண்டுச் சாறுபடி 1/4, எருமைத் தயிர்படி 1/4, இது இரண்டும் கூட்டி மூன்றுநாள் குடிக்கவும். உப்பு இல்லாமல் தயிரும் சோறுந் தின்னவும். மறுபத்தியம் உப்பு வறுத்து கூட்டிக் கொள்ளவும். வேறு. ஆவாரம் பூ பலம் 1, எருமைத் தயிர் சேர் 1, இரண்டும் சேர்த்து

அரைத்துக் குழப்பித் தின்னவும். மூன்று நாள் உப்பில்லாமல் தின்ன மறுபடி கூட்டவும். தயிரும் சோறும் தின்னவும்.

134. நாள்பட்ட மேகத்துக்கு

நெல்லிமுள்ளி படி 1, ஆவாரம் சமூலம் பச்சை .... மஞ்சள் பொடி படி 1/4. ஆவாரையை இடித்து அம்மியில் அரைத்து பசுவின் மோர் வார்த்து .... விழுது சேர்த்து முள்ளி விரைபோக இடித்து வத்திர காயம் பண்ணி மூணுபொடியும் மோர் வார்த்து அரைத்து ஒருசட்டியில் மோர் வார்த்து மருந்தைக் குழப்பி அடுப்பில் வைத்துக் கெட்டிபதமாயிரக்கிக் கொள்ளவும். தேன் சேர் 1 1/2, நாட்டுச் சக்கரை சேர் 11/2, இவை கூடச் சேர்த்து வெருகடி பிரமாணம் இரண்டு வேளையும் தின்னவும். புளித் தவிர்க்கவும். புளியாத பசுவின் மோர் வார்த்து சாப்பிடவும். இராத்திரி பால் கூட்டவும். கைகண்டது.

135. மேகத்துக்கு மருந்து பீனிசத்துக்கு நசியம்

சீரகம் வெட்டிவேர் விலாம்பிச்சம் வேர், கோட்டம், நிலப்பனைக்கிழங்கு, ஏலம், இலவங்கபத்திரி, நெல்லி முள்ளி அற்றங்கம், கற்பூரம், குங்குமப் பூ, சந்தனத்தூள், சிறுநாகப்பு, முந்திரிப்பழம், தாமரை வளையம், அதிமதுரம், அகில், சந்தனம், கொத்தமல்லி விரை, ஆவாரம்விரை, சுக்கு மரமஞ்சள், தேற்றாம் விரை சிறுசத்து, சீந்தில் சர்க்கரை, கருவேலம் பிஞ்சு இவை யெல்லாம் வகைக்கு வராகனெடை 2 கூட்டி இடித்து வத்திரகாயம் பண்ணி கொண்டு அந்திசந்தி வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். இதன்படி நாற்பதுநாள் கொள்ளவும். கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும். கைகண்டது

---

*அற-முழுவதும், அங்கம்-கொன்றை. கடுகரோகணி, இருவாட்சி, மல்லிகை

வேறு

பூவரசங்காய்க்கு .... விரை தோல் போக்கி உள்பருப்பு எடுத்துக்கொண்டு மூன்று பணவிடை நிறுத்து கிராம்பு ஒரு பணவிடை நிறுத்து, இரண்டையும் சேர்த்து அரைத்து இரண்டு மூக்கிலும் வாங்கிடவும். இதன்படி மூன்றுநாள் வாங்கிடவும். நாள் ஒன்றுக்கு இந்த நிறைப்படி மூன்று நான்கும் சேர்க்கவும். பத்தியம் கத்திரிப் பிஞ்சு முருங்கைப் பிஞ்சு, துவரம்பருப்பு, வெள்ளாட்டுக் கறியின் உப்புக்கண்டம், அரைக்கீரை, முளைக்கீரை இவை கூட்டவும்.

வேறு

136. மூலக்கடுப்புக்கு புகை

இலுப்பைப் புண்ணாக்கு, மஞ்சள், கழற்சிப் பருப்பு, காட்டுச்சீரகம் மாட்டுக்கொம்புத் தூள், கோழிக் காரம், ஆனைக்கொம்புத் தூள், கருங்குங்குலியம் வகைக்கு பலம் 1/4, இவையெல்லம் சேர்த்தரைத்து ஏழுநாள், அந்தி சந்தி புகைப் போடவும். மூலக்கடுப்பு நிற்கும். கைகண்டது.

வேறு

நல்லெண்ணெய் பலம் 2, பழைய ஈர வெங்காயச் சாறு பலம் 2, இவை இரண்டும் சேர்த்து காலையில் குடிக்க உப்பில்லாமல் தயிர்ச் சோறு தின்ன இதன்படி மூன்று நாள் உட்கொள்ளவும். மேகம் நிற்கும். கை கண்டது.

137. சுவாசத்துக்கு மருந்து

மகிழம் விரை, புன்னை விரை, ஏரி ஆலம் விரை, பேய்பீர்க்கம் விரை, பேய்க்கும்மட்டி விரை, கந்தகம், நேர்வாளம் இவையெல்லாம் வகைக்கு வராகனெடை 2, கூட்டி மூன்று நாள் ஆறுபொழுது மூலத்துக்குப் புகையிடவும்.

வேறு

உப்பு பலம் 2, உதியம்பட்டைச் சாறு விட்டரைத்து நான்கு வில்லை, பண்ணி பத்து வரட்டியில் புடம்போடவும். அதை அரைத்து வைத்துக்கொண்டு சுவாச ரோகம் அக்கினி மந்தம் வாய்வுக்கு ஒரு பணவிடை பற்பம், அனுபானம் சுக்கு, திப்பிலி, சீரகம் வகைக்கு ஒரு பணவிடை சேர்த்து தேனில் அனுபானம் பண்ணி காலையில் நாற்பதுநாள் தின்ன இச்சாபத்தியமாய், கை கண்டது.

வேறு

இந்துப்பு வராகனெடை 1/2, ரசம் வராகனெடை 2, எருக்கம் பால் வராகனெடை 4, இவை வார்த்து அரைத்து வில்லை பண்ணி அதன் கீழே நான்கு எருக்கிலை மேலே நான்கு எருக்கிலை நடுவில் மருந்து வில்லை வைத்து பத்து வரட்டியில் புடம் போடவும். சகல ரோகத்துக்கும் கால்பணவிடை ஒரு வேளைக்குக் கொடுக்கவும் தேனில் கைகண்டது. இருபதுநாள் கொடுக்க மேனி விரவும்.

வேறு

ஒருசட்டியில் இரண்டுபடி உப்பைப் போட்டு ஒரு வராகனெடைக்கு உள்ளே பத்து முட்டை[1] வச்சு முட்டை

---

1. முட்டை–எருமுட்டை, வராட்டி.

மேல் இரண்டு விரல்கடை உப்பு போட்டு மூடி வெய்யிலில் பத்துநாள் வைக்கவும். மறுபடி முட்டையெடுத்து அப்பாம வைத்து கொல்ல கோவையிலை சமூலமும் துவைத்து இரண்டு படிசாறு அந்த உப்பு இடித்து அந்தச்சட்டியில் வைத்து முன்முட்டை வைத்து மேல்இரண்டு விரல் உப்புயிருக்கிறார் போலே அடுப்பில் வைத்து எரிக்க ஒரு சாமம் அந்த முட்டையை எடுத்து தினம் அந்தி சந்தி பாதி முட்டை தின்னவும். அந்த உப்பு சேர்த்து கறிக்குக் கூட்டவும். இதில் வாதம் அயசேத்துமம், தொண்ணூற்றாறும் பித்தம், நாற்பதும் அக்கினி மந்தம் இவையெல்லாம் தீரும்.

வேறு

138. சகல ரோகத்துக்கும் கந்தகம் குளிக்குளித்த பேர்களுக்கு உதிரிக்காயம்

நெல்லிக்காய், கந்தகம், ஒருகட்டியாய் பலம் 1, அவுரியிலையை அரைத்து இரண்டுவிரல் கருமைக்குக் கவசங் கட்டி, அகலமானகுண்டு சட்டியில் உமியைப் போட்டு மேலே கரிபோட்டு நெருப்பு உண்டு பண்ணி அந்த நெருப்பில் இந்தக் கவசம் வாட்டவும். கவசத்தில் நெருப்பு அதிகமாய் அந்தச் சட்டியில் குறுக்கே கயிற்றில் கோடு போட்டுவச்சு கவசத்தில் சூடு அதிகமானால் அதை வைத்துப் பத்துக் குறட்டில் வைக்கவும். அதன்படி கவசமெல்லாம் வெந்துக் கருகினால் அந்தக் கந்தகம் சகல ரோகத்துக்கும் அட்ட குன்மத்துக்கும், மேகம் இருபதுக்கும், கிராணி இருபதுக்கும், சேத்துமம் தொண்ணூற்றாருக்கும், சுரம், ஒழுக்கும், சகல வாயுக்கும் அனுபானம் பார்த்து வைக்கவும். கைகண்டது.

139. வேறு

கிராம்பு பலம் 2, சாதிக்காய் பலம் 2, சாதிப்பத்திரி பலம் 1/2, குங்குமப்பூ பலம் 1/2, கோரோசனை பலம் 1/4, கோட்டம் பலம் 1, சிறுதேக்கு பலம் 1, சிற்றரத்தை பலம் 1, அக்கிரகாரம் பலம் 1, நறுக்கு மூலம் பலம் 1, சுக்கு பலம் 1, திப்பிலி பலம் 1/2, மிளகு பலம் 1/2, வலம்புரிக்காய் பலம் 1/2, கிரந்தித் தகரம் பலம் 1, தேசாவரம் சீரகம் பலம் 1, ஓமம் பலம் மரமஞ்சள் பலம் 1,சன்ன இலவங்கப்பட்டை 1, நாய்க் கடுகு பலம் 1/2, வாலுளுவை அரிசிபலம் 1/2, குரோசாணி ஓமம் பலம் 1/2, சதகுப்பை பலம் 1/2, பேரீச்சங்காய் பலம் 2, தான்றிக்காய் பலம் 2, இலவம் பிசின் பலம் 2, விளாம்பிசின் பலம் 2, வெள்ளை வெங்காயம் சேர் 3, கருவேலம் பிசின் பால் சேர் 3, புட்டி வெல்லம் 40, பசுவின் நெய் சேர் 2, பசுவின் பால் சேர் 3, இவையெல்லாம் கூட்டி லேகியம் பண்ணி வைத்துக் கொண்டு காலையில் ஒரு கொட்டைப்பாக்கு அளவு தின்னவும். சகல உதரவாயுவு யெல்லாம் தீரும். இடுப்புக்குப் பலம் கொடுக்கும். சரீரம் புட்டிக் கொடுக்கும். கை கண்டது.

140. மேகவாய்வுக்கு மருந்து கசாயம்

பரங்கிப்பட்டை சேர் 1/2, ஒட்டுதிப்பிலி மூலம் பலம் 2, சிறுதேக்கு பலம் 1, சிற்றரத்தை பலம் 1, அமுக்கரா வேர் பலம் 2, சித்திரமூலம் பலம் 1, அதிமதுரம் பலம் 1/2, சுக்கு பலம் 2, திப்பிலி பலம் 2, கோட்டம் பலம் 1, செவ்வியம் பலம் 2, கொத்தமல்லி பலம் 1, தேசாவரம் சீரகம் பலம் 1, ஓமம் பலம் 2, வாய்விளங்கம் பலம் 1, நிலவாரை பலம் 1, கண்டதிப்பிலி பலம் 1, கண்டங்கத்திரி வேர் பலம் 1, முட்காவேளைவேர் பலம் 1, வாலுளுவை அரிசிப் பலம் 1/2, சங்கம் வேர் பலம் 2, ஆக

கபநோய் 20 என்பது பொதுவான மருத்துவ வழக்கு

இவையெல்லாம் கூட்டி இடித்துத் தூள்பண்ணி நாள் ஒன்றுக்கு ஒரு பலம் தூள் போட்டு கசாயம் குடிக்கவும்.

பத்தியம்: புளி தவிர்க்கவும். மேக சூலை, மேக வாய்வு, அக்கினி மந்தம், சுரம் இவை தீரும். கை கண்டது.

வேறு

பொன்னாங்காணி வேர், சிறுகீரை வேர், முசுமுசுக்கை இலை, கையாந்தகரை, பொடுதலை, வில்வபத்திரி இலை, தாழம் விழுது, சீந்தில்கொடி, ஆதண்டம் இலை, வெண்நொச்சி இலை, கற்றாழை மடல், வெதுப்படக்கி இலை, நரிப் பயத்தங்கொடி, தண்ணீர்விட்டான் கிழங்கு, கோரைக் கிழங்கு, வரப்புலா இலை, செங்கழுநீர்க்கிழங்கு, நெய்தல் கிழங்கு, இளநீர் வகைக்கு சேர்க்க. நார்த்தம் பழச்சாறு சேர் 1. எலுமிச்சம் பழச்சாறு சேர் 1. நல்லெண்ணை சேர் 15, தைலம் கடுகு திரளும் பக்குவத்தில் கசாய வகை ஆயில்பட்டை, கொத்தமல்லி விரை, விலாம்மிச்சை வேர், நன்னாரிவேர், காளி தேவதாரம், பெரு இலவங்கப்பட்டை, மஞ்சட்டி, பச்சோந்திப் பட்டை, வேம்பாடம் பட்டை, தேவதாரக் கட்டை வகைக்கு சேர் 1/2, தண்ணீர் சேர் 40, விட்டு அஞ்சு சேராகக் காய்ச்சி எண்ணெயில் விட்டுக் கடுகி திரண்டு சாணிப்பதமாக வருகிற வேளையில் கற்கத் திரவியம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, கடுகு, ரோகணி, கத்தூரி மஞ்சள், அதிமதுரம், கோட்டம், சிற்றரத்தை, மிளகு, தாளிசபத்திரி, அக்கிரக்காரம், சதகுப்பை, கருஞ்சீரகம், சுக்கு, கோரோசனை, குங்குப்பூ, ஏலம், கிராம்பு, புரணி, வாலுளுவை அரிசி, புனுகுசவ்வாது சட்டம் இவை யெல்லாம் வகைக்கு 21, தைலம்மெழுகு பதத்தில் இந்த கற்கத் திரவியம் இளவறுப்பாக வறுத்துப் பொடி பண்ணி தைலம் இருக்கிறபோது கலயத்தில் கற்கம் போட்டு

எடுக்கவும், இந்தத் தைலம் எட்டு நாளைக்கு ஒரு தரம் தலை முழுகவும். நேத்திர ரோகம் தொண்ணூற்றாருக்கு நல்லது. சரீரரோகம் எனப்படும் வியாதிக்கெல்லாம் நல்லது. பித்தம் நாற்பதுக்கும் நல்லது. வாதம் எண்பதுக்கும் நல்லது.

இந்த எண்ணெய் நயனசஞ்சீவி எண்ணெயாகும், கைகண்டது.

141. சீதள சிலேட்டும கபத்துக்கு மருந்து வாயுக்கு உருக்கு உப்பு

கோதுமை, அரிசி சேர் 1/4, இரண்டும் ஒரு கல்வத்தில் போட்டு வாயோடு கொண்டு மூடி வாய்க்கு மண் பூசி நாற்பது வரட்டியில் புடம் போட சாம்பலாகும். அந்த சாம்பலை எடுத்து வைத்துக் கொண்டு சிலேட்டும கபம் தொண்டையில் பிரியாமலிருந்தால் திப்பிலி வராகனெடை 1/4, கிராம்பு, பணவிடை 1, இந்த அனுபானத்துடன் வராகனெடை 1/4, பற்பம் சேர்த்து தேனில் மத்தித்துத் தின்னவும்.

பத்தியம்: கத்திரிப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, துவரம் பருப்பு, முளைக்கீரை, வெள்ளாட்டு உப்புக் கண்டம், குருவைக் கருவாடு, விரால் கருவாடு, கெளுத்திக் கச்சல், ஓலைவாளைக் கருவாடு இவையாம்.

வேறு

கல்லுப்பு பலம் 2, எலிச்செவி ஆமணக்குச் சாறு வார்த்தரைத்து வில்லைபண்ணி, குகையில் வைத்து, உருக்க உருகும். அதை எடுத்து கபரோகிக்குத் திப்பிலி, சிற்றரத்தை, சீரகம், தேன் இந்த அனுபானத்தில் பற்பம் வராகனெடை 1/4 சேர்த்துத் தின்னவும். புளிப்பு

வறளி – எரு

தவிர்க்கவும். பசும் மோர் கத்திரிப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, முளைக்கீரை, சிறுகீரை, பலவங்கீரை, துவரம் பருப்பு, முள்ளிக் காய் கூட்டவும்.

வேறு

142. பச்சைக் கற்பூரக்கட்டு

பச்சைக் கொட்டை பாக்கு மேல் தோல் காற்றில் மூன்றுநாள் கைப்புத் தீர ஊறப்போட்டு எடுத்துக் கொடிக் கள்ளிச் சாற்றில் மூன்றுநாள் ஊறப்போட்டு எடுத்து நெருப்பில் வைத்தால் புகையாது. அதை எடுத்து விக்கல், வாந்தி, அரோசகம், நீர்ச்சூலை, அக்கினி மந்தம், சிரமயக்கம், கல்நீர் கட்டு, இப்படி வியாதிகளுக்குக் கசாயத் தவிர்க்கவும். நெல்லிமுள்ளி சேர் 1/2, சீரகம் பலம் 1, கீழநெல்லிவேர் சேர் 1/2, சிற்றாமுட்டி சேர் 1/2, சீந்தில் கொடி சேர் 1/4, கோவைத் தண்டு சேர் 1/4, நன்னாரிவேர் சேர் 1/4, முசுமுசுக்கை வேர் சேர் 1/4, ஏலம் வராகனெடை 2, கொத்தமல்லி வராகனெடை 2, இவைவெல்லாம் கூட்டிப் பதிநாலு நாட்களுக்கு கசாயம் குடிக்கவும்.

143. மஞ்சட்காமாலைக்கு கசாயம் கைகண்டது நசியம் சூரணம்

பச்சைப்பயறு கறிகூட்டி பச்சரிசிச் சோறு தின்னவும். பசும் பால் கூட்டவும். நசியம் பேய்ப்பீர்க்கம் விரை, புளப்பருப்பு, பணவிடை 1, முலைப்பாலில் உரைத்து மூக்குக்கு மூன்று மூன்று துளி வராகனெடை 1, கபாலத்தில் உள்ள பித்தம் மஞ்ச தண்ணீர் விழும். மறுபடி கசாயம் குடித்து வரவும். கை கண்டது.

வேறு

முந்திரி பழம், பேரீச்சம்பழம், அதிமதுரம், நெல்ப்பொரி, நெய்தல்க் கிழங்கு, முத்தக்காசு, கொத்தமல்லி, ஏலம், கிராம்பு, இலவங்கப்பட்டை, திப்பிலி, கிரந்தித்தகரம் கூகைநீர், சந்தனம், தக்கோலம், இலவங்கப்பத்திரி, சாதிக்காய், சாதிபத்திரி வகைக்கு பலம் 1/4, நாட்டுச் சர்க்கரையைச் சேர்த்துச் சூரணம் பண்ணி தின்னவும். பித்தத்தின் மேல் வந்த ரோகம் எல்லாம் தீரும். பிரமபத்திரியிலை அரைத்துக் கொட்டைப் பாக்களவு வெள்ளாட்டு பால் சேர், இது இரண்டும் குழப்பி காலையில் குடிக்கவும். வாந்தி எடுக்கும் எடுத்ததின் பிறகு சாப்பிடவும். பத்தியம் தூதுவளங்காய், முள்ளிக் கத்திரிக் காய், முருங்கைக்காய், முளைக்கீரை, அரைக்கீரை தூதுவளை கீரை இவை கூட்டவும். புளி தவிர்க்கவும்.

வேறு

144. தொண்டையில் சேத்துமகாயத்துக்கு வாந்திக்கு, அரோசிக வாயுக்கு மருந்து

இலுப்பைப் புண்ணாக்கு பலம் 1, மூன்று சேர் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி முக்கால் சேர் ஆன பிறகு மேல் தெளிவு தண்ணீர் இறுத்துக் கால் சேர் வாங்கிக் கொண்டு பாதி எலுமிச்சம் பழச்சாறு விட்டு கொடுக்கவும். வாந்தியாகும். ஆனதின் பிறகு பச்சரிசிக் கஞ்சி காய்ச்சி கொஞ்சங் கொஞ்சமாய் கூட்டி குடிக்கவும். வயிறு நிரம்ப குடிக்கவும். பத்தியம் புளி தவிர்க்கவும்.

வேறு

தேற்றாம் பழம் வராகனெடை 1, சீனாக்காரம் வராகனெடை 1/4, வைத்து இரண்டையும் கூட்டி அரைத்து

வெந்நீரில் சோறுவிட்டுக் குழப்பிக் குடிக்கவும். வாந்தியெடுக்கும் இரண்டு சாமம் ஆன பிறகு கஞ்சி குடிக்கவும். கப அரோசிகத்துக்குக் கைகண்டது.

145. மாரில் கபம் விசவாந்தி அதிக வாந்திக்கு நற்க மாற்று தீராத மேகத்தின் ரணத்துக்கு

துருசு பணவிடை , கொட்டப்பாக்குச் சீவி கொடுத்து இரண்டு வெற்றிலைக்குச் சுண்ணாம்பு தடவி தின்னச் சொல்லி இரண்டு தரம் உமிஞ்சு பொடி ஒரு வெற்றிலையில் இந்த மருந்து வைத்துத் தின்னக் கொடுக்கவும். தின்னுகிற போது பலம் போக்கி எச்சில் முழுங்கவும். முகத்தில் வேர்வை கண்டு வாந்தியாகும். அதிகம் வாந்தி கண்டால் சீரகம் கருக்கி, ஒருசேர் தண்ணீர் விட்டு கால் சேராகக்காய்ச்சிக் கொடுக்கவும். புழுங்கலரிசி குறுணி பச்சைப் பயறும் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். கபம் விழக் கைகண்டது. சீரகம் கொத்துமல்லி, இலவங்கப்பட்டை, நெல்லிமுள்ளி, ஏலம் இதை வறுத்துக் கொண்டு பொடிபண்ணி நெல் பொரி, சர்க்கரை, தேன் சேர்த்து கொடுக்கவும். வாந்தி நிற்கும். கைகண்டது.

வேறு

உப்பு பலம் 1, ஒருசாமம் அரைத்து ஒரு பலம் 1, வெண்ணெயில் மத்தித்து வெய்யிலில் நான்குநாள் வைத்து அதை எடுத்து பரணியில் வச்சு ரணத்தில் மேல் போடவும். ரணம் எப்படி கெத்தான மாயிருந்தாலும் இந்தக் களிம்பில் தீரும். கைகண்டது.

வேறு

146. மதுமேகரசாயனம் மேகத்து மேல் வறட்சிக்கு

பரங்கிப்பட்டை பலம் 2, அமுக்கரா வேர் பலம் 2, சுக்கு திப்பிலி, மிளகு, வாய்விளங்கம், கிராம்பு, சாதிக்காய்,

சாதிப்பத்திரி, ஏலம், சீரகம், கருஞ்சீரகம், அதிமதுரம், கோட்டம், நன்னாரிவேர், சங்கம் வேர், செங்கதாரிப் பட்டை, கொத்தமல்லிவிரை, ஓமம், கசகசா, கோரைக் கிழங்கு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லி முள்ளி, நீர்முள்ளி விரை, சன்ன லவங்கப்பட்டை, குரோசானி ஓமம், சிறுநாகப்பு நறுக்கு மூலம், திப்பிலி மூலம், தாளிசபத்திரி, சடாமஞ்சில், வெள்ளறுகு, நிலப்பனைக் கிழங்கு, முந்திரிப் பழம், பேரீச்சம்பழம் வகைக்கு வராகனெடை 2, தேன் சேர் 1/4, நாட்டுச்சர்க்கரை சேர் 1/2, இதுவெல்லாம் கூட்டி ரசாயனம் பண்ணி வைத்துக் கொண்டு அந்தி காலையில் இரண்டு வேளைக்கும் இரண்டு கொட்டைப்பாக்களவு தின்னவும். பத்தியம்: பால், ராத்திரிக்கு மோர், காலையில் கத்திரி, முருங்கை, புடல், அவரை, பச்சைப் பயறு, துவரம் பருப்பு, முளைக்கீரை, வெள்ளாட்டுக் கறி, உப்புக் கண்டம், குரவை விரால் கெளுத்தி, பச்சையாம் காய்ந்ததும் ஆகும். புளியுமாம் புகையிலையாகாது.

வேறு

147. சகலவியாதிக்கும் உருக்கு உப்பு சிலேட்டுமத்துக்கும்

எரி ஆலம் பால்துவைத்து வாங்கினது பலம் 2, கல்உப்பு பலம் 2, இது இரண்டும் சேர்த்து ஒருசாமம் அரைத்து எடுத்துக் குகையில் வைத்து உருக்க உருகும். அதை எடுத்து மறுதரம் அதுக்குக் கவசங்கட்டுக்கு வகை வீசம் பணவிடை 3, பச்சைகற்பூரம் பணவிடை 1, இரண்டு அரைத்துக் கட்டு மேல்தடவ .... இதன் மேல் நவச்சாரம் வராகனெடை 5, வெங்காரம் வராகனெடை 2 1/2 , இது இரண்டும் அரைத்து அதன் மேல் கவசம் கொடுக்கவும். இதன் மேல் சவட்டு மண்ணை முட்டையின் வென் கருவினால் சேர்த்தரைத்து சீலையில் தடவி இந்தக் கட்டியின் மேல் கவசங் கொடுத்து இருபந்தைந்து

வரட்டியில் புடம் போடவும். உப்பு சுண்ணமாம் அந்தச் சுண்ணத்தை எடுத்து வைத்துக்கொண்டு ரசம் வராகனெடை 2, உப்பு சுண்ணம் வராகனெடை 1/4, இவை இரண்டும் எருக்கம் பால் விட்டரைத்து வில்லை பண்ணி ஐந்து வரட்டியில் புடம் போடவும். ரச சுண்ணமாம் அந்தச் சுண்ணமாம் அமுரியில் குழைத்து அரிதாரத்தின் மேல் தடவி அப்பிரகக் கவசங்கொடுத்து புடம் போட அரிதாரச் சுண்ணமாம். இந்தப் பற்பகங்கள் கட்டிகள், சுரங்கள், சூலைகள், வாயுகள், வாதங்கள், சன்னிகள், அக்கினி மந்தங்கள், கிரந்திகள் முதலான வியாதிகளுக்கு அனுபானம் பார்த்துக் கொடுக்கவும். புகையிலை, புளிப்பு ஆகாது. தவிர்க்கவும்.

வேறு

148. கனத்தின் மேல் பேதி சுரம் இருமல் இதற்கு

நாவல் நறு விழிவிடத் தரை இலந்தை கருவேல் காரை, ஆத்தி அத்தி, மாதுளை, மாவிலை, வறட்பூலா, நீர்ப்பூலா, ஆனைஆவாரை, பொன்னாவாரை, நத்தைச் சூரி, நாயிறாஞ்சி, கிரந்தைனாயகன், தவசி முருங்கை, கரைவட்ட, கிலுகிலுப்பை வெதுப்படிக்கி, துளசி தூதுவளை, செம்முள்ளிக் கோழியவரை, மணத்தக்காளி, வெள்ளைப் பூண்டு, அவுரி, உத்தாமணி, காக்கரட்டான், முசுமுசுக்கை, கையாந்தகரை, சிறுகீரை, நொச்சி நார்த்தை, எலுமிச்சை, வேப்பங்கொழுந்து, நுணா, வில்வம், பொடுதலை, சீந்தல், ஆடாதோடை, பொன்னாங்காணி, முள்ளி, கத்திரி, நெரிஞ்சில், கோவை, துத்தி, வேளை, பேய்முருட்டி, இவையெல்லாம் வகைக்கு ஒரு கொட்டைப்பாக்களவு, கொழுந்துகொண்டு வந்து முலைப்பாலிலாவது, வெள்ளாட்டுப் பாலிலாவது விட்டு அரைத்து, பசு நெய்யில் போட்டுச் சூரியபுடம் ஒருநாள் வைக்கவும். மறுநாள்

அடுப்பில் தீபாக்கினியாய் எரிக்கவும். கடுகு திரண்டு மெழுகுபோல் வரும்போது கடைத்திரவியம் -தான்றிக்காய், நெல்லிமுள்ளி, சீரகம், கோட்டம், கற்கடகசிங்கி, அதிமதுரம், முத்தக்காசு, சன்னலவங்கப்பட்டை, அமுக்கரா வேர், சந்தனம், தாமரை வளையம், சுக்கு, திப்பிலி, மிளகு, கொத்தமல்லி, கருஞ்சீரகம், தாளிசபத்திரி, போத்தக்காய் (கசகசா), காட்டாத்திப்பூ, வெட்பாலை, அரிசி, பொன்முசுட்டை வேர், நாய்க்கடுகு, குரோசானி ஓமம், பரங்கிப்பட்டை, நறுக்குமூலம், கோரோசனை, சடாமாஞ்சில், சரள, தேவதாரம், இவையெல்லாம் வகைக்கு வராகனெடை 1, கூட்டி வத்திரகாயம் பண்ணி முன்மருந்தில் சேர்த்துக் கொண்டு இளம்பதமாய் எரித்து எடுத்து வைத்து காலையில் ஒருகொட்டைப்பாக்களவு அந்திக்கு சிறுகழற்சிக்காய் அளவு ஒருமண்டலம் தின்னவும். இதில் தீரும் வியாதி ..... கிராணி, வால் சுரம், வால்ப்பாண்டு, அத்தி சுரம், கண்சுரம், கண்தாகம், இரத்தசோகை, செரியாமல் கழிதல், சுவாசபேதி, மூலக்கிராணி, வரள்மேக பேதி இவை தீரும். இதற்குப் பத்தியம் கத்திரி, முருங்கை, அவரை, புடல், துவரம் பருப்பு, பச்சைப்பயறு, முளைக்கீரை, அரைக்கீரை, மோர், நெய், உப்புக்கண்டம், குரவை, விரால், கேளிர்ஓலை, வாழை, பலாச்சுளை, மாம்பழத்தோல், இவை எல்லாம் பத்தியத்துக்கு ஆகும்.

வேறு

149. மகாகிராணி கண்டம் - திரை

நாவல் பட்டை, நறுவளிப்பட்டை, நெல்லிப் பட்டை, இலந்தைப்பட்டை, மாம்பட்டை, காரைப்பட்டை, விரத்திரம்பட்டை, வரட்பூலாய்பட்டை, ராயம்பட்டை, அத்திப்பட்டை, மாதுளம் பட்டை, கல்லிச்சிப்பட்டை,

---

வால் – மிகுதி

ஆலம்பட்டை, ஆவாரம்பட்டை. வெள்வேலம் பட்டை, பெருமாப்பட்டை, குடசப்பாலை, பொன்முசுட்டை வேர், நாயுருவி வேர், சீந்தில்வேர் வகைக்குப் பலம் 1, ஆக சேர் உழக்குத் தண்ணீர் சேர் 20, இந்த தண்ணீர் கமலாக்கினி இரண்டரைச் சேர்காய்ச்சி வடிகட்டி, வைத்துக்கொண்டு கடத்தி ஓவியம், சன்னலவங்கம் பட்டை, பெருஇலவங்கப்பட்டை, காட்டாத்திப் பூ, சிறுநாகப் பூ, குரோசாணி ஓமம், நாய்க் கடுகு, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, அதிவிடையம், வில்வம் பிஞ்சு, மாதுளம் பிஞ்சு, போத்தக்காய், வெட்பாலை அரிசி, அஞ்சி கஞ்சா, வில்வம் பிசின், விளாம் பிசின், கருவேலம் பிசின், சீரகம், வெந்தயம், சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், சிறு அபின், காட்டாத்திப்பூ, கருஞ்சீரகம், தான்றிக்காய், கற்கடகசிங்கி, கோட்டம், இந்துப்பு, கண்டத்திப்பிலி, சிறுதேக்கு, சடாமாஞ்சில், பொன்முசுட்டை வேர், சதகுப்பை இவைவெல்லாம் வகைக்கு வராகனெடை 1, லோகபற்பம் வராகனெடை 2, இளம் பதமாய் வறுத்துக்கொண்டு முன் கசாயம் வார்த்து இரண்டு சாமம் அரைக்கவும். மருந்து எல்லாம் ஊமத்தையிலை, கவசங்கொடுத்து ஐந்து வரளியில் புடம் போட்டு மருந்து தீயால் வாட்டி எடுத்துக் கொண்டு தேன் பலம் 1, கூடப் போட்டுப் பிசைந்து கொண்டு கழற்சிக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி எடுத்த வைத்துக் கொண்டு வேளைக்கு ஒரு உருண்டை கசாயம், அனுபானத்தில் கொடுக்கவும். பத்தியம் வாழைக் கச்சல், ... பிஞ்சுக் காரைக் கீரை சுண்டைவற்றல், தூது வளம் வற்றல், மணத்தக்காளி வற்றல், வெள்ளாட்டு உப்புக் கண்டம், முயல் உப்புக்கண்டம், விரால் குரவை குடிக்கெளிர், ஓலைவாழை, குளத்துக் கச்சக்கருவாடு, மோர் தயிர் இவை பத்தியமாகும்.

வேறு

150. ஆந்திரவாயு விரை வாதத்துக்கு மருந்து

அப்பைக்கிழங்கு பலம் 1/2, நரளைக் கிழங்கு பலம் 1/2, கொண்ட சின்னிக் கிழங்கு பலம் 1/2, சீந்தில் கிழங்கு பலம் 1/2, அவுரிஇலைச் சாறு பலம் 1, விளக்கெண்ணெய் சேர் 1, இவையெல்லாம் சேர்த்து சூரிய புடமாக வைத்து, செவ்வாய்க் கிழமை, ஞாயிற்றுக் கிழமையில் எண்ணெய் வாங்குகிறது; மதியம் திரிபலைத் தூள் வராகனெடை 3/4, பசு கோமியத்தின் பலம் 1/2, சேர்த்துக் குடிக்கவும். இதன்படி நாற்பது நாள் கொள்ளவும். கசப்பு புளிப்பு தவிர்க்கவும். மேலுக்கு வேப்பெண்ணெய் சேர் 1/2, சீரகம் வராகனெடை 2, இந்துப்பு வராகனெடை 2, பெருங்காயம் வராகனெடை 1, இவை மூன்றையும் கூட்டி எரித்து வைத்துக் கொண்டு பீசத்து மேல் தடவி தாழச் சீலை கட்டி எண்ணை நைய்ப்பாய் இருக்கவும். இரண்டு சந்தகத் தீரும்.

வேறு

151. சுழிமாந்தத்துக்குக் கசாயம்.. சகலரோக வாயுக்குச் சூரணம்

கரிய போளம் வராகனெடை 2, சதகுப்பை வராகனெடை 1/2, கருஞ்சீரகம் வராகனெடை 1/2, மூன்று நாளைக்கு ஒரு சேர் தண்ணீர் விட்டு அரைப்பலம் தண்ணீர் இரவில் கொடுக்கவும். இதற்குத் தீரும் வியாதி சுழிமாந்தம், கபம், கணம், சுழிகணம் தீரும்.

பத்தியம்: இச்சா பத்தியம். கத்தரிப் பிஞ்சு முருங்கைப் பிஞ்சு, துவரம் பருப்புத் தண்ணீர், விரால் கருவாடு, ஓலை வாழைக் கருவாடு, சுட்டுக் கூட்டவும். கசப்பு புளிப்பு தவிர்க்கவும்.

வேறு

தேற்றாம் பழக் கோது கொண்டுவந்து ஆகப் பொடிபண்ணி, ஒருகுடுக்கையில் அடைத்து வைத்துக் கொண்டு சகல விசக்கடிக்கும் மூக்கில் ஒரு பணவிடைத் தூள் கொடுக்கவும்.சகல விசமும் தீரும். சல தோசத்துக்கு மூக்கில் கொடுக்கவும். முறியும் கபம் கோழைக்குக் கொடுக்கவும். சுரத்துக்கு கொடுக்கவும். கை கண்டது. ....

சீரானகாசி சிதம்பரத்திலே
பேரான நெஞ்சமே பேசக் கேள் ஆராய்ந்து
உன்னை உணர்ந் தட்டி உலகத்திலே
ஓரானஉலர்த் தன்னை விரித்தறிவாய்த்தான் பாட
பின்னே வஞ்சப் பிறவியிலே
வாராமல் என்னாளும் தஞ்சப் பாத்தை நீ
யேசார்ந் திடுவாய் நெஞ்சே கேள்
அண்டம் உலகும் அனைத்துயிருமே தாங்கு
கொண்டசிவ மூலத்தைக்
குடியிருந்தாய் விண்டிடவே வட்ட மிட்டக்
கொட்டை வடிவு மான வொளி
இட்ட கொத்தணமும் நாலூராசாவுந்
திட்ட மிட்டு ஓகாரமெனு மாசான்
ஓங்காரக் கம்பமாய் வகாரமாமே
முட்டிவள மிருந்திருப் பான்
வாகான சுழியாயிரு புரவுசுழியிலறு
நடுத்தறிவிழியாப் பதிமேவி, நீர்குமழி
யாத முச்சுடருமாமிதுவே மூலவெம்பா
மாகுமச்சுடர் எழும வழுமாய்நிற்கும்
முயச்சுடரே அகாரஉகார அனைத்திருக்கும்
வல்லவியாய் காரமெனுஞ்சதி
மேல் விழவே விகாரங்கொண்டு

கிளம்பிடுங் காண் குறிகாண
வல்லவார் ஆண்டுத் தவஞ் செய்தால்
பலித்திடுங்காண் என்றும் ஆதார
விடுந்தஞ்சு வாதிட்டானம் வேதாவின்
வீடுவிளம்பக்கேள். சூதான படை
யாழி கொட்டைபாக்கதுவதில்
நாற்கோண மடையாளம் கொத்தன
மாருண்டு விடையாதே பொன்னிற
மாய்க்காணும் போர்வேந்தேநலவ
வாசந்தன்னில் ஆய் வாழ்ந்திருப்பாள்
சரசுவதி பண்ணுகலைவாணி மண
வாளன் மன்னுமையான் யாகுமாகில்
பேணியுடலைப் பிடித்திடுவான் காணி
அல்லத்தொழிலுக் காளாய் ஆக்கிராணஞ்
செய்தநல்ல மண்மறிந்து நாதனுக்குச்
செல்ல யுணர்த்திப் பதிபுகுவான்
உண்மையிது கண்டு கொள்ளுமனத்
தை அறிந்த அயனமன் மூலம் யுணர்த்தக் கேள்.

மயிர் எலும்பு, தோலி றச்சியான நரம் போடைந்தும் பயிர் பிரமன்தனை சேர்ந்து பற்றி நிற்கும். தயிர் திருடியுண்டான பெருமை உரைப்பேன் பிறைக் கொட்டை கொண்டானத்தின் மேல் கொத்தளம் பத்துக் கண்டார் தமக்கு பளிங்கு நிறம்தான் காணும். அவ்வாசன் தனக்கு லெட்சுமியுந்தார மாயிமைக்குள் அள இப்படிப் போட்டு அறுசுவையைக் கண்டானார் வளவில் புகுந்துணர்ந்தும் வாழ்வாரண களவுகேள். மச்சை நெடுநீர் உதிரம் வழங்கு சுக்கில மூளை பச்சை நெடுமால் வகுப்புப்பகருங் கால் இச்சைகொண்டு திருமால் குடியிருப்புப் பூரகமாம் கண்டபடி ருத்திரனார் கருத்தைக் கேள் அண்டர்தேடித் திகைத்த திரிகோணக் கொண்டைக்கு

வேடிக்கை கொத்தளம் இளநறு நாடிக்காண் பார்க்குச் செப்பு நிறம் காவலெனும் சிகார பதிதான் பார்க்கில் ருத்திரியாள் தாரமாம் புண்பார்க்கும் நல்குலதெய்வம் நாயுற அல்லற் தொழில் செய்யுமடவுக் கேள் மெள்ளச் சென்று விழியிடமாய் செந்துருவைத் தானறிந்து கண்டு கடவுளாகக் கருதி என்றார் என்று நன்றாய்த் தெரியப்படுத்தி அதிலும் இப்பதிப்புகுந்து அரி அரிகாரம் அரசாளும் உரியது கேள் ஆகாரஞ் கொம்பு அனுபவிக்கும் அமைய மைதுனங்கள் வாகான நித்திரையும் வருபயமும் ஏகாந்த நித்திரரைச் சேர்ந்த உபாயகருவி அய்யத்து நத்ததுவத்தில் நன்றாக சாத்தினோம் ருத்திரருக்கு ஆதாரவீடு அனுகதமென்றே அறியமாதாமயே சுரத்தின் வாறுகேள் கொட்டை அறுகோன மீரெட்டு உண்டு வீட்டை நிற கறுப்பாய் விரிக்கலாம். பாட்டைக் கத்திரிய போகாது காராண் குருவிடமாய் பெற்றரிய வெறுமெனேப் பேசுவீர் கோ தவனார்.

வகாரமெனும் ரசாயனமைப் விழியும்
மயேசுவரியாள் விகாரெமெனும் தெய்வம்
விளம்பினோம் வகாரரசன் செய்யுந் தொழில்
உடம்பில்சிற் றெரும்புதானூறில் அய்யன்
அரனுக்கே அறிவிப்போம் மெய்யில்
வலித்தடங் காட்டுமே வலுச்செய்து
தான்பேசி சலிற் தேவையுந்திட்டி
சண்டை கொள்ளும் பிலத்தொங்கிக்
கவிபாடும் உண்பதற்கு வாய்
திறக்கும்த் தாங்கிச்சுமை எந்திரலைக்
கொள்ளும் நீங்கி வந்து மனைபுகுந்து
மயோசுத்தை றதானறிந்து பெய்ந்து
சன்மை யந்துண்டு பேசக் கேள்
முந்தக் கிடத்த லிருத்தல் கெம்பீரமா

யோடல்ந டத்தலிருதல் நவிலஞ்சும்
படைத்த பல்ல மயேசுரனார் மனோகாத்தி
நொடிமருந்து வெல்லுந்தலம் விசித்தி
வீடென்னும் நல்லதெய்வச் சதாசிவ
னார் தெய்வச்சிகாமணியா அயவாதுரை
அரனார் ஆண்டவனார் வையம் பிறக்கும்
சதாசிவனார் பூலோக நாயகனார்
அரக்கு மணி மாளிகைக்கு என்ன
அடையாளம் உரைக்கக்கேள்
சக்கா க்கொட்டை தனக்குயிறு
கொத்தளங்காண் சக்காக் கொட்டை
தாண்டுக்க உக்கிரமாய் கொத்தளமும்
ரெண்டுண்டு கூறுவார் கண்டறி
யார் மத்தளக் காரன் மருவுபதி நித்தம்
மடங்குந்தலமிது வென்று ஆசாரி
தானுரைத்தான ஒடுங்குந்தலத்தே
யுரைப்பது போல தடங்கள்கண்டி
ருப்பார் வல்லோர்கள் கண்டபடி
நெஞ்சைவிண்டிடுநீ கொட்டைநிறம்
வெண்மைநிறம் கொண்டகொட்டைக்கு
நாசாவார் கூறுகவேர் ஆகாரபதி
ஆட்டை எடுத்த கள்ளன்று நாகும்
வீட்டைக் காத்திருக்குஞ் சத்தி கன்னி
மனோன்மணி காண் நால்திசைக்குங்
காலுண்டு நவிலக்கேள் பார்த்தக்
கால்நால் திசைக்கு ஞாயிறு மன்னார்
திசைக்கு னார்மாலும் யீர்திசைக்கு
மாகயிசைந்தார் காண் ஓர்திசைக்கு
வன்னிருத்தினார் மறுதிசைக்கு
மோ வெண்பார் கண்ணிமனோன்

மணியார் ....

அன்னிதமாய் காக்குதிசையாளர்
காவலர்கள் நால்வரையும் ஏற்கும்படி
சொன்னோ மின்னங்கேள் ஆர்க்குத்
தெரியஅரு தெனலாம் தெய்வச்சதா
சிவனார் அரியதொழில்ச் செய்யும்
மடவுகேள்
உரிய்ய சத்தந்தனைக் கேழ்க்குஞ்
சற்குருவுக்குணர்த்துஞ் சித்தம்
குழந்தே செய்விக்கும் நித்தம்
பொறி புலன்களொடும் போக்கான்
நான்கோரும் அறிவிருத வீட்டிலர
சாளும் பூதரதி தன்னை அறிந்திட
முந்தளசியலைத் தடமும் பின்னை
யிடமும் இல்லைப்பேசுங்காணா சைப்
படுங்காம மழியிங்கு றேதமெனும்
மொச்சைப்படு லோக
மோகம் பூசைசெய்யாமதற்தொடு
செப்பு தத்துவமஞ்சும் மெய்யாஞ்
சதாசிவத்தைவிரும்பி நிற்கும்வைய
கத்தில் தன்னை அறிந்தோமென்பதும்
தலைவனைக் கொண்டோமென் பாப்பின்னை
சிலனூல் பேசிடுவா பொன்னைவெறுத்
தொமின்னாள் வேண்டோமினி
மண்ணைஒருத்தொமெனைப் பேசு
மொழியிலார்கருத்தைக் கேள்கோவில்
புகுந்தலையுங் குழைத்துவென்னீற
ணிந்துவாய் முணுமுணுக்கும் மத்திரங்
கள் ஆயுங்கால் கண்ணைத்திறவாமல்
கடின யோகங்கள் செய்து மண்ணைப்
பிடித்து லிங்கமால் வகுக்குங் பெண்ணைத்

தானுசுமந்திருத்த தன்மையறியாமல்
தானுமிந்தோமென்ற தான் பேசும்
நானு மென்ற மதமொழிய யிரு பிறப்
பாம் மூன் பூசைநின்ற விடமறியா
னெட்டுராநின்ற நிழலை நம்பாமல்
நம்பி ஞானவழிபாடுமத்து செம்பால்
பலனுமத்துத் திகைத்திடு வார்நம்பி
ஒண்ணைப் பிடித்தார்க்கு ஒருதீங்கு
மில்லை எனக் குன்றை எடுத்தான்
வேதங்கள் கூறுகாணஆதார
வீடுளது மன்பத் தோரஅட்ரமும் சூகா
கணமுச்சுடருந்துலங்கிடவே மாதாக்
கள்சத்தியறு வரையும் தன்கணவன்
பொன்னிறமுங் புத்தி
ரணம்பொறி புலன்களையும் உத்தனாலஞ்சு
கொண்டு னாலுக்குருவிகளும் மேல்
அஞ்சுபூதம் விளம்பியதும் சீலந்தரித்த
சதாசிவனார் தன்பெருமை நெஞ்சகமே
எரித்தபிரான் ஆறுமுகமெங்கே
சொல்ஒருத்தன் ஆறுமுகமானான்
அஞ்செழுத்து அஞ்சுமுகம்வேறுமக
மொன்றுண்டு விளம்புவரொஆறு
முகம் நின்ற நிலையிது காண்நெஞ்சகமே
அலவும் உவ்வு .... ண்டசியலிரிந்
தோர்கூறுவாம் நண்பாய்விட்ட
விடஞ்சிலமும் மெய் .... நின்ற
யிடம் ....விடமென்றே சொல்லலாம்.
அட்டதிக்கும் வெல்லும்
வாரிந்தவுலா வேண்டிப் படித்
தோர்கள் சொல்லுவார் சதாசிவத்தின்
சூட்சுமமெல்லாம் கல்லாதார் கத்திரித்

தோர் மின்னெகாண நின்ற ஞான
மொழி பெத்தரிந்தோ மென்றுபேசு
வரொ இத்தனையும் வாராதொரு
வருக்கும் வந்தாலும் ஞானநெறி
பெறாமல் நின்று பிறவாது பேத்
தொருமன வீம்புப் பேச்சில்லாப்
பேருலகில் மத்தோர் தெய்வத்தை
வடியார்ருத்தமரைக் கண்டு
வணங்கி நெஞ்செவுலரயிங்காருங்
கத்தும் யியம்பவேகங் காளாபாதம்
பெறுவார் படியில்லுலகாள் வார்
வேதம் பெறுவார் மெய்ஞானம் ஓதுங்
குருவாய் னவொற்க் குணமுடையார்
யித்தருவாயிருப்பாரென சாத்து.

திருச்சிற்றம்பலம்

152. மன்மத சிந்தாமணி லேகியம்

சுக்கு, திப்பிலி, மிளகு, தான்றிக்காய், நெல்லி முள்ளி, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, குரோசாணி ஓமம், பேரீச்சங்காய், மையிந்தால் கடிசால் மிசிரிரும்..... பாதாம் விரை இசுப்புக்கோல், பூனைக்காலி விரை, கசகசா விரை, தேசாவரம் சீரகம், குங்குமப்பூ, சிறுநாகப்பூ, ஓமம், பரங்கிப்பட்டை சேர் 1. கொத்தமல்லி விரை, ஏலம், கோட்டம், அதிமதுரம், சீரகம், தேசாவரம்* கண்டத்திப்பிலி பலம் 2, மால்கொனிவிரை, கோரோசனை, அரோணுகம், நாகப்பூ, சிலாசத்து, காட்டுக்கிராம்பு, சிறுதேக்கு, கற்கடகசிங்கி, சன்ன லவங்கப்பட்டை, முந்திரிப் பழம், பத்திரிகாய், கூவைநீர், நெரிஞ்சில் விரை, நீர்முள்ளி விரை, நத்தைச்சூரி விரை,

*தேசாவரம் – இருமுறை வந்துள்ளது.

ஆவாரம் விரை, கருவேலம்பிஞ்சு, தேத்தம்விரை, நாயிறுஞ்சி விரை துத்திவிரை, வாகைவிரை, கொட்டைக் கரந்தைவிரை, கைய்யாந்தகரை விரை, கண்டங்கத்திரி விரை, துளசி விரை, கொண்டச் சின்னிக்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, அமுக்கிராக்கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, கொட்டிக்கிழங்கு, செங்கழுனீர்க்கிழங்கு, அல்லிக்கிழங்கு, தூதுவளை விரை, முருங்கை விதை, வெந்தயம், கரையான் முட்டை, சிற்றரத்தை வகைக்குப் பலம் 1/2, மிசிரி அபின் வராகனெடை, மதனகாம சுரப்பூவராகனெடை 3, அச்சுக் கஞ்சா வராகனெடை 2, நாட்டுச் சர்க்கரை சேர் 4, பசு நெய் சேர் 2, தேன் சேர் 1, இந்த மருந்தெல்லாம் இரண்டு பங்காய் வீதத்துக்கு ஒருபங்கு லாகிரி வத்துகள் போடாமல் பாகு நெய் தேன் விட்டு லேகியம் பண்ணவும், மறுபாதியில் லாகிரி வைத்து சேர்த்துக் கொண்டு பாகு நெய் தேன்விட்டு இலேகியம் பண்ணி ஒருகழச்சிக்காய் பிரமாணம் சாயங்கால வேளையில் தின்னவும். காலையில் முன் மருந்து சிறு கழச்சிக்காய் பிரமாணம் தின்னவும். இந்த அவுடதத்துக்கு தாதுவிருத்தியும் மனோகாமமுந் தீபன ஆரோக்கியமு மாய் இருக்கும். இதுக்குப் பத்தியம் பால் நெய், தயிர், கோதுமைப் பதார்த்தம், வெள்ளாட்டுக்கறி, வெள்ளாட்டு உப்புக்கண்டம், கத்திரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, துவரம் பருப்பு, அரைக்கீரை, முளைக்கீரை, வெந்தயக்கீரை, எலுமிச்சம்காயும், முருங்கக்காய், நார்த்தங்காய், இருகாய், தூதுவளை வற்றல், மணத்தக்காளி வற்றல், இவை யெல்லாம் ஆகும். இந்த மருந்து மேகத்தின் பேரிலே கண்டரோகத்துக்கெல்லாம் ஆரோக்கியம், வாதத்தின் பேரிலே கண்டரோகத்துக்கெல்லாம் அனுகூலம், பித்தத்தின் பேரிலே கண்டரோகத்துக் கெல்லாம் சமன் திரி தோச அறமானது இது. கைகண்டது.

வேறு

153. இருமலுக்கு பீனிசத்தின் பேரிருமலுக்கு

மிளகு பலம் 1, இளம்பதமாய் வறுத்து அரைத்து வத்திரகாயம் பண்ணி வெல்லம் பலம் இரண்டு பாகுபதத்தில் மேல்பொடி போட்டு அரைப்பலம் பசு நெய் விட்டுக் கிளறி யெடுத்து வைத்துக் கொண்டு சுண்டைக்காய் பிரமாணம் அந்தி சந்தி தின்னவும். கபம் போக்கி இருமல் தணியும். சலதோசம் கபம் வாத கபம், பீனிச கபம், பித்த மேக கபம், இவையெல்லாம் தீரும். கைகண்டது.

வேறு

154. வாயில்கண்ட மேககட்டிக்கு ஒண்ணிப் போடுகுற்றே

பசு நெய் பலம் 1/2, சூடன்கை பலம் 1, செவ்வீரம் பணவிடை 1/2, பீங்கானில் போட்டுப் பெருவிரலால் ஒருசாமம் மத்திக்கவும். ஐந்துநாள் சூரியப்புடமாய் வைக்கவும். தெளிந்த நெய்யில் ஒரு காசு அத்தனைத் துணியை நனைத்து வாய்ப் புடைப்பில் போடவும். அந்தத் துணிமேல் தாமரையிலைத் தட்டுப் போல் கத்திரித்துத் துணிமேல் போடவும். அரை மண்டலத்தில் கட்டிகரையும். இதற்குப் புகை, சாதிலிங்கம், சாதிக்காய், மிளகு, மஞ்சள்,எருக்குக்கரி இவை வகைக்கு வராக னெடை, சேர்த்தரைத்து சீலையில் இந்த பொடிகளை வைத்து ஒருரையாய் பதினைந்து திரி பண்ணி ஒருதிரியைக் கொளுத்தி மேகக் கட்டிக்கு மேக ரணத்துக்குப் புகைக்காட்டவும். மேகக்கட்டி மேகரணம் புண்குண மாகும், பத்தியம் கத்திரிப்பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, அவரைப்பிஞ்சு, துவரம் பருப்பு, அரைக்கீரை, முளைக்கீரை இது கூட்டவும். புளிப்பு கசப்பு தவிர்க்கவும்.

வேறு

பரங்கிப்பட்டையைச் சீவிக்கொண்டு முசுமுசுக்கை சாற்றில் கால்படிச்சாறு வாங்கி இரண்டு சேர் பட்டையைச் சாற்றிலூறப் போட்டு நிழலுலர்த்தலாய் உலர்த்தி இருபத்தொருநாள் பெரும்பானை கொண்டு வந்து அதனுள்ளே மருந்து சாம்பிராணி பலம் 1/2, கருங்குங்கலியம் வராகனெடை, குக்குலூர பலம் 1/2, கொடி வேலி வேர் பலம் 1/2, இது தனித் தனியே பொடி பண்ணி எட்டின முறைப்படியே பானைக்குள்ளே வைத்து பானைவாயில் மெல்லிய சீலை வேடு கட்டி வேட்டின் மேல் இந்தப் பட்டை பரப்பினாற்போலே வைத்து சட்டி கொண்டு மூடி சட்டிவாய் விளிம்புக்கும் பூசிப் பிரிப்படாமல் பானையை அடுப்பில் வைத்து மூங்கில்விறகு கொண்டு கமலாக்கினி போலே எரியவிடவும். இரண்டு தரம் அசையாமல் பானையைத் திருப்பிவைக்கவும். மேல் சட்டியைத் தொட்டுத் தொட்டுப்பார்க்கவும். சூடு கண்டவுடனே அடுப்பை எரிக்காமல் அறுபது நாழிகை மட்டும் அடுப்பிலேயே பானையை இருக்கவும். மறுபடி எடுத்து இறக்கி வைத்து மண்ணைப் பேர்த்துச் சட்டியைத் திறந்து வெட்டிய மேலிருக்கிற பட்டையெடுத்து புதுகலசத்தில் வைத்து அந்திசந்தி வராகனெடை 1 தின்று வரவும். தீரும் வியாதி மேகவாயு, மேகசூலை, மேகக் கட்டி, மேகக்கிரந்தி, மேக ரணவாத சூலை, கபால சூலை இவையெல்லாம் தீரும். கைகண்டது. கசப்பு புளிப்பு தவிர்க்கவும்.

வேறு

155. பீனசத்துக்குத் தைலம்

பீனிசத்துக்கு எண்ணெய் நல்லெண்ணெய் சேர் 2, வெள்ளைக் காக்கரட்டானிலைச் சாறு பலம் 1, அவுரி

யிலைச் சாறு பலம் 1, முடக்கொற்றான் இலை பலம் 1, செம்பையிலைச்சாறு பலம் 1, பூவரசங்காய்ச் சாறு பலம் 1, கருஊமத்தி இலைச்சாறு பலம் 1/2, பசுமஞ்சள் சாறு பலம் 1, இவையெல்லாம் சேர்த்து எரித்து மெழுகு பதத்தில் கடைத்திரவியம்–மிளகு பலம் 1/2, சிற்றரத்தை பலம் 1/4, கருங்குங்குலியம் வராகனெடை 2, சாதிக்காய் வராக னெடை 1, கடுகு ரோகிணி வராகனெடை 1/2, கிராம்பு வராகனெடை 1/2, வேம்பாடம்பட்டை வராக னெடை 3, இதுவெல்லாம் பொடிபண்ணி போட்டு இளங் கொதி பதமாய்க் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு தலைக்குத் தேய்த்து ஒரு நாழிகை வைத்து இலுப்பைக் கூட்டி தேய்த்து முழுக்குபோடவும். அண்ணுப்புழி தவிர்க்க.

வேறு

156. சயரோகத்துக்கு முயல் லேகியம்

ஆண்முயல் கொண்டு வந்து மேல் சருமம், குடல், தலை போக்கி எடுத்து வைத்துக்கொண்டு கசாய வகை ஆடாதோடை, கடம்பு வேர், வழுதலை, தினை, தூதுவளை, கண்டங்கத்திரி, சங்கம் வேர், நன்னாரிவேர், சாரணை வேர், வட்டத்திருப்பி, பெருமருந்து, கீழாநெல்லி, கம்மந்திறாய் பிராயம் வேர், கையாந்தகரை, தேவதாரம், வகைக்குப் பலம் 1, பத்து படி தண்ணீர் விட்டு ஒருபடியாகக் காய்ச்சி அதில் பசு நெய் படிக் கூடவிட்டு மெழுகு பதமான பின் கடைத்திரவியம் போட விழல் அரிசி வேப்பலை அரிசி, திரிகடுகு, சிறுதேக்கு, சிங்கி, இந்துப்பு, முந்திரிப்பழம், அதிமதுரம், கோட்டம், கிராம்பு, மஞ்சள், திப்பிலி, திப்பிலி மூலம், சதாவரி, வாளுழுவை அரிசி, கார்போக அரிசி, கருஞ்சீரகம், மரமஞ்சள், அதிவிடையம், அரத்தை, கடுகுரோகணி, இலவங்கம், செவ்வல்லி, பெருமரப்பட்டை, சந்தனம், வகைக்கு வராகனெடை 1,

கற்கண்டு சேர் 1/2, சேலத்து சர்க்கரை சேர் 1. இது வெல்லாம் கூட்டி, நெய்யில் போட்டு இளங்கொதி வந்தவாரே இறக்கி வைத்துக் கொண்டு காலமே, பெருங்கொட்டைப்பாக்கு பிரமாணம், மருந்தும், நெய்யும், தின்றுவரவும். சாயங்காலம் கால், வராகனெடை, மிளகு, அரைப்பலம், வில்வ வேர், காலப்பலம், நாயுருவி வேர், கால்பலம் சிறுகாஞ்சொரி வேர், சிற்றரத்தை வராகனெடை 1/2, இவை சேர்த்து இரண்டு சேர் தண்ணீர்விட்டு கால் சேராகக் காய்ச்சி சாயங்காலம் குடிக்கவும்.

பத்தியம்: வெள்ளாட்டு உப்புக் கண்டம் முருங்கைப் பிஞ்சு, கத்திரிப்பிஞ்சு, தூதுவளைக்காய், முள்ளிக் கத்திரிக்காய். புடலம் பிஞ்சு, வரால் கருவாடு, ஓலை வாழைக் கருவாடு இது கூட்டவும்.

157. மேகத்துக்கு, மேல் இருமலுக்கு

கண்டங்கத்திரிச் சாறு வல்லாரைச் சாறு சீந்தில்சாறு, வெங்காயச்சாறு பசும் பால், கலியாண முருங்கைச் சாறு, தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு, கீழா நெல்லிச்சாறு, பொடுதலைச்சாறு, தாழம் விழுதுச்சாறு, சிறுகீரைச்சாறு வகைக்குசேர் 2, வாயம்பட்டை, நிலப்பனைக்கிழங்கு, நன்னாரிவேர், வெட்டிவேர், இலாமிச்சம் வேர், ஏலம் இலவங்கம், சாதிக்காய், சந்தனம், திப்பிலி, அதிமதுரம், கலங்கொம்பு விழுது, தேத்தான் விழுது, இசுப்பு கோல் இவையெல்லாம் வகைக்கு வராகனெடை 1, பசு நெய் 2, பசு நெய்யில் சாறுவகையெல்லாம் காலையில் பாக்களவும், அந்தியில் ஒரு சுண்டைக்காய் அளவு இவை நாற்பது நாள் தின்னவும். பத்தியம்: பச்சைப் பயறு, துவரம் பருப்பு, முருங்கைப்பிஞ்சு, கத்திரிப்பிஞ்சு, புடலம் பிஞ்சு, முளைக்கீரை, வெந்தயக்கீரை, பொன்னாங்காணி

கீரை, வெள்ளாட்டுக்கறி, வரால் கருவாடு, ஓலைவாழைக் கருவாடு, உப்புக்கண்டம் இதற்கு கூட்டவும்.

158. சுவாச கபத்துக்கு பீனசத்துக்கு, வாந்தி ஆயில்பட்டைத் தைலம்

பேய்ப்பீர்க்கம் விதையின் உள்பருப்பு வராகனெடை 1/2, தேசாவரம் கருஞ்சீரகம் வராகனெடை 1, இலுப்பைப் புண்ணாக்கு வராகனெடை 1, ஒரு சேர் தண்ணீரை அட்ட பாகமாகக் காய்ச்சி இந்த மூன்றையும் அந்த ஒரு பலந் தண்ணீரில் வைத்து வடிக்கட்டிக் காலையில் குடிக்க வாந்தி ஆனதின் பிறகு பதினைந்து நாழிகைக்கு மேல் பச்சரிசிக் கஞ்சிக் காய்ச்சிக் குடிக்கவும். இராத்திரிக்கு உப்பில்லாமல் சோறு பண்ணி தின்னவும். இதன்படி மூன்று நாள் குடித்து ஆறுநாள் மறு பத்தியம் பிடிக்கவும்.

159. சிலேட்டும கபத்துக்கு வாந்தி

பத்தியமான பிறகு ஆயில்பட்டை சேர் 10, சிற்றாமுட்டி வேர் சேர் 10. ஆதண்டம் வேர் சேர் 10, ஆக 35 சேர் தண்ணீரில் போட்டு 5 சேராகக் காய்ச்சி வடித்துக் கொண்டு பதினைந்து சேர் எண்ணெயில் விட்டு கடுகு திரளக் காய்ச்சிக் கடைத்திரவியம் அபின் வராகனெடை 1, சாதிக்காய் வராகனெடை 1, கிராம்பு வராகனெடை 1, கத்தூரி மஞ்சள் வராகனெடை 1, மலைக்கலக்கி வராகனெடை 1, கருங்குங்கலியம் வராகனெடை 1, மிளகு பலம் 1, சதகுப்பை வராகனெடை 1, கடுகு ரோகிணி வராகனெடை 1, வேம்பாடம் பட்டை பலம் 1/2, இவையெல்லாம் அரைத்துத் தைலத்தில்விட்டு மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு நாலுநாளுக்கொருமுறை இலுப்பைக் கட்டி தேய்த்து முழுகவும். பீனிச சுவாசத்துக்குக் கை கண்டது.

160. கிரந்தி சூலைக்கு மருந்து

ஆகாய கருடன் கிழங்கை அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து இடித்து வத்திரகாயம் பண்ணி காலையில் ஒருபொழுது கால் பங்குத்தேனில் அனுபானம் பண்ணி தின்னவும். இப்படி அரை மண்டலம் தின்னவும். கபம் அதோமுகமாய்க் காணும். ஊர்த்தமுகம் ஒரு வேளை காணும். வாயு சூலை கபம் இவ்வளவும் தீரும். பத்தியம் கசப்பு, புளிப்புத் தவிர்க்கவும். கைகண்டது. வெள்ளைப் பாசாணம் பலம் 1/4. வாய் விளங்கம் பலம் 1, இஞ்சிச்சாறு பலம் 3 விட்டரைத்து ஒரு சாமமரைத்து 25, உண்டையாக உருட்டி உப்பில்லாமல் பத்தியம் வைத்து 24 நாளைக்கு 24 உருண்டை காலையில் இஞ்சிச்சாற்றில் கொடுக்கவும். காற்று படாமல் வைக்கவும். அதுநாளை விளக்கெண்ணை தேய்த்து உசிலம் பொடியைப் போட்டு முழ்கி .... கொழம் மாங்கிசம்(புலால்) கூட்டவும். இதன் பிறகு பரங்கிப் பட்டை கொண்டு வந்து முசுமுசுக்கைச் சாற்றில் 10 புடம்போட்டு மறுபடியெடுத்து குக்குலுவை ஒருபலம் பானையில் வைத்து வேடு கட்டி, வேடு மேல் பட்டையை வைத்துச் சட்டிக் கொண்டு மூடி உமிக் காந்தல் கருக்கும் புற்று மண்ணும் அரைத்து சட்டிக் கவசங்கட்டி அடுப்பில் வைத்து மூங்கில் விறகு கொண்டு ஒரு சாமம் தீபாக்கினியாய் எரியவிடவும். மேல் சட்டியில் சூடு கண்டதின் பிறகு அடுப்பைத் தணித்து மறுநாள் எடுத்து புது கலயத்தில் வேடுகட்டி வைத்துக்கொண்டு காலையில் வராகனெடை தின்னவும்.

பத்தியம்: கத்திரிப்பிஞ்சு, முருங்கைப்பிசின், துவரம் பருப்பு, முளைக்கீரை, அரைக்கீரை, குரவை, கெழுத்தி, வரால், ஓலை வாழை, வெள்ளாட்டு உப்புக் கண்டம், இது கூட்டவும். கைகண்டது.

161. நேத்திரகாயில் சூலைகளுக்கு ஆக்கிராணம்

சமுத்திராப்பழம் பலம் 1/2, முட்டையோடு பலம் 1/2, இவை இரண்டும் சேர்த்து குழிக்கல்லில் ஒரு சாமம் கை ஓயாமல் அரைக்கவும். அதை எடுத்து ஒரு தேங்காய் குடுக்கையில் வைத்து நாசி ஒன்றுக்கு ஒரு பணவிடைப் பிரமாணம் எடுத்துக் கொடுக்கவும். இந்தப் பிரகாரம் இரண்டு நாசிக்கும் கொடுத்ததின் பிறகு ஒரு சாமத்துக்குள்ளாக கபங்கள் கபால சிலேட்டுமம் வெளி போகும்.

பத்தியம்: கத்திரிப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, அவரைப்பிஞ்சு, துவரம் பருப்பு, அரைக்கீரை, முளைக்கீரை, குரவைக்கருவாடு, வரால்கருவாடு, வெள்ளாட்டு உப்புக் கண்டம், வெள்ளாட்டுக் கறி, வெந்நீர் குடிக்கவும்.

162. சூசிகா மூலக்கிராணிக்கு வாள வாயுக்கு மலட்டுகிராணி, மேகவாயுக்கு மருந்து

சுக்கு, திப்பிலி, மிளகு, திப்பிலி மூலம், நாட்டுத் திப்பிலி மூலம், ஓமம், வசம்பு, குரோசானிஓமம், பெருங்காயம், சிற்றரத்தை, பேரரத்தை, சிவனார் வேம்பு, விழலரிசி, வாளுமுவை அரிசி, வெட்பாலை அரிசி, இசுப்புக்கோல் தக்கோலம், வாய்விளங்கம், சிறு நாகப்பூ, சிறுதேக்கு, தேவதாரம், சிறுகுறிஞ்சா வேர், சந்தனப் பொடி, சன்னலவங்கப்பட்டை, கல்மதம், சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம், கிராம்பு, பரங்கிப்பட்டை, பெரு லவங்கப்பட்டை, பொன்முசுட்டை வேர், கண்டங்கத்திரி வேர், முள்ளிக்கத்திரி வேர், முட்காவேளைவேர், சிற்றாமுட்டி வேர், பேராமுட்டி வேர், விலாமிச்சம்வேர், சிறுகாஞ்சொரி வேர், சங்கம்வேர், பிரப்பங் கிழங்கு, பெருமரப்பட்டை, காட்டுச்சீரகம், காட்டுக் கிராம்பு,

செண்பகமொட்டு, வால்மிளகு, ஆனைத்திப்பிலி, கொத்தமல்லி, நன்னாரி வேர், அக்கிராகாரம், அதிமதுரம், சடாமாஞ்சில், மஞ்சட்டி, நீர்முள்ளி விதை, கருஞ்சீரகம், பெருஞ்சீரகம், பற்பாடகம், தூதுவளைவேர், வட்டத்திருப்பிவேர், மிளகரணை வேர், அமுக்கரா வேர், பிரண்டை வேர், கொன்னைப்பட்டை, செங்கதாரிப் பட்டை, பூதக்கரப்பான், நாய்க்கடுகு, நாயிரஞ்சி, கடுக்காய் பலம் 2, வளையலுப்பு பலம் 2, தான்றிக்காய் பலம் 2, மாசிக்காய் பலம் 2, கல்லுப்பு பலம் 2, பொட்டுலுப்பு பலம் 2, கரியுப்பு பலம் 2, நவச்சாரம் பலம் 1/2, முந்திரிகைப் பழம் பலம் 1/2, பேரீச்சம்பழம் பலம் 1/2, கோரோசனை வராகனெடை 2, குங்குமப்பூ வராகனெடை 2, நாட்டுச்சர்க்கரை சேர் 3, ஆக மருந்து வகை எல்லாம் வகைக்குப் பலம் 1/2, பித்தகாரி மருந்தெல்லாம் எடுத்து இளம்பதமாய் வறுத்து சமூலமும் இடித்து வத்திரகாயம் பண்ணி சர்க்கரை சேர்த்து அரைத்து எடுத்து வைத்துக்கொண்டு காலையில் ஒரு வெருகடிப் பிரமாணம் சாயங்காலம் அரைவெருகடி பிரமாணம் இரண்டு வேளையும் தின்று வரவும்.

163. பெரும்பாட்டுக்கு மருந்து

நாவல் பட்டை, அத்திப்பட்டை, உதியம் பட்டை, மாம்பட்டை, நறுவளிப்பட்டை வகைக்குப் பலம் 40, ஆடுதின்னாப்பாளை வேர், வரள் சுண்டி வேர், வட்டதுத்தி வேர் வகைக்குப் பலம் 10, பத்து படி தண்ணீர்விட்டு ஒருபடி ஆக காய்ச்சி கடைசரக்கு, கோட்டம், அதிமதுரம், ஏலம், கூகை நீர், அதிவிடையம், சிறுநாகப்பூ, தேவதாரம், கற்கடகசிங்கி, இலவம் பிசின், மாம்வத்தலின், உள்பருப்பு வகைக்குப் பலம் 1, பசுவின் நெய்படி 1, இவை எல்லாம் கூட்டிப் பதத்தில் வடித்துக் காலையில் ஒரு எலுமிச்சங் காயளவு தின்னவும். கைகண்டது.

வேறு

........துருசுக்கட்டிக்கு தாளகம் துருசும் கூட்டி விளக்கெண்ணை விட்டரைத்து சீலையில் தோய்த்து கட்டி கவசம் கொடுத்து விளக்கில் கொளுத்தி மேல் பிடிச்சால் செந்தூரமாம். இந்தச் செந்தூரம் ஊமத்தங்காய் சாறு விட்டு ரசம் விட்டு மேலும் செந்தூரத்தைப் போட்டு மூடி சாண் பொதிந்துப் புடமிடக் கூடும் நாகம் வராகனெடை 2, ரசம் வராகனெடை 2, கந்தகம் வராகனெடை 2, துருசு வராகனெடை 2, நாலாங்காய்ச்சல் உப்பு வராகனெடை 2, கூட்டிப் பொடிபண்ணி நீர்மேல் நெருப்புச் (கல்லுருவி நீர் முள்ளி) சாறு விட்டரைத்து வில்லை பண்ணி, நிழலுலர்த்தி பொடி பண்ணிக் காய்ச்சி, குப்பியிலடைத்து வைத்து 10 நாழிகை எரிக்கவும்.

164. பீனிசத்துக்கு மருந்து

அட்ட காசங்கள் போக அறைகிறேன் குடொரி தன்னை
மட்டடங்காதலோகம் வடிப்பமாயி பலந்தானஞ்சும்
பட்டிடா சூதமொன்று பார்பரைவந்து வொன்றும் காந்தமான்று
கெட்டியாங் கெழை பொரிக் கார மென்றே. (1)

ஒன்றிலும் பல மலரளைமல்
உ பாயத்தால் தாக்கிக்கொண்டு
நன்று நாற்கழஞ்சு தங்கம்
நலமுடன் பொடித்துக் கூட்டி
வென்றிடும் பழச்சாறு கொண்டு
நன்று சாமம் குமரிச் சாற்றால் குன்றிடாக்
குன்றிடாக் காமம் இரண்டு
குலைநாவல் பட்டைமு .... (2)

பட்டைச் சாறு மூன்றுசாமம்
பருமுருக்கிலை நாற்சாமம்

நீர்மேல் நெருப்பு – நீர்முள்ளி, கல்லுருவி.

கட்டுமாதளை சாறுசாமம்
கடிகை யொன்றிதிடத் தப்பாமல்
திட்டமா யரைத்து நன்றாய்
செய்திடும் மடைகைய் மந்தம்
சட்டமா யுலர வைத்துத்
தாழிவாய் சட்டி தேடே (3)

தேடுகத் தாழஞ் சோற்தைச் சிரக்கு
நால் விரலுக் கிட்டுப்
போடுமேல் நாவல் பட்டை
இடித்து நால்விரல் தான் போடு
வாடுநல்ல டையை வைத்து மறுபடி
பட்டையாலே மூடிமேல் கத்தாழைச்
சோறு மூடிமேல் சட்டி வைய்யே. (4)

வைத்தொரு சீலை மண்ணேழ்
மார்க்கம் மாய்செய் துலர்த்தி
பக்தியா யடுப்பி லேத்தி பாஞ்சுடர்
தன்னை போத்திச் சித்தியாந்
தீப மெட்டுச் செய்யநற்
கமல மெட்டு பொத்காலாக் கினியெட்
டீனுடன் சாமமுமூ வெட்டாமே. (5)

மூவெட்டு சாம முந்தான
முன்றெ ரித்தார் விட்டுப்
பூவொத்த மருந்தை மெத்தப்
புகழுந்தரைக் குமரிச் சாற்றால்
நாவெத்த நாவல் பட்டைச் சாற்றி
னால்முருக்கின சாற்றாலே
வொத்த சாமமாறு மிசைந்தரைத்
தடை போர் செய்யே (6)

செய்திடு முன்பு போலத்
தீர்க்கமாய் மண்ணேழ் செய்து
பைய்யவே முழங்கால் மட்டும் பாவிடு
மெருமேல் சட்டியைய் ஒன்றில்லாமல்
வைத்து அதிகச புடத்தைப் போட்டு
வெய்யயைங் காணைப் போற்றி
விருப்பமா யெடுத்துக் கொள்ளே. (7)

எடுத்தொரு பணத்துக் கந்தாணிடு
திரிகடுகுத்தூளில்
அடுத்திருவது நாள் கொள்ள
அஷ்ட காசங்களைத்
தொடுத்த மந்தார காசம்
சுவாசகாசங்கள் பாண்டு
விடுத் தொருகாதம் போகு
மென்முனி விளம்பி னாரே (8)

165. சன்னிபதி மூன்றுக்கும் சூட்சிக்கா ஆனந்த பைரவன் உண்டெகை கண்டது

இதை தரும் சூதேமெட்டும் நாபி
யேழ் கெந்தந்தார மெத்தியவாள்
மாறெனும் வகைக் கோயிலகு வெண்
காரமு மத்தை அதை தருமைந்து
மந்தரிப்பாலைமும் முன்பாகிய வேலி
வேர் சாற்றில ரைத்து நெல்லளவே
யுண்டையை யுலர்த்தியறி வழிச்சன்னி
யென்பதற்குத் தசையுள இஞ்சிச் சாற்றில்
னிற் கொள்ள தாகமதாகிய தானால்
தானெனும் யிளநீர் தண்ணீர் கொள்ள
சாற்றினோம் பத்திய மிதற்குப் பதை
தரும் பாலு மஞ்சாதமும் பருகப்பகை

யாகனென் செய்யும் கன்னிப் பத்துன்
மூன்றும் பேதைப் பதைத்தோடிபாரு
மென்றனப் பழமுனியே ....

மரிசம் பலம் 1, வெள்ளாட்டுப் பாலிலரைத்துக் கால்சேர் பாலில் குழப்பி காலையில் மூன்று நாள் குடிக்கவும். சாப்பாடு போல் வீட்டுச் சமையல் பண்ணி உப்பில்லாமல் சாப்பிடவும். இராத்திரிக் காலம் வெள்ளாட்டுக் கறியுப்புச் சாறு போலே வைத்து சாப்பிடவும். இவ்வாறு மூன்று நாளான பிறகு மறு மூன்று நாள் வெள்ளாட்டுக் கறியும் மஞ்சள் சாதமும் (பொங்கல்) இரண்டு வேளையும் சாப்பிடவும். ஏழாம்நாள் எண்ணெயில் மிளகு வெற்றிலைக்காம்பு, வெள்ளுள்ளி, மஞ்சள், ஆதண்டைக் கொழுந்து இவை எல்லாம் நறுக்கிப் போட்டு எரித்து எண்ணெயிறுத்துத் தலையில் தேய்த்துக் கொண்டு இலுப்பைப் புண்ணாக்கிட்டு வெந்நீரில் மூழ்கவும். சுவாசம், இருமல், ஈளை இவை தணியும். இது கை கண்டது.

166. பஞ்ச சுவாச வாயுக்கு அவிழ்தம், சூலைசர வாயுக்கு கற்ப சூலைக் கிரந்திக்கு

வேப்பஇலை, புளியிலை, நுணாயிலை, கையாந்தகரை, வெள்ளருகு இந்த ஐந்து வகையிலையும் வகைக்கு ஒருபடி கொண்டு வந்து ஒருதலைப் பூண்டு ஒன்று, வசம்பு ஒருப்பணவிடை ஒன்று இதைத் துவைத்து சாறுப்பிழிந்து கால் சேர் பிரமாணம் வடிகட்டி கொண்டு வந்து காலையில் குடிக்கவும். இதுபோல் மூன்றுநாள் காலையில் குடிக்கவும். உப்பில்லாமல் பத்தியம் பண்ணவும். மறுமூன்றுநாள் உப்பு, வறுத்து கொண்டு கத்திரிப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, முளைக்கீரை, அரைக்கீரை, துவரம் பருப்பு, இவைகூட்டி

மரிசம் – மிளகு

மூன்றுநாள் தின்னவும். இந்த மருந்தை வீட்டுக்கு மூன்றாம் நாள் தலைமுழ்கி குடிக்கவும். இது கைகண்டது.

167. வெட்டை-ரோகத்துக்கு, சூசிகா கரப்பான் கிரந்திக்கு

சங்கம் வேர், பூவரசம் பட்டை, நுணாப் பட்டை, செங்கதாரிப்பட்டை வகைக்குப் பலம் 4, ஆக சமூலமுங் கூட்டி வத்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு கர்ப்பிணி எட்டாம் மாதம் முதல் பிள்ளைபேறு காலம் வரை காலையில் ஒருபொழுது பெரு வெருகடிப் பிரமாணம் தின்னவும். கரப்பான் பண்டம் போக்கி இச்சாப்பத்தியமாகத் தின்று வரவும்.

168. தொந்த சிலேட்டும சுவாச காசத்துக்கு

மயிலிறகு சுட்டசாம்பல் பலம் 2, தூதுவளை விரை, சுண்டை விரை, கண்டங்கத்திரி விரை, முள்ளிக் கத்திரி விரை, மணத்தக்காளி விரை வகை ஒன்றுக்கு பலம் 1, ஆக சமூலமும்சேர்த்தரைத்து எடுத்து வைத்து கொண்டு காலையில் அரை வராகனெடை தேனில் அனுபானம் பண்ணி ஒரு மண்டலம் தின்னவும். சுவாசகாசம் பீனிசசுவாசம், இருமல், கோழை, கடம், இவையெல்லாம் தீரும். கைகண்டது.

நெய்ச்சட்டி இலைச்சாறு பலம் 2, பசுவின் நெய்1, இதுவிட்டு எரித்து மெழுகுபதத்தில் குங்குமப்பூ வராகனெடை 1, அரைத்து பொடிப்பண்ணி போட்டு எடுத்து வைத்துக்கொண்டு காலையில் இந்தத் தெளிந்த நெய்யில் நாசி ஒன்றுக்கு பத்து துளி விடவும். அந்த பீனிச சுவாச இருமல் சிரோவறட்சி நேத்திர வாயுவுக்கு நேத்திர வரட்சி, வாயு ரோகம் சுரம் இவையெல்லாம் தீரும். இது கைகண்டது.

169. சிலேட்டுமம், மஞ்சகாமாலைக்குக் கசாயம்

கீழாநெல்லி வேர், சீந்தில்கொடி, கோவைத் தண்டு, கற்றாழஞ் சருகு, நெல்லியிறகு, கருவேலம் இறகு, பேய்ப்புடல், கொடித்திப்பிலி, நன்னாரி வேர், அமுக்கரா வேர், வகைக்குப் பலம் 1, கடைத்திரவியம், அதிமதுரம், சிறுநாகப்பூ, கொத்தமல்லி விரை சீரகம், நீர்முள்ளி விரை, ஏலம், தாளிசபத்திரி, முந்திரிப்பழம், சன்னலவங்கப்பட்டை, கூகைநீர், கலம்கொம்பு விழுது, தேத்தாவிரை, மலாக்கா 1, கட்டை, நாப்பலச் சாம்பிராணி, சங்கு பற்பம், வங்க பற்பம், அப்பிரக பற்பம், இவை எல்லாம் வகைக்கு வராகனெடை 1, சங்கசிரா பற்பம் வராகனெடை 1, முன்சொன்ன கசாயமும், கடைத்திரவியம், சேர்த்து ஆக பதினொருப் பலம், பதினொரு நாளைக்கு வைத்து அந்தி சந்தி இரண்டு வேளையும் இந்த கசாயம் குடிக்கவும். பேய்படி தோத்திராத பிஞ்சுக் காயும் மேல் கண்ட ரோக மெல்லாந் தீரும்.

பத்தியம்: புடல் பிஞ்சு, மணத் தக்காளி வற்றல், பச்சைப் பயிறு,வெள்ளாட்டுப்பால், சிறுகீரை, பொன்னாங்காணிக் கீரை, சுரைக்கொழுந்து, கோவை இலை, கோழிக்கீரை, வெந்தயக்கீரை, கொடுவளங்கத்திரி, பிஞ்சு முருங்கைக்காய், முள்ளங்கிக் கிழங்கு, பச்சை ஈர வெங்காயம், இந்தக் கறிவகை யாருக்கெல்லாம் மிளகு, உப்பு, சீரகம், வெந்தயம், உள்ளிக்கருவேப்பிலை, கொத்தமல்லி விரை, ஏலம், பெருஞ்சீரகம், கிராம்பு, சன்னலவங்கப்பட்டை, குங்குமப்பூ, இவைகளைச் சேர்த்து இந்தக் கறிவகைகளைச் சமைத்துத் தின்னவும். மஞ்சள் கூட்டலகாது. வியாதி தெளிஞ்சும் ஆறுமாசம் கூட்டலகாது. இதனால் தீராத காமாலை வியாதி எல்லாம் இரண்டு மண்டலத்தில் தீரும். இது கைகண்டது.

பசும் பால் சேர் 1/4, தண்ணீர் சேர் வயித்திலிரைப்பு கின்னி பொடி பலம் 1/2, போட்டு குழப்பி காலமே குடிக்கவும். இந்தப்படி ஏழுநாள் குடிக்கவும். இந்திரியக் கட்டு, நீரோவிழ்ந்துபோகும். புளிகூட்டலாகாது. மேல் உப்பிசம் சுவாசம், சுரம், வாயு, சூலை இவை தீரும். நீர்க் கட்டு ரோகந்தீரும். மேக கிரிச்சரம் தீரும். இது கைகண்டது.

170. அறியா மரத்துக் கிட்ட பற்பம்

அறியா மருத்துக் கிட்டம் அரைத்த தூள் படி 1/2, அந்த தூளில் கோழி அவரை இலைச்சாறு விட்டரைத்து ஏழு நாள் அரைத்து சூரியப்புடமாக வைத்து மறுபடி எடுத்து தேங்காய் குடுக்கையிலடைத்து வைத்துக் கொண்டு பாண்டு காமாலை வீக்கம் வைத்து கட்டி மூலகிராணி பால்கிராணி ஊதுக்கணம் வறள் கணம் ரத்த சூகைவிசை இவைகளுக்கு வேளைக்குக் கால் கவிசை எடை காலையில் இஞ்சி சாற்றில் கொடுக்கவும். சாயங்காலம் தேனில் கொடுக்கவும்.

பத்தியம்: திருக்கைக் கருவாடு, சுறாக் கருவாடு, வரால் கருவாடு, வெள்ளாட்டு உப்புக் கண்டம், முருங்கைப் பிஞ்சு, கத்திரிப் பிஞ்சு, அவரை பிஞ்சு, துவரம் பருப்பு, புடலம் பிஞ்சு, முளைக்கீரை, அரைக் கீரை, இவை கூட்டவும். கசப்பு, புளிப்புத் தவிர்க்கவும். இரண்டு சத்தகம் கொடுக்கவும். இது கை கண்டது.

171. அட்ட குன்மத்து வாயு திரட்சிக்கும் அக்கினி மாந்தத்துக்கு

பசும் பால் சேர் 1, நன்றாய்க் காய்ச்சி உரை ஊற்றியது. உரை ஊற்றின பிறகு சதுரக் கள்ளிப்பால் சேர் 1. அதோடு சேர்க்கவும். இராத்திரி முப்பது

நாழியானதின் பிறகு காலையில் மத்தால் கடைந்து அந்த வெண்ணை எடுத்து வைத்துக் கொண்டு நொச்சிப்பட்டை இடிச்ச தூள், நொச்சியிலை இடித்துத் தூள் இவையிரண்டும் சமன் சேர்த்துக்கொண்டு உரலில் போட்டு வெண்ணையும் கூடப் போட்டு இடிக்கவும். கெட்டியாய் மொந்தையா ஆனதின் பிறகு இந்த மொந்தைக்கு இரட்டிப்பு புட்டி வெல்லம் கூடப்போட்டு ஒருசாமம் இடித்து கலயத்தில் வைத்துக்கொண்டு காலையிலும் அந்தியிலும் ஒரு தேற்றாவிரைப் பிரமாணம் கொடுத்து வரவும். சகல வியாதியும் வாயுவும் பிள்ளை மாந்தகணங்களும் தீரும்.

பத்தியம்: இச்சா பத்தியமாய் கொடுத்து வரவும்.

172. மலக்கட்டுக்கு மருந்து, காமாலை, சூலம் அகல வாயுக்கு, வயிற்று வலிக்கு மருந்து

சங்குத் தூள் பலம் 1, பலகறை அரைச்சதூள் பலம் 3/4, சீனக்காரம் அரைத்ததூள் பலம் 1/2, வெங்காரம் அரைத்ததூள் பலம் 1/4, கற்பூரசிலாசித்து அரைத்த தூள் பலம் 1/4, நவச்சாரம் பலம் 1/4, இவையெல்லாம் கல்வத்தில் போட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு இரண்டு சாமம் கை ஓயாமல் அரைத்து எடுத்து குன்றுமணிப் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு மருந்து கொடுக்கும் பொழுது இஞ்சி சாறும், எலுமிச்சம் பழரசம் சேர்த்து இந்த உருண்டையும், புட்டி வெல்லம் தேற்றமாவிரை பிரமாணம் சேர்த்துத்தின்ன கொடுக்கவும். சகல மஞ்சகாமாலை வாய்வும் சூலம் கட்டியும் வயிற்று வலியும், அக்கினி மாந்தம், மாந்த கணங்களும், நிர்கட்டு கிரிச்சரம் மேகம், அட்ட மூலம் இவைகளுக்கெல்லாம் கொடுக்க கைகண்ட மருந்து.

பத்தியம்: கத்திரி, முருங்கை இளங்கீரை, சிறுபயறு, பச்சைப் பயறு லாகிரி பால், மோர், நெய்யிதுகள் கூட்டவும். கசப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

173. பீனிசம் மண்டை நோய்க்கு கண்ணில் நீர்எடுக்கும் மாற்றுக்குத் தைலம்

நல்லெண்ணெய் சேர் 1/2, சங்கம் பழச்சாறு படி 1/2, கையாந்தகரைச் சாறு படி 1/2, பொன்னாங்காணிச் சாறுப்படி 1/2, நெல்லிக்காய் தண்ணீர்ப் படி 1/2, மிளகு பலம் 2, அதிமதுரம் பலம் 1, ஆக இவ்வளவும் எண்ணெயில் போட்டு மெழுகு பதத்தில் வடித்து ...கைப்பு புளிப்பு தவிர்க்கவும். நாசியாலே சிராய், விழுவதற்கு மாதுளைஇலை, ஒரு எலுமிச்சம் காயளவு நற்சீரகம் அதில் பாதி இது இரண்டையும் பசு வெண்ணையிற் குழப்பி நீர்க் காய்ச்சி பொறுக்கத் தலையிலும் தேய்த்து நாசியிலும் விடவும். இப்படி மூன்று நாள் செய்யவும்.

நல்லெண்ணைய், விளக்கெண்ணெய் படி 1/4, வெள்ளாட்டுப் பால் படி 1/4, கருஞ்சீரகம் பலம் 1/2, அரைத்து கூடப்போட்டுப் பதத்திலிறக்கி வடித்து கொண்டு ஒண்ணரை வாரம் மூன்று முறை மூழ்கவும். விடியு முன்னே தேய்த்துக் கொண்டு சாயங்காலம் மூழ்கவும். உள்ளுக்கு மருந்து கோழி முட்டை மூன்று அவித்து உப்புப் பானையில் மூன்று நாள் புதைத்து வைத்து தினம் ஒரு முட்டை எடுத்துச் சாப்பிடவும்.

174. பீனிசத்துக்கு நசியம் குங்குமக் கிருதம்

குங்குமப்பூ, மாதுளப்பூ, கையாந்தகரை, வாய்விளங்கம், அதிமதுரம், கோட்டம், சுக்கு, மஞ்சள் எல்லாம் ஒவ்வொரு வராகனெடை நிடைபசுநெய் படி 1/4,

பசும் பால் படி 1/4, இவையெல்லாம் கூட்டிக் கலந்து வேகவைத்து கடுகுமெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு நாசியிலே தினம் மூன்று துளி விடவும். நான்கு நாளைக்கு ஒரு முறை எண்ணெய் மூழ்கவும்.

175. பீனிசம்

தலையும வலித்து ஒரு நாசி
சிராயும விழ்ந்து .. .. போட்டு
மலையும் நாளேழு சென்ற ஆண்டே
இறுக்கி இரண்டு விழும்
உலையு மிகவே ஆண்டே நாதகமதாய்*
தண்ணீர் விளந்திருக்கும்
பலமுஞ் சென்றுஞ்சி யடைக்கில்
பீனிசமென்பார் பெரியோரே.

176. பீனிசகுணம் நெய்

வரள் பீனிச சத்தி குணம் தலையும் கனத்து,வலி சிறுக இச்சளிப் போலஞ் ஒசிலா கிறுகி ஓசிசலதி ரண்டு விழமலையு மொடுப் போலொருகாலும் மதிகப்படவே மார்பாது நிலையுங் கெடவே பரிகாரம் நீதிப்படி செய்து வரில் துலையு ஒசேர்ன்னும் பீனிசமும் சொல்லுங் கபால வரட்சியும் மொத்த பீனிசம் புண்ணுடன் பொருக்கு முண்டாய் பொருந்தவே நீரும் வீழ்ந்து கண்ணினிலிடப்பு முண்டாய்க் கத்திக்க வே இருமி நிற்கும் உன்னியே நாசி தானும் முதிரமே பாயுமாகில் ....ன்னிவை கண்டபோது இரத்த பீனிச மிதுதானே.

177. பீனிசநெய்

பொன்னாங்காணி, நிலக்குமிழ் வேர், சேந்த தேவி அரவிந்த மல்லிப் பெயர் மல்லியாய் முத்தக்காசு

---

* "பள்ளு" வகை மருத்துவப் பாடலாகத் தோன்றுகிறது.

கொடதின் மேல் பால் விட நீறுவதே ஊறிக் காருஞ்செயஞ் சிரண்டாய் உறவே வெந்து புளிந்து வடித்தாறிப் போவதன் முன்னே யளந்து நறுநெய் நாழிவுரி கூறிட்டிடவே நல்லெண்ணெ குறையாதேளவே யொக்க விட்டு

வெறிட்டிடித்து வேப்பந் தோல்
மிறாம் பிச்சாறு முறி கூட்டொ கூட்டிர
திரிக் கடுகு கோட்டம், ஏலம்,
அதிமதுரம் மொடும் வசம்பு, வெள்
ளுள்ளி ஒரு கற்கடகசிங்கி, நெல்லி
வாட்டம், குன்றாமாலையிரு வேல்,
மற்றக் காரம், பூவசுவாகுகாட்டும்,
பயிலுமங்கிளியூறல் கண்டில் வெண்ணை
கொள்ளே கொள்ளே கொள்ளே
மோதகமும் குலவு பச்சிலைக்கு
றசிலோடு மாஞ்சாத்தைகடுளேக்
குனிபிணள் ளெகொண்டு வந்துருந்து
போமே போமே பீனிசமும்.

178. திரிப்புகை எண்ணெய்

இதுக்கு திரிப்புகை எண்ணெயிரத கந்தகஞ் சாதிலிங்க மினியதாஞ் சங்கு முருங்கு குந்திருக்கம் பாகாணி மலருவி ரவாளி பட்டிடிலிட்டு மச்ச ரசம்மது வெதிரியாக்கி நறுநெய் தனிற் கொளுத்திறவாசம் பிறவே நாசிதனில் விடவே பீனிசமாறுமே பீனிசத்துரு மிதிபாலை பூ உணத்தின துட்டகாண்டு படி நல்லெண்ணையில் போட்டு ஒரு மரத்து விரகு கொண்டு திபாக்கியாக எரித்து மெழுகு பதத்தில் வடிக்கவும். சீயக்காய் யிட்டு வெந்நீரில் மூழ்கவும். நீர் பீனிசமாத்த பீனசம் வறப்பீனசம் பக்கம் பீனசம் திருடய ஒரு பலம் கந்தகம் அரைப்படி நல்லெண்ணையில் போட்டுக் காய்ச்சி மூழ்கவும். நசியம் தயவள் வெள்ளுள்ளி நறுக்கிப் பிழியவும்.

179. பீனிசத்துக்கு நசியம்

இரத்தப் பீனசத்துக்கு மருந்து ஓரிலைத் தாமரையும் ஆவாரையும், அல்லியும், பசும் பாலில் அரைத்துச் சேர்1 குடிக்க மாறும். அசனத்தைத் தவிர்க்கவும்.

180. பீனிசத்தக்கு நெய், நசியம்

நெய் கோட்டான் பழத்தை அம்மியில் வைத்து இடித்துப் போட்டுக் கட்டி குழந்தைகள் சிறுநீரில் நனைய போட்டு, நாசியில் மூணுநாள் பிழியவும். தலைக்கு எண்ணெய் வைக்க பசு நெய் படி 1/4, ஆவின் எடை 1/4, சாதிக்காய் வராகனெடை, கிராம்பு வராகனெடை 1/4, அதிமதுரம் வராகனெடை 1/4, தம்பூல பூச்சி இவை யெல்லாம் அம்மியிலே வைத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து அந்த நெய்யில் கலக்கிக் காய்ச்சி இராத்திரியில் தேய்த்துக் காலையிலே புண்ணுக்குத் தேய்த்து வெந்நீரில் முழுக இதுபோல் மூன்றுநாள் நசியம் ஒன்றுவிட்டொரு நாள் தேய்த்துக் குளிக்க நிற்கும். **நசியம்**: குங்குமப் பூ வராகனெடை 2, கோரோசனை வராகனெடை 2, நொச்சிக் கொழுந்து முசுமுசுக்கைக் கொழுந்து வராகனெடை 4, பன்றி நெய், பசு நெய், சிற்றாமணக்கெண்ணெய் படி 3 1/2, இவையெல்லாம் காய்த்து நர்சியில் சூடாக தினமும் மூன்று துளிவிடவும். பத்து நாள்விட தீரும். நல்லெண்ணை படி கையாந்தகரைச் சாறு படி1/4, குப்பைமேனிச் சாறு படி 1/4, சிறுக்கீரைச் சாறு படி 1/4, ஆக ஒண்ணரைப் படிச் சாறு வீதம் எண்ணெயில்விட்டு இவைக்குக் கசாயம் பிராய்ப்பட்டை பலம் 1/4, இடித்துப் பிசைந்து மூன்றுபடி தண்ணீர்விட்டுப் பிசைந்து அதைப் பிழிந்து கொண்டு அந்தச் சாற்றில் தேவதாரம் பலம் 1/2, சீவிப்போட்டு காய்ச்சி அரைப்படியாக கற்றாழைச் சாறு கூட விட்டு

காய்ச்சிறபோது பசும் பால் படி 4, சந்தனம் கரைத்து படி 4, கூடவிட்டு எண்ணெய் வடித்து முழுகி வரவும். மண்டையிடி, பீனிசயடைப்பு, மேல் வலி, இளம் பிள்ளை வாதம், உச்சியிடி, வீக்கம் இது எல்லாம் நிற்கும். வெந்நீரில் மூழ்கவும். தவசியின் மருந்து. கை கண்டது.

181. உச்சி யிடிக்கு பாலகக்குத்து பீனிச மண்டை வியாதிக்கு எண்ணெய்

பீனிசத்துக்குப் புகை குறட்டைப் (காக்கணான்) பழுநறுக்கிப் பிழிந்து மெல்லிய சீலையில் தோய்த்து உலர்த்தில அதில் குங்குலியம் பலம் 1, சாம்பிராணி பலம்1, பொடிசெய்து போட்டு உருட்டி திரியாக்கி சிறுகச் சிறுக நறுக்கிச் சுங்கானி லிட்டு ஒரு முக்கடைத்து ஒரு .... வாங்கவும். இப்படி இரண்டு மூக்கிலும் ஆறுதரம் வாங்கவும். பீனிசம் நாலு வகையும் நிற்கும். கை கண்டது.

182. செம்பைத் தைலம் நேத்திர வாயு தலையிடி கபால வாயு தலையில் குட்டம் சொரிக் குட்டம்

நல்லெண்ணை படி 1, எலுமிச்சம்பழச் சாறு படி 1, பனங்காடி படி 1, இஞ்சி, மஞ்சள், துளசி, கிளியிலை, அவுரியிலை, சங்கம் பழம், கையாந்தகரைச் சாறு, பொன்னாங்காணிச் சாறு, குப்பைமேனிச் சாறு, சிறுக்கீரைச் சாறு, கோவையிலைச் சாறு, ஒடெக்குச் சாறு, முசுமுசுக்கைச் சாறு, ஆக பதினான்கு வகைச் சாறு கூட்டி படி 1/4, ஆகச்சாறு படி 1/4, ஆக படி 1, வைத்துக் கடை மருந்து கோட்டம், ஏலம், சாதிபத்திரி, சாதிக்காய், மஞ்சள், தேவதாரம், இலவங்கப்பட்டை, அதிவிடையம், சந்தனம், மரமஞ்சள், மஞ்சட்டிகச்சோலம், கருஞ்சீரகம், அதிமதுரம், புழுக்கைவேர், சதகுப்பை ஆக மருந்து 16, சந்தனம், இலாமிச்சை, கோரைக்கிழங்கு, தாமரை வளையம்,

செங்கழுநீர்க் கிழங்கு வகைக்குப் பலம் 1, ஆக மருந்து 21 இருபத்தொரு கழஞ்சு புனுகுசட்டம் போட்டு அரைத்துக் கசாயத்தோடு போட்டு வடிக்கிறபோது ஒருகழஞ்சு புனுகுச் சட்டம் போட்டு வடிக்கவும். நான்கு நாளைக்கு ஒருதரம் மூழ்கி வரவும்.

பத்தியம்: கசப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

183. பீனிசத்துக்கு எண்ணெய்

தீரும்வியாதி: பதிமூன்று மந்தமும், உள்ளுக்கு கோழி முட்டை மூணு முட்டை அவிச்ச உப்பு பானையிலே புதைத்து வைத்துத் தினம் ஒருமுட்டை உதயத்தில் சாப்பிடவும். நாசியிலே சிராய் விழுந்தால் மாதுளம் கொழுந்து, சீரகமும். பசு வெண்ணையும் சேர்த்து நசியம் பண்ணவும். நல்லெண்ணை படி 1, மஞ்சனாத்தியிலைச் சாறு படி 1, வெள்ளறுகுச் சாறு படி 1, ஈர வெங்காயச் சாறு படி 1, அவின் பலம் 1, மிளகு பலம் 1, இவை கூட்டி வடித்துத் தலைக்கு தேய்க்கவும். இதற்குத் தீரும் நோய்கள் பீனிசம் தலையிடி சகலமும், இவை எல்லாம் தீரும்.

181. சர்வ பீனிசத்துக்கு எண்ணெய்

கால்தொட்டியிலையும். வெரு மருந்து தொட்டி வேரும் கன மிளகும் ஆக மஞ்சளும், கருஞ்சீரகமும், நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி மிளகு, வடித்து உடனே மறுச்சட்டியில் வடித்ததும் மூழ்கி வரவும். நசியம் தலைவலி பீனிசம், நேத்திர வாயுக்கு சுக்கு, திப்பிலி, மிளகு, மரமஞ்சள், மஞ்சள் சதகுப்பை, ஆலாத்திக் கற்பூரம் இந்துப்பு, உள்ளுக்கு வராகனெடை 1, இவையெல்லாம் வெண்னொச்சிச் சாறு விட்டரைத்து அந்தச் சாற்றில் குழப்பி வெள்ளை சீலையில் நனைத்து உலர்த்தி திரிபண்ணி விளக்கில் கொளுத்தி அவித்து அந்தப் புகையை முதுகில்

கி ராணம் பண்ணவும் தீரும். குறட்டைப் பழச் சாறு படி, ஆதண்டை இலைச்சாறு படி 1/4, எட்டிப் பழச்சாறு படி 1/4, மிளகு பலம் 1/4, சீரகம் பலம் 1/4, வால்மிளகு பலம் 1/4, இந்த நாலு வகையும் கூட அரைச்சுப் போட்டு நல்லெண்ணை படி 1, வைத்து வெல்லம் விட்டு பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு மூன்று நாளைக்கு ஒரு தரம் முழுக நிற்கும். முழுகின அன்றைக்கு புளிப்பு தவிர்க்கவும். திரி: வெற்றிலைச் சாற்றில் பலம் 1, மிளகு அரைத்து ஒரு வெள்ளைச் சீலையில் வாட்டி அந்தத்திரியை உலர்த்தி வைத்துக் கொண்டு அந்தத் திரியைக் கொளுத்தி அந்த புகை ஏற்ற உபசனமாக நிற்கும். குறட்டைப் பழத்தைக் கொண்டு வந்து குஞ்சிக் கன்னந் தான் திறந்து .... போயியல பாசிலையதில் திணித்து புவட்டு மிருகத்திலிருக்கு அப்பாலெடுத்து திரிபண்ணி விருப்பமுடன் நாசியிலேத்த விளையும் பீனிசம் சமபோய் விடும் இந்தத் திரி இரண்டு நேரமும் அந்த எண்ணெயும் முழுகி வரவும். இது கை கண்டது.

185. பீனிசத்துக்கு சீழ்பீனசம் மாந்த பீனிசம் பக்குப் பீனிசம். தலைவலி.

நல்லெண்ணை படி 1, விளக்கெண்ணை படி 1, வேப்பெண்ணை படி 1, ஆதண்டையிலைச் சாறு படி 1, பசு மஞ்சள் சாறு படி 1, எலுமிச்சம் பழச்சாறு படி 1, நார்த்தம் பழச் சாறு படி 1, ஆகபடி 1, கூட்டி கருஞ்சீரகம் பலம் 1/4, கம்பி பிசின் பலம் 1/4, சதகுப்பை பலம் 1/4, பூதகரப்பான் பட்டை பலம் 1/4, நான்கும் முந்தினச் சாறு விட்டரைத்துக் கரைத்து சிவந்த பதத்தில் வடித்துத் தலைக்கு நனைக்கவும். மூன்று நாள் தலைக்கு யிட்டு நாலாம் நாள் இலுப்பைக் கட்டியிட்டு வெந்நீரில் முழுகவும், இப்படி நான்கு நாளைக்கு ஒரு தரம் முழுகச் சகல வியாதியும் தீரும்.

கிராணம் – மூக்கு.

186. நீர்ப்பீனிசம். பீனிசத்துக்கு எண்ணெய்

பீனிசத்துக்கு திரிகார மிதாம்கல காந்தம் தழை 5, கந்தகம், சீலைதாரம் சேர் ஒருத்தரைப் பொடியாக்கி சீலையில் வடி மருந்தனிக் கேள் வேலிப்பருத்தி கழற்சி நொச்சி வேண்டு தண்ணிசாறு படி மேலே மூட்டி வரியாக்கி மெழுந்திரியை விழுவிக்க சாமெனாசி க்கு சலம் விழுகை தன்னிலடைப்பு சிறுக் கறுப்பு போமெஞ்சி பீனிசம் போம் பொருந்தாதென்ன வேண்டாமே, ஆதண்டைச்சாறு கோழியவரைச் சாறு, நொச்சி இலைச்சாறு, நார்த்தம் பழச்சாறு, அஞ்சு சாறும் படி 4, ஆகப்படி 20, கூட்டி வெள்ளை வெங்காயம், வசம்பு, மர மஞ்சள், செங்கதாரிப்பட்டை, பூதகரப்பான் பட்டை, வேம்பட்டை பலம் 1, அரைத்துப் பச்சிலை சாற்றில் கரைத்து மருந்தவே தேவரேரே சிலை வடி கொண்டு நாலுபடி ஆன ....எருபடி எண்ணைவிட்டு ஒரு கழஞ்சு அபினும் கூடப் போட்டு வடித்திறக்கு நான்கு நாளைக்கொரு தரமும் முழுக சலப் பீனசமுந் தீரும்.

187. நசியம் சலப்பீனிசத்திற்கு மருந்து

அசுவதி தேவதையின் நசியம், முசுமுசுக்கை வேரும், உள்ளி வசம்புயிட்டு நறுக்கு நெய்யில் எட்டுநாள் நசியம் பண்ணக் குணமாம். சலப்பீனிசம் தேவையான மருந்து, கற்கடகசிங்கி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, சுக்கு, மிளகு. திப்பிலி, கண்டங்கத்திரி வேர் பலம், சிறுதேக்கு, போத்தக்காய், சடாமாஞ்சில், இந்துப்பு, இதுவெல்லாம் சமன்கூட்டி வைத்துக் கொள்ளவும். தனித்தனியே பொடி பண்ணி வடிகட்டிக் கொண்டு பசுவின் நெய்யில் ஒரு மண்டலம் நாற்பது நாள் வெருகடி பிரமாணம் உள்ளுக்குக் கொள்ளவும். தலைக்கு எண்ணெய் நாழி மிளகு பொடி பண்ணி பொட்டலங் கட்டி,

நாழி எண்ணெயைச் சூரிய புடம் வைத்து அந்த எண்ணெயில் முழுகத் தீரும். குறட்டைப் பழம் கொண்டு வந்து அரைத்துச் சீலையில் வாட்டி நிழலிலுலர்த்தி நாசியில் பிழியவும். பின்பு நல்லெண்ணை நாழியும், வெற்றிலைச் சாறு நாழியும் கூட்டிக் கொதிக்க வைத்து எண்ணெய் வடித்து, மூழ்கி வரவும். பீனிசம் தீரும். ஆடாதோடை, சிராய் வேம்பு, அணியார வேலிப் பருத்தியுடன் தொடர்பிரமி அவுரி இலை, செனித்த கரப்பான் நொச்சி இலை, கொட்டை எ லுமிச்சம் பழச்சாறு குறிதொன்பது மேசரி கொண்டு நாடாரெனவன் குரட்டிக் கொடு நன்றாய் பதத்தில் வடித்திடுமே பீனிசம், தலை மண்டைக் குத்து, ஒற்றைத் தலைவலி தீரும்.

எண்ணெய் நாழிக்கு மிளகு பலம் 1, எலுமிச்சம் இலை, செண்கப்பூ, செங்கழுனீர், கோட்டம் இவை ஒவ்வொன்றும் வராகனெடை ஒன்று அம்மியில் தட்டி எண்ணெயிலே போட்டு பொன்னிறமாக வேகவைத்து நாலு நாளைக்கு ஒருமுறை மூழ்கவும். நீர் பீனிசம், சீழ்பீனிசம், மாந்தப் பீனசம், தும்மல், தலைவலி, கபால வாய்வு இதுவெல்லாம் தீரும்.

188. ரத்த பீனிசம் 18 வகைப் பீனிசம்

ஏலம், இலவங்கம் பட்டை, இலவங்கப் பத்திரி, செங்கழுநீர், கோட்டம் பச்சிலை வகைக்கு நான்கு மிளகு பலம் 2, நொச்சி இலைச்சாறு குறுணி நல்லெண்ணை படி 2, கடைச்சரக்கெல்லாம் இடித்து நொச்சி இலைச் சாற்றில் போட்டு மிளகு இடித்துப் போட்டு எண்ணையும் விட்டு அடுப்பிலேற்றி மிளகு வெடித்து கிளம்பின பிறகு இறக்கி முழுக வால் மிளகு படி 4, சுக்கு, உள்ளி, வசம்பு, சீரகம், கருஞ்சீரகம், கந்தகம், விளாம்பழ கந்தகம், பூரம், சுரைக்காய், கந்தகம், துருசு இவைகள் ஒரொன்று கழஞ்சு

இவைகளெல்லாம் அஞ்சிலை நொச்சிச் சாறு வார்த்தரைத்து சிற்றாமணக்கெண்ணெய் நாழி வல்லாரைச் சாறு நாழி எருக்கம்பால் படி 2, நொச்சிச் சாறு, நாழி இவைகளெல்லாம் சேர் கூட்டி எரித்து வடித்து நாசியிலிருந்து தலைக்கு தேய்த்து மூழ்கவும். பீனிசம் மூன்றுக்கும் எண்ணெய் மிளகூட்டிக் கையாந்தகரைச் சாறு படி 1, அந்த சாற்றில் மிளகு, போட்டு நிழலில் உலர்த்திப் படி ஏழுப்படிச் சாறு சுவறந்த வாயும் உலர்த்தி ஒருபடி எண்ணெயில் போட்டு மூடி எட்டுநாள் புதைத்து மறுபடி எடுத்து ஒரு பானை நீர் படி நெய்யிட்டு அதில் இந்த எண்ணெயை வண்டு கட்டி வைத்திருந்து மூழ்கிவர பீனிசமும் சகலமும் போம்.

189. பீனசப் புகை

இரதம் கந்தகம் சாதிலிங்கம்
இனிய தாரம் சங்குகுழறும்,
வரும் கு ந்திருக்க வும்பா விரணம்
வருவிரவாளி பட்டிலிட்டு
இரணம் சாமமதுவெதிரியாகச் சுருக்காய்
கொளுத்தி வீரம். பிறவே நாசிதனில்
விடவே பீனிசம் மேவிடுமே.

வேறு

190. சகல குன்மத்துக்கும் இலவணச்சாற்று உருக்கு மேக சுவாசம், வாத சுவாசம், சிலேட்டும சுவாசம், தொந்த சுவாசம் இவைக்கு மருந்து

பொட்டுலுப்பு பலம் 4 1/2 கந்தகம் வெடிஉப்பு பலம் 1, வளையலுப்பு 1, இந்துப்பு பலம் 1, வெங்காரம்பலம்1/2, கந்தகம் பலம் 1, சவுக்காரம் வராகனெடை 2, சீனக்காரம் பலம் 1, கல்லுப்பு பலம் 1, இந்தவகை யெல்லாம் கல்வத்தில் அரைத்து எடுத்து

ஓட்டில் போட்டு வறுத்து அது எடுத்து ஒரு கலயத்தில் போட்டு வாய் ஓடுப்போட்டு மூடி நாற்பது வறளியில் நடுப்புறக் கலயம் வைத்துப் புடம் போடவும். கந்தகம் சேர் 1, அரிதாரம் தகடு போலே சேர் 1. பசுவின் பாலில் சுத்தி செய்து இரண்டும் அம்மியில் அரைத்து பழைய ஈர வெங்காயச் சாறு வார்த்து பனிரெண்டு நாள் ராத்திரியில் பகல் ஓயாமல் சாறுவிட்டு விட்டு அரைக்கவும். அதையெடுத்துச் சாறாய் காசுக் குப்பியில் அடைத்து முதுவிந்தப் புற்று மண், நண்டு வளை மண் இரண்டும் அரைத்து பன்னிரெண்டு சீலைமண் செய்யவும். குப்பி வாய்க்குக் குதிரை மயிரை கூட்டி ... விச்சு ஒரு விரல் விட்டு நறுக்கிப் போடவும். ஒருமடாவைபின் பக்கம் சானாக்குவிள ரசம் போலே உடைத்து ஒரு சானாக்கு நடுவில் மூவிரல் அகலத்துக்கு பொத்தல் பண்ணி அதில் காசுக்குப்பியை தலைகீழாக்கி கோர்த்து பானை கலவடை வாய்க்குள்ளே வைத்து காசுகுப்பிக்கு மேலே நாலு விரல் மட்டும் ஒசப்பாயி மணல் பரப்பி அதன் மேல் கொல்லன் கறி போட்டு நெருப்புப் போட்டு வீசிக் கொண்டு மூன்று நாள் ஆறுபொழுது விடாமல் வீசவும். அடுப்பு மேல் வைத்த அடுப்புக்குள்ளே பீங்கான் வைக்கவும். தைலம் விழும். தேற்றான் விரை சோரமதாய் பசுவின் பால் சேர் 5, இது இரண்டும் ஒரு கலயத்தில் போட்டு பூமியில் பதினைந்து நாள் புதைத்து மறுபடி யெடுத்து அரைத்துக் கொண்டு சீனி சேர் 1/2, சேர்த்துத் தின்னவும். இருபது நாளில் நிற்கும்.

191. இரத்த மூலக் கிராணிக்கும் சகல கரப்பானுக்கும் சஞ்சீவி எண்ணெய்

எட்டிக் கொட்டை பலம் 1, ஆறாகப் பொடி பண்ணி தேங்காய்க் குடுக்கையில் அடைத்துவைத்துக் கொண்டுக்

வறளி – காய்ந்த

காலையில் ஒரு பணவிடை மருந்து வெந்நீரில் தின்னவும். பத்தியம் புங்கம் வேர், விழுதி வேர், செங்கதாரி வேர், மிளகரணை வேர், சிறுகீரை வேர், சிறு தும்மட்டி வேர், புலிதுடக்கி வேர், வட்டத்திருப்பி வேர், மூக்கரட்டை வேர், ஆற்றுமுள்ளி வேர், நிலக்குமிழ் வேர், கொருக்கை வேர், மாவிலங்கை வேர், ஆதண்டம் வேர், ஆகாச கருடன் கிழங்கு, அப்பை கிழங்கு, பெருங்கத்திரிக் கிழங்கு, புன்னை வேர், பழம்பாசி வேர், இருப்புலி வேர், சிறுகுறிஞ்சான் வேர், பெருங்குறிஞ்சான் வேர், சாவேர் புளியரணைக் கிழங்கு, சத்திசாரணைக் கிழங்கு, சாரணைக் கிழங்கு, கத்திரி வேர், காட்டு மல்லிகை வேர், முடக்கத்தான் வேர், தாமரைக் கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, வட்ட கிலுகிலுப்பை வேர் இவை எல்லாம் சமனாகக் கூட்டி சூரணம் பண்ணிக் கொண்டு கடைச் சரக்கு மருந்து, சீரகம் பலம் 1, கடுகு ரோகிணி, திப்பிலி மூலம், சிற்றரத்தை, வாய்விளங்கம், கொத்தமல்லி, சிறுதேக்கு, அதிவிடையம், சங்கங்குப்பி, விழலரிசி, வெட்பாலை அரிசி, கார்போக அரிசி, பூத கரப்பான் பட்டை, செவ்வியம்,கடுக்காய், வெள்ளுள்ளி, வசம்பு, சுக்கு,மிளகு இவை எல்லாம் வகை

192. ஆரோக்கிய சிந்தாமணி

சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, கடுக்காய், தான்றிக்காய், இந்துப்பு, கடுகு ரோகிணி, அதிமதுரம் , கோட்டம், ஓமம், கந்தகம், சாதிலிங்கம், அரிதாரம், இருவி நிர்விசம், நாவிதாமிர, அப்பிரக பற்பம், துத்தம், துருசு ஆக 28 1/2 வராகனெடை, நேர்வாளம், உத28 சுத்தி செய்து எலுமிச்சம் பழம், கையாந்தகரை, குப்பைமேனி, சாபான இந்த நான்கிலும் நாலுநாளரைத்து குண்டு மணிப் பிரமாணம் மிளகு சேர் 1/2, மாறுபால் சேர் 1/2, முசுமுசுக்கை கண்டங்கத்திரி, முள்ளி கத்திரி, தூதுவளை,

தேன் சேர் 1/2, வேளை ஒன்றுக்கு வராகனெடை 1/2, இந்த மருந்துக்கும் குணம் காசங்கள் கபால சூலைகளும் சுவாசம் ஈளை, இருமலும் புதிய குன்மம், அக்கினி, மந்தம், மேகம் இவை எல்லாம் தீரும்.

அத்திப் பால் பச்சைத் தேன் ஆவரையினுடைய
வித்து தான் முக்கழஞ்சு மேன்மை தெரிவித்து ப்
பருகுவார் கலநோய் ஐந் தொடியீர் கேளீர்
பெருகும் மந்த நீர் மாபலைக் கொண்டிடுந் குடல்
இப்பங்கும் உரைத்தொரு விரையீர்
தோன்றும் அண்டியே விதையைத் தோன்
வித்தை உடலில் வாங்கும் அபியவே உரைக்க
அகலும் பசி அகமற்று போக
அண்டத்தில் வலித்து மிகவே
சுக்கு ஒன்றும்நொந்த
அடல் புண் போலுளைந்து
நோவினும் அடனென தலை வலியும் இந்தப்படி யே
பாவை தோன்றும் இதுவே பக்கசூலையென
தொந்திப்புடனே வகு எண்ணிச் சொல்லுங்
குணங்களிது வாமே.

193. பீனச வாயுக்குமுழுக நசியம்பண்ண எண்ணெய்

ஆட்டாசாத்துக்கு கண்டங் கத்திரி, கடுக்காய், நிலாவாரை கொள், வெள்உள்ளி, விளக்கெண்ணை, நல்லெண்ணை படி 4, பசும் பால் படி 4, தேங்காய்ப் பால் படி 4, வேப்பெண்ணை படி 2, ஆதண்டை வெண்நொச்சி, மகிழம் இலை, நார்த்த இலை, பச்ச போக இலை, வேளை, கையாந்தகரை, சிறு செருப்படி, சிறுவாவை, வெதுப்படக்கி, நன்னாரி வேர், கோரைக்

கிழங்கு, வறட்பூலா, ஆனை அறுகு, மிளகரணை, வெள்ளடம்பு, கஞ்சாயிலை, செம்பையிலை, உத்தாமணி, சிறுவிளா இலை, செங்கத்தாரி இலை, நரிக்கொன்னை, பெருமருந்து இலை, பேய்ப் பீர்க்கங்காய்ச் சாறு இலை, சித்திரமூலம் இலை, பொடுதலை, புண் முருங்கையிலை, நிலக் கடம்பு சத்தி, சாறணை, சமூலம், கைமாரு வெற்றிலை, துளசி இலை, ஆடாதோடையிலை, மணத்தக்காளி இலை, ஆகவகைக்கு சாறு சேர் 1/4, கசாய வகை, ஆயில்பட்டை சேர் 10, அழிஞ்சிப்பட்டை சேர் 10, வெப்பாலைப் பட்டை சேர் 10, கரந்தைப்பட்டை சேர் 10, உதிரவெங்காயப்பட்டை சேர் 10, ஆகாச கருடன் கிழங்கு சேர் 10, அமுக்கராக் கிழங்கு சேர் 10, வேளைப்பட்டை சேர் 10, மருதம் பட்டை சேர் 10, ஊழலாத்திப் பட்டை சேர் 10, இவை யெல்லாம் இடித்து ஒரு பானையில் போட்டு கலம் தண்ணீர்விட்டு இருநாழியாகக் காய்ச்சி முன் எண்ணெயில் விட்டு எரிக்க மெழுகு பதம் வரும்போது கடைத்திரவியம் போடவும். பரங்கிப்பட்டை பூத கரப்பான் பட்டை, வேம்பாடம் பட்டை, அகிற்பட்டை, தேசாவரம் சீரகம், கடுகுரோகிணி, சிற்றரத்தை, கடுக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு, கோட்டம், அதிமதுரம், சாதிக்காய், கிராம்பு, ஏலம், செண்பகப்பூ, சன்னலவங்கப்பட்டை பலம் 1, தாளிசபத்திரி, சடாமாஞ்சில், சதகுப்பை ஆக வகைக்கு வராகனெடை 5 வீதம் பொடிபண்ணித் தைலத்தில் போட்டுப் பதத்தில் எரித்து முழுகி வரவும். மூக்கில் நசியம் பண்ணவும். காதில் விடவும். உள்ளுக்கு மூன்றுநாள் கொள்ளவும். உப்பில்லாமல் பத்தியம் இருக்கவும். ஆறு நாளைக்குள் தீரும்.

தீரும் வியாதி : பீனிசம், இருமல், வாயுத் திரள் குன்மம், மேகம், மகோதரம், பாண்டுகாமாலை, வரள்

வாயு, சர்த்தி மூர்ச்சை, அத்தி சுரம், தலைவலி, பாரிச வாயு, இடுப்பு வலி, தம்ப வாதம், முகசன்னி, நெஞ்சில் வரள் கபம், சூலை வாயு, அண்டவாயு, அந்திர வாயு, கிரி மேகம், அட்ட பீனிசம், வரள் வாயு இவை எல்லாம் தீரும்.

பத்தியம்: அனுபானம் பார்த்துக் கொடுக்கவும்.

வேறு

194. தீராத சிரங்குக்கு எண்ணெய்

அரிதாரம் வராகனெடை 2, துருசு வராகனெடை 1/2, ஏலம் வராகனெடை 2, வேம்பாடம் பட்டை வராகனெடை 2, வேப்பெண்ணை சேர் 1, இவையெல்லாம் சேர்த்து எரித்த எண்ணெயும் போடலாம். எண்ணெயைக் கொஞ்சம் சேர்த்துக் களிம்பு போலே வைத்து துணியில் தடவிப் புண்ணில் போடவும். ஆறிப்போகும்.

வேறு

மெழுகு பலம் 1, சவுக்காரம் பலம் 1/2, துருசு வராகனெடை 2, துத்தம் வராகனெடை 2, மிருதாசிங்கி வராகனெடை 2, பச்சைவெட்டுக் குங்குலியம் வராகனெடை 4, மனோசிலை வராகனெடை 2, வேப்பெண்ணை பலம் 1, கரண்டியில் விட்டுக் காய்ச்சும் போது மெழுகும் மறுத்துவெள்ளையும் இளகும்போது சிறுமூங்கில் குழாயில் விடவும். மருந்து எடுக்கும்போது குழாயை உடைத்து எடுக்கவும். வத்திப் போலே இருக்கும். அதை உரைத்துச் சிரங்கு மேல் போடவும். தீராத சிரங்கு எல்லாம் தீரும்.

வேறு

புண்ணுக்கு மெழுகுவர்த்தி உரைத்துத் தடவவும்

துத்தம் வராகனெடை 1/2, துருசு வராகனெடை 1/2, இரண்டையும் சுட்டுச் சாம்பல் பண்ணி வெண்கல வட்டியைக் குப்புற கவிழ்த்துக் காவிச் செம்பினாலே இழைக்க எருமை வெண்ணெ சேர் 1/2, வைத்து நன்றாக இரண்டு சாமம் இழைத்து எடுத்து வைத்துக் கொண்டு கண்ணுக்கும் புண்ணுக்கும் போடவும். கை கண்டது.

வேறு

கரப்பான், கிரந்தி, கடி, குட்டம், பெருவியாதி, குன்மம், மேகம்

புன் முருங்கை வேர், கழற்சி வேர், முடக்கத்தான் வேர், மருக்காரப் பட்டை, வெள்ளை காக்கரட்டான் வேர், உத்தாமணி வேர், சங்கம் வேர், அவுரி வேர், வெள்ளெருக்கம் வேர், கண்டங்கத்தரி வேர், தூதுவளை வேர், நெய்க்காசா வேர், ஆடாதோடை வேர், மணித்தக்காளி வேர், ஆதண்டம் வேர், கொருக்கை வேர், சிறுகீரை வேர், சிறுகுறிஞ்சா வேர், பெருமருந்து வேர், வேப்பம் பட்டை, சங்கங்குப்பி வேர், வெள்ளைச் சாரணை வேர், முள்கத்திரி வேர், சத்தி சாரடை வேர், நிலாவாரை வேர், வெண்நொச்சி வேர், பொன்னாவாரை வேர், வட்டகிலுகிலுப்பை வேர், கருநொச்சி வேர், மூக்கரட்டை வேர், கிரந்தி நாயகன் வேர், தவசி முருங்கை வேர், மருள் வேர், வெள்ளடப்பம் வேர், சிவதை வேர், குட்டி விளா வேர், கோவை வேர், நஞ்சிற் பரித்தான் வேர், இலைக் கள்ளி வேர், நுணாப்பட்டை, பூவரசம் பட்டை, கொவுளம் பட்டை, நாயுருவி வேர், பச்சை மஞ்சள், பூவந்திப் பட்டை,

செங்கதாரிப் பட்டை, மாவிளங்கப் பட்டை, வேம்பாலை பட்டை, ஊழலாத்திப் பட்டை, புங்கம் பட்டை, பிராயம் பட்டை, நொச்சி வேர், நரிக்கொன்னைப் பட்டை, நெருஞ்சில் வேர், அரிநெல்லிப்பட்டை, உசிலம் பட்டை, சிவனார்வேம்பு, பெருங்கரந்தைப் பட்டை, புரசம் பட்டையின் இம்பூரல் வேர், பெருநரளைக் கிழங்கு, பிரண்டை வேர், பாவட்டை வேர், சிறுவாகைப்பட்டை, செருப்படி வேர், சீந்தில்வேர், ஊசிப்பாலை வேர், ஆவாரம்பட்டை, முசுமுசுக்கை வேர், உப்பிலி வேர், வெருகங் கிழங்கு, காட்டுக் கரணைக் கிழங்கு, சூரை வேர், சடைச்சி வேர், இரத்த வெங்கப்பட்டை, வீரம் பட்டை, குண்டுமணி வேர் வகைக்கு பலம் 2, இவையெல்லாம் இடித்து இரண்டு பானையிலிட்டுக் கலம் தண்ணீர் விட்டு வகைக்குப் பலம் 2, அடுப்பில் வைத்துக் காய்ச்சி குறுணித் தண்ணீரான போது வடிக்கொண்டு பழகின பெரிய எண்ணெய்ச் சட்டியில் விட்டு, விளக்கெண்ணெய் சேர் 25 விட்டு தீ பாக்கினியாய் எரியிட மெழுகு பதமாகி வரும். து கற்கத் திரவியம் கடுக ரோகணி, கருஞ்சீரகம், அக்கிரக்காரம், அரத்தை, ஏலம், கிராம்பு, கடுக்காய், கார்போக அரிசி, நீரடி முத்து, அதிமதுரம், கம்பிப் பிசின், திப்பிலி, மிளகு, சுக்கு, தான்றிக்காய், வெள்ளுள்ளி, மலைகலக்கிவிரை, குரோசானி ஓமம், கோரோசனை, சீரகம், வேம்பாடம் பட்டை, வசம்பு, நெல்லிமுள்ளி, சிறுதேக்கு, கோட்டம், கொத்தமல்லி, கண்டத்திப்பிலி, ஓடுபோக்கிய நேர் வாளம் பருப்பு பலம் 1/4, பரங்கிப்பட்டை இவை எல்லாம் வகைக்குப் பலம் 1/2, பசும் பால் விட்டு அரைத்து எடுத்து எண்ணெயில் போட்டு இளம் பதமாய் எரித்து வைத்தக் கொண்டு கர்ப்பிணிக்கு ஐந்தாம் மாதம் மூன்றுநாள் கொடுக்கவும். உப்பில்லா பத்தியம் மறுபத்தியம் மூன்றுநாள் உப்பு வறுத்து அரைவாசி கூட்டவும். ஏழாமாதம் மூன்றுநாள் இந்தப்படி

பத்தியமாய்க் கூட்டவும். ஒன்பதாமாதம் அந்தக் கடுகு மூன்று நாள் தின்னவும். பிள்ளைப் பிறந்தாலும் நாற்பது நாள் அந்தி காலையில் இரண்டு வேளையும் இந்த எண்ணெயைத் தடவவும். கை கண்டது. மற்ற சொன்ன வியாதிக்கெல்லாம் பத்துநாள் காலையில் ஒருபொழுது கால் பலம் எண்ணெய் குடிக்கவும். உப்பு வறுத்து அரைத்திட்டமாய் கூட்டித் தின்னவும். இதன்படி மூன்று மாதம் குடித்துப் புளி தவிர்த்துப் பத்தியம் பண்ணவும்.

வேறு

பீனசத்துக்குத் தைலம் கைகண்டது இருமலுக்குச் சூரணம்

நல்லெண்ணெய் சேர் 15, வெண் நொச்சி இலைச் சாறு படி 1, வேளைஇலைச் சாறு படி 1, முற்றின தேங்காய்ப் பால் படி 1, இவை எல்லாம் சேர்த்து எரித்து மெழுகு பதமாயி வரும்போது ஒரு சேர் 1. மிளகு கூடப் போட்டு கலயத்தில் கடுகும் எண்ணெயும் விட்டு பானையில் வைத்துத் தேய்த்து மூழ்கவும். அன்றைக்கு புளி கூட்டவும் ஆகாது.

வேறு

சுக்கு, திப்பிலி, கண்டதிப்பிலி, சிற்றரத்தை, சமுத்திராப் பழம், பெருங்காயம், கிராம்பு, மாசிக்காய், சித்திரமூலம் வகைக்கு வராகனெடை 1, தேன்பலம் 1, ஓமம் வராகனெடை 1, வேளைக்கு அரை வராகனெடை சூரணம் தின்னவும். புளி, புகையிலை, தவிர்க்கவும். சுவாசம் இருமல் தீரும். கைகண்டது. சீதளக்காய்கள் இலைகள் தவிர்க்கவும்.

வேறு

பவன வாய்வுக்குச் சிக்கலுக்கு மருந்து கைகண்டது.

கையாந்தவிரை வராகனெடை 2, நாய்வேளை விரை வராகனெடை 4, குரோசாணி ஓமம் வராகனெடை 2, சன்னலவங்கப்பட்டை வராகனெடை 2, நாயிரஞ்சி விரை வராகனெடை 12, பொடுதலைக் காய் வராகனெடை 1/2, சாத்திர பேதி வராகனெடை 3, திப்பிலி வராகனெடை 2, அக்கிரகாரம் வராகனெடை 2, லோக பற்பம் வராகனெடை 4, காந்த பற்பம் வராகனெடை 4, அரியமாளத்து கட்டம் வராகனெடை 4, வங்கபற்பம் வராகனெடை 2, கல்மதம் வராகனெடை 2, சிறுகாஞ்சொரி விதை வராகனெடை 2, முள்கத்திரி விதை வராகனெடை 2, இவையெல்லாம் சேர்த்து வைத்துக் கொண்டு வேளைக்கு வராகனெடை 3, கொடுக்கவும்.

பத்தியம்: கத்திரி பிஞ்சு குழக்கருவாடு, முருங்கைப் பிஞ்சு, துவரம் பருப்பு, வெள்ளாட்டு உப்புக் கண்டம், முளைகீரை, அரைக்கீரை, அவரைப் பிஞ்சு, புடலம் பிஞ்சு, பச்சைப் பயறு இதுவெல்லாம் புளியில்லாம் கூட்டவும்.

தீரும் வியாதி: விசப்பாண்டு, சுவாசம், மேக பேதி, அக்கினி மந்தம் இவை எல்லாம் தீரும். கைகண்டது.

சருவ ரோக சிந்தாமணி

சாதிக்காய், சாதிப்பத்திரி, குறுசாணி ஓமம், கிராம்பு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, அக்கிரகாரம், சீரகம், கருஞ்சீரகம், மனோசீலை, ஏலம், சிற்றரத்தை, இந்துப்பு, கடுகு ரோகிணி, அதிமதுரம், கோட்டம் ரசம், கந்தகம், சாதிலிங்கம், அரிதாரம், இருநிர்விசம், நாபி,

தாம்பிர பற்பம், துருசி ஓமம் ஆக வகைக்கு வராகனெடை 1, வகை இருபத்தெட்டு வராகனெடை 28, இதுக்கு நேர்வாளம் 28, சுத்தி செய்து எலுமிச்சம் பழம், கையாந்தகரை, குப்பைமேனி, சாரணை இந்த நாலிலும், நாலுநாள் அரைத்து குண்டுமணி பிரமாணம், உருண்டைப் பண்ணி வைத்துக் கொண்டு சகல ரோகத்துக்கும் அனுபானம் வைத்துக் கொடுக்கவும்.

சர்வ ரோக சிந்தாமணி சகல ரோகத்துக்கும்

மணத்தக்காளி இலைச்சாறு, முசுமுசுக்கை இலைச்சாறு, கண்டங்கத்திரிச் சாறு, முள்கத்திரிச் சாறு, தூதுவளைச்சாறு, முதிராப் பசுவின்பால் படி 1, ஆகவகை வகைக்கு சேர் 1, மிளகு சேர் 1, இவையெல்லாங் கூட்டி எரித்து, கடுகு திரளும் பதத்தில் தேன் சேர் 1, விட்டு இறக்கி எடுத்து வைத்துக் கொண்டு காலையில், அந்திக்கும் வராகனெடை 1/2, கொள்ளவும். இதுபோல் நாற்பது நாள் கொள்ளவும்.

பத்தியம்: புளிப் புகையிலைத் தவிர்க்கவும். கை கண்டது.

வேறு

இருமல் சுவாசத்துக்கு பீனிசத்துக்கு மருந்து பாண்டு வீக்கத்துக்கு உசிதம்

தண்டவாளம் அரப்பொடி, ஊசிக்காந்தம், அரியாமாத்துக் கிட்டம் சாத்த்திர பேதி, கல் மதம், சங்கு பற்பம், கல்நார், நவச்சாரம், சிலாசத்துப் பற்பம் வகைக்கு நிரையாய் கூட்டிக் கொண்டு உத்தாமணி இலை, சங்கம் இலை, கற்றாழை மடல், இந்த மூன்று வகைச்சாறும்

விட்டு மூன்றுநாள் அரைத்து குன்றிப் பிரமாணம் உண்டை பண்ணி வைத்துக் கொண்டு விசப்பாகத்துக்கு பாண்டுவுக்கு சுவாச வீக்கத்துக்கு ஊது காமாலை ஊதுகணை, இரத்த சோகை இவைகளுக்கு அனுபான நிர்விசத்தில் கொடுக்கவும்.

பத்தியம்: குறி ஞ்சாயிலை, கரைக்கொழுந்து நெய், சுட்டியிலை, தூதுவளைக்காய், மணித்தக்காளி, கொடுவாளம் பிஞ்சு, முருங்கை பிஞ்சு, புடலம் பிஞ்சு, கலவலெக்கிரி, துவரம் பருப்பு, விரால், குரவை, தேளி, ஓலை வாழை, வெள்ளாட்டு உப்புக் கண்டம், முயல் உப்புக்கண்டம் இவையாம்.

வேறு

வெண் ரோகத்துக்கு ஒற்றடம்

சிறுகாஞ்சாயிலையைச் சட்டியில் வறுத்து அம்மியில் வைத்துப் பழம் புளியும்கூட நறுக்குப் பொட்டணமாய் பிடித்துக்கொண்டு புற்றுமண் பானையில் போட்டுத் தண்ணீர் விட்டு தேற்றதம்விதையைப் போட்டு தேத்தின அந்தத் தெளிவு தண்ணீரில் ஒற்றடம் போடவும். சிகப்பு வலி. கடுப்பு, நீர்முட்டு, கூச்சம் இவை தீரும். கை கண்டது.

வேறு

பாண்டு வீக்கத்துக்கு கை கண்டது

2 கத்தூரி மஞ்சள் பலம்1, கொத்தமல்லி பலம் 1, விலாமிச்சம் வேர், குரோசாணி ஓமம் பலம் 2, அதிமதுரம் 1/4, கோட்டம் பலம் 1, தேசாவரம், சீரகம் பலம் 2, கருஞ்சீரகம் பலம் 1, இலவங்கம் பலம் 3, பெருங்காயம் பலம் 2, ஏலம் பலம் 2, சிறுநாகப்பூ பலம் 2, ஈஸ்வரவேர் பலம் 1, சடாமாஞ்சில் 2, போத்தக்காய் பலம் 2, புட்ப

பத்திரி பலம் 1, எலுமிச்சம்பழம் 10, பனைவெல்லம் சேர் 1, நல்லெண்ணை சேர் 1, அரபொடி சேர் 1/4, கோரோசனை பலம் 3, மாசிக்காய் பலம் 2, மிளகு பலம் 3, சுக்கு பலம் 1, திப்பிலி பலம் 1, திப்பலி மூலம் 1/4, பரங்கிப்பட்டை பலம் 1, சீரகம் பலம் 1, இலவங்கப்பட்டை பலம் 1, தான்றிக்காய் பலம் 1, சாதிக்காய் பலம் 2, சாதிபத்திரி 5, கடுக்காய் பலம் 1, கடுகு ரோகிணி பலம் 2, சிற்றரத்தை 2, கிட்டம் பலம் 1/2, தண்டவாளம் பலம் 1, இதுவெல்லாம் இடித்து வத்திரகாயம் பண்ணி வைத்துக்கொண்டு எலுமிச்சம் பழத்தை நாலு கிண்ணமாய் பிளந்து விரை எடுத்துப் போட்டு இந்த மருந்தை கிண்ணத்தில் அடைத்து பழகின எண்ணெய் கலயத்தில் வைத்து வெல்லம் பாகு காய்ச்சி அதுபோல விட்டு எண்ணை அதுமேலே வாயொடு மூடி வேடு கட்டி அடுப்பின் கீழ் புதைத்து நாலு விரல் மண் மேலே போட்டு அதன் மேல் அடுப்பு வைத்து எரிக்கவும். இதன்படி எட்டு நாள் எரிக்கவும். வீக்கம் வடியும். இரத்தம் வரும். ஒரு மண்டலம் தின்னவும். கசப்பு, புளிப்பு தவிர்க்கவும். கை கண்டது.

மன்மத சிந்தாமணி லேகியம் தாதுவிருத்திக்கு கைகண்டது

துவரம் பருப்பு, முருங்கைக்காய், கத்திரிப் பிஞ்சு, முளைக்கீரை, அரைக்கீரை, குரவைக் கருவாடு, வெள்ளாட்டு உப்புக் கண்டம், கொடிவேலி வேர் சேர்1. கடல் நுரை சேர் 1, கடுக்காய் சேர் 2, தான்றிக்காய் சேர் 2, நெல்லிமுள்ளி சேர் 2, திப்பிலி சேர் 2, கொட்டைக் கரந்தை சேர் 1, கருஞ்சீரகம் சேர் 1, அரத்தை சேர் 1, பூனைக்காலி விதை சேர் 1, நிலப்பனைக் கிழங்கு சேர் 10, இலவம் பிசின் சேர் 1/2, கோரோசனை பலம் 1/2, கிராம்பு

பலம் 2, சாதிக்காய் பலம் 3, சாதிப்பத்திரி பலம் 2, தண்ணீர்விட்டான் கிழங்கு சேர் 10, குங்குமப்பூ பலம் 1/2, நீர்முள்ளி விதை சேர் 1/4, வெந்தயம் சேர் 1, ஆலாத்தி கற்பூரம் பலம் 1, சீரகம் சேர் 1, சுக்கு சேர் 1, குரோசாணி ஓமம் சேர் 1/2, அமுக்கராக் கிழங்கு சேர் 2, தேசாவரம் கண்டதிப்பிலி சேர் 1, வாலுளுமுவை. .... கோட்டம் சேர் 1/2, கிழங்கு சேர் 1, பூமிச்சக்கரை கிழங்கு சேர் 2, முந்திரிகை .... ஏலம் சேர் 1/4, சதகுப்பை சேர் 2, கையாந்தகரை விதை சேர் 1, கொத்தமல்லி விதை 2, வாய்விளங்கம் சேர் 1/2, பரங்கிப்பட்டை சேர் 2, வேம்பாடம் பட்டை சேர் 2, அக்கிரகாரம் சேர் 1/2, சன்னலவங்கப்பட்டை சேர் 1, சாம்பிராணி சேர் 1, பச்சைவெட்டுக் குங்குலியம் சேர் 1/2, பேரீச்சம்பழம் சேர் 2, இவையெல்லாம் நாலு பங்காய் பகுத்து எடுத்து இம்பூரல் வேர், கருப்பட்டி துலாம் 2, வேலம்பட்டை, தூக்கு 2. பெருங்காயம் சேர் 1/4, இவையெல்லாம் நாலு பங்காய் பகுத்து எடுத்து வைத்துக் கொண்டு ஒரு பங்கு மாத்திரம் எடுத்து வேலம் பட்டையும், பனைப்பட்டியும் ஊறப்போட்டு எட்டுநாளான பிறகுக் கடைத்திரவியமும் கூடபோட்டுப் பத்தாம் நாள் பானையைக் கட்டி வடிக்கவும். மதுயிரங்கும். அதை எடுத்து பத்திரமாய் மூடிவைத்துக் கொண்டு காலையில் ஒருபலம் குடிக்கவும். வாத சூலை, சூசிகாச் சூலை, சேத்தும கப சூலை, அந்திர வாய்வுச் சூலை, ஊத முக வாயுச் சூலை, பாரிச சூலை, உதரச் சூலை, கழல் யெரு சூலை, இருது ரோக சூலை, விரைவாத சூலை, கம்பவாதம், சீத சுரம், வாயு எனப் பட்ட தெல்லாம் தீரும். இந்த மருந்து தானே வகைக்கு பலம் 1/4, வாங்கி வத்திரகாயம் பண்ணி மதுரம் தேன், நெய், பால் சேர்த்து பாகு காய்ச்சிச் சூரணம் போட்டு லேகியம் பண்ணித் தின்ன, மன்மத சிந்தாமணி லேகியம் தாது விருத்தியாய் இருக்கும். சிறிது உணவருந்தியபின் தின்னவும்.

வேறு

பீனிசத்துக்கு எண்ணெய். கைகண்டது.

விளக்கெண்ணை சேர் 2, காட்டு மல்லிகைச் சாறு சேர் 1, ஈர வெங்காயச் சாறு சேர் 1, ... இவை மூன்று சாறும் சட்டியில் விட்டுக் ...... காய்ச்சி அதில் விளக்கெண்ணை சேர் 2 விட்டு மெழுகு பதமானபோது கடைத்திரவியம் கிராம்பு, திப்பிலி, கருஞ்சீரகம், முலைப்பால் பலம் 1, வகைக்கு வராகனெடை 1, இதுபோட்டு இறக்கிவைத்துக் கொண்டு காலையில் ஒரு கரண்டி தின்னவும். ஆதண்ட இலை, வெண் நொச்சியிலை, கருப்பு வெற்றிலை, பச்சை மஞ்சள், வெள்ளாட்டுப் பால், இவை வகைக்குப் பலம் 2, தண்ணி தெளித்துச் சாறு சேர் 2, ஒரு எண்ணெய் சட்டியில் காய்ச்சி முக்கால் சேர் ஆனபின் நல்லெண்ணெய் சேர் 2 விட்டு மெழுகு பதத்தில் வருகிறபோது பால் பலம் 2, மிளகு பலம் இரண்டும் சேர்த்துப் பதத்தில் எரித்து மூழ்கவும். நீர் பீனசம் நிற்கும். கை கண்டது.

வேறு

வட்டதுத்தி வேர் சேர் 3 க்கு எட்டு படி தண்ணீர் விட்டு ஒருபடியாய்க் காய்ச்சி அதில் நல்லெண்ணை சேர் 2, பால் சேர் 1, இது மெழுகு பதத்தில் வருகிறபோது திரவியம், கடுக்காய், மிளகு, வேப்பம் பருப்பு, மஞ்சள், நெல்லிப் பருப்பு, இது வகைக்கு வராகனெடை 3, கூட்டி பக்குவமாய் எரித்து வைத்துக் கொண்டு மூழ்கி வரவும். பீனிச வாயு, இருமல் இவை தீரும். கை கண்டது. மூழ்கும் போது புளி தவிர்க்கவும்.

வேறு

பிள்ளையில்லாத பேருக்கு எண்ணெய்

விரலிமஞ்சள் சாறு சேர் 1, விளக்கெண்ணெய் சேர் 2, இது இரண்டும் சேர்த்துப் பதத்தில் எரித்து வைத்துக் கொண்டு வீட்டுக்கு தூரமாய்ப் போய் மூழ்கும் அன்றைக்கு முதல் மூன்றுநாள் இந்த எண்ணெய் குடிக்கவும். உப்பு இல்லாமல் பத்தியம் பண்ணவும். மறுபத்தியம் உப்பு வறுத்துக் கூட்டவும். துவரம் பருப்பு, முருங்கைப் பிஞ்சு, கோவளம் பிஞ்சு, முளைக்கீரை இப்படி பத்தியம் மூன்று குளிமுறை கொடுக்கவும். பிள்ளை உண்டாவாள். கை கண்டது.

வேறு

மேகத்துக்கு எண்ணெய்

இண்டிலைச் சாறு, காட்டு மல்லிகைச் சாறு, ஈர வெங்காயச் சாறு, வகைக்குப் பலம் 2, நல்லெண்ணெய் சேர் 2, தீபாக்கினியாய் எரித்து மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு காலையில் ஒருகரண்டி எண்ணெய் தின்னவும். மேக உட்ணம் தீரும். சிலேத்தும அத்தி சுரம் தீரும். கை கண்டது.

ஆறுவகை மூலம் அத்திச் சுரத்துக்கு எண்ணெய் கொடுக்கவும்

விளக்கெண்ணெய் சேர் 1, அமுக்கரா வேர் சேர் 5, பிரண்டை வேர் சேர் 10, புளி நரளைக்கிழங்கு சேர் 5, சித்திரமூலம் சேர் 5, புலிதுடைக்கி வேர் சேர் 10, இவையெல்லாம் இடித்து இரண்டு பானையில் அடைத்து வைக்கவும். இருபத்தைந்து படி தண்ணீர் இரண்டு

பானையிலும் விட்டு எரித்துக் குறுணி தண்ணீர் ஆன பிறகு இறுத்துக் கொள்ளவும். மறுபடி காய்ச்சி நாழி தண்ணீரான பிறகு, எண்ணெயில் விட்டுக் காய்ச்சி சாணி பதத்தில் திரவியம் மஞ்சள் பலம் 1, மிளகு பலம் 2, சுக்கு பலம் 1, வெந்தயம், சிறுவேம்பாடம் பட்டை சேர் 1, எலுமிச்சம் பழம் 30, இவையெல்லாம் போட்டு ஒருநாள் ஊறின பிறகு மறுநாள் இளங் கொதியில் இறக்கவும். பிறகு ஒருகலயத்தில் கற்கம் பொடி பண்ணி போட்டு கிராம்பு பலம் 1, சாதிக்காய் பலம் 1, ஏலம் பலம் 1, ஒட்டிவிரை பலம் 1, கட்டி வடித்து வைத்துக் கொண்டு சகல மேகத்தின் மேல் சரீரத்தில் ஊற்றி இரண்டு தரம் 1/4, குருபோகக் கொடுக்கவும். எட்டு நாளைக்கு ஒருதரம் கொடுக்கவும். பத்தியம் கைப்பு, புளிப்பு தவிர்க்கவும். சகல ரோகமும் தீரும். கைகண்டது.

வேறு

கருபத்து உருண்டை அட்ட குன்மத்துக்கும் சகல வாயுக்கும்

சிறுகீரை வேர் சாறு சேர் 1, ... வராகனெடை 31/4, குங்குமப்பூ வராகனெடை 4, தெறு அம்பர் வராகனெடை 4, கத்தூரி வராகனெடை 1 1/2, சாதிக்காய் வராகனெடை 6 1/2, சாதிப்பத்திரி வராகனெடை 4 1/2, கிராம்பு வராகனெடை 6 1/2, திப்பிலி வராகனெடை 3 1/4, கண்டத்திப்பிலி வராகனெடை 3 1/4, குரோசாணி ஓமம் வராகனெடை 4 1/2, வேட்பாலை அரிசி வராகனெடை 3/4, கசகசா வராகனெடை 3 1/4, பெரும் பருத்திப் பருப்பு வராகனெடை 3 1/4, வாலுளுழுவை அரிசி வராகனெடை, நெய்பலம் 1/4, போட்டுக் காய்ச்சி அந்த நெய்யை மாத்திரம் இறுத்துச் சேர்த்துக் கொள்ளவும். மிருக்கான் பணவிடை 2, நரிக்கொன்றைக் காயின் கோது

வராகனெடை 3 1/4, மருள் ஊமத்தங்காய் விதை வராகனெடை 3 1/4, முஞ்சாறு விட்டு அரைத்து பூவந்தி விரைப் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு சிறுக்கீரைச் சாறு பலம் 1, பெருஞ்சீரகம் வராகனெடை 3, சீனிச்சக்கரை வராகனெடை சாறு இவை மூன்றும் அரைத்துப் பிழிந்து அந்த பாகத்தில் உரைத்துக் கொடுக்கவும். புருச தாது ஏறிப்போனால் பெண்பிள்ளை வறடியாயிப் போனால் சூலைக்கட்டு மாச கந்தக பாசாணத்துக்கும் மாதவிடையில்லாத பெண்ணுக்கும் காலையில் சேர் 5, சாப்பிட்ட பிறகு மத்தியானத்தில் கொடுக்கவும். கைகண்டது.

வேறு

தாதுவிருத்திக்கு மருந்து

தாதுவுக்கு குரோசாணி ஓமம், மருள், ஊமத்தம் விதை, நீர்முள்ளி விதை, ஆனை நெருஞ்சி விதை, சிறுநெருஞ்சில் விதை, நிலப்பனைக் கிழங்கு, காஞ்சொரி விதை, பெருநறுவிலி, தூதுவளம் வேர் வகைக்கு ஒரு சமன் கல்கண்டு மருந்து நிரைக்குப் பாதி நெய் சேர் 1 தேன் சேர் 1/2, காலையில் வெருகடிப்பிரமாணம் கொள்ளவும். பசுவின் பால் சேர் 1, குடிக்கவும். ஆட்டுக் கறி, நெய், பால் தின்னவும். புளிப்பு தவிர்க்கவும்.

வேறு

மன்மத சிந்தாமணிப் பணியாரம்

......பலம் 1, சாலாமிசிரி பலம் 1, பாதாம் விதை பலம் 1/2, இசுப்புக்கோல் பலம் 1/2, இந்தால் கடி பலம், குட மலங்கு விதை பலம் 1, நீர் முள்ளி விதை பலம் 2, கையாந்த கரை விதை பலம் 5, சிறுகாஞ்சோரி விதை பலம் 5, துளசி விதை பலம் 2, திப்பிலி நிலப்

பனைக்கிழங்க பலம் 10, செங்கழுநீர் கிழங்கு பலம் 2, நெய்தலக்கிழங்கு பலம் 2, ஆம்பல் கிழங்கு பலம் 2, அமுக்கிராக் கிழங்கு பலம் 2, சிற்றரத்தை பலம் 1/2, ஆவாரம் விதை பலம் 2, பூனைக்காலி விதை பலம் 1/2, சாரப்பருப்பு பலம் 1, துத்தி விதை பலம் 1, நத்தைசூரி விதை பலம் 1, சிறுவாகை பலம் 1, கொட்டக் கரந்தை விதை பலம் 1/2, நன்னாரி வேர்ப்பட்டை பலம் 1/2, வேட்பாலை அரிசி பலம் 1, கோதுமை அரிசி படி 1/2, மூங்கிலரிசி படி 1/4, முருங்கை விதை பலம் 2, கசகசா பலம் 2, சீரகம் பலம் 1, பெருஞ்சீரகம் பலம் 1, முந்திரிகை பழம் பலம் 1, பேரீச்சம் பழம் பலம் 2, கண்டத்திப்பிலி பலம் 1, தினை அரிசி மாவு படி 1/2, சாமை அரிசி மாவு படி 1/2, கூகை நீர் பலம் 1, கொன்றைசின்னி பலம் 1, கோட்டம் பலம் 1, அதிமதுரம் பலம் 1/2, சன்ன இலவங்கப்பட்டை பலம் 1/2, தாளிசபத்திரி பலம் 1/2, சிறுநாகப்பூ பலம் 1/2, சாதிக்காய் பலம் 1, சாதிப்புத்திரி பலம் 1/2, கிராம்பு பலம் 1/2, குரோசாணி ஓமம் 1/2, குங்குமப்பூ பலம் 1/4, திப்பிலி பலம் 1/2, சுக்கு பலம் 1/2, மிளகு பலம் 1/2, துறாலெப்பை பலம் 1, பற்பாடகம் பலம் 1/2, வெண்காயவிதை பலம் 1, பறங்கிப்பட்டை பலம் 1, நாகப்பூ பலம் 1/4, சிறுதேக்கு பலம் 1/2, நாயிராஞ்சி வதை பலம் 2, விளக்கெண்ணை சேர் 2, நிலாவாரை மேலப்பட்டை வராகனெடை 2, அதிமதுரம் வரா்கனெடை 1, செண்பகப்பூ 1, செங்கதாரிப்பட்டை வரா்கனெடை 1, அரத்தை வராகனெடை 1, பெருலவங்கப் பட்டை வராகனெடை 1, ஏலம் வராகனெடை 1, கிராம்பு வராகனெடை 1, சாதிக்காய் வராகனெடை 1, சாதிப்பத்திரி வராகனெடை 1, இதுவெல்லாம் பொடி பண்ணி எண்ணெயில் போட்டு சூரியப்புடம் கலயத்தில் வைத்து வைக்கவும். அதை எடுத்து காலையில் ஒரு வராகனெடை கொள்ளவும்.

தீரும் வியாதி: கபம், இருமல், வயிறு வியாதி, சுவாசம், மேகம், சூலை, அக்கினி மந்தம், வாதம், சோகை, விக்கல், ருதுரோகம், அந்திர வாயு, மலசோகை இவை எல்லாம் தீரும்.

இதற்கு பத்தியம்: கத்திரி பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, புடலம் பிஞ்சு, துவரை பருப்பு, உப்புக்கண்டம், குரவை, கெளுத்தி, விரால்.

வேறு

பதினெட்டுக் கிரந்தி சூலைக்கட்டுக்கும் கைகண்டது வல்லாதி இலேகியம் சூலைக்கட்டுக்கு மருந்து

சேங்கோட்டை மேல் குடுமி போக்கியது சேர் 3/4, நீரடி முத்து ஓடுப்போக்கியது பலம் 2 1/2, கத்தூரி மஞ்சள் பலம் 1, கார்த்திகை கிழங்கு பலம் 1/4, பிராமண நாபிபலம் 1/2, சுத்தியானது நாபி பணவிடை 2 1/2, எள்படி 1/2, ஆக இவை எல்லாம் கல்லுரலில் போட்டுக் கடப்பாரை கொண்டு நன்றாய் தவிடு போல் இடித்து வைத்துக் கொண்டு ஒருகழக் கோடிக்காய் பிரமாணம் தின்னவும். இந்தப்படி மூன்று சாத்திராத் தின்னவும். பத்தியம் வெள்ளாட்டு உப்புக் கண்டம், நெய் கத்திரிப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, முளைக்கீரை, அரைக்கீரை, துவரம் பருப்பு, வரால் கருவாடு, கருவைக் கருவாடு, இவை யெல்லாம் ஆகும். கை கண்டது.

பற்றுக்கு மருந்து பெருவியாதிக்கு மருந்து

சேங்கொட்டை சேர் 3/4, கத்தூரி மஞ்சள் பலம் 1, எள்படி 1/8, சூத்திர நாபி வராகனெடை 1/4, நாபி வராகனெடை 1/2, நீரடிமுத் அதன் உள்பருப்பு பலம் 1 1/2, இந்த ஏழுவகை மருந்தும் ஒரு சாமம் விடாமல் இடிச்சு எடுத்து ஒரு சாமம் விடாமல் அரைத்து எடுத்து ஒரு எண்ணெய்க் கலயத்தில் வைத்துக் கொண்டு

காலையில் ஒரு கடலைப் பிரமாணம் முழுங்கவும். இந்தப்படி நாற்பது நாள் தின்னவும். இது தீரும் வியாதி சூலை பிடிப்புத் தீரும். பெருவியாதியின் மேல் கண்ட தடிப்புகளெல்லாம் தீரும். குன்மங்கள் எல்லாம் தீரும். வாய்வு ரோகம் முதலியன எல்லாம் தீரும். இச்சாப்பத்தியம்.

தொடை வாழைக்குப் பற்று கைகண்டது

குதிரை சாற்பாதுக்கு முதல்நாள் கடலைப் பிரமாணம் 5 நாள் இரதுண்டு கடலைப்பிரமாணம் நாற்பது நாள் உயர்த்தி நாற்பது நாள் இறக்கி கொடுக்கவும். சாற்பதும் தீரும். துடைவாழைக்கு பத்து கைகண்டது.

கேழ்வரகு பலம் 1 கொண்டுவந்து கறுக வறுத்துக் குளிர ஆற்றி அம்மியில் வைத்து மான்செவியிலை சாந்துபோலே அரைத்து தொடை வாழையில் பூசியிருக்க பிடிக்கும்.

வேறு

குயவனின் பச்சை மண் பாண்டம் உடைந்த துண்டு ஒருபலம் அம்மியில் வைத்து மருள் சாறு வார்த்து அரைத்து சாந்து ஆன பிறகு குக்குலு வராகனெடை 1/4, ஆளிவிதை வராகனெடை 1/4, வைத்து அரைத்துப் போடவும். சகல கட்டி எனப்பட்டது எல்லாம் அழுகிப் போம். கைகண்டது.

வேறு

கட்டிகள் திரண்டதின் பிறகு தாமரை இலையும் மஞ்சளும் இடிச்ச வளக்கெண்ணையில் வராகனெடை 2, விட்டு வதக்கிக் கட்டவும். கண்டிப்பு திரண்டு கரையும்.

வேறு

பேய்பீர்க்யிலையும் ஒத்தடம் போட்டுக் கட்டவும்.

வேறு

அட்டா இலையும் வசம்பு உள்ளி, மஞ்சள், நறுக்கி விளக்கெண்ணையில் போட்டு வதக்கி எடுத்து ஒத்தடம் போட்டுக் கட்டவும்.

வேறு

மேகம், மூலம், மூல பவுத்திரம், கிரிச்சரம் நெய் கைகண்டது.

கரிய போளம், வசம்பு, ஆளிவிதை, கடுகு, மஞ்சள், குக்குலு, சாதிலிங்கம், அரிதாரம், காட்டுச் சீரகம், கழற்சி பருப்பு இது வெல்லாம் வகைக்கு வராகனெடை 1/2, இலைக் கள்ளியிலை, முருங்கப்பட்டை, மாவிலங்கப்பட்டை, கமுகு, (நீர்) முள்ளி இவையெல்லாம் துவைத்து சாறு பிழிந்து வைத்துக்கொண்டு கேழ்வரகு வராகனெடை 2, கருக வறுத்து குளிரப்போட்டு அரைத்து கொதிக்கவைத்து வீக்கத்துக்கு மேலே பூசவும். பழம்பாசி கண் பூண்டு பொன்னாங்காணி சிறுக்கீரைத் தகரை மணத்தக்காளி பெருந்துத்தி, சீதேவி, செங்கழுநீர், கண்டங்கத்திரி, செப்பு, நெரிஞ்சில் சிறுபுள்ளடி, தூதுவளை தாழி, நெரிஞ்சில், ஆனை நெரிஞ்சில், சிற்றாமுட்டி, சீந்தில் கொடி, பேராமுட்டி வேர்ப்பட்டை, பற்பாடகம், விட்ணுகிரந்தி, கீழாநெல்லி, அரைவல்லாரை நிலக்குமுளு நிலப்பனை, நிலாவிளா முசுமுசுக்கை, ஓரிலைத் தாமரை வகை ஒன்றுக்கு பலம் 1, ஆலம் கொழுந்து பலம் 1, குட்டி வேலம்பட்டை பலம் 1, புளிச்சாறுப்படி 2, பசுவின் நெய் படி 3, ஏலம் கிராம்பு , திப்பிலி, சீரகம், சாதிக்காய், சாதிபத்திரி, குங்குமப்பூ, கோரோசனை, அதிமதுரம், அக்கிரகாரம், கோட்டம், சிறுநாகப்பூ, கொத்தமல்லி விதை வகைக்கு வராகனெடை 2, இதுவெல்லாம் கூட்டி எரிந்து வைத்துக் கொண்டு காலையில் மூன்று வராகனெடை நெய் தின்னவும். இதில் தீரும் வியாதி அட்ட மூலமும், இருபத்தோரு மேகமும், சயசுரமும் அத்தி சுரமும், மஞ்சக்காமாலை, பயித்திய வெட்டை இவை எல்லாம் தீரும். இச்சா பத்தியம் வேறு.

சுழிகன் எண்ணெய்

சுழி கணத்துக்கு எண்ணெய் விளக்கெண்ணெய் சேர் 1/2, முசுறுமுட்டை படி 1/4, ஆயில்பட்டை பலம் 1, சிற்றரத்தை பலம் 1/2, கருஞ்சீரகம் பலம் 1/2, வசம்பு பலம் 1/4, வெள்ளுள்ளி பலம் 2, வழித்தப் பிசின் பலம் 1/4, திப்பிலி பலம் 1/4, வெங்கார பொரி வராகனெடை 1, இவை யெல்லாம் கூட்டிப் பொடியாக்கி எண்ணையில் போட்டு அடுப்பின் மேல் வைத்து தென்னாலை போட்டு எரியிட்டு முட்டை ரசம் வத்தின பிறகு இறக்கி' வச்சுக் கொண்டு சுழி கண்டபிள்ளைக்குக் காலையில் ஒரு காசிடை வார்க்கவும். உப்பில்லாமல் பத்தியம் வைக்கவும். மறுநாள் உப்பு வறுத்துக் கொள்ளவும். கைகண்டது.

வேறு

வெள்ளைப்பாசாணக் கட்டி பலம் 5, ஒரு தேங்காய் துருவலும் எருமைசாணமும் பிசைந்து உருண்டை உருட்டி அதில் புதைத்து பத்து வறளியில் புடம் போடவும் நெய்யில் உரைத்து குன்றிப் பிரமாணம் மூலத்தில் பூசவும். முளைக்கீரையும் இது கை கண்டது.

வேறு

சகல வியாதிக்கும் சுரத்துக்கும் காகோடா சூழி உண்டை

பச்சைநாபி ரசம், அரிதாரம், துத்தம், கௌரி பாசாணம், வெள்ளைப் பாசாணம், நெல்லிக்காய், கந்தகம், சுரைக்காய், கந்தகம், துருசு, திபபிலி, திப்பிலிமூலம், கார்போக அரிசி, மரமஞ்சள், அக்கிரகாரம், சுக்கு, மிளகு, கருஞ்சீரகம், வழித்தப் பிசின், இந்துப்பு,

கடுகு ரோகிணி, சோமனாதப் பெருங்காயம் கடுக்காய், நெல்லிமுள்ளி, தான்றிக்காய், ஆமணக்குப் பருப்பு, நிர்விசம், மனோசீலை, கோரோசனை, செங்கழுநீர், எட்டிக்கொட்டை, கோட்டம், அதிமதுரம், செண்பகமொட்டு, விழலரிசி, வெட்பாலை அரிசி, மகிழம் கொட்டை, எருக்கம் வேர்ப்பட்டை, கழற்சிக்கொடி பருப்பு, இலவங்கப்பட்டை இவை எல்லாம் ஓரொன்று கழஞ்சு கூட்டிக் கொண்டு இந்த மருந்து அரைக்கும் முறை வெள்ளாட்டுக் கோமியம் வார்த்து நாளொன்றுக்கு ஒரு சாமம் குறையாமல் ஐந்துநாள் அரைக்கவும். பதினைந்து நாள் அரைத்துக் கொண்டு மறுபடி ஐந்துநாள் அரைக்கவும். இருபது நாள் ஆன பிறகு மிளகுப் பிரமாணம் உருண்டை பண்ணி புது ஓட்டில் வைத்து நிழலில் உலர்த்தி எட்டாம் நாள் எடுத்து சிமிழில் அடைத்து வைத்துக்கொள்ளவும். சகல வியாதிக்கும் சீத சுரத்துக்கும் நொச்சிஇலைச் சாற்றில் கொடுக்கவும். ஈரல் வலிக்கு பூனை விட்டையில் கொடுக்கவும். வெண்ணை கூட்டிக் கொள்ளவும். ஈளை, இருமலுக்கு விளாம் பழச்சாற்றில் கொடுக்கவும். மலமுங் கட்டினால் வசம்பைச் சுட்டு விளக்கெண்ணையில் கலந்து, உண்டை கொடுக்கவும். உளமாந்தைக்கு முளை நெல்லைத் துவைத்து அதில் கொடுக்கவும். எரி குன்மத்துக்கு நல்ல தும்பைச் சாற்றில் கொடுக்கவும். முகக் கூனுக்குக் கும்மட்டிக் காய் சாற்றில் கொடுக்கவும். விசத்துக்கு குப்பைமேனிச் சாற்றில் அஞ்சனம் இடவும். எருக்கம் பாலில் ஒரு உண்டை கொடுக்கவும். விரியன் பாம்புக்கு பவழக்கனிச் சாற்றில் கொடுக்கவும். இலுப்பைப்பூ சாற்றில் அரைத்து வீக்கத்துக்குப் பூசவும். நட்டுவாக்கிளிக்கு உண்டையும் நுனி மஞ்சளும் எருமை வெண்ணையில் தின்னவும். தேளுக்கு வெற்றிலைச் சாற்றில் உரைத்துக் கொட்டுவாயிற் தடவவும். விக்கலுக்கு பிரமியச் சாற்றில் கொடுக்கவும். இரத்த

பிரமியத்துக்கு சங்கிலைச் சாற்றில் நற்சீரகம் அரைத்து உண்டை கூட்டிக் கொள்ளவும். இவ் வியாதிக்கெல்லாம் அனுபானத்துடன் கொடுக்கவும்.

வேறு

மாந்தத்துக்கு ஓமபாவனை கைகண்டது

ஓமம் சேர் 1/2, ஐந்து தரம் வறுத்து ஐந்து தரம் அரைக்கவும் வசம்பு பலம் 2, கரிச்சுட்டு கூட வைத்து அரைத்துண்ண மாந்தம், உப்புசம், பேதி, செரியாமல் கழியிரது இதுகளுக்கு ஒருபணவிடை கொடுக்கவும்.

தீராத ரத்தத்துக்கு எண்ணெய்

கரட்டொனான் முத்தினது கொண்டு வந்து நல்லெண்ணை சேர் 1/2, ஒரு எண்ணெய் சட்டியில் வார்த்து அடுப்பில் வைத்து எரிகிறபோது ஓணானைப் போட்டு நன்றாய் பொரிந்ததும் ஓணானை எடுத்துப் போட்டு அந்த எண்ணையில் சேங்கோட்டைக்கு மூக்கு நறுக்கிப் போட்டுப் பத்துக் கோட்டை (அளவு) அந்த எண்ணெயில் தைலம் இறங்கின பிறகு சேங்கோட்டை எடுத்து போட்டுவிடவும். அந்த எண்ணெயில் போடுகின்ற மருந்துகள். மல்லி வராகனெடை3, மிருதாசிங்கி வராகனெடை 3, இது இரண்டையும் பொடி பண்ணிப் போட்டு இளங்கொதியில் இறக்கி ஒரு பீங்கான் பாத்திரத்தில் வைக்கவும். தீராத தாகத்துக்கு துணியில் தடவிப் போடவும். எப்படிக் கொடுத்தாலும் தீரும். கைகண்டது.

வேறு

சகல குன்மத்துக்கு சாற்மருந்து கை கண்டது.

கடாக் கன்று போட்ட எருமைக் கோமியம் படி 1, இந்தக் கோமியம் ஒரு பானையில் வைத்து அடுப்பில் வைத்து எரியிட்டு ஒரு படி ஆனபிறகு வசம்பு சேர் 1, மஞ்சள் சேர் 1, இது இரண்டும் பொடி பண்ணி வடிக்கட்டிக் கொண்டு அந்தக் கோமியம் ஒருபடியும் வார்த்து அரைத்து எவாச்சாரம் வராகனெடை 3, கூடப் பொடி பண்ணி இதுவெல்லாம் அந்தக் கோமியம் வார்த்து நன்றாக அரைத்து போடவும். போட்டுக் கிளறி எரித்து எடுத்து வைத்துக் கொண்டு வாயுவின் பேரில் கண்ட சகல ரோகத்துக்கு ஒரு சுண்டைக் காய் பிரமாணம் தின்னவும். இச்சாபத்தியத்துடன் தின்னவும். குன்மங்கள் வாய்வுகள் அக்கினி மாந்தம், மூலக்கிராணி, மேகவாய்வு, மேகம், அந்திர வாயு, விரைவாதம், சுரோணித வாதம் இவை எல்லாம் தீரும்.

கணத்துக்கு எண்ணெய் கைகண்டது

தகரையிலை கருவேலிஇலை, பழம் பாசில் கோவையிலை, செப்பு நெரிஞ்சியிலை, வகைக்கு வராகனெடை 2, விளக்கெண்ணை அவுச் சூதத்தின் சேர் 2, கடைத்திரவியம், சாதிக்காய், கிராம்பு, அதிவிடையம், கருஞ்சீரகம், கம்பிபிசின், ஏலம் வகைக்கு வராகனெடை 1/2, இதுவெல்லாம் பொடி பண்ணிப் போட்டு சூரிய புடமாய் வைத்து எடுத்துக் கொண்டு கண்கண்ட பிள்ளைகளுக்கு இந்த எண்ணெயைக் காலையில் ஒரு வராகனெடை கொடுக்கவும். இதில் தீரும் வியாதி: அழல்கணம், வரட்கணம், இரத்தக் கணம், சுரக்கணம், சகல கணங்களும் தீரும். இந்த எண்ணெய் கொடுக்க கைகண்டது.

வேறு

அசுவகெந்தாதிச் சூரணம்

கிராம்பு வராகனெடை 1, சிறுநாகப்பூ வராக னெடை2, ஏலம் வராகனெடை 3, இலவங்கப்பட்டை வராகனெடை 4, சீரகம் வராகனெடை 6, கொத்தமல்லி வராகனெடை 7, மிளகு வராகனெடை 8, திப்பிலி வராகனெடை 16, சுக்கு வராகனெடை 31, அமுக்கரா வேர் வராகனெடை 94, ... பூரிச்சக்கரை வராகனெடை 28, ஆக மருந்து நிறை வராகனெடை 78, இதுக்குத் தீரும் வியாதி: அரோசகம், பாண்டு ரோகம், இரத்தக் காசமும், சத்தியும், பயித்தியம், பாண்டுவும், அன்னதோசம், வாய்வு பிடிப்பு, இருமலுடன் அத்தி சுரம், தாபம், குமர கண்டன தொந்தக் கிராணி குன்மம் எட்டும், சேத்தும காசம்சுவாசம் இவை தீரும். கை கண்டது.

வேறு

சுழிமாந்தசன்னிக்கு உருண்டை

திருகு கள்ளிப்பால் சேர் 1, சாம்பிராணி பலம் 3, இது இரண்டையும் அம்மியில் வைத்து மூணு சாமம் அரைக்கவும், மறுபடி எடுத்து குன்றிப் பிரமாணம் உருட்டி வயிற்றில் எந்த விப்புருதி இருந்தாலும் கொடுக்கவும். கைகண்டது.

சூசிகா வாய்வுக்கு நார்த்தங்காய் கடுகு

கைகண்டது சகல வாய்வுக்கும்

பஞ்சணவம் வராகனெடை 5, சீரகம் வராகனெடை 1, வெந்தயம் வராகனெடை 1, கடுகு வராகனெடை 1, ஓமம்

வராகனெடை 1, இது வெல்லாம் எலுமிச்சம் பழச்சாறு வார்த்து பிசின் போல் அரைத்து நார்த்தங்காயை கிங்கினி வாய் போல் அரைத்து அதிலரைத்த மருந்தை உள்ளே அடைத்து ஒரு சட்டியில் வைத்து வெள்ளாட்டுப் பால் சேர் 1, பசுவின் கோமியம் சேர் 1, வெள்ளாட்டு கோமியம் சேர் 1, இது மூன்றும் வார்த்து சுவாலையாக எரித்து சுண்டின பிறகு அம்மியில் வைத்து அரைத்து தூதுவளங்காய்ப் பிரமாணம் உருண்டை பண்ணி முதல் நாள் காலையில் இரண்டு உருண்டை தின்னவும். மறுநாள் காலையில் ஒரு உருண்டை தின்னவும். இதன்படி ஏழுநாள் கொடுக்கவும். இதற்கு பத்தியம் கத்திரிப் பிஞ்சு, தூது வளங்காய், தோலிக் கருவாடு, விரால் கருவாடு, வெள்ளாட்டு உப்புக் கண்டம், வெள்ளாட்டு பால் கறி, புளி கசப்பு, புகையிலை தவிர்க்கவும்.

வேறு

பயித்தியத்துக்கு மருந்து கூழ்பாண்ட லேகியம்

பூசணிக் கொழுந்து, பூசணிக்காய், புளியங் கொட்டைப் போல் நறுக்கி உலர்த்தி நெய்யில் வறுத்துப் பொடி பண்ணிப் பொடி பண்ணிய தூள் பசுவின் பால் கண்டுச் சர்க்கரையைக் கூட்டி தீயாமல் துழாவிக் காய்ச்சிக் குழம்பாக்கி அதில் கறு மிளகு சீரகம், திப்பிலி, ஏலம், இலவங்கம், இலவங்கப்பத்திரி வகைக்கு ஒருபலம் பொடிப் பண்ணிப் போட்டு நன்றாய் சலித்து வைத்து, வெருகடிப் பிரமாணம் இரண்டு நேரமும் சாப்பிடவும்.

தீரும் வியாதி: காசம், உடம்பு மெலிவு, மேகத்தால் மெலிந்தவர்கள், நோவால் மெலிந்தவர்கள், சிறை இருந்து மெலிந்தவர்கள், உடம்பு வரண்டு மெலிந்தவர்கள், மனம் நொந்து மெலிந்தவர்கள்,

பலவித்தால் மெலிந்தவர்கள் நோய் தீர எட்டு நாளைக்கு நசியம் பண்ணவும். குறையை எடுத்து மேலெங்குந்து வாலையிடவும். பயித்தியம் தீரும். நிலவேரும் முசுமுசுக்கைச் சாற்றில் ஒருவேளை ஒண்ணுக்கு கொட்டாக்.... அத்தனை அரைத்த விழுது கால் படி சாற்றில் உள்ளுக்கு கொடுக்கவும். மூன்று பொழுது தலைக்கு எலுமிச்சம்பழம் தேய்க்கவும். பத்துக்கூடும் தண்ணீர் விடவும். பயித்தியம் தீரும். வேறு கைகண்டது.

பேதி, கடுப்புகள் தீரும். கைகண்டது.

அசுவகெந்திச் சூரணம்

வெங்காரம் வராகனெடை 1 எடுத்துப் பொரிக்கவும். திப்பிலி வராகனெடை 1, மிளகு வராகனெடை 1, கிராம்பு வராகனெடை 1, கண்டத்திப்பிலி வராகனெடை 1, சுக்கு வராகனெடை 1, சிற்றரத்தை வராகனெடை 1, கண்டங்கத்திரி விதை வராகனெடை 1, இதுவெல்லாம் பொன் வறுவலாய் வறுத்து அரைத்து வடிக்கட்டிக் கொண்டு வராகனெடை 1/2, தூள் எடுத்துக் கொண்டு தேனில் மத்தித்து இரண்டு வேளையும் சாப்பிடவும். வேணும். இதுக்கு பத்தியம் இச்சா பத்தியம்.

வேறு

கிராம்பு வராகனெடை சிறுநாகப்பூ வராகனெடை ஏலம் வராகனெடை 3, இலவங்கப் பட்டை வராகனெடை 4, இலவங்கப் பத்திரி வராகனெடை 5, சீரகம் வராகனெடை 6, கொத்தமல்லி விதை வராகனெடை 7, மிளகு வராகனெடை 8, திப்பிலி வராகனெடை 16, சுக்கு வராகனெடை 32, அமுக்கிரா வேர் வராகனெடை 64.. பூரிசர்க்கரை வராகனெடை 216.

கறுபத்து உண்டை அட்ட குன்மத்துக்கு சகல வாய்வும்

கோட்டம், தாளிசபத்திரி, அதிமதுரம், கொத்தமல்லி, ஏலம், பெருஞ்சீரகம், குங்குமப்பூ, பச்சை கற்பூரம், கலங்கொம்பு, பேரீச்சம்பழம், சடாமாஞ்சி, கிராம்பு, சாதிக்காய், கசகசா, திப்பிலி, சன்னலவங்கப் பட்டை, முந்திரிகைப் பழம், ரூமிமஸ்த்தகு, சாதிக்காய், சாதிபத்திரி, குரோசாணி ஓமம், வெட்பாலை அரிசி, பெரும் பருத்திப் பருப்பு, வாலுளுழுவை அரிசி, நரிக்கொன்றைக் காய், நெல்லி பருப்பு, சிவதை வேர், சீமை நிலாவாரை, பாதம் விரை, சித்தரத்தை, கோரோசனை வகைக்கு வராகனெடை 2, சிறுக்கீரைச் சாறு சேர் 1, மரமஞ்சள் பலம் 2,

நிலப்பனைக் கிழங்கு, சத்திசாரனைக் கிழங்கு
தாயானபார்பரையைப் பூசைப் பண்ணி சாதகமாய்
வாமத்தில் பூசை பண்ணு, ஓயாமல்
கிடைக்குமோ மலையிலொன்றாலுத்தமனே
இலகுவாக சொல்லக் கேள்காயான
சாதிக்காய் கிராம்பு ஏலம் கசகசா
பத்தியுஞ் சாரப்பு சாயாத மதுரமொடு
கோட்டமாஞ்சில் சாதகமாய்வினோடு பத்துங் கூட்டே.

சுப்பிரமணிய செட்டியார் சொல்படி

தாது புட்டிக்கு லேகியம்

கூட்டுவது வகையொன்று பலந்தானொன்று
கோரக்கார மூலிகைதான் பலமோபத்து
நீட்டுவது நெய்யாலே வறுத்துக் கொண்டு
நேராக கற்பத்தை நிறுத்துப் போட்டு
மூட்டுவது அண்டமொன்று வித்துப்
போட்டு முகியாமலரைத்து நன்றாய்
எடுத்துக்கொணடு

ஆவின்பால் படியொமூன்று புகழான
வத்து ஒருபடியும் வாரே.
வாதத்திலேகேளு ரெண்டுபத்து பலந்தான்
வாகான சர்க்கரையைக் கரைத்துக் கொண்டு
சேதத்தினால் கொதிக்கும் போமுன் மருந்து
போடு தெளிவான ஆவின் நெய்க்கூட
வார்த்து கொடுத்ததிலே
கிண்டிநன்றாய் மெழுகு போலே கொள்ளு
மட்டும் உண்டை செய்துத்தியானம்
பண்ணி காதத்திலே உன்மனையைப் புரு
மையத் துள்ளே கைமுறையாயப் பூசித்துக்
கொண்டி டாயே ....

சர்வாங்க வில்வாதி லேகியம்

முட்காவேளை சங்கம் வேர், வில்வவேர் வகைக்கு பலம் 20, முள் கத்திரி வேர் சாரணை வேர், சவரிக் கொத்து வேர், சீந்தில் கொடி, பொன்முசுட்டை வேர், சிறுதேக்கு, நன்னாரி வேர் வகைக்கு பலம் 5, இந்த மருந்தெல்லாம் இடித்துப் பதினாறு படித் தண்ணீரில் போட்டு இரண்டு படியாகக் காய்ச்சி அந்தக் கசாயம் இறுத்து அதில் நாட்டுச் சர்க்கரை பலம் 30, கரைத்துப் போட்டு பாகுபோலே பதமாய் காய்ச்சி அதில் கற்கம் இலவங்கப்பட்டை, இலவங்கபத்திரி,, ஏலம், சிறுநாகப்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், சாதிக்காய், கிராம்பு, சித்திர மூலம், செவ்வியம், இந்துப்பு, திப்பிலி மூலம், கொத்தமல்லி விதை, கோட்டம் வகைக்கு பலம் 1/2, இந்த மருந்தெல்லாம் இடித்து வத்திரகாயம் பண்ணிக் கொண்டு முன் காய்ச்சின பாகில் போட்டு தேன் படி 1, கூடவிட்டு லேகிய பதமாய் கிண்டி வைத்துக்கொண்டுக் காலையில் கொட்டை பாக்களவும், சாயங்காலம் கொட்டை பாக்களவும் உண்ணவும், இதன்படி இருபது

நாள் சாப்பிடவும். இதுக்கு பத்தியம்: இச்சா பத்தியமாய் சாப்பிடவும். இதுக்கு தீரும் வியாதி: சூதக வாயு, அதி மதுரம், கிராணி, அக்கினி மாந்தம், அந்தி சுரம், வாந்தி, சரோகம், பாண்டு காமாலை, காலெரிவு, இவை தீரும். கை கண்டது.

அம்மாபேட்டை ராவுத்தன் சொல்படி

கல்லுப்பு ஒருபடிக்கு இரண்டு படி தண்ணீர் விட்டுக் கலக்கி, ஒருநாளெல்லாம் தெளிய வைத்து இறுத்துப் புதுசட்டியில் விட்டு காய்ச்சி படிகம் போலே ஆனபின் கொஞ்சம் தண்ணீர் இருக்க மறுபடி ஒருபடி தண்ணீர் விட்டுக் காய்ச்சவும். இப்படி பத்து தரம் காய்ச்சின பிறகு எடுத்து வெய்யிலில் காயவைத்து வைக்கவும். மேற்படி ரசம் வராகனெடை 3, இந்துப்பு வராகனெடை 3, சவுக்காரம் வராகனெடை 3, வெடியுப்பு வராகனெடை 3, சீனாக்காரம் வராகனெடை 3, இந்துப்பு வராகனெடை 3, அமுரி உப்பு வராகனெடை 3, கோழி வெள்ளைக் காரம் வராகனெடை 3, இந்த ஏழும் பாக்கு பழச்சாறு விட்டு குழம்பாய் அரைத்து இரண்டுக் கலயத்தில் உள்ளே தடவிக் குறை மிச்சத்துக்கு இரண்டு பலம் சீனாக் காரம் ஒரு பலம், வெடியுப்பு அந்துக் குழம்பில் போட்டு அரைத்துகொள்ளவும். உள்ளே மருந்து தடவின ஒரு கலயத்தில் இந்த மருந்தை அடைத்து சில்லுக் கொண்டு மூடி மூணு சீலைமண் செய்து முழுப்புடம் போடக் கட்டு அதை எடுத்து எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைக்க மெழுகு ஆகும். முன் சுத்தி பண்ணின கல்லுப்பில் பிசரி மருந்து தடவின் கலையத்தில் போட்டு ஒரு ஓடுக்கொண்டு மூடி இரண்டு முழம் விராட்டி அடுக்கி அதன்மேல் கலயம் வைத்து அதன்மேல் ஒரு முழம் விராட்டி அடுக்கிப் புடம் போடவும். உப்பு உருக்கிக் கட்டும்.

குளிர் சுரத்துக்கு

கௌரிப்பாசாணம் வராகனெடை 1, ஊசிக் கந்தகம்1, இவை இரண்டையும் கொம்பு பாகல் இலைச் சாறுவிட்டு இரண்டுச் சாமம் அரைக்கவும். குண்டுமணி பிரமாணம் உருண்டை பண்ணி மூன்றுநாள் அந்தி காலையில் கொடுக்கவும். குளிர் சுரம் நிற்கும். இதுக்கு அனுபானம் கல்கண்டு வராகனெடை 1, கண்டத்திப்பிலி வராகனெடை 1/2, இவை இரண்டையும் மாத்திரையையும் சேர்த்துக் கொடுக்கவும்.

பத்தியம்: பாகல், முருங்கக்காய், மிளகு, காரமாய் சாறு பண்ணி கொள்ளவும். மோர் கூட்டவும்.

தாப சுரத்துக்கு குளிர் காய்ச்சலுக்கு

வெள்ளைப் பாசாணம் வராகனெடை 1, வெற்றிலை பாக்கு, காசுக்கட்டி, சுண்ணாம்பு இவை நாலையும் மென்று உமிழ்ந்து அரைத்துக் கேழ்வரகு போலே உருண்டை பண்ணி சகல சுரங்களுக்கும் கொடுக்க தீரும். கௌரிப் பாசாணம் வராகனெடை 1, கொம்பு பாகற்காய் நாலு, காய்குள்ளே வைத்து பேய்கரும்பு கொழுந்திடை ரசம் ஒரு படி வாங்கி ரசத்துகுள்ளே நாலு காயும் போட்டு வெந்த பின்பு அந்தக் காயுடன் அரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி மோரில் கரைத்து கொடுக்க குளிர் சுரம் நிற்கும்.

பத்தியம்: மோர் சோறு தின்னவும்.

திரி தோசக் கசாயம்

தூதுவளை வேர், இம்பூரல் வேர், ஆடாதொடை வேர், வில்வவேர், முன்னை வேர், நார்த்தம் வேர்,

விலாமிச்சம் வேர், நன்னாரி வேர், அமுக்கிரா வேர், பரங்கிப்பட்டை ஆக வகைக்கு பலம் 1, சிற்றரத்தை, சீரகம், கோட்டம், அதிமதுரம், கொத்தமல்லி விதை, சிறுதேக்கு, சிலாசத்து, நாட்டுத்திப்பிலி மூலம், தாளிசபத்திரி, முந்திரிகைப் பழம், பேரீச்சம் பழம், கசகசா, நீர்முள்ளி விதை, தேற்றான்விதை, பற்பாடகம், சிறுநாகப்பூ, கிராம்பு, ஆக வகைக்கு பலம் 1/4, திரிதோசம் தீரும்.

கரப்பான் எண்ணெய்

கரப்பான் எண்ணை அழிஞ்சில்பட்டை, பூவந்தி பட்டை, மகிழம் பட்டை, பூவரசம் பட்டை, நுணாப்பட்டை, நொச்சிப் பட்டை, முருகப் பட்டை, கோவுளம் பட்டை, செங்கதாரி பட்டை, சங்கம் பட்டை, மாவிலங்கம் பட்டை, புங்கம் வேர்ப் பட்டை, சிற்றகத்திப் பட்டை, அவுரி வேர் குண்டு மணி வேர், வேலிப்பருத்தி வேர், பெருமருந்து வேர், குட்டி விளாவேர், சத்தி சாரணை வேர், உசிலம் பட்டை ஆக வகைக்கு சேர் 1/4, விளக்கெண்ணெய் சேர் 4, கரப்பான் தீரும்.

சகல மேகத்துக்கெல்லாம் சூரணம்

கருநொச்சி, குன்றியிலை, காட்டு வெள்ளரி, மருட்டி, கழற்சி, நுணாயிலை, வெள்ளெருக்கு, கற்பூரவள்ளி, சிறுக்கீரை, குறிஞ்சா, சத்திச் சாரணை, சங்கங்குப்பி, சின்னியிலை, செங்கரந்தை மருள் கிழங்கு, பிரண்டை, பாகல், பிரமியிலை, விழுதியலை, சங்கு இலை, மிளகரணை, அவுரி, கற்றாழை, பொடுதலை, பேய்தும்மட்டி, ஈர வெங்காயம், உத்தாமணி ஆக வகை 27 கதிர்கண்ணி, முருங்கை பட்டை, புங்கம்பட்டை வகைக்கு சேர் 1/2, உள்ளி வசம்பு , மதுரம், கருஞ்சீரகம், சீரகம், கடுகு ரோகிணி, திரிபலை, வெட்பாலை, நீரடிமுத்து,

ஆவாரை, கல்மதம், முத்தக் காசு, கார்த்திகைக் கிழங்கு, கோவைக்கிழங்கு, மிருதார சிங்கி, செங்கதாரி பட்டை, கொடிவேலி, சிவதை, முள்ளி, இந்துப்பு, பொட்டிலுப்பு வகைளை இலுப்பு, சீனாக்காரம், கல்லுப்பு வகைக்கு 1/2, சேர் 1/4 சூரணம் பண்ணவும். சகல மேகமுந் தீரும்.

அல்லா உன் உதவி செய் மேகம் இருபத் தொன்றுக்கு கைகண்டது.

மலடிக்கு மருந்து

புளி, மிளகு, அரத்தை, அமுக்கரா வேர், கடுக்காய், நெல்லிமுள்ளி, தான்றிக்காய், நன்னாரி வேர், சீரகம், கருஞ்சீரகம், கூகை நீர், செவ்வியம், கோரோசனை, கிராம்பு, கொத்தமல்லி விதை, கோட்டம், ஏலம், சடாமாஞ்சில், திப்பிலி மூலம், சிறுநாகப்பூ, சிறுதேக்கு, அதிமதுரம், சன்னலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, விலாம்பிச்சம் வேர், நிலப்பனை வேர், சாதிக்காய், சாதிப்பத்திரி, சாங்கம் வேர்பட்டை, செங்கதாரிப்பட்டை, பூமி சர்க்கரைக் கிழங்கு, வெள்ளறுக்கு, அமுத சர்க்கரை வகைக்கு வராகனெடை 1/2, சேலம் சர்க்கரை 3/4, பசுவின் நெய் சேர் 1/2, பரங்கிப்பட்டை சேர் 3/4, தேன் சேர் 1/2, நீராகாரத் தண்ணீர்சேர் 1/2, எலுமிச்சம் பழம் பெரியதாய் 1, நல்லெண்ணையில் பலம் 3/4, இந்த மூன்றும் மூன்றுநாள் தினம் இந்த விழுக்காடு வீட்டுக்குத் தூரமான மூன்றாம்நாள் கொள்ள நாலாம்நாள் தலைமுழுகி ராத்திரிக்கு கோதும்பை ஒன்னேகால் வீசம், சர்க்கரை ஒன்னேகால் வீசம் இந்த இரண்டும் மூன்று வீசம் தண்ணீரில் ஊறவைத்து காலையில் ஊறினத் தண்ணீர்விட்டு அரைத்து வடிக்கட்டி நெய்விட்டு சீனிசர்க்கரை வராகனெடை 5, கூட போட்டு கூழ் போல் காய்ச்சி நாலாம் நாள் காலையில் குடிக்கவும். இந்த விழுக்காடு நாலுநாள் காலையில் குடிக்கவும்.

பத்தியம்: இச்சாபத்தியம். அதன் மேல் நாள்பட்ட கர்ப்ப உற்பத்தியில்லாதிருந்தாலும் மூன்று முழுக்கிலே கர்ப்பம் உற்பத்தியாம். கை கண்டது.

வேறு

விரால் மீன் மருந்து

அல்லா உன் உதவி செய்யவும்.

விரால் மீன் தேறின உன்னிப் பிடித்து மீன் கொண்டுவந்து கழுவாயில் முதுகுப் பக்கம் நீளமாய் ஐந்து கீத்தாய் கீற்றாய் பொன்னரி தாரம் வராகனெடை 15 பொடிபண்ணி அந்த மீனைக் கீரின இடத்தில் இந்தப் பொடியைத் தடவி பழம்பானையில் இந்த மீனைப் போட்டு வாய்மூடி வைத்து முகர்ந்துப் பார்த்து பதினொருநாள் நன்றாய் வெளிச்சத்தில் பார்க்க இது எல்லாம் புழுவாய்ப் போம்.

அந்த மீன் எல்லாம் புழுவாய் போல் போட்டு நாலு படி வரைக்கும் பார்க்க அந்தப் புழுவானதின் பிறகு புழுவை குப்பியில் அரிசி பொங்க வைத்து இறக்குவதற்கு முன்பாக நெட்டிக் கொண்டு வாய்மூடி அந்த சோற்றில் குப்பியைப் புதைத்து மூன்று வராகனெடைத் தெரியதக்காதாக வைத்து சோறு இறக்கி ஆறின பிறகு குப்பியை எடுத்து பார்க்க தைலமாயிருக்கும் அந்த தைலத்தை இருத்து சின்ன குப்பியில் அடைத்து வைத்தக்கொண்டு பெருவியாதிக்கு ஒருதுளி வெற்றிலையில் வைத்து தின்ன அவ்வளவு நின்னுபோம். மேக வரச்சி சுரம், சயம் இவையாவும் தீரும். அல்லா உதவி செய்யும்.

வேறு

முற்றிய தேறின உடும்பு கொண்டுவந்து சேவை பண்ணித் தோல், தலை, கால், குடல் எடுத்துப் போட்டு எலும்பை பஞ்சு போல நறுக்கவும். இந்தக் கறியையும் பஞ்சுபோலே நறுக்கி உரலில் போட்டு எலும்பும் சதை, வாய், முண்டந் தனியே நறுக்கித் தனித்தனியே இடித்துக் கொள்ளவும். இரண்டும் ஒன்றாய்ச் சேர்த்து இடித்து மறுபடி கற்கவை இலவங்கம், சாதிபத்திரி, சாப்பலதாலச் சின்னிக வாபுச் சின்னி காலி மிரிச்சி சா அபின், போத்த காய், கத்தூரி அளது சுளுவாய் அளடாவகைக்கு பலம் 1, இடித்து வடிக்கட்டி இதுவும் ஆதோடைக்கூடப் போட்டு இடித்து நிழலில் ஒரு வரட்டிப் போட்டு உலரப் போட்டு மறுபடி இடித்து வடிக்கட்டிக் கொண்டு அதில் கொட்டைப் பாக்களவு அவுடதமும் கொட்டைப் பாக்களவு சீனி சர்க்கரையும் இது இரண்டும் சேர்த்து அதில் பசுவின் நெய் ஆகுதல் தேன் ஆகுதல் உடும்பு நெய் ஆகுதல் மத்திச்சு இரண்டு நேரமும் சாப்பிடவும். கைப்பு அதிகமானால், மருந்தைக் குறைத்து சாப்பிடவும்.

இதுக்குத் தீரும் வியாதி இடுப்பினால் மெலிந்த சரீரம் காரணத்தினால் சரீரம் தேறும், மார்புவலி தீரும். மேகவாய்வு தீரும். மேரோகமெல்லாம் தீரும். சிரோரோகம், வெட்டை, குட்டம் பதினெட்டுந் தீரும். வயறு இரைச்சல் சரீரத்தில் வந்த வரச்சி எல்லாந் தீரும். மேகத்தின் மேல் எழும்பின ரணமெல்லாந் தீரும். பேதிக் கடுப்பு இவை எல்லாம் தீரும். மூலம், அட்ட மூலமும் தீரும். வாத பித்தம் சிலேத்துமம் இதில் எண்ணப் பட்ட ரோகம் எல்லாம் தீரும். மெலிந்த சரீரம் தேறும். அளவற்ற தாது புட்டியாம். கை கண்டது.

வேறு

இருமலுக்கு மருந்து

மிளகு பலம் 3, சீரகம் பலம் 3, இலவங்கம் பலம்1, ஏலம் பலம் 1, சாதிக்காய் 5, திப்பிலி பலம் 1, வெள்ளுள்ளி பலம் 5, பொன்னாங்காணி சாறு படி 1, கையாந்தகரைச்சாறு படி 1, முசுமுசுக்கைச் சாறு படி 1, முடக்கத்தான் சாறு படி 1, இந்த ஏழுவகை மருந்தும் நாலுநாலு வகைச் சாற்றுக்கு வகைக்கு ஒரு படிச்சாறும் ஊற்றிக் குடிக்கிற மட்டுக்கும் ஊறப் போடவும். கறுமுள்ளி வேர் பலம் 2, முள் கத்திரி வேர் பலம் 2, கண்டங்கத்தரி வேர் பலம் 2, தூதுவளை வேர் பலம் 2, இந்த ஏழுவகையும் இடித்துப் பொடி பண்ணி வகைக்கு இரண்டு பலம் வீதம் எடுத்துக் கொள்ளவும். வல்லத்துக்கிட்டம் பலம் 1, பெருங்காயம் பலம் 1, இந்தப்படிக்கு வகை எல்லவற்றையும் எடுத்துக் கொண்டு ஒருபடி எலுமிச்சம் பழச்சாறு எல்லாவற்றையும் அரைக்கவும். அதின் போரில் கருங்கோழி கொண்டுவந்து பசுவின் நெய் சேர் 2, உள்ளாக புதுசட்டியில் போட்டு அனுபானம் பண்ணவும். இதுக்கு பத்தியம் கைப்பு, புளிப்பு ஆகாது. பத்தியத்துக்கு சாறு சாறாய் 1 கருவாடு கொண்டு வந்து நல்லாய் தேய்த்து கழுவிப் போட்டு உலர வைத்து மிளகு பலம்1/4, வெள்ளுள்ளி பலம் 1/4, இந்த இரண்டு வகையும் போட்டு சாறு பண்ணி சாப்பிடவும். இதுக்கு மஞ்சள் ஆகாது. இந்த மருந்தெல்லாம் பச்சிலை சாற்றில் பதம்பண்ணி பின் மருந்தும் இந்த இரண்டும் எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைச்சு கருங் கோழி மாங்கிசமும், தோலும் பொடி பொடியாய் நறுக்கி அரைப்படி தண்ணீர் விட்டு வீசம் படி காயாக் காய்ச்சி அந்த தண்ணீர்விட்டு உடனே அரைத்து இந்த மாமிசமும் இந்த மருந்தையும்

பிசறி நெய்யில் பதத்தோடே வேக வைத்து எடுத்து உரலில் போட்டு மாமிசம் மருந்து ஒன்றாய் சேரத் தக்கதாய் இடித்து கலயத்தில் வைத்துக் கொட்டைப் பாக்களவு காலையிலும் மாலையிலும் சாப்பிடவும்.

பத்தியம்: சயம், இருமல், ஈழை, மற்றுமுள்ள பற்று பதத்தின் எல்லாம் தீரும்.

வேறு

உடும்பு மருந்து

உடும்பு கொண்டுவந்து அறுத்து இரத்தம் போகாமல் தொண்டையைக் கட்டிப் போட்டு நெருப்பில் வாட்டி மேல் புரணியைச் சீவிப் போட்டு மஞ்சளிட்டு கழுவிப் போட்டு வயறைக் கழிச்சி குடல் எடுத்துப் போட்டு தலை, கால், மணிக்கட்டி முதல் எடுத்துப்போட்டு வகுந்ததில் வைக்கவும் மருந்து சுக்கு, சாதிக்காய், சாதிபத்திரி, இலவங்கம், குரோசானி ஓமம், கருஞ்சீரகம், கொத்தமல்லி, சீரகம், வாய்விளங்கம், சிறுநாகப்பூ, தக்கோலம், சடாமாஞ்சில், இலவங்கப்பத்திரி, வெட்பாலை, அரிசி எல்லாம் பேரீச்சம் பழம் விதை, பூனைக்காலி விதை, போத்தக் காய் விதை, வகைக்கு வராகனெடை 3, ஆறும் விதை, அரசம் விதை, துத்தி விதை, நீர்முள்ளி வதை, கசகசா, திப்பிலி, கண்டத்திப்பிலி, புகையிலை விரைந்ததை விரை மிளகு, வெட்பாலை அரிசி, மஞ்சள், மரமஞ்சள், கோட்டம், சதகுப்பை, குரோசானி ஓமம், பெருஞ்சீரகம் வகைக்கு வராகனெடை 4, சாதிலிங்கம் வராகனெடை 3, கொடிவேலி பலம் 4, அமுக்கராகிழங்கு பலம் 4, சங்கம் வேர், பட்டை பலம் 1, மிளகரணை வேர் பட்டை பலம் 1, முள்ளங்கி விதை பலம் 1, ஆகாச கருடன் கிழங்கு பலம் 1, சடைக்கஞ்சா பலம் 2, அபின் வராகனெடை 2,

உளமாந்தும் விதை பலம் 1/2, விளாம்பிசின், முருங்கைப் பிசின், கருவேலம் பிசின், ஆவாரம் பிசின் வாகைவிதை வகைக்கு பலம் 1/2, குங்குமப் பூ வராகனெடை 1, கோரோசனை வராகனெடை 1, பரங்கிப்பட்டை பலம் 12, இவையெல்லாம் இடித்துச் சூரணம் பண்ணி காந்த பற்பம் வராகனெடை 3, அப்பிரக பற்பம் வராகனெடை 3, லோக பற்பம் வராகனெடை 3, கற்பூர சிலாசத்து பற்பம் வராகனெடை 3, அப்பிரக பற்பம் வராகனெடை 3, லோக பற்பம் வராகனெடை 3, கற்பூர சிலாசத்து பற்பம், காரீய பற்பம் வராகனெடை 3, இதுவும் கூட்டி இடித்து சூரணம் பண்ணி இதுப்பிடிக்கிற மட்டும் ஒரு அஞ்சு உடும்பு வயிற்றிலிட்டு ஊசினால் தையலிட்டு வைத்துக் கொண்டு மறுபடி இதுக்கு கசாயம் வைக்க மருந்து நொச்சிப்பட்டை, நுணாப்பட்டை, எருக்கம் பட்டை, திருகு கள்ளிவகைப்பட்டை, காரைப் பட்டை, வேப்பம்பட்டை, பூவரசம் பட்டை, கள்ளிச்சிவேர், புங்கம் வேர், ஆத்தாசம் பட்டை, செங்கதாரிப் பட்டை, பூதகரப்பான் பட்டை, சித்திர மூலம் வேர், வெட்பாலைப் பட்டை, கொள்ளம் பட்டை, பொடுதலை, சிறுசெருப்படி, பிரமிய வழுக்கை, தூதுவளை சமூலம் வகைக்கு சேர் 2, இவையெல்லாம் இடித்து ஐந்து பானையில் (60 படி) நிரவிப் போட்டு பானை ஒன்றுக்கு பனிரெண்டு படித் தண்ணீர்விட்டு ஐந்து பானையில் தனித்தனி இதற்கு சமன் ஆடாதோடை இலையை வேடுக்கட்டி ஐந்து பானையில் ஐந்து உடும்பை வைத்துத் தனித்தனி சட்டி மூடிச் சீலைமண் செய்து ஒருசாதி விறகு கொண்டு எரிக்கவும். இரண்டு சாமம் எரிக்கவும். மறுபடி இரண்டு சாமம் ஆறவிட்டு எடுத்து இடித்துச் சூரணம் பண்ணி காய வைத்து இஞ்சிச் சாறுவிட்டு பிசரிக் காயவைத்து சூரணம் பண்ணவும்.

அனுபானம் அறிந்து வெரு கடிப் பிரமாணம் தின்று வரவும். இதுக்கு தீரும் வியாதி. ....

சலமாஞ்சரி நீர்க்கட்டுக்கு கைகண்டது

அஞ்சு வகை உப்பு வகைக்கு வராகனெடை 2, சங்குப்பொடி வராகனெடை, பல கறைப்பொடி வராகனெடை 2, கற்பூர சிலாசத்து வராகனெடை 2, வடசாரம் வராகனெடை 2, இந்த மருந்தெல்லாம் இளநீர் விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை பண்ணி காயவைத்து முழுப்புடம் போடவும்.

கரப்பான் விளக்கெண்ணை உசிதம் கைகண்டது

கழற்சி வேர், முடக்கத்தான் வேர், வெள்ளைக் காக்கரட்டான் வேர், சங்கம் வேர், உத்தாமணி வேர், அவுரி வேர், வெள்ளருக்கும் வேர், கண்டங்கத்திரி வேர், தூதுவளை வேர், நெய் கசகசா வேர், ஆடாதோடை வேர், கொறுக்கை வேர், சிறுக்கீரை வேர், சிறுகுறுஞ்சான் வேர், பெருமருந்து வேர், சங்கங்குப்பி வேர், வெள்ளை சாரணை வேர், முள் கத்திரி வேர், வெண்ணொச்சி வேர், பொன்னாவாரை வேர், வட்ட கிலுகிலுப்பை வேர், கருனொச்சி வேர், மூக்குரட்டை வேர், கிரந்தினாயகம் வேர், தவசி முருங்கை வேர், விழுதி வேர், கற்றாழை வேர், மருள் சமூலம், வெள்ளருப்பம் வேர், சிவதை வேர், கோவைத் தண்டு, நஞ்சல் பரித்தான் வேர், இலைகள்ளி வேர், நாய்வேளை வேர், பச்சை மஞ்சள் நெரிஞ்சில் வேர், வெள்ளறுகு வேர், இலைகள்ளி வேர், சித்தரமூலம், நன்னாரி வேர், மிளகரணை வேர், சிவனார் வேம்பு, இம்பூரல் வேர், பிரண்டை வேர், சிறுசெருப்படி, சீந்தில்வேர், பொற்சீந்தி வேர், ஊசிப்பாலை .... முசுமுசுக்கை வேர், உப்பிலி வேர், குட்டிவிளா வேர்,

செப்பு நெரிஞ்சி, வில்வவேர், முதியோர் கூந்தல், கத்திரி வேர், செருப்படி வேர், கொட்டைக் கரந்தை வேர், பருத்தி வேர், சிறுகாஞ்சொரி, நத்தைச் சூரி வேர், கவுதும்பை வேர், பல்லிப்பூண்டு, நெய்ச்சட்டி, காட்டாமணக்கம் வேர், பேய்கும்மட்டி வேர், பேய்பீக்கம் வேர், பாதிரிவேர், சிறுபுள்ளடி நரி, பயத்தங்கொடி, துடரிக்கொழுந்து, பேய்ப்பாச் சோந்தி, பாவட்டை வேர், செம்பருத்தி வேர், கண்ப்பூண்டு சமூலம், அம்மான் பச்சை அரிசி, மாம்பழக் கொன்னை வேர், செம்பருத்திவேர், நார்த்தம் வேர், பனைவேர், நிலக்குமுள் வேர், சிற்றாமுட்டி வேர், எலுமிச்சம் வேர், நார்த்தம் வேர், பனை வேர், நிலக்கு முழ்வேர், சித்தாமுட்டி வேர், பேராமுட்டி வேர், விட்ணுகிரந்தி, நந்தி ஆவட்டம் வேர், வெள்ளிண்டு வேர், ஆனை நெரிஞ்சி வேர், பூலாவேர், பேய்ப்புடல், சின்னிவேர், நாயிராஞ்சி வேர், செம்முள்ளி வேர், குப்பைமேனி வேர், வேளைச்சமூலம், கோழி அவரை வேர், நீர்முள்ளி வேர்,கையாந்தகரை, துளசி வேர், ஏரி ஆலம் வேர், சிற்றாமணிக்கம் வேர், பேரா மணிக்கம் வேர், குழி விட்டான் வேர், பிரமிய வழுக்கை வேர், தழுதாழை வேர், ஆடுதின்னாப்பாளைவேர், முருங்கம்வேர், தழுதாழை வேர், தக்காளி வேர், காட்டுமல்லிகை வேர், முன்னை வேர், முட்காவேளை வேர், நிலவேம்பு, கத்திரினாயகம் வேர், செம்மானாத்தி வேர், எழுத்தாணி, பூண்டு குழல் ஆதண்டம் வேர், வேப்பம் பட்டை, ஆயில்பட்டை, உதிர வேங்கை பட்டை, மகிழம்பட்டை, நுணாப்பட்டை, கொவுளம் பட்டை, பூவந்திப்பட்டை, உடும்பிறாஞ்சிப் பட்டை, செங்கதாரிப்பட்டை, புண்முருங்கைப்பட்டை, மருக்காரப் பட்டை, உழலத்திப்பட்டை, புங்கம் பட்டை, பிராயும் பட்டை, நரிக்கொன்னைப்பட்டை, அருநெல்லிப்பட்டை, புன்னைப்பட்டை, அழிஞ்சில் பட்டை 2, சிலம்பட்டை,

பெருங்கரந்தைப் பட்டை, புரசம் பட்டை, சிறுவாகைப் பட்டை, பூவரசம் பட்டை, குட்டி விளாம்பட்டை, வேம்பாடம் பட்டை, கருவேலம் பட்டை, விடத்திரைப்பட்டை, நெல்லிப்பட்டை, அடப்பம்பட்டை, அரசம்பட்டை, முருங்கைப் பட்டை, அகத்திப்பட்டை, இலவம்பட்டை, முள்ளிலவம் பட்டை, கிளுவைப்பட்டை, வாகைப்பட்டை, வீரம்பட்டை, கல்வீரம் பட்டை வகைக்கு சேர் 1, பெருநரளைக் கிழங்கு, வெருகங் கிழங்கு, கருணைக் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, மரவைக் கிழங்கு, செங்கழுநீர் கிழங்கு, அப்பைக் கிழங்கு, தாமரைக் கிழங்கு, பிரப்பங் கிழங்கு, ஆகாச கருடன் கிழங்கு, அமுக்கிராக் கிழங்கு, பூமி சர்க்கரை கிழங்கு, சத்திசாரணைக்கிழங்கு வகைக்கு சேர் 1, முடக்கத்தான் இலை, கழச்சி இலை, உத்தாமணி இலை, சங்க இலை, தூதுவளை சமூலம், நெய்க் காசா இலை, ஆடாதோடை இலை, மணத்தக்காளி இலை, ஆதண்டம் இலை, சிறுகுருஞ்சா இலை, பெருமருந்து இலை, சங்கம்குப்பி இலை, முள்கத்தரி இலை, வெள்ளைச் சாரணை இலை, நிலாஆவாரை சமூலம், வெண்ணொச்சி இலை, பொன்னாவாரை இலை, வட்ட கிலுகிலுப்பை இலை, மகுளம் இலை, கருநொச்சி இலை, மூக்கரட்டை இலை, கிரந்தி நாயகம் இலை, தவசி, முருங்கை இலை, விழவி இலை, நஞ்சல பரித்தான் இலை, நுணா இலை, கௌவுலம் இலை, நாவெயிலை, செங்கதாரி இலை, நரிக்கொன்னை இலை, செப்பு நெருஞ்சி இலை, மிளகரணை இலை, நன்னாரி இலை, அழிஞ்சி இலை, பெருங்கரந்தை இலை, பூவரசம் இலை, பாவட்டை இலை, சீந்தில் கொடி, ஊசிப்பாலை இலை, முசுமுசுக்கை இலை, உப்பிலிக்கொடி, வெருகம் இலை, புரசம் இலை, குட்டி விளாஇலை, செம்மணத்தி இலை, வில்வஇலை, கொட்டைக் கரந்தையிலை, நாகரந்தை இலை, செம்பருத்தி இலை, பிஞ்சு இலந்தை

நத்தை சூரி இலை, அப்பை இலை, கவிழ் தும்பை இலை, சிறு புள்ளடி, துடரிக் கொழுந்து, அடைப்பம் இலை, கண்பூண்டு, பொன்னாங்காணி சமூலம், பொடுதலை சமூலம், எலுமிச்சம் பழுப்பு, நிலக்குமுழ்இலை, நந்தி யாவட்டம் இலை, ஆனை நெரிஞ்சில் சமூலம், இலவம் இலை, எழுத்தாணிப் பூண்டு, கிளுவை இலை, வாகைஇலை, வரப்பு வாயிலை, சின்னியிலை, நாயிருஞ்சி இலை, செம்முள்ளி இலை, குப்பைமேனி இலை.

சிவ நாசம் அக்கிராணம்

கந்தகம், அக்கிரகாரம் ரசம், சுக்கு, திப்பிலி, வெங்கார பொரி வகைக்கு வராகனெடை 2, மிளகு வராகனெடை 18,

பச்சை நாபி ரசம், அரிதாரம், துத்தம், கவுரிப் பாசாணம், நெல்லிக்காய், கந்தகம், சுரைக்காய், கந்தகம், துருசு, திப்பிலிமூலம், கார்போக அரிசி, மரமஞ்சள், அக்கிரகாரம், சுக்கு, மிளகு, கருஞ்சீரகம், வெளிச்சம் பிசின், இந்துப்பு, கடுகுரோகிணி, சோமனாத கடுக்காய், நெல்லிமுள்ளி, தான்றிக்காய், ஆமணக்கு பருப்பு, நிர்விசம், மனோசிலை, கோரோசனை, செங்கழுநீர், எட்டி கொட்டை, கோட்டம், அதிமதுரம், செம்புக்குமொட்டு, விழல் அரிசி, வெட்பாலை அரிசி, மகிழம் கொட்டை, எருக்கம் வேர்ப்பட்டை, கழகோடி பருப்பு, இலவங்கப்பட்டை இவை எல்லாம் ஓரொன்று கழஞ்சி கூட்டிக்கொண்டு ....

ரச செந்தம் பாசாணம் நேர்வாளம் சாறு

நேர்வாளத்தை கற்றாழை சாறு பிழிந்து அந்த சாற்றில் நாலு கடுக்காய் தட்டி கொட்டை போக்கி மேல்

தோலைப் பொடி பண்ணி கற்றாழை சாற்றில் போட திண்ணியாம் அந்தத் தண்ணீரில் நேர் வாளம் உடைச்சுப் போட்டு பருப்பைப் போட்டு வேகவைத்து அதில் பிறகு நாழி பசுவின் பாலில் வேகவைத்து சுழி அம்மியிலே அரைத்து புதுச்சட்டியில் போட்டு அப்பி வைத்து உலர்ந்த பிறகு எடுத்து வைத்துக் கொண்டால் சுத்தி. இது கை கண்டது. கவுரிப் பாஷாணம் சுத்தி எலுமிச்சம் பழத்தில் அண்டத்து மண்ணை அரைத்து சீலையில் தடவி எலுமிச்சம் பழச் சாற்றில் சுத்தி சீலை மண் செய்து ஒருசாண் ஆமைப்புடமாய் மூணுப்புடம் போடச் சுத்தியாம்.

நாபி சுத்தி பண்ண வகை ... நாபியை எடுத்து சிறுக்கீரை வேர் நறுக்கிச் சட்டியில் போட்டு நாபினை வேரின் பேரிலே வைத்து பத்து அரிசியும் போட்டு மேலே கைகொண்டு மூடி எரிக்கவும். அரிசி வெந்த பதம் பார்த்து இறக்கி நாவியை எடுத்து உலர்த்தி அவிழ்த்துக் கட்டிக் கொள்ளவும். இருவிக்கு: வெள்ளாட்டுக் கோமியத்தில் அறுபது நாழிகை ஊறப்போட்டு அதன் பிறகு சுத்தக் கோமியம்விட்டு எருமைச் சாணியில் கரைத்துக் கொள்ளவும். பின் இருவியைப் போட்டு வேகவைக்கச் சுத்தியாம். மனோசிலை சுத்தி ... கல் சுண்ணாம்பு அரைப்படி கரைத்து, குழம்பாய் இறுத்துக் கொண்டு குறுணித் தண்ணீர் வச்சு தோலா எந்திரமாய் கயினால் 4 நாழிகை எரிக்கச் சுத்தியாகும். இரச சுத்தி இரண்டு காசிடை செங்கல்பொடி இரண்டு காசிடை சிரட்டையில் (கொட்ட கச்சியில்) போட்டு வேலிப் பருத்திச் சாறு பிழிந்து தேய்க்க சுத்தியாம். காந்தத்தை ஒண்ணுரெண்டாய்த் தட்டிப் புதுச் சட்டியில் கையிலைச் சாறு அரைப்படி போட்டுக் காய்ச்ச சுத்தியாம். கந்தக சுத்தி பசுவின் பால் அரைப்படி தண்ணீர் அரைக்கால்படி போட்டு ஒருசட்டியில்

விட்டு கந்தகத்தை சட்டியில் போட்டு மேலே கட்டி கொண்டு மூடிச் சீலை மண் செய்து சாண்குழியில் சட்டியிருக்க வேடு கட்டி அந்தச் சட்டியைக் குழிக்குள்ளே வைத்தக் காட்டெருமுட்டையால் புடம் போடச் சுத்தியாம்.

ரசகந்தக பாசாணம் சுத்தி பண்ணவகை.

சாதிலிங்கம் சுத்தி சாதி லிங்கத்தை குழி அம்மியில் வைத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து பச்சைத் தண்ணீரி ஊற்றித் தெளியவைத்து தெளிவை இறுத்தி இதுபோல் மூன்று பண்ணி வெய்யிலில் காயவைத்து எடுத்துக்கொள்ளச் சுத்தி.

மயில்துத்தம் சுத்தி ஆறுமாதம் காடியில் மயில் துத்தத்தை ஒருநாழி நனைத்து வெய்யலில் வைத்துக் கொள்ளவும். மூன்று தரம் செய்துவர சுத்தியாகும். இது அக்கினி நட்சத்திரத்திலே கோடையில் பண்ணவும்.

அரிதாரத்தைப் பொடி செய்து பொட்டணம் கட்டி பூசணிக் காய்ச் சாற்றை ஒரு சிறு பானையில் விட்டு மேலே கட்டி அதில் பொட்டணத்தை உள்ளே கூட்டித் தொங்கவிட்டு சாறு சுவறந்தனிலும் எரிக்கச் சுத்தியாம்.

ரசக்கட்டு

ஒரு சட்டியிலே கீழே குறுணி உப்பு விட்டு அதன் பேரிலே அஞ்சு பலம் காரீயத்தை வைத்து அதன் மேலே குறுணி உப்பைக் கொட்டி மூடி மேலே ஒரு சட்டியைக் கொண்டு மூடி சீலைமண் செய்து பனிரெண்டு சாமம் எரியிட்டு பிறகு எடுத்து அதைக் கிண்ணியாக பண்ணி அதில் ரசத்தை விட்டு சற்றே எரியிடவும். கட்டுப்படும். இதன்படி வெள்ளீயத்தினாலேயும் பண்ணலாம்.

இது கைகண்டது. இதுக்கு மாசம் வலிய ஒரு சட்டியிலே ஊமத்தை இலைச்சாறு விட்டு அதிலே ஒரு வராகனெடை ரசம்விட்டு மேலே சட்டிகொண்டு மூடி சீலைமண் செய்து கலஉமியிலே சாறு சுவறுந்தனிக்கும். புடமிடவும். இதன்படி முப்பது புடம் போட்டால் வலியும். இதுவும் ரசகட்டு. மரியாதை ராமன் பச்சிலையை கசக்கி ரசத்திலே நாலு துளி சுருக்கு கொடுக்க ரசம் கட்டுப்படும். லிங்கம் வாங்கலாம். மரியாதை ராமன் பச்சிலை அடையாளம். இது இருக்கிற இடம் 2 வட்டுத் தரையிலே மருதாணியிலை போலே இருக்கச் சேணுணி குவிஞ்சிருக்கும் அறியவும்.

இதுவும் செப்பிர யோகம்

கெவுதும்பையை அரைத்து இரண்டு செப்பாகப் பிடித்து ஒரு அகலிலே ஒரு பாதியை வைத்துக் இரண்டு வராகனெடை ரசத்துக்கு ஒரு வராகனெடை வெள்ளைப் பாசாணம் பொடி பண்ணி இரண்டாகப் பிரித்து மிகுந்து மேலே பாதி பொடியைப் பரப்பி அதுக்கு மேலே ரசத்தை விட்டு அது மேல் பாதிப் பொடியைப் பரப்பி அதுக்குமேலே மருந்து மூடி ஒரு செப்புக் கிண்ணி கொண்டு மூடிமண் செய்து ஒரு சட்டியிலே வைத்து மணல்கொட்டி அடுப்பிலே வைத்தக் காலாக்கினியாக ஒரு சாமம் எரியிடவும். பின்பு எடுத்துக் கிண்ணியிலே பற்றியிருக்கிற ரசத்தைக் கொட்டி எடுத்துக் கொண்டு வெங்காரமிட்டு உருக்க வெள்ளி போலே மணியாக உருகும்.

இதுக்கு ரச பிரயோகம்

இரசத்துக்கு சத்திச்சாரணை இலைச்சாறு சுருக்கொடுத்து அந்தக்கிழங்கை அரைத்துப் பொட்டியு மூட்டி .... மாகப் பண்ணி மூடிக்குடப்புடமிடக் கட்டும்.

சாதிலிங்கப் பிர யோகம் ..... பசுறியைப் பரித்து அந்த அரைச்ச குகையிலே வைத்து சாதிலிங்கத்தை மருந்ததிலே பொதிந்து மூடி கல்லுக்கும் கிண்ணிக்கும் ஏகமாக ஏழுச் சீலைமண் செய்து ஒரு விறகு எறிந்சவுடனே இரண்டு விறகு இப்படி முப்பது நாழியை எரிக்கச் சிந்தூரமாம். செம்பிலே 4 கொண்டு கொடுக்க வெள்ளி மாற்று ஏழுகாணும்.

ரசகட்டுக்கு துருசு சாம்பலும் மரியாதை ராமன் சாறுங் கட்டும்

மரியாதை ராமன்சாறு இரண்டு படி சட்டியிலே விட்டு ரசம் விட்டு பாதி சுவற்றினைத் தீபாக்கினியாக எரியிட்டுப் பாதியிலே ஏழுசீலை குழித்துச் சாத்து மேலே போட்டு எரியிட்டு சுவறின உடனே கட்டியாக எடுக்கலாம். நாகம் சட்டியில் இட்டுப் புளியம் சிராயிட்டுச் சாம்பலாக வறுத்து இம்பூறல் வேரிட்டு வறுக்கப் பற்பமாம். வயிற்று வியாதிக்கு ஒருபணவிடை கொடுக்க வெள்ளீயத்தை உருக்கி பிரண்டைச் சாற்றிலாச்சு ஒடுக்காய் வைத்து அசமதாகம் நாநாழி நுனி மஞ்சள் பொடி நானாழித் தூவி வறுக்கப் பற்பமாம். காரீயத்தை உருக்கி கற்றாழைச் சாற்றிலே மூன்று தரம் உருக்கி சாய்த்து பின்பு இரும்புச் சட்டியிலே முருக்கிலை இட்டு வறுக்கப் பற்பமாம். சிந்தூரம் பற்பமாம்.

உட்காய்ச்சாலுக்கு எண்ணெய் அத்தி சுரத்துக்க வெட்டைக்கு

வாழைக் கிழங்கு சாற்றிலே காந்தல் கல் அரைத்து மூன்று புடம் போட செந்தூரம் வெள்ளைச் சாரணை வேரை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து ஆடாதோடை இலைச்சாற்றில் வங்கத்தை உருக்கிச் சாய்த்து அந்தக்

கட்டியை விழுதிலே பொதிந்து புடம் போடப் பற்பமாம். சிற்றாமணக் கெண்ணை படி ஒன்று , சீரகம் பலம் அரை, அதிமதுரம் பலம் 1, வெந்தயம் பலம் 1, கடுக்காய் 5, தாளிசபத்திரி பலம் 1/2, சாதிக்காய் பலம் 1, இவையெல்லாம் பொடி பண்ணி எண்ணெயில் போட்டுச் சூரியப்புடம் முப்பது நாழிகை வைத்து ஒருகாசிடை உள்ளுக்கு கொடுக்கவும்.

அத்தி சுரத்துக்கு வெட்டைக்கு

சிற்றாமணக் கெண்ணை படி 2, வெட்டிவேர் பலம் 30, விலாமிச்சம் வேர் பலம் 30, சிற்றாமுட்டி வேர் பலம் 30, நன்னாரி வேர் பலம் 30, தண்ணீர் கலம் விட்டு பதமாகக் காய்ச்சி இதிலே எண்ணெயும் விடவும் கடைச் சரக்கு சிற்றரத்தை பலம் 1, கோட்டம் பலம் 2, அதிமதுரம் வராகனெடைக்கு கருஞ்சீரகம் பலம் 1, அகில் சந்தனம் பலம் 2, வங்கம் பலம் 2, மாஞ்சில் பலம் 1, மஞ்சள்பொடி பலம் 1, கார்போக அரிசி பலம் 1, தாமரை வளையம் பலம் 1, செண்பக மொட்டு பலம் 1, தூணிபதக்கு, பசு மோர் விட்டு எட்டாம் நாள் வடிக்கவும். இதுக்கு பத்தியம் கைப்பு புளிப்பு தவிர்க்கவும்.

மண்டை வியாதிக்கு 3 வகை தேளுக்கு. ஆறாதப் புண்ணுக்கு மண்டை வியாதிக்கு மருந்து

துருசு வராகனெடை, எலுமிச்சம் பழச்சாறுவிட்டு அரைத்து மண்டையில் சங்கம் முள்ளாலே குத்தி இந்த மருந்தைப் பூசவும் தலையில் புழு செத்து மயிர் வளரும்.

தேள் கடி, கொட்டு வாய்க்கிளி

கோரோசனை, அரிதாரம், கோட்டம், சதுரக்கள்ளிப் பால் விட்டரைத்து சிறுதேன், மெழுகு, கலந்து சீலையில் ஊட்டி திரியாக்கி கொட்டின வாயிலே புகை பிடிக்கக் கடுப்புத் தீரும்.

ஆறாத புண்ணுக்கு: துருசு ஒரு பங்கு சுண்ணாம்பு மூன்று பங்கும் விளக்கெண்ணையில் கரைத்துச் சீலையில் ஊட்டிப் போட ஆறாத புண்ணும் ஆறிப்போம்.

வண்டு கடிக்கு சர்வாங்க சன்னி, திமிர்வாத முடக்குவாதத்துக்கு கண்டாமலகம் வண்டு கடிக்கு

கழுதை வண்டை நல்லெண்ணெயில் எரித்துத் தடவ மாறும். சர்வாங்க சன்னிக்குத் திமிர் வாதம் முடக்கு வாதத்துக்கு மருந்து. அஞ்செண்ணை அஞ்சட்டி திப்பிலி பலம் 3, திப்பிலி மூலம் 6, வெள் வெங்காயம் பலம் 20, தழுதாழைச் சாறு நானாழி, குப்பைமேனி இலைச்சாறு ஆறு நாழிகை எரித்து வடித்துத் தடவவும்.

கண்டாமலகம்

முதல் நாள் இருமலெடுத்து, மறுசுக்குப் பலம் 3/4, மிளகு பலம் 3/4, திப்பிலி பலம் 15, இலவங்கப்பட்டை பலம் 6, இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, ஏலம், அதிமதுரம், இந்துப்பு, கொடி வேலி, கடுக்காய், தான்றிக்காய் இவையொன்றுக்கு நாலு வராகனெடை சிவதை வேர் பொடி பலம் 4, பரங்கிப்பட்டை பலம் 2, முந்திரிகை பழம் பலம் 1 1/2, கிராம்பு வராகனெடை 4, இவையெல்லாம் இடித்து வத்திரகாயம் பண்ணி வைத்துக்கொண்டு இஞ்சிச் சாறு 2, நெல்லிக்காய்ச் சாறு 2, மாறுபடாத பசு நெய் பதினைந்து பலம், பழவெல்லம் கரைத்து வடிக்கட்டிக் கொண்டு அரிக்கண் சட்டியில் ஊற்றி தருவி மத்தசாறும் விட்டுக் காய்ச்சி பாகு பதமாய் வருகிற பக்குவத்திலே பொடியைப் போட்டுக் கிண்டி லேகியம் பண்ணி வைத்தக்கொண்டு தினமும் மூன்று வராகனெடை கொள்ளவும்.

இதற்குப் பத்தியம்: துவரைப் பருப்பு, சிறு பருப்பு, வாழைக்கச்சல், கத்திரிப் பிஞ்சு, திருக்கைக் கருவாடு, விரால்கருவாடு, பசுவின் நெய், பசுவின் பால், வெள்ளாட்டுப்பால், இவையெல்லாம்.

இதற்கு வியாதியாம் சுரமாம் கிராணி, கைகால், எரிவு சந்துக்கட்டு, சிரங்கு அன்ன மந்தாக்கினி, பாண்டு ரோகம், கைகால் எரிச்சல், குருவேர்ப்பூ, மாரிடிப்பு, சிந்திளைப்பு, சுரமெல்லாம் தீரும். கைகண்டது.

சரபங்க வில்வாதி லேகியம்

வில்வ வேர் பலம் 30, முட்கா வேளை வேர் பலம் 10, சிற்றாமுட்டி வேர் சிறுகாஞ்சொரி வேர், தூதுவளை வேர், நன்னாரி வேர், சங்கம் வேர், மிளகரணை வேர், அமுக்கரா வேர், வேகங் கிழங்கு, கடுக்காய், தான்றிக்காய் இவை ஓரொன்று பலம் 5, இவையெல்லாம் இடித்து ஒரு பதளையில் ஆறு மரக்கால் தண்ணீர்விட்டு குறுணித் தண்ணீராய்க் காய்ச்சி வடிக்கட்டிக் கொண்டு அதிலே பதினைந்து பலம் பழவெல்லம் அரைத்து வடிகட்டிக் கொண்டு இஞ்சிச்சாறு ஒரு படியை பெரிய அரிக்கண் சட்டியிலே விட்டுக் காய்ச்சவும். பாகு பதமாய் பக்குவத்திலே கற்கத் திரவியம் கடை மருந்து விபரம். திப்பிலி பலம் 4, சுக்கு பலம் 1 1/2, கோட்டம் பலம் 1 1/2, இலவங்கபத்திரி பலம் 1/2, தாளிசபத்திரி பலம் 1 1/2, சிறுநாகப்பூ பலம் 1 1/2, அதிமதுரம் பலம் 1 1/2, சீரகம் பலம் 1, கூகைநீர் பலம் 1 1/4, வாய்விளங்கம் பலம் 1/4, வால்மிளகு பலம் 1/4, இந்துப்பு பலம் 1/4, சித்திர மூலம் பலம் 1/4, கிராம்பு பலம் 1/4, சாதிக்காய் பலம் 1/4, சாதிபத்திரி பலம் 1/4, ஏலம் பலம் 1/4, முந்திரிகைப் பழம் பலம் 1/4, பேரீச்சம் பழம் பலம் 1/4, கொத்தமல்லி பலம் 1/4, மாஞ்சீலம் பலம் 1/4, செவ்வல்லிக் கொடி பலம் 1/4,

இவையெல்லாம் இடித்து வத்திரகாயம் பண்ணி அந்தக் கசாயத் தூளைத் தூவி துழாவிப் பதமாகிற வேளையிலே நெய்சேர்த்து தேன் (சோளி) விட்டுக் கிண்டித் துழாவிப் பதம் பார்த்து எடுத்து வைத்துக் கொள்ளவும். தினமொரு கழஞ்சில் பிரமாணம் கொள்ளவும்.

இதுக்கு பத்தியம்: கைப்பு, புளிப்பு, தவிர்க்கவும். பசுவின் பால் கூட்டவும். பத்தியம் கறிக் கூட்டவும்.

இதுக்கு தீரும் வியாதி: பாண்டு, குன்மம், அரோசகம், காச சுவாசம், அத்தி சுரம், சத்தி குன்மம், அக்கினி மந்தம், ஒக்காளம், பயித்தியம், ரோகம், இவையெல்லாம் தீரும். கைகண்டது.

குண்டாதி லேகியம்

சங்கம் வேர் பலம் 4, கண்டங்கத்திரி வேர் பலம் 30, செவ்வியம் பலம் 20, தழுதாழை வேர், வில்வ வேர், குமுழ வேர், பாதிரி வேர், காட்டாமணக்க வேர், சித்தமல்லி வேர், பேராமல்லி வேர், செம்முள்ளி வேர், நெரிஞ்சில் வேர், கீழாநெல்லி வேர், ஆனை நெரிஞ்சி வேர் இவையெல்லாம் ஏழு பலம் 5, இவையெல்லாம் இடித்து எட்டு மரக்கால் தண்ணீர்விட்டு இடித்து நாளும் போட்டு செறுகச் செறுகச் சிறுகுறுணியான பக்குவத்திலே கற்கத் திரவியம் கடை மருந்து திப்பிலி பலம் 4, இலவங்கப்பட்டை பலம் 1, சவுகைநீறு பலம் 1, சிறுநாகப்பூ பலம் 1, பெருங்காயம் பலம் 1, சீரகம் பலம் 1, கற்கடசிங்கி பலம் 1, மிளகு பலம் 1, கிராம்பு பலம் 1, சுக்கு பலம் 1, தாளீசபத்திரி பலம் 1/2, கருஞ்சீரகம் பலம் 1/2, சாதிபத்திரி பலம் 1/2, இவையெல்லாம் இடித்து வத்திரகாயம் பண்ணி முப்பது பலம் பழவெல்லம் முன் கசாயத்தில் கரைத்து வடிக்கட்டி அடுப்பிலே வைத்துக் காய்ச்சி வருகிற

பக்குவத்திலே வத்திரகாயம் பண்ணி இரக்கி மருந்தை தூவி துறுவி லேகிய பதமாகிற பக்குவத்திலே இருநாழி தேனும் விட்டுக் கிண்டிப் பக்குவமானதே இறக்கி கொண்டு ஒரு கலசத்தில் வைத்துத் தான்யபுடமாக வைக்கவும். தினமொரு பாக்களவு கொள்ளவும்.

இதுக்குத் தீரும் வியாதி: சயரோகம், உடல் காய்ச்சல், சுவாசகாசம், பாண்டு ரோகம், ஈளை, இருமல், சிலேத்துமம், அக்கினி மாந்தம், அன்னத்திலே துவேசம், மேல்மூச்சு, குண்டலவாய்வு இவையெல்லாம் தீரும்.

அசுவகந்தி சூரணம் கண்டாதிரி லேகியம்

அசுவகந்தி சூரணம் வரும் பின்வருமாறு செய்யவும், கிராம்பு வராகனெடைக் சிறுநாகப்பூ வராகனெடை 2, ஏலம் வராகனெடை 3, மிளகு வராகனெடை 1 1/2, திப்பிலி வராகனெடை 1 1/2, சுக்கு வராகனெடை 3, அமுக்கிரா வேர் பலம் 6, இதுவெல்லாம் இடித்து வத்திரகாயம் பண்ணி சர்க்கரை மூன்று பலம் கூட்டி கலந்து வைத்துக் கொண்டு பசுவின் நெய்யில் வெண்ணையில் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி அத்தியில் சுரம், அக்கினி மாந்தம், சூலை எரிவு, கைகால் எரிவும் இவையெல்லாம் தீரும்.

இதுக்குப் பத்தியம் கடுகு புளி கார்ப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

வேறு

கண்டாதிரி லேகியம்

கண்டாதிரி லேகியம் மிளகு வராகனெடை 6, சுக்கு வராகனெடை, திப்பிலி வராகனெடை 4, சாதிக்காய்

வராகனெடை 2 1/2, கூகை நீர் வராகனெடை 2, இவையெல்லாம் இடித்து வத்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு இஞ்சிப் பத்து பலம் சிறுக சிறுக நறுக்கி அரைவாசி காயவைத்துக் கடலைப் பக்குவமாக நெய் வார்த்து வறுத்து அதில் பேரிலே ராய்ப்பூர் சர்க்கரை ஆறுபலம் போட்டு பிறகு வச்சிரகாயம் பண்ணினப் பொடியைப் போட்டுக் கிண்டித் தேனும் விட்டுக் கிளறிப் பக்குவம் பண்ணி வைத்துக் கொண்டு தினம் வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி அக்கினி மந்தம் சீரணக் கழிச்சல் அரோசகம் அன்னத்துவேசம். இவை எல்லாம் தீரும்.

காமாலைக்குச் சூரணம்

காமாலைக்கு சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு இவை ஆறும் வகை முப்பலம் 1, சூரணம் பண்ணி கையாந்தகரைச் சாறு வரிசாரணையிலைச் சாறு உரிமணத்தாகாளி, இலைச்சாறு உரி, அரைபொடி பலம் 4, கோமியத்தில் ஒரு நாள் ஊறிக் கழுவிப் போட்டு எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு நாள் ஊறப்போட்டு கழுவிப்போட்டு பிறகு முன்சொன்ன மூன்று பச்சிலைச் சாறு வார்த்து மூன்று நாளைக்கு ஒவ்வொரு சாமம் சாறு விட்டரைத்து பிறகு ராயப்புரி சர்க்கரை ஆறு பலங் கொண்டு வந்து முன்பண்ணின சூரணத்துடன் கலந்து சாரித்து தென்னாழிவிட்டு பிசைந்து ஒரு கலசத்தில் வைத்துக் கொண்டு தினம் வொருகடி பிரமாணம் கொள்ளவும்.

இதுக்குப் பத்தியம்: கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

காமாலை வீக்கத்துக்கு சிந்தாதி லேகியம்

புளியிலை ஒருவிடை, தூணித் தண்ணீர் விட்டு குறுணியாகக் காய்ச்சின நீர் குறுணி இஞ்சிச் சாறு

ஒருபடிப் புளியாரைச் சாறு நாழி நார்த்தம் பழச்சாறு நாழி எலுமிச்சம் பழச்சாறு நாழி சித்திர மூலம் பலம் 6, சாரணைவேர் பலம் 3, தேவதாரம் பலம் 2, கசாயம் வைத்து நாழித் தண்ணீர் விட்டு ஈராழியாய்க் காய்ச்சி முன் சொன்ன கசாயமும் இதில் கூட்டி பழவெல்லம் இருபத்தைந்து பலம் கரைத்துக் காய்ந்துவர பக்குவத்தில் சுக்கு பலம் 1, திப்பிலி பலம் 1, கையாந்தகரைப் பொடி பலம் 1, இலவங்கப்பட்டை இலவங்கப் பத்திரி, சிறுநாகப் பூவாய் விளங்கம் சீரகம் ஓமம், கருஞ்சீரகம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, காந்தம், கோட்டம், தாளிசபத்திரி இவையெல்லாம் ஓரொன்று கால்பலம் வச்சிரகாயம் பண்ணிக் கொண்டு அரைப்பொடி பலம் 1/4, கையாந்தகரைச் சாறு வாத்தரைத்துக் கொண்டு பாக்கோடே போட்டு கிண்டி லேகிய பக்குவத்தில் ஒரு படி தேனும் விட்டு உரி நெய்யும் விட்டு பக்குவத்தில் இறக்கி ஒரு கலயத்தில் வைத்துக் கொண்டு தினங் கழற்சிக் காய் கழக்கோடிப் பிரமாணம் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி விசப்பாகம் மகோதரம், காமாலை, சோகை முதலானவை தீரும்.

இதற்குப் பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

ஏலாதி சூரணம் வண்டு கிழங்கு பலகடிக்குச் சூரணம்

ஏலாதி சூரணம், ஏலம், கிராம்பு, தாளிசபத்திரி, கந்தகம். தகரம், சுக்கு, மிளகு, அரத்தை, செவ்வியம், சிறுதேக்கு, கற்கடசிங்கி, இதுவெல்லாம் வகை ஒண்ணுக்கு வராகனெடை திப்பிலி, வராகனெடை 50, இதுவெல்லாம் சூரணம் பண்ணிச் சீலை வடிக்கொண்டு நாலு சேர் வங்காள சீனியைக் கலந்து ஒரு கலசத்திலே வைத்துக் கொண்டு இரண்டு வெருகடிப் பிரமாணம் அந்தி சந்தி கொள்ளவும். இதற்கு தீரும் வியாதி பித்த கிறுகிறுப்பு,

உச்ணம், எலும்பு சுரம், வாதம், கழிச்சல், பிறகண்டம், காமாலை, சோறு செறியாமை, மேலிளைப்பு, வயிற்றில் தோசம், பல்வியாதி தீரும்.

இதற்குப் பத்தியம் கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

வண்டு கடிக்கு எள் படி, சேங்கொட்டை 30, வெல்லண்டை 30 இது மூன்று வகையும் இடித்து சூரணம் பண்ணி தினம் வெருகடிப் பிரமாணம் பண்ணி தினம் வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். வண்டு கடியும் பல கடியுந் தீரும். நாற்பத்து நாள் கொள்ளவும். கார்ப்பு, புளிப்பு ஆகாது. சேங்கொட்டையை சுத்தி பண்ணிக் கொள்ளவும். இரத்தக் கழிச்சல், அதிசார கிராணி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், வசம்பு, கருவேப்பிலை, சீரகம், கழக்கோடி, பருப்பு, அசமதாகம் இந்துப்பு, இவை சமன் கூட்டி வறுத்துப் பொடி செய்து வெருகடிப்பிரமாணம் கொள்ளவும். நல்லெண்ணெயில் கொள்ளவும்.

இதற்குப் பத்தியம்: கார்ப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

இரத்த கழிச்சல், அருவை, கிராணி, உள்மூலத்திற்கு

மாதுளம் பழம், வட்டத்திருப்பி வேர், வறட்பூலா வேர், புளியங்கொட்டைத் தோல், அதிவிடையம், காசுக்கட்டி, கிராம்பு, சாதிக்காய் இவை சமன் கொண்டு வறுப்பொடி செய்து சீலைவடிக்கொண்டு தினம் வெருகடிப் பிரமாணம் எருமைத் தயிரிலே வட்டத்திருப்பி, கசாயம், விரயத்திலே தனிலே வரட்பூலா, கசாயத்திலே இதுகளிலே கொடுக்க நிற்கும். உள்மூலத்துக்கு காட்டு கரணைக் கிழங்கு புளிநறளைக் கிழங்கு, பிரண்டை வேரும், கொடி வேலி வேரும், இவையெல்லாம் சமனாக நறுக்கி தூளாக்கி, வச்சிரகாயம் பண்ணி இதில் கூட்டுங் கடைச் சரக்கு, சுக்கு, மிளகு, அசமதாகம், கடுக்காய், இதுவும் சமன் பொடி

செய்து எல்லாம் ஒன்றாய்க் கலந்து கலசத்திலே வைத்து வெருகடிப் பிரமாணம் பசுவின் பாலில் கரைத்துக் கொடுக்கவும். உள்மூலம தீரும். கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

அட்ட சூரணம் பீனசம் எட்டுக்கு

அட்ட சூரணம் இந்துப்பு பலம் 1, சீரகம் பலம் 2, அசமதாகம் பலம் 2, திப்பிலி பலம் 4, சுக்கு பலம் 5, கடுக்காய்ப் பொடி பலம் 10, இவையெல்லாம் வச்சிரகாயம் பண்ணி வெருகடிப் பிரமாணம் இள வெந்நீரில் கொடுக்கவும். வயிறு கழிந்து அக்கினி உண்டாம்.

பீனசம் எட்டுக்கு சாதி லிங்கம் வராகனெடை 2, சாதிக்காய் வராகனெடை 2, கிராம்பு வராகனெடை 2, குரோசாணி ஓமம் விராகனெடை 4, எருக்கங்கரி வராகனெடை 4, இவை எல்லாம் தூள் பண்ணி மெல்லிய சீலையில் பார்க்கவும். மெல்லிய சீலையில் சுருட்டி சுங்கனில் மேல் வைத்து புளியம், பரணி சுட்டதனில் சுங்கானில் வைத்து மூக்கில் வாங்கவும். அட்ட பீனசம் தீரும்.

அட்ட குன்மத்துக்கு

அட்ட குன்மத்து நல்ல உப்பு நாழித் தண்ணீர் விட்டு கரைச்சு தெளியவைத்து இறுத்துக்கொண்டு அடுப்பில் காயவைத்து உப்புக்கண்ட நிரை கும்மட்டிக் காய் போட்டு இடித்துப் போட்டு அடுப்பில் மதிச்சு வெண்ணை போலேவும் தேத்தாங் கொட்டைப் பிரமாணம் பசுவின் நெய்யில் சாப்பிடுகிறது. உப்பு புளிப்புத் தவிர்க்கவும். எட்டுக் குன்மத்துக்குச் சூரணம் ஆடாதோடையிலை 3, எருக்கம் பழுப்பு குறுணி இலை கள்ளியிலை குறுணி

பிரண்டை பெருங்காயம் பலம் 1, கருஞ்சீரகம் பலம் 1, மிளகு நாழி புதுபானையிலிட்டு காட்டெரு முட்டை கொண்டுவந்து புடமிட்டு அந்தப் பொடியில் மிளகு பொடி கலந்து வாய்வு குன்மத்துக்கு நெய்யிற் கொடுக்கவும். வலி குன்மத்துக்கு திப்பிலி போட்டு காய்ச்சின நீரில் கொடுக்கவும். சத்தி குன்மத்துக்கு தேனில் கொடுக்கவும். அக்கிராணிச் சூரணம் திருநீற்றில் நான்கு நாள் எருக்கம் பால் விட்டு காயப்போட்டு அரைத்து காய வைத்து கொடுக்கையில் வைத்துக் கொண்டு மூக்கிலே பணவிடை பொடியெடுத்துப் போடவும் தும்மலுண்டாகும். இதுவும் குன்மத்துக்கு கருங்கோழி வென்னிப் படுத்தி மயிர்க்குடல் வாங்கி அதில் மிளகு பலம் 10, ஓமம் பலம் 1/2, கருஞ்சீரகம் பலம் 1/2, உள்ளி உரித்து பலம் 1/4, இதனை இடித்து வயிற்றில் வைத்து சதுரக்கள்ளியைப் புடம் போடவும். வைத்து இடித்து வடிக்கட்டிக் கொண்டு அந்திசந்தி ஆறுநாள் வெருகடிப் பிரமாணம் தின்னவும். இதற்குப் பத்தியம்: வெந்நீறும் சோறும் தின்னவும்.

மூலக் கிராணி குன்ம வாய்வுக்குச் சூரணம்

சாதிக்காய் வராகனெடை 1, சாதிபத்திரி வராக னெடை 1, கோரோசனை வராகனெடை 1, ஏலம் வராகனெடை 1, ஆவின் வராகனெடை 1, ஆகவரக னெடை ஐந்தும் பேய்க்கும்மட்டிப் பழம் தலையரிந்து அதில் பொதித்து கலசத்தில் போட்டு மூடிபத்துநாள் புதைத்து செவ்வாழைப் பழம் ஒன்று ஒருநாளைக்குக் கொடுக்கவும். மறுநாள் செவ்வாழை பழத்தில் வைத்து உள்நாக்கு தண்டாமல் விழுங்கவும். பூச்சி செத்து விழுந்துபோம், பசுவின் பால் பச்சரிசி, பச்சைப் பயறு, கஞ்சிகாய்ச்சி குடிக்கவும். இதுக்கும் வேறு. பரிபூரண கிடாச்சம் உண்டாகவும் உள்ளி உறித்து பலம் 1½,

அரைத்து விளக்கெண்ணையில் எரித்து குடிக்க பூச்சி செத்து விழும்.

மூலத்துக்குச் சூரணம் உச்ணவாய்வுக்குச் சூரணம்

மூலத்துக்குச் சூரணம் சித்திரமூலம் பலம் 10, புளிநரளைக் கிழங்கு பலம் 10, வெருகங்கிழங்கு பலம் 10, காட்டுக் கரணைக் கிழங்கு பலம் 10, சேங்கொட்டை பலம் 10, இவைவெல்லாம் காயப்போட்டுச் சூரணம் பண்ணிப் படி 1, கருப்பிடம் கூட கலந்து கழக்கோடிப் பிரமாணம் கொடுக்கவும். இதற்குப் பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். பசுவின் பால் கூட்டவும்.

உச்ண வாய்வுக்கு

சுக்கு, மிளகு, திப்பிலி, நற்சீரகம், கருஞ்சீரகம், ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, தாளிசபத்திரி, குரோசாணி ஓமம், கடுகு ரோகிணி, கொத்தமல்லி, வாய்விளாங்கம், விளா அரிசி, வால்மிளகு, இதுவகைக்கு வராகனெடை, சுத்தி பண்ணின சிவதை வேர் வராகனெடை 4, சர்க்கரை வராகனெடை 4, கடைச் சரக்கெல்லாம் இளவறுவலாக வறுத்து இடித்து வடிக் கொண்டு சிவதை சர்க்கரை கலந்து வெருகடிப் பிரமாணம் தேனில் கலந்து அந்தி சந்தி கொடுக்கவும். வாதம் எண்பத்து இரண்டும் பயித்தியம் உளமாந்தம், அழுத்தியிலே பிடித்த காய்ச்சல் தீரும்.

மூலவாய்வுக்கு மருந்துச் சூரணம் இதுவும் மூலவாய்வுக்குச் சூரணம்

மூலவாய்வுக்கு சுக்கு வசம்பு, திப்பிலி, திப்பிலி மூலம், கடுகு ரோகிணி, ஓமம், குரோசாணிஓமம், கொத்தமல்லி, வாய்விளங்கம், வால்மிளகு, சாதிக்காய்,

சாதிப்பத்திரி, செவ்வல்லிக் கொடி, மிளகு, சீரகம், சோமநாத பெருங்காயம், அதிமதுரம், இலவங்கப் பட்டை, இலவங்கப் பத்திரி, சிவதை வேர், விளாவரிசி, கடுக்காய், தாளிசபத்திரி, ஏலம், கிராம்பு, சர்க்கரை, சீனிநாயகம், இதெல்லாம் சிவதை சர்க்கரை, நீங்கலாக வறுத்து இடித்து சீவதை சர்க்கரை கலந்து தேனில் சாப்பிட மூலவாயு, எண்ணப்பட்டதெல்லாம் தீரும். இதுக்கு மூலவாய்வுக்குச் சூரணம், பிரண்டை, குரோணி போலே, நறுக்கி அதன் பேரிலே நாழி உப்புப் போட்டு அவித்து அதை உணர்த்திக் கொண்டு பிறகு சாதிக்காய் பலம் 1/2, சாதிப்பத்திரி பலம் 1/2, கிராம்பு பலம் 2, ஏலம் பலம், இந்துப்பும், சவுட்டுப்பும் பொடி உப்பும் வளையலுப்பும் கல்லுப்பு பலம் 2, பெருங்காயம் பலம் .... குரோசாணி ஓமம் பலம் .... உள்ளி பலம் .. மிளகு பலம் ... சுக்கு பலம்½, இவைகளை இளவறுக்கையாய் வறுத்துக் கொண்டு வத்திரகாயம் பண்ணி தினம் வெருகடிப் பிரமாணம் தேனில் கொள்ளவும். மூலவாய்வு, இரைச்சல், பொருமல், அரைச்சோறு, போட்டுக் கழியிறது, பயித்திய வாய்வு, குன்மம், குடல் வாதம், இவைகள் தீரும்.

இதற்குப் பத்தியம்: கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

புளியாரை நெய் பண்ண வகை

பேய்க் கும்மட்டிக்காய், பறித்துக் கொண்டு உள்சதையைத் தோன்றி வாங்கித் துவைத்துச் சாறு படி காயும் தருவாயில், பெருங்காயம் அரைப்பலம் போடவும். அதன் பிறகு பத்துக் கடுக்காயைப் பொடி பண்ணிப் போட்டு கால்படி உப்பும் போட்டு லேகியமாக்கி இறக்கி, பக்குவத்தில் எடுத்து வைத்து பாக்களவு தின்னவும். வயிறு பேதிக்கும். பனைநொங்கு போலே விழும். காடி

போலே விழும். பசலைப்பழம் போலும் பேதிக்கும். அடிவயிற்றில் கண்டிப்பு நீள்மை கர்ப்ப விப்புருதி. குன்மம் வாய்வு இதுகள் தீரும். வெகு வாயு பேதிச் சால் பசுவின் நெய் ஆழாக்கு குடிக்க தீரும். புளியாரை நெய் பண்ண வகை புளியாரைச் சாறு 2, கோரைக் கிழங்குச் சாறு 2, தண்ணிர்விட்டான் கிழங்குச் சாறு 2, பசுவின் நெய் 2, நாவல்பட்டை மரங்கொட்டை விரை பெருமாப்பட்டை, விலாம்பிச்சம் வேர், அதிவிடையம், மரமஞ்சள், வரட்சுண்டி வேர், வட்டத் திருப்பி வேர், நெய்தல் கிழங்கு, வெள்ளி லோத்திரம், குடசப்பாலைப் பட்டை, கத்தூரி மஞ்சள், வில்வபத்திரிக்காய், அதிமதுரம், சுக்கு இவை ஓரொன்று முக்கழஞ்சு, அரைத்துக் கரைத்து முன்னிருந்த சாற்றுடன் கலந்து பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

இதுக்குத் தீரும் வியாதி பித்தக் காசம், பாண்டு ரோகம், பித்த சலம் மேகம் காலெரிப்பு, கையெரிப்பு, மூத்திரக் கிரிச்சரம், இவை எல்லாம் தீரும். காசம் உளமாந்தை இளையிருமல் முயல் நெய் ஆண் முயல், பெண் முயல் கொண்டு வந்து குடல், தலை, கால் இவை போக்கி இவை இருபத்து நாலு பலம் சதையை கூட்டி பலத்துக்கு இருநாழி நீர்விட்டு நாலத்தொன்றாய்க் காய்ச்சி பின்னையும் ஆடாதொடை வேர் இருபத்துநாலு பங்கு கொண்டு வந்து பலத்துக்கு இருநாழி நீர்கூட்டி நாலதொன்றாய்க் காய்ச்சி, பின்னையும் ஆடாதோடை வேர் இருபத்துநாலு பங்கு கொண்டு வந்து பலத்துக்கு இருநாழி நீர்கூட்டி நாலதொன்றாய்க் காய்ச்சி இரண்டு கசாயமும் சரியாகக் கூட்டிக் கொண்டு இதுக்கு இருநாழி பசுவின் நெய்யும் கூட்டி இதுக்கு கற்கம் தேவதாரம் மஞ்சள், கீலகம், அதிமதுரம், திப்பிலி, அரத்தை, சிறுதேக்கு, கற்கடசிங்கி, அதிவிடையம், கார்கோள அரிசி,

சுக்கு, இலுப்பை, கண்டு சர்க்கரை, கொள்ளு, அமுக்கராக்கிழங்கு வேர், அதிவிடையம், முத்தக்காசு, இவை ஓரொன்றுக்கு அரைக்கழஞ்சு கூட்டியிருநாழி பசுவின் பாலும் விட்டு மன்கசாயத்துடனே கூட்டி வடித்து முக்கழஞ்சு நெய் தினங் கொள்ளவும். இதுக்கு காசம் தீரும்.

அமுதா வள்ளி நெய் பண்ண வகை

நிலப்பனைக் கிழங்கு, அமுக்கரா வேர், அமுத வள்ளிக் கிழங்கு, இது மூன்றுசாறு இலவங்கம், கிராம்பு, சாதிக்காய், சிற்றேலம், பேரேலம், கற்பூரம், சந்தனம், அதிமதுரம், விலாம்பிச்சம் வேர், சீரகம், முந்திரிப்பழம், இது அரைக்கவும். நாழிநெய்க் கழஞ்சு, நாகஇலை, பொன்னாங்கண்ணி, சிறுக்கீரை, வெட்டிவேர்த் தண்டு இதுகள் சாறும், முன்சொன்ன சாறும், கூட்டி நெய் ஒரு பங்கும் சாறு இரண்டு பங்கும் பாலொரு பங்குமாக இதன்படி கூட்டி நெய் கலந்து இந்த மருந்துங் கரைத்த பதத்தில் வடித்து உள்ளே கொள்ளவும். இதில் தீரும் வியாதி ரத்த பித்தம். பிரமியம், சந்திர வாதம், சயரோகம் இது தீரும். புத்திர பதம்முண்டாம்.

அத்தி சுரத்துக்கு எண்ணெய்

அத்தி சுரத்துக்கு எண்ணெய் சிற்றாமுட்டி வேர் பலம் 40, பொன்மெழுகு பலம் 1, பதக்குத் தண்ணீரில் போட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி இறுத்துக் கொண்டு கடைச்சரக்கு அரத்தை, சுக்கு, கோட்டம், சந்தனம், மரமஞ்சள், அதிமதுரம், கோரைக்கிழங்கு, திப்பிலி, இந்துப்பு, நன்னாரி வேர், தேன்மெழுகு, தேவதாரம், செவ்வல்லிக் கொடி, விலாமிச்சம் வேர், கடல்நுரை, கடுகு ரோகிணி, வெட்டிவேர் ஒவ்வொன்றும் வராகனெடை,

மோர் ஆறுநாழி இதுவெல்லாம் கூட்டி விளக்கெண்ணை நாழியில் புகட்டி கடை மருந்து போட்டு நாலு நாளிருக்கப் பதத்தில் வடித்துக்கொள்ளவும். உள்ளுக்கு கொள்ளவும். அத்தி சுரம் தீரும்.

சயத்துக்கு சுக்கு நெய்

சுக்கு பலம் 12, அகில் கட்டை பலம் 12, வெவ்வேறு பதக்குத் தண்ணீரில் போட்டு நாநாழியாக (படி) காய்ச்சின நீரில் 3, இதில் பசுவின் நெய் 2, வெள்ளாட்டுப் பலம் 2, கற்கம் 2, சுக்கு, மிளகு, திப்பிலி, கொடிவேலி வேர், புறத்தோல், பங்கம் பாளை வேர், மஞ்சள், சிறுதேக்கு, சிறுமூலம், விஷாவரிசி, பெருங்காயம், அதிவிடயம், பெருங்குரும்பை, முத்தக்காசு, இந்துப்பு, ஆற்றிப்பு, செவ்வியம், அசமதாகம், சீரகம், வசம்பு, அதிமதுரம், இவை ஒவ்வொன்றுக்கு பலம் 2, அரைத்துக் கரைத்துப் பதத்தில் நக்கவும். சயந் தீரும். சயத்துக்கு நெய் எண்ணை பண்ண வகை கேள். தூதுவளை வேர், சடக்கி வேர், இம்பூறல் வேர், சங்கம் வேர், வில்வ பத்திரி வேர், சித்தாமுட்டி வேர், வெள்ளெருக்கம் வேர், நன்னாரி வேர், முளகரணை வேர், கண்டங்கத்திரி வேர், சிறுநெரிஞ்சில் வேர், சித்தாவாரை வேர், ஆகாச கருடன் கிழங்கு, சிறுகுரட்டைக் கிழங்கு அப்பைக் கிழங்கு, பெருமருந்து, அழிஞ்சில் வேர், வெண்ணாவில் பட்டை, இவை ஒரொன்றுக்கு பலம் 10, இடித்து தண்ணீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி வடித்து இதில் கூட்டுஞ் சாறு செருப்படிச் சாறு, இஞ்சிச் சாறு, தூதுவளைச் சாறு, ஆடாதோடையிலைச் சாறு, சின்னிஇலைச்சாறு, பொடுதலைச்சாறு, கையாந்தகரைச் சாறு, ஊசிமல்லிகைச் சாறு, இண்டிலைச் சாறு, கற்பூரவல்லி இலைச்சாறு, இவை ஒவ்வொன்றுக்கு நாழிமுன்

காய்ச்சின கசாயத்தில் விட்டுக் கலக்கி. சுக்கு, ஏலம், இலவங்கம், கிராம்பு, சாதிக்காய், நார்மூலத்தூது, திப்பிலி, திப்பிலிமூலம், ஆனைத்திப்பிலி, வெட்பாலை அரிசி, அதிமதுரம், கருஞ்சீரகம், நற்சீரகம், காவட்டம், திரிபலை, இந்துப்பூ, கடுகு ரோகிணி, பெருங்குரும்பை, கற்கடகசிங்கி, சாத்திர பேதி, சதகுப்பை, சிற்றரத்தை, முந்திரிப்பழம், சுக்கு, மிளகு இவை ஓரொன்றுக்கு பலம் சுக்கு, மிளகு, வெள்ளாட்டுப் பால், வார்த்தரைத்து மத்த மருந்தெல்லாம் பொடி செய்து சீலைவடிக் கொண்டு எண்ணைை நாழிக்கு ஒரு பங்கு நெய் இரு நாழிக்கு இரண்டு பங்கும் கூட்டி நாலு காசெடை சாதிலிங்கம், நெய்யிலே போட்டு வடித்து, எண்ணெய் மேலுக்கு இட்டு பிடிக்கவும். நெய் உள்ளுக்கு கொள்ளவும். இதுக்கு தீரும் வியாதி சயம், ஈளை, இருமல், உள் மாந்தை காசம், சுவாசம் எல்லாம் தீரும்.

சயத்துக்கு எண்ணெய் பண்ணவகை

பெருமுட்டி வேர், அமுக்கரா வேர், பெருவாகை வேர், நன்னாரி வேர், சிற்றாமுட்டி வேர், விலாமிச்சம் வேர், சீந்தில்தண்டு, அரக்கு, ஓரொன்றுக்கு பலம் 12, இத்தனையும் சுவரத்தக்கதாய் நான்குமாக கால் கலம் விட்டு நாழிலொன்றாய் காய்ச்சி இதற்கு நல்லெண்ணெய் படி 3, ஆமணக்கெண்ணை படி 3, தயித்த தண்ணீர் படி 6, தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு படி 6, இதுக்குக் கலக்கம் சந்தானம் அதிமதுரம் கோட்டம் மரமஞ்சள், தேவதாரம், சிற்றாமுட்டி, சிற்றரத்தை, சதகுப்பை, தாமரைக்கிழங்கு 8, ரேணுகம், கடல்நுரை, பௌத்தை, நன்னாரி வேர், முத்தக்காசு, துளசி, நந்தியாவட்டை, இலுப்பை, வயிரம், கடுகு ரோகிணி, நற்பாலை, நிலக் குமிழ், திப்பிலி மூலம், இவை ஓரொன்றுக்கு வராகனெடை

நாலு அரைகரைத்து பதத்திலே வடித்துப் பூசவும். ஆறுவித சயம் மேகம், மாந்தம், பித்தப் பாண்டு, காமாலை, சீரண சுரம், சுவாசகாசம், குறகம், குமரகண்டன், பிள்ளையில்லாத பேருக்குமாம். சர்வ தோசமும் போம்.

பழஞ் சுரத்துக்கு

பழஞ்சுரத்து வகை விளக்கெண்ணை உரி வெதுப்படக்கிச் சாறு வரிசங்கிலைச் சாறு, உரி உத்தாமணிச் சாறு, உரி கஞ்சாங்கோரைச் சாறு உரி இது தனிச் சாறாய் கூட்டி வடித்துக் கொண்டு சுக்கு, பசுவின் பால் வாத்து வைத்து வடித்துக் கொண்டு இதில் வயிறு பேதியாக வேணுமென்றால் ஆழாக்கு விளக்கெண்ணெ யும் மூன்று கடுக்காயும், கருஞ்சீரகமும் கூட்டி எரித்து உள்ளுக்குக் கொள்ளவும். மேலும் பூசவும். வயிறு பேதியாகும். பேதியாக வேண்டாமென்றால் நல்லெண்ணை கூட்டி வடித்துக் கொடுக்கவும். பழஞ்சுரம் நிற்கும். வாதசுரத்துக்கு நொச்சி இலை, சங்கிலை, இண்டங் கொழுந்து, வெற்றிலைக் கொழுந்து, கழக்கொட்டிக் கொழுந்து வேர், பருத்தியாலை வேர், முடக்கொத்தான் கொழுந்து இவைகள் தன்னிலோகக் கூட்டி அரைத்து இதில் கடுகு ரோகணி பலம் 1, கருஞ்சீரகம் பலம் 1, அரத்தை பலம் 1, சதகுப்பை பலம் 1, மரமஞ்சள் பலம் 1, திப்பிலி பலம் 1, நுனி மஞ்சள் பலம் 1, மிளகு பலம் 1, விளக்கெண்ணை உரிகூட்டி வடித்து உள்ளுக்கு கொள்ளவும். மேலுக்கும் பூசவும். குணமாம். இது வேறு.

வாதசுரத்துக்கு எண்ணெய் பண்ணும் வகை
பழவெதுப்புக்கு எண்ணெய்

வேப்பலை முடக்கொத்தான் இலைக்குச் சூரையிலை, வெதுப்படக்கி இலை, இவை நாலுசாறும்

சமனாக விளக்கெண்ணையில் ஒரு படியில் உள்ளி வசம்பும் கூட்டி வடித்து உள்ளுக்குங் கொடுத்து மேலுக்கும் பூச பழவெதுப்பு தீரும்.

தாபசுரத்துக்கு கருஞ்சொம்பை எண்ணை பண்ணுகிற வகை

நல்லெண்ணெய் 3 3/4, வேப்பெண்ணை 3/4, கருஞ்செம்பையின ாச் சாறு, கருஞ்சொம்பை வேர், வராகனெடை 1 1/2, அவுரி வேர் வராகனெடை மூன்று வசம்பு வராகனெடை 1, வெள்ளுள்ளி பலம் 1 1/2, இவையெல்லாம் நல்லெண்ணெயுடன் நறுக்கிப் போட்டு சிவந்த பதத்தில் வடித்து உள்ளுக்குங் ஒரு காசிடை கொடுத்து மேலுஞ் சர்வாங்கமும் பூசவும். உள்ளங்கால் உள்ளங்கையில் விடவும். சுரம் நிற்கும். கைகண்டது. சுரத்துக்க மேல் வீக்கம்வாட எண்ணெய், சாறனை வேர்ச்சாறு, கடுக்காய், இரண்டு சுக்கு, ஒரு கணம் கூடப் போட்டு இருநாழித் தண்ணீர் விட்டு உழக்காய் காய்ச்சி இறுத்து விளக்கெண்ணெயில் காய்ச்சி விட்டு குடித்தால் வயிறு கழிந்து வீக்கம் வாடும்.

அண்ட வாதத்துக்கு எண்ணெய் பண்ண மகோதரத்துக்கு எண்ணெய்

விளக்கெண்ணை படி 2, எருக்கம் பால் படி 1, நொச்சியிலைச் சாறு படி 1, புளிஇலைச்சாறு படி 1, விழுதி இலைச் சாறு படி 1, முடக்கத்தான் சாறு படி 1, விடத் திரையிலைச் சாறு படி 1, வெள்ளாட்டுப் பால் படி 1, வெள் வெங்காயம் பலம் 5, வசம்பு பலம் 1, இதனை எரித்து உள்ளுக்குங் கொடுத்து மேலுக்கும் பூசத் தீரும். விளக்கெண்ணெ படி ¼, முடக்கொத்தான் இலைச்சாறு படி, கழச்சி இலைச் சாறு படி ½, ஈரவெங்காயச் சாறு படி½,

மூன்று சாறும் விட்டெரித்தும் இறக்கின பிறகு கடுகுரோகிணி பலம் ½, கருஞ்சீரகம் பலம்½, வெங்காரம் வராகனெடை 2, ராயப்புரி சக்கரை பலம் 1, இதனை பொடி செய்து போட்டு காலையில் ஒரு நேரம் எட்டுநாள் குடிக்கவும் தீரும். உள்ளிப் பலம் 2, அரைத்து விளக்கெண்ணையில் எரித்துக் குடிக்கப் பையோடே பூச்சி செத்து வீழ்ந்து போம்.

கருங்கிரந்தி செங்கிரந்தி

கருங்கிரந்தி, செங்கிரந்தி வீக்கமுடையவர் பருக எண்ணெய். கண்டங்கத்திரி வேர் பலம் 4, மணத்தக்காளி வேர் பலம் 4, சிறுகுறட்டை கிழங்கு, எலுமிச்சங் காய் அளவு வட்டக் கிலுகிலுப்பை வேர் பலம் 4, கருஞ்சீரகம் 1, கம்பிபிசின் 61, பூதக் கரப்பான் பட்டை 61, கத்தூரி மஞ்சள், மரமஞ்சள் 61, சதகுப்பை கூகை, திப்பிலி 61, அரத்தை 61, உள்ளி 61, வசம்பு கூகை, ஆக மருந்துவகை கடைச் சரக்கு உள்பட வகை பதினாலு சாறு வகை நொச்சி இலைச்சாறு வகை 3/4, அஞ்சியிலை, வயிரவனிலைச் சாறு 3/4, சாணாக்கியிலைச் சாறு 3/4, இந்தச் சாற்றில் கடைச்சரக்கும் வெட்டு மருந்து எல்லாம் இந்தச் சாறு வாத்து அரைத்து மிஞ்சின சாறும் நாழி உரி விளக்கெண்ணெயும், ஒக்கக் குழப்பி சூரியப்புடமாக வைத்துக் கொண்டு சாயங்காலத்தில் எண்ணை எரிக்க மணமுண்டாயிருக்கும். கடுகு மெழுகுமான உடனே இறுத்து வைத்துக்கொண்டு மாதவிடாய் வந்தநாள் முதல் கொண்டு மூன்று மாதத்திலே, ஐந்து மாதத்திலே உழக்கு நாலு பிடித்த கரண்டியால் மற்ற நாள் முதல் எட்டு நாளைக்கு ஒருக்கால் இரண்டு கரண்டி எண்ணெய் பாக்களவு கடுகு கொள்ளவும். உப்பு புளிப்புத் தவிர்க்கவும்.

பூதகாதி தைலம்

அயில்பட்டை பலம் 40, அரத்தை பலம் 20, அமுக்கரா வேர், கொடிவேலி வேர், முட்காவேளை வேர், சாரணை வேர், தூதுவளை வேர், தழுதாழை வேர், நொச்சி வேர், முருங்கப் பட்டை, சீந்தில் தண்டு இவை எல்லாம் ஓரொன்றுக்கு பலம் ஐந்து கூட்டி இடித்து ஒரு பதளையிலே போட்டு எட்டு மரக்கால்த் தண்ணீர் விட்டு குறுணி கொள்ளு சாறு நா நாழி, வேப்பிலைச் சாறு, நாநாழி, வெள்ளாட்டுப் பால், நாநாழி எண்ணெய், குறுணியிலே இதில் இந்தச் சாறு கசாயம் எல்லாமுமிட்டுச் சிறுகச் சிறு கொதியிட்டு வருகிற பக்குவத்திலே கலக்கித் திரவியம் கடைமருந்து குக்கில் மாஞ்சில், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப் பருப்பு, ஏலம், இலவங்கப்பட்டை, நாகப்பூ, இலவங்கப் பத்திரி, பூலாங் கிழங்கு, தேவதாரம், காயம், அரத்தை, வசம்பு, கடுகு ரோகிணி, அதிமதுரம், செவ்வியம், ஓமம், சதகுப்பை, செண்பகப்பூ, கோட்டம், மஞ்சட்டி இவை ஓரொன்றுக்கு இரண்டு வராகனெடை கூட்டி அரைத்து கரைத்து எண்ணெயில் போட்டு பதத்தில் வடித்துக் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி நேத்திர ரோகம் எனப்படும் எல்லாம் தீரும்.

இலுப்பை இலைச் சாறு படி 1/2, கொழுஞ்சி இலைச் சாறு படி 1/2, நல்லெண்ணெ படி 1/2, மூன்று வகையிம் சாரிச்சு குடிக்கவும். இப்படி மூன்று நாள் மூன்று நேரம் குடிக்கவும். புளியும் புகையிலையும் விட்டு விடவும். வாத சூலை தீரும். கை கண்டது. இடுப்பு வலியும் தீரும்.

வேறு

துத்தமொடு துருசி நீலஞ்சனக்கல்
தோன்றுகடல் நுரை யுட னே கடுக் காயுங்கூட்டி

வித்த மாய்க் கூட்டி
மிளகு தானிக்காய் சங்குத்தூளும்
வெள்ளைச்சா ரணைவேரும் விதமாய்க் கூட்டி
நித்தமுள்ள பச்சைக்கற்
பூரங் கூட்டி நிறை எலுமிச்சம் பழச்
சாற்றிலாட்டி சித்தமிகு கயிறு செய்து
நிழலிலாற்றித் திலத் முலைப்பா லில்விடத்
தீரும் நோவே.

அனுபானம்வகை: கையாந்தகரைச் சாறு விட்டரைக்கவும்.

அதிமதுரம் திப்பிலி மிளகு வெள்லோத்திரம் மலை மஞ்சள் நெல்லிப் பருப்பு சீனக்காரம். கருவேலம் பிசின்.

இது நிற்க கண்டபலத்துக்கு மருந்து

வெள்ளை காக்கணம் இலை பசுவின் பாலிலரைத்து உண்டை செய்து நிழல் உலர்த்தலாக உலர்த்தி நறு நெய்யிலுரைத்து கண்ணில் விடவும். கண்படலமும், பூவுந் தீரும்.

வேறு

வாதராட்சத அகவல்

கங்கையை சூடும் கடவுளா ரிடத்தில்
மங்கையு மையாள் மனமது மகிழ்ந்து
நாதனை வணங்கி நானிலத் தோர்க்கும்
வேதனை யகற்றும் விமலரே கேளீர்
நாலாயி ரத்து நானூற்று நாற்பத்து
மேலான எட்டுவியாதியும் புவியிற்
பயன்றெறி வாகப் பகர்ந்தீ ரதிலும்

இயம்பிடு வாதமென் பதுவகை தெரியவே
சொல்லீர் சிவனே யென்னவும் அரிய
மெய்ப் பொருளாயான் பகர மருந்து
சடையிலே நாமுந்தரித்த எருக்கலை
அடையவெ வேரும் அலாகா வேயிலையும்
பத்தாகச் சீராய் நிறுத்து திட்டமாய்
னாவத்துவாத்தெ எட்டு மரக்கால்த் தண்ணீயும்
பத்தே நன்றாய்ப் பதக்காய்க் காய்ச்சியி
றுத்து வடித்தே இயல்பாய்தனுள் மறுத்துஞ்
சேர்க்கும் வகைபத்து கேளீர்
ஆதளை எண்ணெ சித்தாமணக் கெண்ணை
கோதி லப்புங் கெண்ணைக் குருத்திவெண்
ணையுங்
கடுகிலெண் ணையும் கலந்தே
யதனில் விடுநல்லெண் ணையும்
வேப்பெண்ணையும்
வெள்ளாட்டுப்பால் மென்பசும் பாலுங்
கள்ளிப் பாலுங் கறந்திவை யெல்லாம்
எண்ணெயும் பாலு மியம்புவ ணம்வாய்
நண்ணியவன் கக்கு நானாளி கூட்டி
பச்சிலை சாறுடன் பாலெண்ணை யெல்லாம்
வச்சகசாயத்தில் வாகாய்க் கூட்டி
வெள்ள வெங்காயம் மிளகுபலம் அஞ்சுங்
கொள்ள பெருங்காயம் கோட்டம் மாத்தை
கத்தூரி மஞ்சள் கடுக்காய் சீரகம்
முற்றிய கடுகு முதிரதி மதுரம்
சேரா மஞ்சள் செய்ய கந்தகமும்
மாரா வகைக்கு மரைப்பலம் நிறுத்து
திட்டமாய் நாங்குழத் தேங்கயளவு
மெட்டிப் பளத்திலே திபளம் பத்துக்கு
மிளபளத்தில் குலவியசாற்றில் கரும்

மிருட்டியும் கலக்குயெ நன்றாய்
வல்லமை யாக வடிமுன் மருந்தும்
சொல்லிய தெல்லாம் தூருள்ள தாழியில்
அடுப்பினிலேற்றி அக்கினி மூட்டித்
திடப்பட மெழுகுசேர் பதத்தி றக்கு வாதத்தி
லூற்றுவருஞ் சன்னியோற்கு காதொற்ற
கண்டமெய்கை கால்வ ரைக்கும் யேகமாய்
முறுக்கி யிட்டுநீ நன்றாய் வாகுடன்
வேது மாலையில் வாராகக் கூனிய சன்னி
குறுகிய வலிப்பு மானிலந் தோன்றிய
வாதத்தி லெண்பதும் போமேனச் சிவனார்
புகலவு முமையாள் தாமிக வறிந்து தன்மந்தி
ரிக்க குருமுனிக்குஞ்சொல்ல
குருமுனியவனும் மதுரைவழுவாமல்ச்
சொன்னவா கடத்தை யுற்பன மெனவே
யுள்ங்கனி கூர்ந்து பற்பல மருந்தில்
பாத்துத் தெளிந்து நவின்றனன் வாத
ராட்சதத் தயிலம் சிவன்றிரு நாமன்
சிந்திக்க நாளும் கவிபுகல் வாக்கி
கங்கை குலத்தபுவியிற்றி ருக்கையும்
புகளெபூண்டொன புெருக்கும்வள
சோபெரிய கொட்டை யினலிருக்கும்
குப்பண்ணியம் பிடுநூலெ ....

சுரக்கசாயம் சந்திரகாந்த உண்டை

சிறுக்கீரை வேர், பிரண்டை வேர், புளிமடலைக் கிழங்கு சேர் 1, மனோசீலையை மண் கொண்டு எலுமிச்சம் பழச்சாறுவிட்டரைத்து கயிறு செய்து முலைப்பாலில் அரைத்துத் தடவப்பல கண்ணோய் தீரும்.

சுரக்கசாயம்

சீராசிறுகாஞ்சி சோறு வேர் பற்ப்படாகம் செய்ய
இருவேலி முத்தக்காசு, சீந்தில்
பாரா நன்னாரியுடன் ஆடாதொடை
பரிவானலாமிச்சுத் திப்பிலியுங் கூட்டி
எராரு மிளகு, சுக்குச் சந்தனமுங் கூட்டி இயல்பா
மிருநாளித் தண்ணீரெட்டொன்றாய்க் காய்ச்சிக்
காராருங் குழல் மடவாய்குடி நீர் கொள்ளக்
கனமான பழைய சுரங்கலங்கிப் போமே.

சுரத்துக்குநீர் குளிர் சுரமாத்திரை

சீராசுக்கு அதிமதுரம் சேராஞ் சந்தனம்
ஏலமுடன்
வாராய் கொடுக்க அறுபத்துநாலு
சுரமுமாறிடுமே தாக சுரத்துக்கும்
ஆம்நன்றாக எலிப்பகை தன்னை யங்கே
எருக்கலைம் பாலிலிட்டு சலிப்பற நாலு
நாளுஞ் சாத்தபின் முலைப்பால் தன்னில்
பலிப்புற அறைத்தங் குண்டைப் பயறு
போலச் சேர்த்துக்கொண்டு நலிப்புர
மோரி லிட்டால் நாலுநாள் மாறப் போமே ..

பித்த கிறுகிறுப்புக்கு கசாயம்

பித்தஞ் சுழுத்தி கிறுகிறுத்து பெருக்க நடைக்குத்
துயராக்கி
ஒத்து வியக்கலுட னெடுத்து ஓங்காரிப் பாய்சிலுக்
கிட்டால்
சித்தத் துளங்கா யிளநீரில் சிறிய பயறுஞ் சீரகமும்
மெத்த பசும் பால் நேர்பொரியு மிகவே
காச்சிக் கொள்வீரே

வேறு

நாலாமாறலுக்கு குளிர்சுரத்துக்கு ராமபாணம்

கவுரி துத்தம் அரிதாரம் குளா
பொரிரத மோரிடையாம்
அவுரிமத்துன் சாறுடனே அரைத்து உண்டைப்
பயறாக்கிக்
குவரி நெருக்கிப் பொடியாக்கி
கொடுப்பதிஞ்சிச் சாற் தனில் தவிரிநெருக்குங்
குளிர்சுரத்தை தவிர்க்கும் ராம பாணமிதே.

வேறு

சர்வ சுரத்துக்கு உண்டை

வெள்ளை வராகனெடை 4, கெளரி வராகனெடை 4, துருசு வராகனெடை 2, கொம்புப் பாகலிலைச்சாற்றில் ஒரு சாமமரைத்துப் பாசிப் பயறு அளவு நிழலுலர்த்திக் கொள்ளவும். பித்த சுரத்துக்கு முலைப்பாலிலிடவும். குளிர்சுரத்துக்குப் பசுவின் பாலிலிடவும். வாதசுரத்துக்கு சுக்குத் தண்ணீரிலிடவும். மத்தியானத்துக்கு களி, கஞ்சி கொடுக்கவும். பின் மறுநாள் கொடுக்கவும்.

வேறு.

குளிர் சுரத்துக்கு ராமபாணம் சர்வ சுரத்துக்கு உண்டை

பூமகள், மருவும் பொதிய மா மலைவாழ் கோமுனி
உரைத்த குணவாகடத்தில் மகிமையை கண்டு
மருந்துகளறிந்து மருமகிழ் சந்தனாதி யாந் தைலம்
வைபதும் அவற்றுள் வலுநோ யிகலுஞ் செப்பமும்
நன்றாய் தோந்துரை யாகப் பெருக்கிச் சரவணப்
பெருமாள் புதல்வன் திருக்கைக்குப் பண்ணன் செப்பிய
வகைகேள் சந்தன மேலஞ் சன்ன லவங்கம்

குங்குமப்பூச் செடினீர் கோட்டம், செண்பகப்பூ,
மஞ்சிட்டிக் கடுக்காய், நன்பதி மதுரம், நல்மர மஞ்சள்,
நெல்லிப் பருப்பு நேர், திப்பிலியும் சொலிலாமிஞ்சியுஞ்
சுகரோ கிணியும் தான்றிக் காயும் சரிலா
மிச்சுங்கின்ற வெள்ளிக்குளங்கின்
மேற்தோல் ஒருபதினேழும் ஒராபல
மாய்ம்வுருள்ளே நீர்வாத்தெ அரைத்து
இசையவேநல் லெண் ணை யிருபடி பசுவின்
பாலின் படிரண் டளந்து தாளை விளுது
சாறு மிருட்டி ஆழமார் தாழிச் சட்டியதனை
வார்த்தே அரைத்து மருந்தைக்
கலக்கு யேத்த தோர் அடுப்பினில்
ஏற்றி யிதனை நெடுகவெரித்து நீர்வற்றியபின்
கடுகு மன்றபோலக் கண்டது பதமாய்
அந்த வேளைஅடுப்புவிட் டிறக்கிச்
சந்த னாதி தயிலந் தனையும் பாருள்ளோகள்
கலநாளு முழுகத்தீரும் வியாதி
சிரசின் வலியும் கண்ணி லெரிவுங்
காயத்தெரிவும் புண்ணிலெரிவும்
புகைச்சல் படலமும் வெள்ளெழுத் துடனே
மேகமூ வேளுந் தள்ளியே போகும்
தயிலத் ததனால் காய மிருகும் கண்
களொளிதரும் நேயமாய்ச் சொன்னோம்
நிச்சயந் தானே.

வேறு

ஸ்ரீமான் நாராயணன் துணை லெட்சுமி கடாச்சம்
உண்டாகவும்.

சந்தனாதி தைலம்

சசிநாழியானால் இதில் கலக்குமருந்து நல்லெண் ணெய் 2, பசுவின் பாலிரு நாழி இளநீரிரு னாளி அமுக்கரா வேர் ஒரு முள்ளிக் காயளவு குருந்தம் பட்டை அரைத்து ஒரு எலுமிச்சங் காயளவு கடுக்காய் நெல்லிகாய், தான்றிக்காய் அதிமதுரம், குருந்திருக்கம், செண்பகமொட்டு விலாமிச்சம் வேர் இருவேலி வேர் ஓரொன்றும் 20, அரைத்துக் கலந்து வேகவைத்து கடுகு மன்றை பதமானால் வடித்து

இன்னமுந் தயில மியம்புங் கேளீர்
சன்ன லவங்கஞ் சாதிக் காயும்
செஞ்சந்தனமும் செண்பகப் பூவும்
மிஞ்சிய ஏலமு மிகுந்த கடுக்காய்
கருவாய்ப் பட்டை கத்தூரி மஞ்சள்
சிறுநா கப்பூ, சோதி மதுரம், கதித்த
கோட்டம், கடுகுரோ கிணியும் தான்றிக்காய்,
மலைப் பச்சையுடன்
சதகுப்பை யும்பின் சரிநெல் லிக்காய்
பதிநாறும் வகைப் படிமருந் தெல்லாம்
வகைக்கு மூன்று வராக னிறுத்து றைகைக்கு
மிளகு சொன்னேனரைப் பலம்வின்
மூலிகையை வகுத்தே உரைப்பேன் இனங்குறுந்
தொட்டி இலாமி சுடனே
பொன்னாங்காணி புகழ்சேர் வெட்டிவேர்
அன்னவை வகைக்கும் அரைப்பலம் நிறுத்து
பச்சிள நீரில் பாங்காய் அரைத்து
மிச்சமாந் தாழை விழுதுச்சாறும்
ஓர்மூன் றொட்டி யுயர்நல் லெண்ணைச்
சேர்மூன் றெட்டி சொத்திய பின்னும் அரைத்த

மருந்தி லடவாய்க் கலக்கி உரத்தச்
சட்டியைநீ யுடன் அடுப் பேத்தி யெரித்தே
பதமாய் இறக்கி வைப்பக்கேள்
மருச்சேர் கடுகு மன்றபத மாகுந்
தயிலமே நாளுந் தாணியோர் முழுக
செயமிகுங் காயந் தீரும் நோய் பலவு
மன்றில் பொதிய மாமுனி சொன்னார்,
வென்றி வாகடத்தை விபரமாய்ப் பார்த்து
கற்ப காலங்க ளாகினி அறிய
சொற்புல வோர்கள் சுகமேந் நாளும்
மிருக்கற்ப மிதுவே யெனவும்
திருக்கைக்குப் பண்ணன் செப்பிய மொழியே

கண்ணோய்குத் தைலம்

ததுக்குறுணித் தண்ணீர் விட்டுக்கா வியாதி நிதானம்

சுரம் 64, சீதசுரம் 3, சன்னி வகை 13, இரத்த பித்த வகையிருமல் ஈளை வகைக்கு விக்கல் 5, கசரோகம் 3, குரல் யிடிய விழுகிறது 6, அரோசகம் 5, வாந்தி 5, மார்பு 5, தாகவுழத்தி 6, மதாத்தியம் 4, மூலவியாதி 6, உதாவர்த்தம் 1, சருமகீலகம் 3, அதிசாரக் கழிச்சல் 6, கிராணி 4, விசுழிக் கழிச்சல் 5, மூத்திர கிரிச்சரம் 20, பிரமேகம் 20, பிளவை 10, விப்புருதி 8, வழியண்ட வாதம் 7, குன்மம் 8, சூலை 72, திரேகத்தில் வியாதி 8, பாண்டு 5, காமாலை 6, வீக்கம் சோகை 6, விசபாகம் 6, குட்டம் 18, சித்திர குட்டம் 3, புழுவகை 20, வாதம் சுய வாத இச்சொனிதம் 7, பித்தம் 48, அறுவிதம் 22, சிலேட்டுமம் 20, தாது விருத்தம் 8, உள்மாதம் 6, குமரகண்டம் 4, சன்னி பாதம் 5, சாத்திர ரோகம் 36, யோனி ரோகம் 24, புண் வகை 8, கண்டமாலை 3, உபசிங்கம் 3, ஒடுவிரணம் 5, கண்டத்தில் வியாதி 18,

சீபதம் 8, மேகம் 5, கிழக்குறத்தி 5, எலிகடி 18, சில்விசம் 10, தேள் 8, சிறுபேதாபேதம் 312, விசம் 18, மருத்தீடு 32, எலும்பினில் வியாதி 80, சந்தில் வியாதி எஅ, இரத்தத்திலும் மாங்குசத்திலும் மேதையிலும் வியாதி 34, அகக் கழுத்துக் கீழ் வியாதி 80, கழுத்துக்குமேல் வியாதி, கண்ணோய் 96, தலையில் வியாதி 19, கபாலத்தில் வியாதி 10, காதில் வியாதி 25, மூக்கில் வியாதி 18, பல்லில் வியாதி 10, கன்னத்தில் வியாதி 8, நாக்கில் வியாதி 16, உதட்டில் வியாதி 11, முகத்தில் வியாதி 8, கண்டத்தில் வியாதி 18, பல்லரையில் வியாதி 13, காதிலரியில் 13, இப்படியே நிதானம் அறியவும். நிதானம் அறியாமல் பரிகாரம் பண்ணக் கடவானல்ல விசம், குட்டம், குமரகண்டன் வயிறு கழிநாத்தம், வாய்வு, வாதம், இதுக்கு உடனே மருந்து கொடுக்கவும். தாமதம் பண்ணினால் வியாதி குணமாகாது. பிறகு கொடுக்கிது அதிசாரக் கழிச்சலுக்கு முப்பது நாழிகை அறுபது நாழிகைக்குள்ளாக மருந்து கொடுக்கவும். காய்ச்சலுக்கு மூன்றுநாள் ஒன்பது நாளுக்கு மேல் மருந்து கொடுக்கவும். இரத்தப் பித்தம் கண்வியாதி இதற்கெல்லாம் பிறகு மருந்து கொடுக்கவும்.

நாடியுறை அறிதல்

அசனம் பண்ணினவனுக்கும் மூழ்கினவனுக்கும் நித்திரை பண்ணினவனுக்கும் பட்டினி இருந்தவனுக்கும் வழி நடத்தவனுக்கும் கணக்கயிளைச்சவனுக்கும் பேய்பிடிச்சவனுக்கும் கோபித்துக்கொண்டவனுக்கும் ஸ்ரீ சங்கை பண்ணினவனுக்கும் மத்தியாம் பண்ணினவனுக்கும் பயித்தியம் பிடிச்ச வனுக்கும் கந்தக முதலானது தின்கிறவனுக்கு முயல்கண்டன் இளைச்சவனுக்கு இரக்கவந்தவன் இவர்களுக்கு நாடி செவ்வையிலே நடவாது

வேறு

யாதொரு வியாதிக் காரனுக்கு நாடிப் பார்த்தால் உடனே கைகழுவவும். அதெப்படி என்றால் சோறு ணறுகை கழுவினாப் போலே ஆக்கும் அசீரணம் சகல வியாதிகளுக்கும் காரணமாயிருக்கும். நாலுவிதம் அதெப்படி எண்டிலச் செணமென்று விப்பட்டமென்று தூமமென்று விதூம் ஆக நாலு விதமாயிருக்கும். அதில் குணம் சென்ம தலைவலிக்கும் வியப்பட்ட உடம்பு கடுக்கும் விந்துப் புழித் தேக்கிடும் தூம்சுவாகமான ஏப்பம் பிறப்பிடும் இப்படி நாலு வகையும் சீரண மென்றறிவான். வாதமெண்ணப்பட்ட தெல்லாம் கடுப்பு பித்தமெல்லாம் பிரமம் சேத்துமமெல்லாம் அசீரணம் இப்படி அறியவும். வயித்தியன் சுரம்வாதந் துவக்கின அன்று பட்டினி ரெண்டாநாள் பல்லுத் தீட்டி நாக்கு வழித்து வெந்நீராலே முகங்கழுவிக்காது மறையத்தலை கட்டிக் கொள்ளுவான் இடக்கைக் கீழாய்ப்படுத்துக் கொள்ளுவான். மூணு ணாளமந்தப்படி நாலொன்றாக் காச்சின தண்ணீர் சற்றே குடிப்பான். குடித்த தண்ணீர் தோசம் போம். தேத்தங் கொட்டை தின்பான், நாலாநாளும்ந்தப் பட்டினி அஞ்சாநாள் கஞ்சி குடிப்பான். ஆறாம்நாள் அந்தப்படி கஞ்சி குடிப்பான். ஏழாம் நாள் கண்டூசம் பண்ணி அவிசதங் கொடுப்பான். வாத சுரத்துக்கு ஆறுநாள் பட்டினி ஏழாம் நாள் பட்டினி தருண சுரம் ஏழுநாள் மத்திம சுரம் பத்துநாள், அதற்கப்பால் பிராண சுரமென் றறிவான். வாத சுரத்துக்குப் பகலுக்கு மேல் கஞ்சி பித்த சுரத்துக்கு காலையில் கஞ்சி சேத்தும சுரத்துக்கு மத்தியானத்திலே கஞ்சி கொடுக்கவும். நற்சீரகம் பழவரிசிக் குறுணை கையாந்தகரை கொட்டைக் கரந்தை காட்டு வெள்ளரி சின்னியிலை, நிலாவாரை இலை, மணத்தக்காளி, ஆதண்டை முத்தெருக் கஞ்செவி பிரமியிலை, கோடக சாலை கம்பந்தரா உத்தாமணி

பாகல்யிலை, சிறுசெருப்படி, செருக்கீரை, கழற்சியிலை, கைப்பூரவள்ளி, மாந்தக்குருந்து நல்லகுருத்து, பேய்மிரட்டி, இண்டியிலை, சித்தியிலை, விழுதியிலை, செப்பு நெருஞ்சி, தகரை, சங்கிலை, ஈரவெங்காயம், சங்கங்குப்பி, தூதுவளை, காட்டுக்குறிஞ்சி, பொடுதலை, கருநொச்சியிலை, சாணாக்கி, முருங்கிலை, கிரந்தி னாயகம், தழுதாழை, துளசி, அவுரியிலை, நுணாயிலை, வெள்ளறுகு, கற்றாழை, கவுரி, பிரண்டை, வெதுப்படிக்கி, பவள குன்றியிலை, பாவட்டையிலை, இம்மருந்து வகைக்கு சாறு படி 1, விளக்கெண்ணை வெட்டு மருந்து, புலிதுடக்கி வேர், நரிவிளாத்திப்பட்டை, காட்டு மல்லி வேர், சித்தமல்லி வேர், செங்கதாரிப்பட்டை, ஆனாவேர், தூதுவளை வேர், பெருநரளை, சிறுநரளை, காட்டுக் கருணை, கொழுஞ்சி வேர், மருள்கிழங்கு, காரணை வேர், புளிநரளையிலையும் கிழங்கும், கறிக்கருணை, கருஞ் சீரகம், கத்திரி மஞ்சள், உள்ளி, பூதவிருச்சம், சதகுப்பை, வெளிச்சபிசின், அரத்தை, பரங்கிப்பட்டை, வசம்பு, கோட்டம், அதிமதுரம், இது வகைக்கு பலம் 1/2, கூட்டி முன்சாறு வார்த்து அரைத்து சாணிபதமான வாறே எண்ணைவிட்டு மறுநாள் வடித்து மெழுகு பதத்திலே வடித்து வச்சுக் கொண்டு அஞ்சு மாத்தையிலே தொட்டுபாத்து மாதமட்டுக்கும் மாத மூன்றுநாள் குடித்து ஆறுநாள் பத்தியம் கசப்பு கிரந்திப் பண்டங்களாகாது. இப்படி பண்ணினால் செங்கிரந்தி, கருங்கிரந்தி எண்ணப்பட்டதெல்லாம்தீரும். பிள்ளை அஞ்சு வயசு மட்டுக்கும் இந்த எண்ணை வழங்கினால் வியாதி வராது. மாந்தம் கணத்துக்கு எல்லாம் மாசிக்காய், சாதிக்காய், சாதபத்திரி, கிராம்பு, ஏலம், பஞ்சத்திரவியம், இதுவகைக்கு வராகனெடை கூட்டி பொடி செய்து பண்ணின எண்ணெயில் போட்டு வைத்துக்கொள்ளவும். உள் காய்ச்சல், மந்தம், கணம் இதுக்கு மூன்று நாளிடவும். இது கை கண்டது.

இது லெப்பை கையெழுத்து. அல்லா உன் உதவி செய்யவும்.

அரிகிரந்திக்குக் களிம்பு

மருத்து வெள்ளை சாதிலிங்கம் மிருதாருசிங்கி, திப்பிலிமூலம், மஞ்சள் அரிதாரம், கிராம்பு, ஆக வகைக்கு விராகனெடை 1, பொன் மெழுகு பலம் 1/2, பசுவின் வெண்ணை பலம் 1/2, நல்லெண்ணெய் பலம் 1/ 4, மூலிகை வெதுப்பவும்.

தீராத கரப்பான் கிரந்திப் புண்ணுக்கு காரத்துணி

துருசு வராகனெடை 2, இதை நெருப்பில் பொரித்துக் கொண்டு கருப்பு வெற்றிலைச் சாறு பலம் 1/2, இது இரண்டும் ஒரு கரண்டியில்ப் போட்டு கொதிக்கிற போது மெல்லிய சீலையில் துவைச்சு எடுத்துவைத்துக் கொண்டு புண்களுக்கு போடவும். தீரும்.

கிரந்திப் புண்ணுக்கு மருந்து

ரசக் கற்பூரம் விராகனெடை 1/2, ரசசெந்தூரம் வராகனெடை 1/2, நெல்லிக்காய் 1, கந்தகம் வராகனெடை 1/2, இதுமூன்றும் வெல்லத்தில் அனுபானம் பண்ணி ஏழுநாள் கொடுக்கவும்.

மேல் செருவை மருந்து

ரசம் விராகனெடை 1, துருசு விராகனெடை 1, துத்தம் விராகனெடை 1, குங்குலியம் விராகனெடை 2, மெழுகு விராகனெடை 2, விளக்கெண்ணெய் பலம் 1/2, சாதிலிங்கம் வராகனெடை 1,

புகை மருந்து விபரம்

சாதிலிங்கம், அரிதாரம், துத்தம், துருசு, நேர்வாளம், மனோசீலை, தாளகம், சுரைக்காய், கந்தகம், ரசம்.

கந்தகம், பாசாணம், கருங்குங்கிலியம், நாபி வெள்ளைகுங்குலியம், காசுக்கட்டி, கவுரி பாசாணம், காட்டு சீரகம், கருஞ்சீரகம், வெள்ளீயம், காரீயம், துத்தனாகம், காந்தம், புரசம் விரை, இலுப்பைக் கட்டி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, மகிழம் விதை, வேப்பெண்ணை புங்கெண்ணை, மாசிக்காய், மஞ்சள், கடுகு, கழற்சி விதை, இலவம்பிசின், கருவேலம்பிசின், சந்தனதூள், வசம்பு, சாம்பிராணி, நவச்சாரம், சீனக்காரம், பொட்டிலுப்பு, எட்டிவிதை, வேப்பம் விதை, பெருங்காயம்.

தீராத கிரந்தி புண்ணாக்கு புகைவத்தி

சாதிலிங்கம் வராகனெடை 1, மிளகு வராகனெடை 1, மஞ்சள் வராகனெடை 1, சாதிக்காய் வராகனெடை 1, எருக்கம் கரி வராகனெடை 1, இதுவெல்லாம் அரைத்து வத்தி கட்டிப் புகைக்கவும்.

களிம்பு

துத்தம் வராகனெடை 1, துருசு வராகனெடை 1, அண்டம் ஒரு வராகனெடை 1, இது கல்வத்திலரைத்து ஆறாக பொடி பண்ணினதின் பிறகு நல்லெண்ணெய் விட்டு ஒரு சாமம் அரைத்து எடுத்து வைத்துக்கொண்டு போடவும். காரணம் தீரும்.

சன்னி பாத சுரம் தோசசுரம் இவைக்கு கஞ்சிக் காச்சி கொடுக்கிறது.

கண்டங்கத்திரி வேர், முள்ளி, கத்திரிவேர், ஆடுதின்னாப் பாளை, அதிமதுரம், வெட்பாலை அரிசி, வகைக்கு பலம் 1/2, இந்த மருந்தெல்லாம் இடித்து ஒரு பலம் தூளைப் பொட்டணம் கட்டி இரண்டு படி தண்ணீரில் போட்டு ஒருபடியாகக் காய்ச்சி அந்தத் தண்ணீரில் அரைக்கால் படி அரிசி பொரித்துப் போட்டு கஞ்சியாகக் காய்ச்சி சூடாயிருக்க மத்தியானம் கொள்ளவும்.

தீரும் வியாதி : சன்னிபாத சுரம், தோச சுரம், சோகை தாகம், கபம், வாதம், வாயு, உப்பிசம் இவை எல்லாம் தீரும். சன்னி பாத சுரத்துக்கு தோசசுரம் இவைக்கு கஞ்சி காய்ச்சி கொடுக்கிறது.

சன்னி பாத சுரத்துக்கு

வில்வவேர், மருதம்பட்டை, சிற்றாமுட்டி வேர், இலுப்பைப்பூ, சுக்கு வகைக்கு பலம்1, இந்த மருந்து நாலுபங்கு சட்டியில் போட்டு ஒருபடி தண்ணீர் விட்டு அரைப்படியாகக் காய்ச்சி வீசம் படி அரிசி வறுத்துக் கூடப்போட்டுக் காய்ச்சி கொடுக்கவும். சன்னி பாத சுரம் போம். வயிறு போனால் கட்டும்.

கையெரிவுக்கு கால் எரிவுக்குத் தைலம்

நெய்சட்டி சாறு படி 1, கையாந்தகரைச் சாறு படி 1, நெல்லிக்காய்ச் சாறு படி 1, பசுவின் பால் படி 1, நல்லெண்ணை படி 1 1/2, இந்த மருந்தெல்லாம் சட்டியல் விட்டுக காய்ச்சி மெழுகு பதத்தில் கடுகு வாங்கிப் போட்டு அதிமதுரம் பன்னிரெண்டு பலம் இடித்துத் தூள்பண்ணி பால் போட்டு பிசரி அந்த எண்ணெயில் போடவும். பதத்தில் காய்ச்சி இறக்கிக் கொள்ளவும். பித்த வேட்டையின் பேரில் எரிவு கால் எரிவு, நெஞ்செரிப்பு, எண்ணெய் முழுக நசியம் பண்ணி உள்ளுக்கும் வாங்கவும்.

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், மருத்துவக் குறிப்புகளையும், இன்ன பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. அச்சுவடிகள் பழுதடைவதற்குள் சரசுவதி மகால் நூலகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பெரிதும் பயன்படும்.

இந்நூலகத்திற்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் நூலகம் உள்ளளவும் பெறுவர். அவை நூல் வடிவில் பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு. அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகால் நூலகத்திற்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்

இயக்குநர்,

சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம்,

தஞ்சாவூர்.

மருந்து செய்முறைகள்

1. சூலை பதினெட்டுக்கும் பாவக்காய்க் குழம்பு

சட்டியில் அரைமட்டம் உப்பிட்டு அதில் வெள்ளுள்ளி தோல் போக்கி ஒரு பலமரைத்து குகை செய்து அதில் ரசம் ஒருபலம் விட்டு வாய் மூடி மேல் சட்டி மூடி சீலை செய்து நாலு சாமம் எரித்து இறக்கி ஆற வைத்து பதங்கத்தை எடுத்துக் கொண்டு பதங்கத்தினிடைக்கு இரண்டு பங்கு சங்கம் வேர் பாவு சேர்த்து இதுக்கு சமனிடைக்கு கருங்குருவை மாவு சேர்த்து பழச்சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து எருமை மோரில் கொடுக்கவும்.

பத்தியம்: புளி விட்டுப் பாவற்காய் குழம்பு செய்து கொடுக்கவும். வாய் வேகங் கொடுத்த பிறகு உப்பில்லாமல் பத்தியம் மூன்று நாள் பிடிக்கவும்.

தீரும் வியாதி : சூலை, கிரந்தி, மேகரணம் இவை தீரும்.

2. பிரமியத்துக்குக் காசத்துக்குப் பொடி

பழம் புளியைக் கரைத்து அதில் குந்திரிக்கம் பொடி செய்து போட்டுக் கலக்கி மூன்று நாள் கொடுக்கப் பிரமியம் தீரும்.

மேற்படி குந்திரிக்கம் பொடி செய்து கரண்டியில் போட்டுக் காய்ச்சி உருகும் போது சர்க்கரையைப் போட்டுக் கிண்டி திரிகடுகு தூளில் கொடுக்கக் காசமிருமல் தீரும்.

3. மேகத்துக்கு:

குந்திரிக்கத்தைக் கரண்டியில் இட்டு உருகிற போது நல்லெண்ணெய் விட்டுக் கிண்டி தண்ணீர் விட்டுப் பிசைய வெண்ணெயாகும். அதை சலத்தில் போட்டு வைத்துக் கொண்டு கொடுக்கவும். தீரும்.

4. வீர செந்தூரம்

வீரம்	பலம்	..1
லிங்கம்	பலம்	..2
வெங்காரம்	பலம்	..4

சுத்தி செய்து நுணுக்கிப் பொடி செய்து அரைத்து வைத்துக்கொண்க சகல வியாதிக்கும் அரைப் பணவிடை நெய்யில் கொடுக்கவும்.

5. கர்ப்பப் புழுவுக்கு

உலகுடைய முதலியார் கிட்டே போயிருந்து கொண்டு உருப்படி வைத்து ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொண்டு அந்த மரத்தைப் பார் அய்யா நமச்சிவாய குறக்கோணி என்று ஒருத் துளி தெறித்து இப்படி அன்பத் தோநூறு செபித்து அன்பத்தோடு துளி தெரித்து அந்த இலை பறித்து எலுமிச்சம்பழப் பிரமாணமரைத்து ஆவின் பாலில் கரைத்து கொடுக்கவும் மூன்றா நாள்ப் புழுவிழும் புத்திரனுண்டாம் அந்தப் பெண்ணை சுக்கிர வாரத்தில் மூழ்கி சாம்பிராணிப் புகைத்து கோமியங் கொண்டு கண்ணு கருவி துப்பரவாயிருந்து மூணாம் நாள் தீபங் கொடுத்து சாப்பிடவும்.

6. அரிதாரச் செந்தூரம்

அரிதாரம் பலம் 5 மனோசிலை பலம் 5

சாரணை துவைத்து சட்டியில் முக்கால் வாசி விட்டு மேற்படி மருந்து இரண்டு அரைத்து வைத்து மேல் சாரணை கொண்டு மூடி சீலை மண் செய்த காயவைத்து அடுப்பிலிட்டு இரண்டு சாமம் எரிக்க. செந்தூரம் வாழைப் பழத்தில் பணவிடை கொடுக்க ஈளை வாதம், குட்டம், மண்டை சூலை, மண்டைக் கரப்பான் சூலை தீராப்புண் படுதாமரை மேல் தடிப்பு இவைகள் தீரும். அஞ்சுநாள் கொள்ளவும் பத்தியம் பால் சாதம் சாப்பிடவும்.

7. சிவதைச் சூரணம்

திரிகடுகு, திரிபலாதி, மல்லி, சீரகம், கருஞ்சீரகம், கடுகுரோகணி சன்னலவங்கப் பட்டை, வகைக்கு பலம் 1/2 சூரணித்துக் கொண்டு சுத்தி செய்த சிவதைச் சூரணம் பலம் 1/4, சீனி பலம் 1, ரோகித்துக் கொண்டு வெருகடிப் பிரமாணம் வெந்நீரில் கொள்ளவும். இவ்வாறு கால் மண்டலம் கொள்ள.

தீரும் வியாதி: மலசலக் கட்டு. மேக வெட்டை, பித்த வெட்டை, ஈரல் எரிவு, கைகால் எரிவு, கிருமி தோசம், அடிவயிறு வலி, நெஞ்செரிவு, உச்ணவாயு, கால்கைக் கடுப்பு, இவைகள் தீரும். வெந்நீரில் குளிக்கவும்.

பத்தியம் : மிளகு நீர் சாதம். மோர் சாதம். அரை நிரை கூடவும்.

8.மூலவாயு, பித்த வெட்டை வாய்வுக்கு சிவலை சூரணம்.

ஏலம் லவங்கம் திரிபலையூ
யிசைந்த கோஷ்டம் வாய்விளங்கம்
சாலச் சிவதை யோர் பங்கு
சரியாச் சர்க்கரை யுடன்கூட்டி

காலை தன்னில் வெந்நீரில்
கரைத்துக் கொடுக்க வயிறுவிடும்
மூல வாய்வு பித்த வெட்டை
முடுகி யோடுங் கண்டீரே.

அரிதாரம் பலம் -1
சீனி பலம் - 1

இதை வெண்கருவா ஆட்டி வில்லை செய்து சீலையிலிட்டு மூடிச் சீலை செய்து குக்குடம் போட பற்பமாகும்.

9. கிரந்தி அரையாப்புக்கு

கிரந்திக்குக் கள்ளி வாட்டி வீசம் படி சாறு பிழிந்து பணவிடை பற்பங் கொடுக்க இப்படி அந்தி சந்தி பத்து வேளை கொடுக்கவும்.

மறு பத்தியம் உப்புப் புளி கூட்டவும்.

அரையாப்புக்கு: வாழைப் பழத்தில் பணவிடை கொடுக்கவும். பன்னிரெண்டு நாள் சாப்பிடவும்.

பத்தியம் : கரப்பான் புண் பதார்த்தம் தள்ளவும். அந்தி சந்தி இரண்டு வேளையும் போடவும். புண் அமுங்கிப் போகும்.

10. சூலைக் கட்டு வாதக் கடுப்புக்கு

சங்கம் வேர் பலம் 1
பரங்கிப்பட்டை பலம் 1
பிரப்பன் கிழங்கு பலம் 1
முக்கா வேளை பலம் 1

இவைகளை இடித்துத் தூவி செய்து குறுணி சலம் விட்டு நாள் ஒன்றுக்கு வற்ற வைத்து கால் சேர் கசாயத்தில் பணவிடை கொடுக்கவும். அஞ்சு நாள் கொள்ள கடும்பத்தியம்.

11. சனக மகா முனிவர் பிரமதண்டி எண்ணெய்

பிரம தண்டி சமூலம் இடித்த சாறுபடி – 1

வெந்தயம், நற்சீரகம், அதிமதுரம் வகைக்கு பலம் ½

விளக்கெண்ணை படி–முன் சொல்லிய மருந்தை அரைத்து சாறு எண்ணெயில் கரைத்து தீபம் போலெரித்து மெழுகு பதத்தில் எரித்து சிறு கரண்டி அளவு மூன்று நேரம் கொடுக்கவும்.

தீரும் வியாதி : கைகால் பிடிப்பு நோய்கள், வாதம், மேகம், வெள்ளைதீரும்.

பத்தியம்: ஆட்டிறைச்சி, பருப்பு, பாசிப்பயறு, உள்ளான் கத்திரிப் பிஞ்சு, பசுவின் பால் சேர்க்கவும்.

பூண்டு கடுகு நீக்கி உப்பு புளி சுட்டு சேர்க்கவும்.

நோயியல்

வியாதி வரலாறு

ஆங்கார கோபத் தாலும்
அடி வெயில் காய லாலும்
பாங்கியர்ப் புணர்ச்சி யாலும்
பாய்ந்ததோர் விரணத் தாலும்
தாங்கொணா சுமைக ளாலும்
சருமநிலை வூறலாலும்
தேங்கிய சலக்கட் டாலும்
சுற்றமும் சரமு மாமே.

வியாதி அறியும் வகை

சன்னிக் கூறு

சன்னி வாதந் தன்னிலே
சாற்றுவேன் குணத்தைக் கேளாய்
வன்னி தன்னில் மிகவெ தும்பும்
வாய் நீறும் வற்றி வரும்
உன்னியே பலகால் முகம் வேர்க்கும்
ஓங்கி மிகவே பெருமூச்சாம்
தன்னிலே தானே உடம்பு நோவாம்
தானே விழியுந் திறவாதே ஓடும்.

உட்காரும் யெழுந்திருக்கும்
உருட்டிப் பார்க்கும்
தலைக்கு மேல் கையைத் திருப்பும்
காணாத் தலத்தில்

கையைக் கொண்டு போய்
　　　　தலையாட்டிக் கொள்ளும்
மகந்துடிக்கும் யிவை
　　　　யெல்லாஞ் சன்னி
வாதங் கூறினர் என்றறியவும்.
　　　　இனிப்புப் புளிப்பு மாந்தம் கொல்லும்

பித்தக் கூறு

சிலேத்துமமும் அதிகரிக்கும்
காரமும் கசப்பும் அஞ்சாமிவை மல
வாதத்துக்கு வைக்கும்
மிஞ்சினால் அதிகரிக்கும்
தலை கிறுகிறுக்கும் வாய் கசக்கும்
யிளைக்கும் கண் புகைஞ்சு காணும்
தலை நோக்காடுண்டாம்
மல மிறுகி நிற்கும்
உடம்பு தடியடிப் பட்டது போலிருக்கும்
உடம்பு அசதியுறும் பேத்தும்
தானான வரும் சிறுநீர் சிவந்து காணும்
காலமே தெளிவு கொடுக்கும்
இதுக்கு நாடி ஆமை போலே
நகர்ந்து அட்டை போலே சுழிந்து
திகரும்
யிது பித்தத்தின் கூறினோம்

சீதத்தின் கூறு

சீதமே வாத மாகும்
　　　　சீதங் கழிந்தால் வாதம்போம்
வாதமே மிகுந்த தாகில்
　　　　வாயுவை யெழுப்பி மீளும்

சுவாதமே யிரும்ப லாகும்
தோன்றிடும் சன்னி வாதம்
பேதையே செய்கிராணி
பெருகவே தோன்றுங் கண்டாய்.

போதவே வறுமந் தானும்
பெறுந்தவ முனியுஞ் சொல்வார்.
பித்தமே சிரத்தி லுற்றால்
சமமது சொல்லக் கேளாய்
உத்திடு நயனத் தாலும்
ஒளிவது மாறி நிற்கும்
கத்திடும் நாவும் பல்லுங்
கறுகவே தோணுங் கண்டாய்.

நித்திரை தான்வ ராது
நெட்டிகொட் டாவி யாகும்
தக்கவர் தாம்கோ வித்தால்
அசந்துசீறி உடம்பு நோகும்
தலை பாரிக்கும்
மலங்கட்டும் பேசும்
பேற்றும் நாவுலரும்
தக்க வாதத்தின் குணமிதுவே.

புளிப்பெல்லாம் வாதமாகும் நெல்லி
இனிப்பெல்லாம் சிலேத்துமமாகும்
தேரெல்லாம் கைப்பெல்லாம் பித்தமாகும்
இடுபுடல் தூதுவளை யெல்லாம்
துவரெல்லாம் குளுமை யாகும்
கடுக்காயல்லால் காறமெல்லாம்
பித்தமாகும் சுடுகிற கரியெல்லாம்
பித்தம்.

ஆனைக் கண்ணி யொரு பிடியும்
அரசங் கொம்பு கொச்சை
எருக்குக் குவ்விலை ருபாலும்
னொச்சிச் சாறு மாங்காய்ப்
புளிச்சாறும் அச்சரி யெண்ண
அரும் கணப்பு இடமாய் வைத்துப்
பிடிக்கில் வாதம் போம்.

முள்ளியும் முருங்கைப் பட்டையும் மூனு
திப்பிலி மிளகு பதினைந்து இஞ்சிச்
சாறு வடிகட்டி கையில் உருண்டைக்
கரைத்துக் கொடுக்கவும். சரீரமும்
முகத்தில் வெளுப்புண்டானால் வயிற்
றிலே சீத முண்டா யிருக்கும்.
வாதம் சிலேத்துடுமத்திற்கும் கைகா
றிசந்து போகும்.

கைகண் முகம்ளரி வுண்டாகும்.
உடம்பு பாவமாகும் பசி மந்தமாகும்.
வயிறு எரிச்சல் சந்துகள் புண்ணாய்
ரோகம் மாறத் துடிக்கும்
இதெல்லாம் சன்னி வாத சயமென்
றறிவது. முந்தினால் பாண்டு ரோக
மென்றறியவும்.
இதிலே யிருமல் கண்டால் புறங்கால்
வீங்கினால் பாண்டு ரோக மென்றறியவும்.
இரத்தங்கண்டாலும் சரீரம்
கறுத்தாலும் யிந்த லட்சணாங் கண்டால்
பித்தம் அதிகரிச்சு அன்னமட்டாகும்.
ஒக்காள மாகும்.
யிது வாத ரோக மகாவகை

உணத்து திமிர் உண்டாயி கண்ணுதூங்கிச்
கோபித்துக் கோலஞ் செரிவு
அங்க மெல்லாம் குளிர்ந்து சற்றே
கண் கொண்டு
சீல மிகுந்து சிறுநீருறி வார்க்குமென
வாலி தடங்கண் மானனையிர் மாதே
வாத ரோக மிதே.

மெய் நடுங்கும் தலைவலிக்கும்
மேனி வெளிறும் கண்தூங்கும்
பொய்யாத துயரம் கிறுகிறுக்கும்
போத நயன மிகவெரியும்
கைகா லுணந்து கடுத்துவந்து
கண்ணு மூக்கும் அய்யா
வெய்ய வலியமுள அரியாம்
பித்த ரோக மாமிதே.

ஐயத்தினால் வறுவியாதி

ஐயமே கதித்த போது
அதிகமாய் பலனும் நாசம்
நையுமே மாந்தை யீளை
நளிர்குளிர் விக்கல் சத்தி
செய்யுமே மூச்ச டைப்பன்
சேத்தும காச ரோகம்
தொய்யுமே ஈளை காசம்
தோன்றுமே என்று சொன்னார்.

கண்ணே எரியும் கண்மறையும்
கண்ணு மின் மினியாய்ச் சுழலும்
வண்ண உடம்பு வியர்வைவரும்
மயங்கு மனதில் வாந்திவரும்

உண்ண மணமும் விதரிவரும்
கொடிய சூலை கோபமெழும்
மண்ணின் மீதில் கால்வயிறும்
வாத பயித்திய வடிவிதுவே.

வாத சிலேத்துமத்தின் குணம்

பெருகிய கிலேத்துமத் தோடு
பிணங்கிய வாதம் வந்தால்
கருவிய சன்னி வாதம்
தானென்றுஞ் சாற்ற லாகும்
கருதிய தலையுங் காலும்
பிடரியும் நெஞ்சும் நோவாம்
ஃமருவிய வயறு தானும்
வகைபடக் கழிவு மென்றார்.

பித்த சிலேத்துமத்தின் குணம்

பித்தத்தில் ஐயந் தோன்றில்
பெருத்திடும் என்பு காய்ச்சல்
சித்தத்தில் வயிறெ ரித்து
தெளியுறாக் கசக்க லாகும்
மோதியே குளிரி ரைச்சல்
மிகுத்திடும் மந்தம் தாகம்
ஐயத்தில் பித்தமைய்யா
கருத்தினில் கண்டு கொள்ளே.

ஐயத்தினால் வருங்குண

ஆம்பல் நாறும் மலம்வெளுக்கும்
கையுங் காலும் தளர்ந்துவரும்
கடினல் சுரமும் ஓடிவரும்
நையுங் குடல்போல் பாலைவிழும்

நாக்கில் நீறும் வற்றிவிடும்
மெய்யே, அறிவு குன்றாது
விக்க லெடுக்கு மீளாதே.

மரணக்குறி

ஊசிபோல் முகமும் நொந்து
உடம்பெல்லாம் நரம்பே ஆகில்
பாசிபோல் கண்சி வந்து
பசபசென்று கண்தி றக்கும்
கூசிட வேண்டாம் வயித்தியரே
குணமிது பலவுஞ் செய்தால்
சாவிது, குறுகிச் சென்று
சடுதியி லறிந்து சொன்னேன்.

வியாதி அறியும் வகை

நாடி நிதானம் அறிய

நசலைப் படுகிறவர்கள் மூத்திரத்தை அசையாமல் ஓட்டில் பிடித்து வைத்து, நல்லெண்ணெத் துரும்பாலே தோய்த்து ஒரு துளி விடவும். அமுந்தினால் பிழைப்பார்கள். மிதந்தால் வாதரோகம். துளியாம் மிதந்தால் பயித்திய ரோகம் குமுழியாய் மிதந்தால் சிலேத்தும ரோகம் என்றறிவது.

நாடி நிதானம் அறிய

ஆதியிலே சம்மந்தமான வியாதிக்கு இலக்கணம் பார்க்கிறது. உடம்பு தீண்டிப் பார்க்கிறது. உடம்பு வர்ணத்தைப் பார்க்கிறது. மூத்திர வர்ணத்தைப் பார்க்கிறது. நாக்கைப் பார்க்கிறது. மலத்திலே கள்ளிப் பால் விட்டுப் பார்க்கிறது. பச்சையாய் இருந்தால் பிழைப் பார்கள். வெளுமையாய் இருந்தால் பிழைப்பார்கள். இப்படி இலக்கணங்கள் பார்ப்பது.

நாடி நிதானம்

வாத பித்த நாடி: பெரு விரல் மணிக்கட்டில் நடக்கும் அதுக்கப்பால் சிலேத்தும நாடி.

நாடி பார்க்கிற குணம்:

வலக்கை விரல், பெரு விரல் தொட்டு பாம்பு விரல் அளவு மூன்று விரலையும் பிடித்துக் கொண்டு நாடி பார்க்கவும். வாத சிலேத்தும நாடி இந்த கிரம்மத்தில் இருக்கும் நெல்லுப் பிரமாணம். நாடி பார்க்க மூன்று விரலிலேயும் ஓடும் இப்படி ஓடினால் வாத பித்த சிலேத்தும நாடி என்று சொல்வது. நாடி ஓடுகிற வகை நாடி கை மணிக்கட்டிலே ஓடும். நாடி திரேகத்தில் மொத்தமாய் இருக்கும். பெண்சாதிக்கு நாடி இடது பக்கம் பார்ப்பது. புருசாளுக்கு வலது பக்கம் பார்க்க.

வாதநாடி குணம்

தவளையைப் போல நடக்கும். காடைக் குருவி போல நடக்கும். நாகப் பாம்பு போலே ஓடும். சிறு பிள்ளைகள் தொட்டிலில் சங்கிலி போல அசையும். அட்டை போல நடக்கும் இந்தளவில் நடந்தால் வாத நாடி என்று சொல்லப்படும்

மற்ற நாடி இலக்கணம்.

கோழி இறகு உதறி நடக்கிறாற் போல நடக்கும். மயில் போல நடக்கும். ஊர்க்குருவி போல நடக்கும். இந்தளவில் நடந்தால் வாத நாடி என்று சொல்லப்படும்.

கோழி இறகு உதறி நடக்கறாப் போல நடக்கும். மயில் போல நடக்கும். ஊர்க் குருவி போல நடக்கும். இந்தக் கிரமத்தில் நடந்தால் பித்த நாடி எனப்படும்.

சிலேட்டும நாடி குணம்

நாடி மெல்ல நடக்கும். கோழி போலே நடக்கும். தவுட்டுப் பொளுவைப் போல நடக்கும். இந்தக் கிரமத்தில் நடந்தால் சிலேத்தும நாடி என்றறியவும்.

வாதபித்த நாடி குணம்

முற்று காடை போலே நடக்கும். மயில் போலே நடக்கும். இந்தக் கிரமத்தில் நடந்தால் வாத பித்த நாடி என்றறியவும்.

வாத பித்த சிலேத்தும நாடி

கோழி போல் நடக்கும். அட்டை போல நடக்கும். இந்தக் கிம்மத்திலே நடந்தால் வாத பித்த சிலேத்தும நாடி என்பறறியவும்.

பித்த சிலேத்தும நாடி குணம்

தவளை போல நடக்கும். அன்னம் போல நடக்கும். இந்தக் கிரமத்தில் நடந்தால் பித்த சிலேத்தும நாடி என்றறியவும்.

பித்த சன்னி நாடி குணம்

விறகு சுமையின் கீழ் மூஞ்சூறு நடக்கிறாப் போலே நடக்கும். குடி மயில் போலே நடக்கும். நின்று நின்று நடக்கும். மந்தமாக நடக்கும். இந்தக் கிரமத்திலே நடந்தால் சன்னி நாடி என்றறியவும்.

அசீரண நாடி குணம்

தவளை போலே நடக்கும். கஞ்சி தின்றவனுக்கு தீவிரமாகநடக்கும். இரனிக்கம் செய்தவனுக்கு, பயித்தியம்

பிடித்தவனுக்கு, இந்த முதல் நாடிக்கு உள்ளது எல்லாம் நடக்கும்.

உன்மத்தம் பிடித்த பேருக்கும், மலம் விடாத பேர்க்கும் அன்னம் போலே நடக்கும், இப்படி நடந்தால் பித்த நாடி என்றறிக. உடம்பு தீண்டிப் பார்க்கிறது, உடம்பு உஷ்ணமாயிருக்கும். பித்தத்துக்கு உடம்பு உள் உஷ்ணமாயிருக்கும். ஒரு காலங்களில் மாறும் சிறு குளிர்ந்து இருக்கும்.

சிலேத்துமத்துக்கு

சிறு குளிராய் இருக்கும். தொந்த ரோகத்துக்கு காவாலிதமாய்இருக்கும்.

சிவமயம்.

சன்னியாட 13 அது செய்குணம் ஆறு வகை குணமாம். 7 வகை குணமாகாது.

சந்திக மென்கிற சன்னி, தாந்திரிக என்கிற சன்னி, சிஞ்கு வாத சன்னி, கண்ட கோகன சன்னி, காகை என்கிற சன்னி, அந்தக மென்கிற சன்னி, அருதாக மென்கிற சன்னி, புத்தி நேத்திர சன்னி, பிரலாப சன்னி, அவுதி யாச சன்னி, சீத காத்திர சன்னி, ஆக சன்னி 13.

அதுகள் செய்யும் குணம்.

ஆறு வகை குணமாகும். ஏழு வகை குணமாகாது. சந்திக சன்னி செய்யுங் குணம் : உடம்பு நோகும். வீங்கும் நோக்காடாக வுற்றிப் படுத்தும்,

ஆவட்டை சோவட்டை கொள்ளும், நித்திரை இல்லை பலம் குறையும் இந்த குணமுண்டானால் 7 நாழிகையில் குணமாம்.

அந்தக மென்கிற சன்னி

தண்ணீர் தாக மெடுக்கும். பலரை நிந்திக்கும். நித்திரை பண்ணும்.

வயிறு எரிக்கும். தலை சுற்றும். விக்கலெடுக்கும். புத்தியுண்டான பண்டிதன் பாரான் பத்து நாளையில் சாவான்.

ஒரு தாகமென்கிற சன்னி

உடம்பு நடுக்கும் அழுகும். பிதற்றும், நித்திரை போம் காது கேளாது, நாக்கு வெட்டிக்கும், வாய் புண்ணாகும். தண்ணீர் தாகமுண்டு,

சரீரம் நோகும், இந்த குணமுண்டானால் இருபது நாளில் சாவு.

சித்விப்பிரகா சன்னி

உடம்பெல்லாம் குளிர்ந்து தண்ணீர் வடியும். தாகமாகும் விக்கலுண்டு, உப்பிசமாம், குரல் நெருங்கிக் காணும், வாந்தி பண்ணும்,

வயிறு கழியும். இந்த குண முண்டானால் பதினைந்து நாளையில் சாவு.

தாந்ரிக என்கிற சன்னி

இராப் பகல் வேதனை உண்டு. காய்ச்சல் வரும். உப்பிச மெடுக்கும், தண்ணீர் தாகமுண்டு. நாக்குக் கறுக்கும். உள்வயிறு வரண்டிருக்கும். வயிறு புறம்பும், உடம்பு நோகும். வாந்தி பண்ணும். பிடரி தினவுண்டாம். காது கேளாது. இந்தக் குணமுண்டானால் இருபத்தைந்து நாளில் குணமாம் பற்றிப் பார்க்கவும்.

புத்தி நேத்திர சன்னி

காய்ச்சல் வரும், காது கேளாது உப்பிச மாயிருக்கும், கண் விழி பெருக்கும், அழும், பிதற்றும். பேத்தும், களைச்சு விழும். தண்ணீர் தாக மெடுக்கும், இந்தக் குணமுண்டானானல் ஒரு நாளையில் சாவு பாராமல் விடவும்.

இரந்தட்டி சன்னி குணம்

அதிகமாக சுர மடிக்கும், தண்ணீர் தாகம் ஆலைச நோவு, வயிறு கழியும், விக்கல் வரும், பேத்தும் பித்தத்தின் மேல் நோக்கிய உப்பிசம் நாக்குக் கருக்கும், உடம்பு விஞ்சி வரும், கண்முகம் உடம்பெங்கும் பச்சையாய் இருக்கும். இந்தக் குணம் உண்டானால் பத்து நாளையில் சாவு பாராமல் விடவும்.

பிரலாப சன்னி குணம்

உடம்பு கடுக்கும். அழும் புத்தி சொல்லும், களைச்சு விழும், மல்லுக் கட்டும் அசனங் கொள்ளும், பிதற்றும் இந்தக் குணமுண்டானால் பதினாலு நாளையில் சாவு பாராமல் விடவும்.

சிஞ்சு வாத சன்னி குணம்

உப்பிசமாயிருக்கும். இருமலுண்டு. ஆவட்டை சோவட்டை படும். நாக்கு உள்நாக்கு உலர்ந்து முன்னாயிருக்கும். ஒருவரோடும் பேசாது. காது பலங் குறையும். இந்தக் குண முண்டானால் பதினான்கு நாள் கழித்து மருந்து கொடுக்க குணமாம்.

அவ்வியச் சன்னி குணம்

வாதம் பித்தம் சிலேத்துமம் அதிகரிக்கும் சுரமுண்டு உப்புசமுண்டு பொல்லாத பேச்சு பேசும் முத்திரை போம் இந்தக் குணமுண்டானால் ஏழுநாளில் சாவு.

கண்ட கோசன சன்னி குணம்

தலை நோவு வெடிக்கும். உடம் பெரிக்கும். நித்திரை போம். எயிறு ரத்தம் விழும். அழும். களை உண்டாகும் உத்தக் குணமுண்டானால் பத்து நாளையில் குணமாம்.

கானை மென்கிற சன்னி குணம்

இருமலும் உப்பிசமும் உண்டு. அழுகைக் காய்ச்சல பிதற்றும். பேத்தல் காது கேளாது. மூன்று சாமத்தில் குணமாம்.

12. செய்முறை

இதற்கு அவிழ்தம் சித்த மல்லி, கீரி பூண்டு, தலை விரிச்சான், சித்தா முட்டி, பேராமுட்டி, வட்டத் துத்தி, கொடி வேலி, காட்டு முருங்கை சாரணை, முன்னை தழுதாழை, நாராயணன் சுள்ளி பெருங்குமிழ், மிளகரணை தக்காளி, சிவன் வேம்பு, கோழியவரை, சீதேவியார் செங்கழுநீர், வெள்ளறுகு, குண்டுமணி, புங்கம்பட்டை, கிலுகிலுப்பை, குப்பைமேனி, முள்ளி, துளசி, அம்மை கூந்தல், இது ஓரொன்று கூட்டி, 1/2 பலம் இடித்துப் போட்டு, நாலு மரக்கால் தண்ணீர் வார்த்துக் குறுணியாகக் காய்ச்சி அதில் 13 கோழி முட்டை உடைத்துவிட்டு விளக்கெண் ணெய் படி 1, நெய் படி , நல்லெண்ணெய் படி 2, எலுமிச்சம்பழச் சாறு படி 2, தேங்காய்ப் பால் படி 1, இதுக்குக் கடை திரவியம். வசம்பு, மரமஞ்சள், திப்பிலி, மிளகு,

வெள்வெங்காயம், சதகுப்பை, அரத்தை, கத்தூரி மஞ்சள், குக்கில், இந்துப்பு, கடுகு, செங்கழுநீர் கோட்டம், கடுகுரோகணி, தேவதாரம், அதிமதுரம், செவ்வியம், திப்பிலி மூலம், நிலப்புழு, நாகப்புழு, கம்பி பிசின் இலவங்கப் பட்டை வகை ஒண்ணு 1/2 காசிடை 1 தூள் பண்ணிப் போட்டு முதிர்ந்த பக்குவத்தில் இறக்கி வைத்துக் கொண்டு உள்ளுக்குங் கொடுத்து மேலும் பூசவும். பதிமூணு வகை சளியுங் குணமாகும்.

13. சன்னிக்குப் பொட்டணம்

சுக்கு, மிளகு, திப்பிலி, அசமதாகம், கருஞ்சீரகம், குக்கில், அரத்தை, வசம்பு, உள்ளி, கடுகு ரோகணி, இந்துப்பு, காயம், சதகுப்பை, மரமஞ்சள், வாய்விளங்கம், வாலுளுவை அரிசி, வெட்பாலை அரிசி, வேப்பமுத்து, புங்க முத்து, பருத்திவிரை, கழற்சி விரை, ஆமணக்கம் விரை, புன்னை விரை, குறுத்தங் கொட்டை, தேங்காத் துருவல், நேர்வாளம் கார்போக அரிசி, முட்கா வேளை, கார் வேளை வேர், எருக்கன்வேர், கொடி வேலி வேர், நொச்சில் வேர், ஆமணக்கு வேர், திப்பிலி வேர், மிளகரணை வேர், நுணா வேர், அமுக்கிரா வேர், கோஞ்சல வேர், கருவாப்பட்டை, புங்கம் பட்டை, இவ்வகையெல்லாம் கூட்டி இடித்து அஞ்செண்ணாயைக் கூட்டி வறுத்துப் பொட்டணாங் கட்டவும். சகல சன்னி, வாய்வு சகலமும் தீரும்.

14. பறங்கிப் பட்டை பதங்கம்

பறங்கிப் பட்டை பலம் 10, ஏலம், ஓமம் கண்டு பரங்கி ரேணுகை, மைசாட்சி சீரகம், விலாமிச்சிவேர், செவ்வியம், சடாமாஞ்சில், வாலுளுவை, மிளகு, சாதிப்பத்திரி, தான்றிக்காய், வாய்விளங்கம், கோட்டம், கொத்தமல்லி, திப்பிலி, லவங்கப்பட்டை, தும்பராட்டகம், திப்பிலி மூலம்,

அதிமதுரம், சிறுநாகப்பூ, வெட்பாலை அரிசி, கொந்தி தகரம், சந்தனம், லோகாப்ரகம், நன்னாரி வேர், முத்தக்காசு, அமுக்குரா வேர் வகை 1 3/4 வராகனெடை இதுவெல்லாம் வெவ்வேறே இடித்து, பரங்கிப்பட்டை வேரை இடித்து முசுமுசுக்கை சாறுபடி 3/4, வெள்ளருகு சாறு படி 3/4, கையாந்தகரைச் சாறு படி 3/4, சங்கிலைச் சாறு படி 3/4, குப்பமேனிச் சாறு படி 3/4, இந்த அஞ்சு வகைச் சாற்றில் 5 ஐந்து நாளைக்கு ஒவ்வொரு சாற்றில் பரங்கிப்பட்டைத் தூள் ஊற வைத்து ஆறு நாள் ஒரு பானைக்கு வேடுகட்டு முன்பேரிலே பரங்கிப் பட்டை சூரணம் வைத்து மேல் சட்டிமூடி சீலை மண் பூசி அந்தப் பானையில் வேடு கட்டுவதற்கு முன் மலாக்காச் சாம்புராணி 3 பலம் போட்டு எரித்து அதன் பிறகு மேற்படி சூரணமும் கலந்து வைத்துக் கொண்டு வெறுகடி அளவு நிதானம் அந்தி சந்தி ரெண்டு நேரமும் சாப்பிடவும்.

இதுக்குத் தீரும் வியாதி: வாதம் 80, பித்தம் 40, மேகம் 20, குட்டம். இதுவெல்லாம் தீரும். நீரிழிவு முதல் தீரும். கிரந்தி பண்டம் தள்ளவும். இச்சாபத்தியமாக ஒரு மண்டலம் சாப்பிடவும்.

15. மது கசாயண ரசாயனம் சகல வியாதிக்கும்

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, சீரகம், கருஞ்சீரகம், கொத்தமல்லி, சாதிப்பத்திரி, சடாமாஞ்சில், ஏலம், கிராம்பு, மரமஞ்சள், சந்தனக்கட்டை, அகில்கட்டை, சாதிக்காய், குங்குமப்பூ, கோரோசனை, தும்புராட்டகம், சிறுநாகப்பூ, தாளிச பத்திரி, வாலுளுவை அரிசி, முத்தக்காசு வகைக்கு 1/2 வராகனெடை 2 பரங்கிப்பட்டை பலம் 10, இதுவெல்லாம் இடித்து வத்திரகாயம் பண்ணி, கலக்கி பலம் 3, சர்க்கரை பலம் 4, தேன் சேர் 2, நெய் சேர் 1, இவை எல்லாம் விட்டு

லேகியம் செய்து கொண்டு வேளைக்குக் கச்சக்காய் அளவு சாப்பிடவும். இரண்டு வேளையும் சாப்பிடவும். இவைக்கு தீரும் வியாதி மேகவட்டை 21, பித்த வெட்டை 21, பிரமியம் சகலமும் வெகு மூத்திரம் வாய் வேடே சேர்ந்ததும் அக்கினி மந்தம் கால்கை எரிவு, ஈரக்குலை எரிவு, கர்ப்ப வாயு, இவைகள் தீரும். அவபத்தியமாகாது. கை கண்டது.

16. கலியாண நாராயண

நெல்லிக்காய்ச் சாறுபடி 4, சுக்கு, திப்பிலி, மிளகு, திப்பிலி மூலம், கொடிவேலி, கொத்தமல்லி, ஓமம், வெட்பாலை அரிசி, விழலரிசி, செவ்வியம், மந்திஷ்டி சீரகம் வகை ஒண்ணுக்குப் பலம் ஒண்ணு தான்றிக்காய், நெல்லிப்பருப்பு வகைக்குப் பலம் 2, சர்க்கரை பலம் 25, மேல்படி சாற்றிலே படிக்கு நல்லெண்ணெய் விட்டு பாகு போலே காய்ச்சி சட்டியில் பற்றும் போது கடை சரக்கை சூரணம் செய்து பாகில் தூவிக் கிளறி வைத்துக்கொண்டு காலை சாயங்காலம் இரண்டு வேளையும் வராகனெடை கொள்ளவும்.

இதுக்குத் தீரும் வியாதி: மேகம் 21, காமாலை, பாண்டு, மூலம் குட்டம் மூத்திரக் கிரச்சிரம் குன்மம், உடைந்த எலும்பு கூடும். பலண்டாம் நரை திரை மாறும். கை கண்டது.

17. சகல பிரமியத்துக்கு

முற்றின பூலாவேர் கொண்டு வந்து, மேல் புரணி சீவிப் போட்டு, இரண்டு படிக்கு இழைத்துக் கொண்டு, அதின் இலை ஒருபடி கொண்டு வந்து இரண்டையும் வைத்துப் பிழிந்து கொண்டு, நாழி பசுவின் பால் கூட விட்டு, பனைவெல்லம் கூடப் போட்டு, சீரகம் காசெடைப் பொடி போட்டு 3 நாள் கொடுக்கவும். புளி தவிர்க்கவும்.

18. அட்ட குன்மத்துக்கு மருந்து

ஒரு சட்டியில் எருக்கம் பழுப்பு எடுத்து அதின் மேல் கல்லுப்பு சத்துப் போட்டு, பிறகு சாரணை வேர் பரப்பி, அதன் மேல் கல்லுப்பைப் பரப்பி, அதன் மேல் கள்ளிக் கொழுந்தைப் பரப்பி, அதன் மேல் உப்பைப் பரப்பி, இப்படி வேண்டிய மட்டும் வைத்து நன்றாக மேல் சட்டி மூடிப் புடமிட்டு எடுத்து வைத்துக் கொண்டு, உப்புவேர் மூலிவேர் சூரணித்து, ஒரு பங்கு மூலிச் சூரணம் லவணம் 3 பங்குத் தின்னவும். மலஞ்சலம் விடாதாற்கு மருந்து சுரையிலை அரிந்து நாழி தண்ணீர்விட்டு நாலான்றாய்க் காய்ச்சி, வடித்து, வெங்காரம் பொரித்துக் கொடுக்கவும். மலம்சலம் விடும். பின்னையுங் கொள்ளு வேகவைத்து அந்தத் தண்ணியில் ஓழக்கு இறுத்து வெங்காரம் பொரித்து ஒரு கழஞ்சு கடிப்பருப்பு கழஞ்சு பொடி செய்துபோட்டு விளக்கெண்ணெய் கொஞ்சம் விட்டுக் கொடுக்க மலஞ் சலம் விடும்.

19. பீனிசம் ஒன்பதுக்கு மருந்து

கண்டங்கத்திரி வேர், சிறுவழுதுணை வேர், முருங்கை வேர், வகைக்குப் பலம் 3, நன்றாயிடித்து 3 படி காடி வார்த்து ஊற வைத்துக் காய்ச்சி வடித்துக் கொண்டு வெள்ளாட்டுக் கோமியம் படி ர, வெள்ளாட்டுப் புழுக்கைத் தண்ணீர் விட்டுக்கரைத்து அந்தத் தண்ணீர்படிர, நல்லெண்ணெய்படி 1 1/4 எல்லாங் கூட்டிக் காயச்சே கடைச்சரக்கு 6 1/2, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லி பருப்பு, சலித்து லவணம் நவச்சாரம், ஏலம், சன்ன லவங்கப்பட்டை, தாளிசபத்திரி, நாகேசுரம், சிவதை, வகைக்கு வராகனெடை 4. எல்லாம் சூரணித்து முன் சொன்ன தைலத்தில் போட்டு காய்ச்சி வைத்துக் கொண்டு நசியம் பண்ணவும். கிருமி, மாங்கிசம், இடி அழுக்கு கபாலம், சீழ்விழுதல், ரத்த சலம், பீனிசம், இவை தீரும்.

20. மகா வில்வாதி லேகியம்

வில்வவேர் பலம் 100, சிற்றாமுட்டி வேர் பலம் 50, நெற் பொறி, சுக்கு, கொத்தமல்லி, வெட்டி வேர், அதிமதுரம், முந்திரிப்பழம், பருத்திப் பருப்பு, ஏலம், முத்தக்காசு, நெல்லிப்பருப்பு, சீரகம், இது வகைக்கு 1 1/2 பலம் 13, ஒரு பெரிய பானையில் போட்டு முக்குறுணி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய் காய்ச்சியிறுத்துக் கொண்டுப் பச்சைப் பயறு படி 2, பேய்ப்புடல் பலம் 16, நிலப்பனைக் கிழங்கு பலம் 16, இதை ஒரு பானையில் போட்டு பதக்குத் தண்ணீர் விட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சியிறுத்துக் கொண்டு, முன் கசாயத்தில் கலந்து இஞ்சிச் சாறு படி 2, குமுட்டி, மாதுளம் பழச்சாறு படி 2, வெள்ளை வெற்றிலைச் சாறு படி 2, நெல்லிக்காய்ச் சாறு படி 2, இந்த வகை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் காய்ச்சி இதுக்கு கற்கம்.

மிளகு	பலம் –4
சுக்கு	,,
இலவங்கம்	,,
கொத்துமல்லி	,,
சீரகம்	,,
நாகப்பூ	,,
ஏலம்	,,
திப்பிலிமூலம்	,,
தக்கோலம்	,,
கண்டு பரங்கி	,,
தாளிசபத்திரி	,,
கஸ்தூரி மஞ்சள்	,,
சம்மங்கி மொக்கு	,,
அல்லி	,,

பேரீச்சம்பழம்	பலம்-2
முந்திரிப்பழம்	பலம்-2
கற்பூரகம்	வராகனெடை-1

இவையெல்லாம் இடித்து வத்திரகாயம் செய்து முன் மருந்தில் கலந்து, இதில் தேன் இரண்டு சேர் விட்டு காய்ச்சி லேகியம் செய்து, தான்றிக்காய் பிரமாணம் தின்னவும். இரண்டு நேரம் தின்னவும்.

இதுக்குத் தீரும் வியாதி: பித்தம், சிலேத்துமம், காசம், உப்பிசம், தலையெரிச்சல், வயிறெரிச்சல், கைகால் எரிச்சல், அசதி, பயித்தியம், சூலை, குன்மத்தின் காய்ச்சல், வெகுமூத்திரம், நீர்க்கட்டுப் பிரமியம், அக்கினி மந்தம், இவை எல்லாம் தீரும். கை கண்டது.

21. காமாலைக்கு

பிடங்கு நாரி பட்டையை அன்பது நாழிகை சென்று மோரில் போட்டு ஊற வைத்து, காலமே மூணுநாள் கொள்ளவும். கை கண்டது. கடும் பத்தியம். ஆவாரம் வேற் பட்டை, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப் பருப்பு, கடலாஞ்சிப் பட்டை, குறுந்தொட்டி, தேத்தாங் கொட்டை, சீந்தில் கொடி, சீரகம், முத்தக்காசு, கீழாநெல்லி வேர், வகை ஒன்றுக்கு வராகனெடை 1, இரண்டு படி தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும். அவ பத்தியமாகாது. கிரந்தி பண்டாமாது.

22. திப்பிலி ரசாயனம்

திப்பிலி	பலம் 8
சர்க்கரை	பலம் 1
மிளகு	பலம் 1
சுக்கு	பலம் 1
தும்பு ராக்ஷகம்	பலம் 1

தேசாவரம்	பலம் 1
கோஷ்டம்	பலம் 1
கொடி வேலி வேர்	பலம் 1
கரிசிலாங்கண்ணித் தூள்	பலம் 1
சிறுநாகப்பூ	பலம்1
வாய்விளாங்கம்	பலம் 1
கண்டு பறங்கி	பலம் 1
சீரகம்	பலம் 1
ஓமம்	பலம் 1
குறாசாணி	பலம் 1
இலவங்கம்	பலம் 1/4
பெருங்காயம்	பலம் 1/4
கடுக்காய்	பலம் 1

இவையெல்லாம் சூரணம் பண்ணித் தேன் சேர் 2 நெய் சேர் 2 சர்க்கரை சேர் 3 எல்லாம் லேகியம் செய்து வைத்துக் கொண்டு, அந்தி சந்தி, கொட்டைப் பாக்களவு கொள்ளவும்.

தீரும் வியாதி: காமாலை, இருமல், மந்தார காசம், மேகம், பிரமியம், எரிவாதம், பித்தத்துடன் சேர்ந்த சிலேத்துமம் உண்டானதெல்லாம் தீரும்.இது கைகண்டது.

23. மூலம் 9 க்கு மருந்து

காட்டுக் கருணைக் கிழங்கு, கரிக்கருணைக் கிழங்கு, பிரண்டை வேர், கோப்பிரண்டை வேர் இவையெல்லாம் சமமாய் நறுக்கி வெள்ளாட்டு மோரில் வேகவைத்து உலர்த்தி, பசுமோரில் வேகவைத்து உலர்த்தி, சூரணம் செய்து, அதிமதுரம், திப்பிலி, இலவங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி, சுக்கு, மிளகு, ஓமம், இந்துப்பு, கருஞ்சீரகம், அதிவிடையம், குக்கில், இலவம் பிசின், கடுகுரோகணி, சடாமாஞ்சில், சித்தரத்தை, முந்திரிப்பழம்,சமன் கொண்டு

முன் இடித்த பொடி போட்டு சேர்த்து இவைகளை இளம் வறுப்பாய் வறுத்து இடித்து, சீலை வடி கொண்டு முன் தூளோடே சேர்த்து வெருகடி பிரமாணம் கொள்ளவும். பசு நெய்யில் குழைத்துத் திண்ணவும். சயித்திய மானால் தேனில் கொள்ளவும். மூலம் 14, பிரமியம், ஈளை, இருமல், பிளவை, கண்டமாலை, குட்டம், பாண்டு, ரத்த வகைப் புற்று, குடல் வாதம், வாதம் 80 இவை எல்லாம் தீரும்.

24. தொண்டைக் கமறலுக்கு

பனைவெல்லம் பலம் 2, அரைப்படித் தண்ணீரில் கரைத்துக் காய வைத்து ஆழாக்கான உடனே கால் பலம் மிளகு பொடிப் பண்ணிப் போட்டுக் குடிக்கவும்.

சீலை போர்த்திப் படுக்க வேர்க்கும். தொண்டைக் குள்ள கம்மல் தீரும்.

25. மூலவாய்வு, மூலக்கடுப்பு, மூலக்கழிச்சலுக்கு மருந்து

சுக்கு வேண்டியது மேல்புரணியைச் சீவி, தண்ணீர் விட்டு அரைத்து பாக்கு போலே உண்டை செய்து, தட்டி நல்லெண்ணெயில் சுட்டெடுத்து வைத்துக் கொண்டு ஒரு வில்லை சுத்தி இரண்டு வேளைக்கு உட்கொள்ளவும்.

26. சீதக் கடுப்புக்கு இரத்தக் கடுப்புக்கு

சீரகம் வேண்டியது எடுத்துப் பொன் வறுப்பாக வறுத்துத் தூள் செய்து அந்தத் தூளுக்கு சரி சீனி சேர்த்து அதில் கொஞ்சம் விளக்கெண்ணை கொஞ்சம் நெய் சேர்த்துப் பிசைந்து பாக்களவு உருட்டி அந்தி சந்தி தின்னவும். இதுக்கு சீதக் கடுப்பு வரள்கடுப்பு ரத்தக் கடுப்புத் தீரும்.

27. சூலைகட்டுக் கைகால் முடங்கலுக்கு மருந்து

வெள்ளை அம்மான் பச்சரிசியை, அரைத்து எலுமிச்சங் காயளவு வெந்நீரில் கரைத்துக் கொடுக்கவும். 3 நாள் கடும்பத்தியம்.

28. குன்மத்துக்கு மருந்து

ஏலம், சீரகம், நெல்லிவற்றல், வால்பொறி, பச்சைப்பயறு, நல்ல வெல்லம், வகைக்குக் கழஞ்சு நறுக்கி ஒருபடி தண்ணீரில் போட்டு படியாகக் காய்ச்சி மூன்று நாள் குடிக்கவும். இதுக்கு தீரும் வியாதி வயறுவலி, சத்திக் குன்மம், வாந்தி, விக்கல், பித்தக் கிறுகிறுப்பு, சுரம், ஐயதாகமும் தீரும். கைகண்டது.

29. பாண்டு காமாலைக்கு மருந்து

சீரகம், சிவதை முத்தக்காசு, நெல்லி, தான்றிக்காய், சமனாகச் சூரணம், செய்து வெருகடி பிரமாணம் விளக்கெண்ணெயில் குழைத்துச் சாப்பிடவும்.

சகல பாண்டு காமாலை தீரும்.

30. சூலைக் கட்டுக்குக் கசாயம்

மாலிங்க வேர், வெள்ளைச் சாரணை வேர், சத்திச் சாரண வேர், சித்திர மூலம், நெரிஞ்சில் வேர், முருங்கை வேர், சிற்றாமணக்கு வேர், முத்தக்காசு, கடுக்காய், பெருங்காயம், சயந்த லவணம், திப்பிலி, செவ்வியம், ஓரொன்றுக்கும் வராகனெடை 1, கசாயம் வைத்து சயந்தலவணம், பெருங்காயப் பொடி செய்து போட்டுக் குடிக்கவும்.

31. சயத்துக்கு மேற்படி பாண்டு லேகியம்

கல்யாணப் பூசணிக்காய்ச் சாறு படி 8, குறுகக் காய்ச்சி ஒருபடியாய் இருக்கையில் சீனிசர்க்கரை ஒரு சேர் கூட விட்டு இஞ்சிச் சாற்படி 1, குமட்டி மாதுளம் பழச்சாறு 1, குறுகக் காய்ச்சிப் பக்குவத்தில் ஏலம், சீரகம், கோட்டம், லவங்கம், வெந்தயம் , சன்னலவங்கம் பட்டை, இந்துப்பு, அதிமதுரம், சுக்கு, மிளகு, திப்பிலி, வகை ஒன்றுக்குப் பலம் 1/4 இதை சூரணம் செய்து தேன் சேர் 1, நெய் சேர் 1, கிளறி வைத்துக் கொண்டு இரண்டு நேரமும் கொட்டைப் பாக்களவு கொள்ளவும்.

தீரும் வியாதி: கை காலெரிவு, எலும்புருக்கி, நீர்க்கடுப்பு, வறட்சி இருமல், வெட்டை முதல் தீரும்.

32. சயம் பதினாறுக்கு ஔடதம்

தூது வேளைப்பழம்	படி 4,
பசுநெய்	படி 3,
தேங்காப் பால்	படி 3,

இவையெல்லாம்.

இதுக்குக் கற்கம்

அசமதாகம்	பலம் 1,
வெள்வேலம் பட்டை	பலம் 4,
இலவங்கம்	பலம் 2,
குரோசானி ஓமம்	பலம் 2,
செண்பகப்பூ	பலம் 2,
வால் மிளகு	பலம் 2,
சுக்கு	பலம் 1,
திப்பிலி	பலம் 2,
குங்குமப்பூ	பலம் 2,

ஆகாச தாமரை	நல்ல தாமரை
அல்லி	ஓரிலைத் தாமரை
குருவித் தேங்காய்	பழம்பாசி
பற்படாகம்	சிற்றாமுட்டி
பேராமுட்டி	சீதேவி செங்கழனி
முசுமுசுக்கை	கருசலாங்கண்ணி,
தென்னங் குறும்பை	சிறுக்கீரை
அம்மான் பச்சரிசி	சிறுபுள்ளடி

வகைக்கு 1 1/2 படி 1 இந்த வகை எல்லாம் கூட்டி பெரிய சட்டியில் இட்டு அடுப்பிலேற்றி எரித்துக் கொண்டு இரண்டு படியாயிருக்கும் போது கையில் துவைத்தால் குளிர்ந்து இருக்கும். அப்போ பதமென்று அறிந்து நெய் பால் விட்டு ஒரு கொதி வந்த போது மேற்படி கடைச்சரக்குகளைப் போட்டு தூதுவளம் பழம் கூடப்போட்டுக் கிளறிப் பொன்னிறமான உடனே இறக்கி ஒரு கலையத்தில் வைத்துக் கொண்டு தானிய புடம் வைத்து இரண்டு நேரமும் ஒருகரண்டி கொள்ளவும். பால் சோறும் வெள்ளாட்டுக்கறி உப்புக் கண்டம் கூட்டவும். மேற்படி சயங்களெல்லாம் தீரும். கை கண்டது.

33. காமாலை வீக்கத்துக்கு

வடிக்கு நாரியிலை கொண்டு வந்து வெள்ளாட்டுக் கோமியம் தெளித்து இடித்துப் பிழிந்து ஆழாக்கு மூன்று நாள் கொடுக்கவும். வயது கழியும். சாறு சோறும், சிறுகீரை, பொன்னாங்கண்ணி, முசுமுசுக்கை, கரிசலாங்கண்ணி, செவ்விளநீர், பசுவின் பால், வகைக்கு சாற்படி 1, முலைப்பால் படி 1/4, நல்லெண்ணெய் படி 1, இதுவெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து இதுக்கு மேல் மருந்து கொத்தமல்லி, கோட்டம், அதிமதுரம், சந்தனம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், ஏலம், சீரகம், கிச்சிலிக்

கிழங்கு, பச்சிலை வகைக்கு 1, பலம் 1/4, இடித்து எண்ணெயில்போட்டுப் பதத்தில் வடித்துக் குடுவையில் வார்த்து கோரோசனை வராகனெடை 1, குங்குமப்பூ வராகனெடை 1, பிதுரோசனை வராகனெடை 1, இந்த மூன்றும் பொடி செய்து எண்ணெயில் போட்டு இரண்டு நாளைக்கு இரண்டு தரம் முழுகவும். சீகைக்காயிட்டு முழுகவும்.

34. இருமலுக்குக் கசாயம்

வல்லாரை, பெருஞ்சீரகம், சீரகம், கொத்தமல்லி, வெந்தயம், வகைக்குப் பலம் 3/4 கசாயம் வைத்து கலக்கிப் போட்டுக் குடிக்கவும்.

35. புருச சிலந்திக்கு

ஆகாசத் தாமரை அவித்து ரணத்தின் மேல் வைத்துக் கட்டவும். வறள் பூலாவேர் அரைத்துக் கட்டவும். சங்கம் வேர் ரசம் விட்டு அரைத்துக் கட்டவும்.

36. வலஞ்சலக் கட்டுக்கு

தேத்தாங் கொட்டையை 10, எடுத்து நல்லா அரைத்துக் கொடுக்கவும்.

37. கிராணிக்கு

ஆரையிலை, எலுமிச்சங் காயளவு அரைத்து எருமைத் தயிரில் கொடுக்கவும். அறுகம் வேர் கழிக்கி லரைத்துக் கொடுக்கவும். புளி தள்ளவும்.

38. வாயாலே ரத்தம் விழுகிறதும், அக்கரை காய்ச்சல் கண் காய்ச்சல் அட்சரத்துக்கு.

புளி நெய் படி 1, புளியாரையும், சிறுக்கீரையும், சமூலம் அரைத்து நெய்யில் கலந்து எரித்து கொடுக்கவும்.

பத்தியம்: முருங்கைக் கீரை துவரம் பருப்பு, வாழைக்காய்க் கூட்டவும்.

39. சகல விசத்துக்கும்

அழிஞ்சிப் பட்டை மரம் நிலத்தில் இருந்து ஒரு ஓட்டையளவு அளந்து அந்தப் பட்டையை எடுத்து நிழலுலத்தி வைத்துக் கொண்டு கொட்டைப் பாக்களவு இளம் வெந்நீரில் அரைத்துக் கொடுக்கவும். இதுக்கு நல்ல பாம்பு, விரியன், பதினெட்டு விசமும் தீரும்.

40. தலைவலி உடனே நிறுத்த

தாழம்பூவை, வாட்டிப் பிழிந்து பச்சை கற்பூரம், அரைத்துக் கொதிக்க வைத்து நெற்றியில் பூசிப் பச்சைக் கற்பூரம் பொட்டணங்கட்டி முகறவும்.

41. இடுப்பு வலிக்கு மருந்து

விழிதியிலைச் சாறும் நல்லெண்ணெயும் கலந்து குடிக்கவும். குறுவை அரிசியை மாவு பண்ணிப் புட்டு சுட்டு நல்லெண்ணெய் விட்டு பனவெல்லாம் மூன்று நாள் தின்னவும். இடுப்புக் கடுப்பு, கணுகள் கடுப்பு எல்லாம் தீரும். புளி தவிர்க்கவும்.

42. காது எழிச்சிக்கு

பறங்கிக்காய் கொண்டு வந்து வதக்கி இடித்துப் பிழிந்து இந்தச் சாற்றுக்குச் சரியாக நல்லெண்ணை விட்டு எரித்துக் காதுக்கு விடவும்.

43. சவுபாக்கிய சுண்டி

சூதக வாய்வு செய்யுங் குணம்: உடம்பு காயும், குறைந்து கூசி வரும். சன்னி போலே வரும். கை கால் எரியும். கண்கள் சுருக்கென்று நோகும். வயிற்றிலிருக்கும் மார்பில் வரும். விலாவிலேறும் மார்பிலடைக்கும். விலாவில் சுறுக்கென்று குத்தும். கர்ப்பக் குழிக்குள்ளே

வாயு போல உருண்டு திரண்டிருக்கும். புருவம் துடிக்கும். உச்சி சுரீலென்றும் இந்த வாயுனாலே கர்ப்பந்தரியாது. ஒன்று தரிச்சாலும் நாலுமாசம் ஆறுமாசம் நிண்ணு உழந்து போகும். இதுக்கு மருந்து பசுவின் பால்படி, தண்ணி படி 1, சீனி பலம் 5, ஏலம், வாலுளுவை, வாய்விளங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஓமம், கையாந்தகரை தூள், கரியபோளம், சதகுப்பை, கொத்த மல்லி, கடுக்காய், நெல்லிபருப்பு, வகைக்கு 1 பலம் வீதம் சூரணம் செய்த பாலிலே போட்டுக் கிளறி வைத்துக் கொண்டு ஒரு கொட்டைப் பாக்களவு இரண்டு வேளை சாப்பிடவும்.

இதுக்குப் பத்தியம்: பசும்பால், கீரைத்தண்டு பெரும் பூசணிக்காய், நெல்லிக்காய்க் கூட்டவும். இதுக்கு கசாயம் எருக்கம் பட்டை, முக்கா வேளை, கண்டங் கத்திரிவேர், சாரணை வேர், கொடிவேலி வேர், சுக்கு திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், வகைக்கு 1, பலம் கசாயம் போட்டுக் கொடுக்கவும். கை கண்டது.

44. நரம்பு சிலந்திக்கு மருந்து

கொப்பளங் கொண்டு நரம்பு புறப்பட்டால் மூக்கரட்டை இலை அவித்துக் கட்டவும். பெருங்காயம் நல்லெண்ணெயில் பொரித்து புண்ணுமேல் தடவி ஊமத்தையிலை போடவும்.

45. சகல விசத்துக்கும் கை பிளவைக்கும்

முதலை எச்சத்தைப் பொடி செய்து தண்ணீரில் குடிக்க விசம் தீரும். மருந்தீடும் தீரும். பிளவை கையில் வீக்கம் கொள்ளும். இலைக்கள்ளி இலையை வதக்கி விளக்கெண்ணெய் தடவிக் கட்டவும்.

46. சகல சுரத்துக்கும் கசாயம்

தூதுவளை	கண்டங் கத்திரி
கறிமுள்ளி வேர்	சிற்றா முட்டி வேர்
பேரா முட்டி வேர்	கொழுஞ்சி வேர்
கிளா வேர்	மல்லிகை வேர்
பெருவாகை வேர்	பெருங் குமிழ் வேர்
நெருஞ்சில் வேர்	சீதேவி வேர்
முத்தக்காசு	முன்னை வேர்
சிறுகாஞ்சரி வேர்	விலாமிச்சம் வேர்
சாரணை வேர்	நில வேம்பு
சீந்தில் கொடி	விட்ணு காந்தி
பற்பாடகம்	நன்னாரி வேர்
ஆடாதோடை	

வகை ஒன்றுக்கு பலம் -ர கசாயம் போட்டு வைத்துக் கொண்டு அந்தி சந்தி இரண்டு நேரமும் கொடுக்கவும்.

47. உச்சிப் பிளவைக்கு மருந்து

உச்சியில் வீங்கித் திரண்டு கொள்ளும்
இதுக்கு முசுட்டை யிலையை
அவித்துக் கட்ட சீழ்கொண்டு உடையும்
பாவயிலை அவித்துக் கட்ட சீழ்பிரியும்
செங்கல் பொடி கிளுவைப் பட்டையும்
பொன் முசுட்டை வேரும் நல்லெண்
ணையில் எரித்துப் புண்ணுக்குத் தடவ ஆறும்.

48. பறங்கிப்பேட்டைக் காதியார் சாயபு சொன்ன ஔடதம்

சனை மிளகு	வராகனெடை 10
வெண்காரம் பொரித்தது	வராகனெடை 10
கறுப்பு காடி	வராகனெடை 10

இதுவும் பொடி செய்து மூன்றும் ஒண்ணாய்க் கூட்டி இஞ்சிச் சாறு விட்டு ஒரு சாமமரைத்து மிளகு பிரமாணம் உண்டை செய்து நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு வாயு, வாதம் ஒருபாரிசம் தோள் கடுப்பு சந்து குடச்சல், சந்து வீக்கம், பாண்டு வீக்கம், ஊது காமாலை, நெஞ்சு கட்டு, வயிற்றுவலி, வாதரோகம், வாயு வீக்கம், அண்ட வாதம், அந்திரவாயு, ஒரு விரை வாதம், இதுவெல்லாம் தீரும்.

49. லேபனம் இல்லாப் பேர்க்கு

நாகப்பாம்புத் திரளாய் கொண்டு வந்து சட்டியிலிட்டு கறுக்கிக் கொஞ்சம் நல்லெண்ணெய் விட்டு சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு போட்டு தைபிலம் இறக்கிக் குப்பியில் போட்டு வைத்துத் தண்டு எழாத பேருக்கு நெருப்பில் வெதுப்பித் தண்டில் ஐந்தநாளும் உருவ வீரியமாம்.

50. கிராணிக் கழிச்சலுக்கு

இலந்தை இலை ஒருக்குத்து இலைக் கொண்டுவந்து சட்டியிலிட்டு வதக்கி அதில் ஒருபடி எருமை மோர் விட்டுக் காய்ச்சி 1/4 படியாக்கிக் கொடுக்கவும்.

51. பரங்கிப்பட்டை ரசாயனம்

பரங்கிப்பட்டை பலம் 10, கடுக்காய், நெல்லிமுள்ளி, தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், இலவங்கப் பட்டை, இலவங்கப்பத்திரி, ஓமம், குரோசானி ஓமம், சித்திரை மூலம்,வாய் விளங்கம், அரத்தை, சிறுதேக்கு, செவ்வியம், திப்பிலிமூலம், கொத்தமல்லி, சீரகம், கருஞ் சீரகம், சடாமாஞ்சில், கோட்டம், அதிமதுரம், விலாமிச்சு, நன்னாரி, நிலப்பனை, கோரைக் கிழங்கு, அமுக்கிரா வேர், இது வகைக்கு வராகனெடை 5, சூரணம் சமமாகச் சேர்த்து பாகு சர்க்கரையைப் பாகமெடுத்து தூள் சிறுகத் தூவிப் பதமாயிறக்கி ஆறவிட்டு தேன்விட்டுக் கிளறி நெய் பழகினக்

குடுவையில் வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் கொட்டைப் பாக்குப் பிரமாணம் தின்னவும். 40 நாள் தின்னவும். அல்லது 30 நாள் தின்னவும். அல்லது 20 நாள் தின்னவும்.

இதுக்குத் தீரும் வியாதி: வாத ரோகம், பித்தம் சேத்துமம் உட்காய்ச்சல், சூத்திர வாயு, மேகம் இருபத்தோரு மேகம், குட்டம், சீலை பாண்டு கிரந்தி, தீராத விரணங்கள், தாது விருத்தி உண்டாம். இதுக்குத் துவரைப் பருப்பு வறுத்து, மிளகு வறுத்து உப்பில்லாமல் வெந்நீரும் சோறும்.

தீபாக்கினிச் சூரணம்

ஓமம், பெருங்காயம், வாய்விளங்கம் லவணம், திரிகடுகு, கடுக்காய், செவ்வியம், திப்பிலிமூலம், முத்தக்காசு, பேய்ப்புடல், சித்திர மூலம், சீரகம் கருங்சீரகம், குடசப் பாலைப் பட்டை, கோட்டம், அதிவிடையம், கண்டங்கத்திரி வேர், சிவதை வேர், வெட்பாலை அரிசி, வட்டத் திருப்பி வேர், பெரு மருந்து வேர், சிறுதேக்கு - யவாச்சாரம், சற்றி அவச்சாரம், வசம்பு, கத்தூரிமஞ்சள், மரமஞ்சள் இவையெல்லாஞ் சமமாகக் கூட்டி, சூரணம் செய்து வெல்லத்தி லாகுதல், நெய்யிலாகுதல் வெருகடிப்பிரமாணம் கொள்ளவும்,

தீரும் வியாதி : சீத குன்மம், உதர வியாதி தீரும். திருபல், பாண்டு காமாலை, பித்தம், உதராக்கினி மூலம், சுவாச காசம், அசீரணம் வாய்வு, கிருமி ருத்திர வாய்வு, சூலை இவையெல்லாந் தீரும்.

குடசபாலை கிடைக்காவிட்டால் லவங்கப் பட்டைக்காலு சுற்றி அவஷாரம் கிடையா விட்டால் சூகை நீர் கூட்டி கொள்ளவும். உப்பு தவிர மற்ற காரம், புளி தள்ளுபடி.

63. சிவஞானப் பண்டிதர் சிவதேவச் சோடினுக்குச் செய்த அவிழ்தம்

சத குப்பை	வராகனெடை 8
சீரகம்	வராகனெடை 8
கருஞ்சீரகம்	வராகனெடை 8
மகிழம் வித்து	வராகனெடை 8
அதி மதுரம்	வராகனெடை 8
கொத்தமல்லி	வராகனெடை 8
சன்னலவங்கப்பட்டை	வராகனெடை 8
தேற்றாம் விதை	42
சீனிச் சர்க்கரை	வராகனெடை 8

இடித்து ஒன்றாய்க் கலந்து வாயகண்ட குப்பியில் வைத்துக் கொண்டு அந்தி சந்தி ரெண்டு நேரமும் வெக்கடிப் பிரமாணம் வெந்நீரில் கொள்ளவும்.

இதுக்குத் தீரும் வியாதி.: ஈரல் சூலை வலி சரீரம் இடங்கொடுத்து நெஞ்சு மீறாதவாறு, ஈரக்குலையில் உண்டான அசுத்தங்களைத் தள்ளி விடும்.

64. நீரிழிவுக்கு மருந்து

விளாம் பிசின், கருவேலம் பிசின், ஆவாரம் பிசின், கடுக்காய், நெல்லிமுள்ளி, தான்றிக்காய், இந்த ஆறும் சமனெடை கூட்டி இடித்து சிறுவிரல் கடிப்பிரமாணம் தேனில் கொள்ளவும்.

நீரிழிவு தீரும் மூணுந்தைதைப் பெரியதாய் அவித்து அந்தக்கரியில் தேன் விட்டு பிசைந்து தின்னவும்.

65. சகல சன்னிக்கு கலிக்கம்

நேர்வாளம் பருப்பு – 40
சிற்றாமணக்குப் பருப்பு – 100

இது இரண்டும் தேன் விட்டு அரைத்து சிமிழில் வைத்துக் கொண்டு இரண்டு கடுகு மாத்திரம் எலுமிச்சம்பழச் சாற்றில் கண்ணுக்குப் போடவும்.

66. பதிமூன்றுவகை சன்னி

புறவலி, மின்வலி, முகவலி, காக்காய் வலி, மூடுசன்னி, சுகசன்னி, சகல விசமும் போம்.

67. திரளாத பெண்ணுக்கு மருந்து

புளியரணைக் கிழங்கு கொண்டு வந்து அரைத்துத் தவிட்டில் புரட்டி எடுத்து ஏழு நாளைக்குக் கொடுக்கவும். மாங்காயளவு கொடுக்கவும்.

68. வீரியத்துக்கு மருந்து

புளியரணைக் கிழங்கு
அமுக்கிராக் கிழங்கு

பசுவின் பாலில் அவித்து சூரணம் பண்ணி கலக்கி நன்று கலந்து ஏழுநாள் சாப்பிடவும்

ஆனை நெருஞ்சில்
ஆவாரம் விதை
ஆலம் விழுது

சாதிக்காயைக் கூட்டி சாப்பிடவும்.

69. பெரும்பாட்டுக்கு மருந்து

பலகறைப் பொடி பண்ணிப் பசுவின் பாலில் குடிக்கவும்.

70. நீர்க்கட்டுக்கு மருந்து

வெள்ளைச் சாறு வேளை வேர் சிறுநீரிலரைத்து கொடுக்கவும்.

71. பேய் நாய், பேய் நரி கடிக்கு

சிறு குமட்டி வேர், ஒத்தை வேர், பசுவின் பாலில் அரைத்துக் கொடுக்கவும். மாறுதலைக்குத் தனக்குத் தண்ணி வார்க்கவும்.

இரண்டு காசிளை மோா் மூணு துளி எருக்கம் பால், கல்லுப்பு, பணவிடை கூட்டி தக்க மருந்திடு தீரும்.

72. சுரம் தீர

சாதிக்காய், இந்துப்பு, சாதிலிங்கம், பச்சை நாவி, திப்பிலி, பொன் ஊமத்தம் விதை, வகைக்கு ஒண்ணு சரியாக சேர்த்து எலுமிச்சம் சாறு விட்டு அரைத்துக் கொண்டு மணிப் பிரமாணம் உண்டை செய்து நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு ஒரு உருண்டை இஞ்சிச் சாறில் விடவும். மறுநாள் இஞ்சி கிடையாவிட்டால் பசுவின் பாலில் கொடுக்கவும். வாத சுரமானால் வெற்றிலை சாற்றில் கொடுக்கவும். பித்த சுரத்துக்கு கொன்றையின் சாற்றில் கொடுக்கவும். சூலைக்குப் பாலில் மூன்று நாள் கொடுக்கவும். நாபியைக் கோமியத்தில் ஊறப் போட்டு மூன்று நாள் கொடுக்கவும்.

73. சுரத்துக்கு வச்சிராதிக்குச் சாறு

ஆடாதோடை	பலம் 1,
சாம்பல்	இரண்டு கழஞ்சு
பூசணித் தண்டு	இரண்டு கழஞ்சு
சுக்கு	இரண்டு கழஞ்சு

நாழித் தண்ணீர் விட்டு ஆழாக்காகக் காய்ச்சி கொடுக்கவும். எல்லா சுரமும் நிற்கும்.

74. சுரத்திலே பேதி வாந்திக்கு

நெற்பொறி, சிறு பயறு, வில்வ வேர், சீரகம், ஏலம், அதிமதுரம், நெல்லிவற்றல், சுக்கு, இது கசாயம் இட்டுக் கொடுக்கவும். வாந்தி தீரும்.

75. தோச குணத்துக்கு உடம்பு குளிர்ந்து இருப்பதற்கு

சிவதை பத்திரி வேர், செங்கழுநீர், கோட்டம், முன்னை வேர், மல்லிகை வேர், பற்பாடகம், விட்ணு கிரந்தி, சித்தாமுட்டி, பேராமுட்டி, சீந்தில் தண்டு, துளசி, முத்தக்காசு, சுக்கு, மிளகு, திப்பிலி, சிறுதேக்கு, திப்பிலி மூலம், இதுவெல்லாம் இடித்து காய்ச்சி, இரண்டு நேரமும், கொடுக்கவும். தோசம் தீரும்.

76. மருந்து

கோழி யாவாரை, மணத் தக்காளி, கொட்டைக் கிரந்தி, முசுமுசுக்கை காவாட்டைப்புல், சிலந்திணாயகம், செருப்படி, மூணுதுத்தியிலை, நுணாக் கொழுந்து, எல்லாம் ஒரு நிரையாய் போட்டு தண்ணீர்யிட்டுக் காய்ச்சி, குறுகின உடனே இறக்கிப் பிழிந்து கொண்டு அதில் கொஞ்சம் நாமக்கட்டி உரைத்து சந்தனமும் போட்டு, பனை வெல்லம், போட்டு மூணு நாள் கொடுக்கவும். சுரம் முதல் அச்சுரங்கள் தீரும். வெந்நீரும் சாதமும் உப்பு ஆம்.

77. சிறு புண்கள் உட்காய்ச்சலுக்கு

நில விளாஞ் சாறு, ஒரு படி இடித்துப் பிழிந்து, வெய்யலிலிருந்து வெந்நீரில் குளிக்கவும். திப்பிலி, வெந்நீரில் அரைத்துக் குடிக்கவும்.

78. பட்சி தோசத்துக்கு

(குழந்தைகளுக்கு)

சவுரிக் கொழுந்தும்
சிறு புள்ளடியும்
முலைப் பாலில் கொடுக்கவும்.
பறவை தோசத்துக்கு
பிள்ளைக்கு உச்சி பள்ளம்
கண் குழி விழும்
கல்லென்று கழியும்

அரி குரலாயமும், தண்ணீர் தாகமெடுத்து இதுக்கு 1/2 விடத்தாரி வேர் வடக்கு வேர் குளிசம் கட்டவும். ஆவாரைச் செடியிலிறுத்துப் பூசிக் கொடுக்கவும். மஞ்சள் தடவி சீலையில் முடிந்து கட்டவும்.

79. இது னுபகற தோசத்துக்கு

(செபார்) நெருஞ்சில்
சிறு புள்ளடி, அரைச்சு
நண்டு வளைத் தண்ணியில் கலந்து புகட்டவும்.

பேய் பீர்க்கு இலையைத் தலையில் தேய்க்கவும். விளாம் வேர் விடதாரி வேரும் வடக்கே போற வேரை வெட்டிக் குளிசங் கட்டவும்.

80. மாந்தைக்குக் கசாயம்

நன்னாரி வேர், ஊமத்தங்காய் பில்லு, கிளாவேர், காட்டு மல்லிகை வேர், வட்டத்திருப்பி வேர், வெள்ளைக் காக்ணவேர், பாவட்டம் வேர், கிலு கிலுப்பை வேர், சமன் சேர்த்து இடித்து வைத்துக் கொண்டு வெருகடி தூள் கசாயம் போட்டுக் குடிக்கவும். கொழுஞ்சி வேர் வெந்நீரில் போடவும்.

81. சிறுபிள்ளை வாந்திக்கு சலதாகத்துக்கு வெள்ளோகாளத்துக்கு

வில்வப்பத்திரி, வேர்ப்பட்டை, போக்கிவேர், ஊமத்தங்காய் பிஸ்பு, வேப்பீர்க்கு, நெற்பொரி, சிறுதும்மட்டி வேர், இவை சமன் கொண்டு வகைக்கு வராகனெடை 1/4, எடை வறுத்துக் கிசாயம் வைத்தக் கொடுக்கவும். சுக்கு, திப்பிலி, கருப்பட்டி, சமன் கொண்டு அரைத்து எலுமிச்சம் பழத்தை நான்காய் அறுத்து அதில் இந்த மருந்தைத் தடவித் தின்னக் கொடுக்கவும்.

82. பரங்கிப்புண், துலக்கப்புண், சூலைக்கட்டு, பிரமியம், அரையாப்பு, கிரந்தி, வெகுமூத்திரம் பீனிசம் இவற்றிற்கு சூரணம்

பரங்கிப்பட்டை சேர்	– 1
கிராம்பு கழஞ்சு	– 3
திப்பிலி பலம்	1/4
குரோசானி ஓமம்	1 வராகனெடை
சாதிக்காய் கழஞ்சு	4
சிற்றரத்தை வராகனெடை	1
சுக்கு பலம்	1/4
மிளகு பலம்	ர

இதுகளைச் சூரணம் செய்த வடிகட்டி அரத்தையும் ஓமமும் சற்றே வெதுப்பவும். இந்த சூரணம் வெருகடி கொள்ளவும். இரண்டு நேரம்.

இதற்கு தீரும் வியாதி: கிரந்தி, அரையாப்பு. 20 நாள் தின்னவும். சூலைக்கு 40 நாள் தின்னவும். இரண்டு

நேரமும் வெந்நீரில் குளிக்கவும். நாலு நாளைக்கு ஒருதரம் தலை முழுகவும். குளிர்ந்த தண்ணீர் உள்ளுக்குக் கொடுக்கவும். மீன், கருவாடு, ஆட்டுக்கறி, கோழிக் கறி, முதல் நன்றாகச் சாப்பிடவும். சுரைக்காய், தூதுவளைக்காய், பாகல் காய், பூசணிக்காய் தள்ளவும். அபத்தியம் ஆகாது.

83. பெரும்பாட்டுக்கு, எலும்புருக்கி, யோனிச் சூலைக்கு சூரணம்

நெல்லிப்பருப்பு, நிலப்பனைக்கிழங்கு, ஓரொன்று பலம் பன்னிரெண்டு ஒரு பானையில் போட்டுப் பதக்குத் தண்ணீரில் விட்டு ஒருபடியாகக் காய்ச்சி அதில் பசுநெய் ஒருபடி விட்டு முந்திரிப்பழம் வாழைப்பழம், உளுந்து, அமுக்கிரா வேர், வகைக்கு பலம் 3, அரைத்து வடித்துக் கொண்டு கலக்கி பலம் 2, பொடி பண்ணிப் போட்டு அந்தி சந்தி இரண்டு நேரமும் வெகடி கொள்ளவும்.

84. கிராணிக்குச் சல எரிச்சலுக்குக் கழிச்சலுக்கு

சீரகம், அசமதாகம், சுக்கு, கடுக்காய், சாதிக்காய், வகைக்கு பலம் 1, கஞ்சா இலை கொதிக்க ஒரு படி, இவைகளை எல்லாம் நல்லெண்ணையில் விட்டு பொன் வறுப்பாய் வறுத்து, கடுக்காய் தோல் கறுக வறுத்து இவைகளை ஒன்றாய் போட்டு அரைக்க பிசின் போலே ஆகும். இதை எடுத்து வைத்துக் கொண்டு பலம் நல்ல வெல்லம் பாகு போலேக் காய்ச்சி அதில் அரைத்து மருந்தைப் போட்டுக் கிளறி வைத்துக் கொண்டு ஒரு பாக்களவு ஒரு சிரங்கா எருமைத் தயிரில் விட்டுக் கொள்ளவும்.

சகல கழிச்சலும் சுரத்திலெடுத்தக் கழிச்சலும் நிற்கும்.

85. சுரம் காய்ச்சலுக்கு மருந்து
சுரம் 64க்கும் மருந்து

பச்சை ஓடு பலம் ர, ஓமம் பலம் 1, மரமஞ்சள் பலம் 1, கரிமஞ்சள் பலம் 1, பெரு மருந்து பலம் 1, இதுவெல்லாம் இடித்து வத்திர காயம்பண்ணி அந்த கப்பி பலம் ர, அதிலே ஒரு படி தண்ணீர் விட்டு கால்படியாகக் காய்ச்சி முந்தினத் தூளிலே விட்டு அரைத்துத் தூதுவளைக்காய் பிரமாணம் உண்டை பண்ணி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு சகல சுரத்துக்கும் வெந்நீரிலும் ஓம கசாயம் மற்ற கசாயத்தில் கொடுக்கவும்.

86. நளிர் சுரத்துக்கு

பூங்காவி	பலம் 2
கல் சுண்ணாம்பு	பலம் 1

இது இரண்டும் வெதுப்பிக் கொண்டு கம்மாறு வெற்றிலைச் சாறுவிட்டு ஒரு சாமம் அரைத்துப் பயறளவு உண்டை செய்த நிழலுலர்த்தி வைத்தக் கொண்டு வெற்றிலையில் கொடுக்கவும்.

87. நொக்கு நிரித் தைலம் தலையிலுள்ள வியாதிக்கு

நொச்சியிலைத் தூள் படி 2

நாலுபடி தண்ணீர் விட்டு ஒரு படியாக இறக்கிப் பிழிந்து கொண்டு சட்டியில் வார்த்து ஒரு படி நல்லெண்ணெய் விட்டு ஒரு படி வெள்ளாட்டுப்பால் விட்டு அதில் கற்கம், ஏலம், லவங்கம், பட்டை, செண்பகப்பூ, அரத்தை, அதிமதுரம், கோட்டம், மிளகு, சுக்கு, திப்பிலி, குப்பி, வகைக்குப் பலம் 1/4 அரைத்துக் கரைத்துமெழுகு பதமாய் வடித்து முழுகத் தலையிலுள்ள வியாதி தீரும்.

88. சன்னி 13 க்கு பல் கிட்டினாலும்

நேர்வாளம்	பலம் 1/4
கோழி முட்டை ஓடு	4
சுளுக்கு	பலம் 1/4
மிளகு	பலம் 1/4

பொன் வறுப்பாய் வறுத்தக் பொடி செய்து வைத்துக் கொண்டு பல் கிட்டின சன்னிக்கு மூக்கில் ஊற்றவும். சன்னி வாய் திறந்து பேசும் கை கண்டது.

89. பெரும்பாடு எலும்பு, எரிகுன்மம், வலிகுன்மம், சத்தி குன்மம், வாதகுன்மம் இதுக்கு மருந்து

பரங்கிப்பட்டை	பலம் 4
சர்க்கரை	பலம் 5

இது இரண்டும் லேகியம் செய்து தின்னவும். ஏழு நாள் வெந்நீரிலும் சோறும் ஒரு பூசணிப் பழம் ஓடு போக்கி குடலும் விதையும் போக்கி சிறுக அரிந்து உலத்தி இடித்துத் தூளாக்கி சட்டி காயவைத்துப் பொன்னிறமாக வறுத்து சுக்கு மிளகு திப்பிலி கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப் பருப்பு, அதி மதுரம், சீரகம், வகைக்கு கழஞ்சு 3, கூட்டிப் பொடி செய்த இறுத்து மருந்துக்கு இரண்டு பங்கு சீனி கூட்டி வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். மருந்து இருத்திர வரைத்துத் தின்னவும்.

90. ஆண் மரியாதி, முலையில்லாத பெண்ணுக்கு

முத்தெருக்கம், செவ்வியம் சமம் சேர்த்து பசுவின் பாலிலரைத்து ஆழாக்கு சாற்றில் கொடுக்கவும். மார்பிலும் தடவவும்.

91. மேக விபரம்

நீரில் ஈ மொய்த்தால் அது மது பிரமேகம். நீர் துளித் துளியாய் விழுந்தால் எரி பிரமியம். நீர் விழும்போது எரியுமாகில் சுத்திரி பிரமேகம். நீர் விடாமல் இறுகி வந்தால் பிரமேகம். நீரிலே நெய் போலே இருந்தால். மை பிரமேகம். நீர் நொந்து இரங்கு மாகில். சூலைப் பிரமேகம். ஒரு கண்டத் தாரையாய் விடுமாகில் வெகு மூத்திரம் ஒரு நாளைக்கு ஒருகொட்டம். இறங்குமாகில் நீரிழிவு யென்று அறியவும்.

92. நீரிழிவு சகலத்துக்கும் மருந்து

பசுவின் பால் குறுணி, நத்தை சூரி வேர், குதிரை வாலி வேர், பனை வெல்லம், ஓரொன்று விளாங்காயளவு அரைத்து லேகியஞ் செய்து வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். கசக்கலைக் கடுப்பு, நீரிழிவு எல்லாம் நிற்கும்.

93. நளிர் சுரத்துக்குக் கசாயம்

வில்வபத்திரி வேர், பட்டை தட்டி போட்டு இழைத்துக் கொண்டு இரண்டு கழஞ்சு அதிமதுரம் வராகனெடை ஒன்று எல்லாம் கசாயம் போட்டு அஞ்சு துளி தேன் விட்டுக் கொடுக்கவும்.

94. நளிர் சுரம் ஒருநாளில் நிற்க மாத்திரை

ரசம் வராகனெடை 5, கிருட்டின அப்பிரகம் வராகனெடை 5 இவை இரண்டையும் மருக் கொழுந்து சாறாகிலும் வெட்டி வேர்க் கசாயம் மாகிலும் விட்டு அரைத்து, சிறு பயறளவு மாத்திரை செய்து, சுரத்துக் கெல்லாம் நீராகாரத்தில் கொடுக்கவும்.

95.சன்னிவாத சுரத்துக்கு

மரக்காளம்பட்டை முள்ளிக்காயளவு. மஞ்சள் மிளகு, உள்ளி, இவையெல்லாம் இளம் வெந்நீரில் குடிக்கவும். முசுமுசுக்கை சும்மாடு கட்டி நடு உச்சியில் மஞ்சள்தூள் போட்டு அதன் மேல் சும்மாடு வைத்து மண்ணை வெட்டிக் காயவைத்து அதன் மேல் வைக்கவும்.

96. முலையெழாத பெண்ணுக்கு லேபனமில்லாதாருக்கு

மாந்துளிரைப் பசுவின் பால்விட்டரைத்து மார்பில் பத்துநாள் அரைத்துப் பூசவும். வாழைப் பழத்தில் பத்து நீர் முள்ளி விரையை வைத்து அந்திக்குச் சாப்பிடவும்.

ஞாயிற்றுக் கிழமை நாள் விடத்தோல்
வடக்கே போற வேரை குளிசமாடி,
அரையில் கட்டவும். தம்பனம்.
தலை மூளை நிறைந்து பலப்படும்.

தலையிலுள்ள வியாதிகள் தீரும், கண்ணில் தண்ணீர் விழுகிறது நிற்கும். கண்ணுக்குப் பிரகாசம் கொடுக்கும். தீபனம் நன்றாகக் கொடுக்கும். நல்ல நித்திரை வரும். வயிற்றிலுள்ள கிருமி செத்துப் போகும். இடுப்பு வலி தீரும். கல்லடைப்பு விடும். வாய் குன்றி பேசுமாகில் நல்ல வாய்ப்பேச்சும், பயித்தியம் தீரும். காது நன்றாக கேட்கும். தொண்டை புண்ணாகும். சிலேத்தும அமத்தும். வாய் நாற்றம், அனலையும் நிறுத்தம் கழுத்திலுண்டான வீக்கம் தீரும். நீர்க்கட்டு மேகக்கட்டு தீரும். நல்ல புத்தி உண்டாம்.

97. நீரிழிவுக்கு

அத்திப்பால் கழஞ்சு 3, தேன் கழஞ்சு 3, ஆவாரம் விரை கழஞ்சு 3 இந்த மூன்றும் சேர்த்துச் சாப்பிட நீரிழிவு நீங்கும்.

98. விலக்கல் உண்டாக

புளியறுணைக் கிழங்கு, எலுமிச்சங் காயளவு அரைத்துப் பசும்பாலில் கொடுக்கவும்.

99. தலைவலி, தலை சுற்றல், பீனிசம்

தேங்காய்க் குருத்து சாறு	படி 21.
நல்லெண்ணெய்	படி 1/4
வெட்டி, விலாமிச்சு வேர்	
மருக்கொழுந்து	

இம்மூன்றும் இடித்து எண்ணெயிலிட்டு எரித்துக் கத்தூரி வராகனெடை 1, எண்ணெயில் போட்டு முழுகவும்.

100. ஊது காமாலைக்கு மருந்து

ஒரு தேங்காயின் கண்திறந்து தண்ணீர் ஊற்றி அதில் இரண்டு பலம் அயநாப்பொடி ஒரு பலம், சிட்டப் பொடி வெல்லப்பொடி பலம் ஒன்று இதுவெல்லாம் போட்டு காசாலைக் கண்ணிச் சாறு விட்டு அதை அரைத்து சாக்கடையில் 20 நாள் புதைத்து அதை எடுத்து அரைத்து உண்டை பண்ணி நல்லெண்ணெயில் ஊறவைத்து நாற்பது நாள் சாப்பிடவும். பழையது மோராகாது.

101. மதனகாம சுரம்

எள், உளுந்து, அவரை, வாழைக் கிழங்கு, இலவம் பிசின், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, பருத்தி விதை, நீர்முள்ளி விதை, ஆனைத்திப்பிலி, நாயுருவி விதை, அமுக்கிரா வேர், தண்ணீர்விட்டான் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, செங்கழனி, கோட்டம், அபினிக், கஞ்சா, ஓரொன்றுக்குப் பலம் அரை, எல்லாம் இடித்துச் சூரணம் செய்து கொண்டு வெரகடிப் பிரமாணம் பாலில் போட்டு சீனியும் போட்டு சாப்பிடவும்.

102. சுரம் அறுபத்தினாலுக்கு மருந்து

நாபி	வராகனெடை 1
மிளகு	வராகனெடை 8
கோரோசனை	வராகனெடை 1/4

இவை மூன்றையும் கூட்டி இஞ்சி சாற்றில் மூன்று நாளரைத்து மிளகு பிரமாணம் உண்டை பண்ணி நிழலுலர்த்தி வைத்து ஓரொன்று சகல சுரத்துக்கும் இஞ்சிச் சாற்றில் சுக்குக் கசாயத்தில் கொடுக்கவும்.

103. பெரும் பாட்டுக்கு மருந்து

பழம்பாசி இலையை அரைத்து, எலுமிச்சங் காயளவு, வெள்ளைத் துணி சுட்டச் சாம்பல் அவ்வளவு, நல்லெண்ணெய் உழக்கு விட்டுப் பிசைந்து 3 நாள் கொடுக்கவும். வெகு நாள் சென்ற பெரும்பாடும் நீங்கும். கை கண்டது.

104. கண் பூவுக்கு மருந்து ஆக்கிராணம்

சீனாக்காரம்	கழஞ்சு 2
வெள்ளைச் சாரணைவேர்	கழஞ்சு 2
துருசு கழஞ்சு	..
முருங்கைப்பூச் சாறு	..
தும்பைச்சாறு	..
பனம்பட்டைச்சாறு	..
எலுமிச்சம்பழச்சாறு	கழஞ்சு 2

விட்டரைத்து கயிறு போல உருட்டிக் காய வைத்து முலைப்பால், தேனில் போடவும்.

105. சன்னி தோசத்துக்கு ஆக்கிராணம்

மனோசிலை, சுக்கு, திப்பிலி, மூன்றும் வகைக்கு வராகனெடை 1, மூங்கிலைச் சாற்றில் ஊறவைத்து அரைத்துப் பொடி செய்து பரணியிலே வைத்துக்கொண்டு மூக்கில் ஆக்கிராணஞ் செய்யவும். சலதோசமும் சன்னியும் மாறும்.

106. சீத சுரம் நளிர் சுரத்துக்கு

தாளகம்	வராகனெடை 1
கல்சுண்ணாம்பு	வராகனெடை 1

பாகல் இலைச் சாற்றில் அரைத்து மிளகு பிரமாணம் உண்டை செய்து நிழலில் உலர்த்தி துணியில் முடிந்து தானிய புடம் 6 மாசம் வைத்து எடுத்துக் கொண்டு ஆக்கிரமஞ் செய்யவும்.

107. எலிக் கடிக்கு மருந்து

நரிப்பாகை இலைச் சாறு	.. ரு
விளக்கெண்ணெய்ச் சேர்	.. ரு

இது இரண்டும் எரித்து பக்குவத்தில் இறுத்து வைத்துக் கொண்டு மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் கடினம்.

108. நேத்திர ரோகத்துக்கு

இந்துப்பு, திப்பிலி, இதுவும் கோரோசனம், மைரோவகம் 2ம் ஆக 4ம் சரியிடையாய்க் கூட்டி நந்தியாவட்டைச் சாற்றில் அரைத்து உருட்டி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு அந்தப் பூச் சாற்றில் கண்ணில் போடவும். முலைப்பாலில் போடவும்.

109.நளிர் சுரத்துக்கு மருந்து*

வெள்ளைப் பாசாணம். சதிர்க் கள்ளி, பாலில் எரித்து 10 மேற்படி வராகனெடை செபுறா கொடுக்க எட்டு மாதத்து ஆம் க வராகனெடை கொடுக்கவும். (குறிப்பு சரியாக இல்லை)

110. நளிர் சுரத்துக்கு

வெங்காரம் சுட்டுப் பொரித்துத் தூள் செய்து சமம் சுண்ணாம்பு கூட்டி பாக்கு வெற்றிலையில் கொடுக்கவும். 3 நாள் கொடுக்கவும்.

111. மண்டை நோவுக்கு

துளசிச் சாறு விட்டு சதைகுப்பியை அரைத்துத் தலை முழுகவும்.

112. விசமென்னப் பட்டதுக்கெல்லாம்.

சீந்தில் கிழங்கு கரணைப் பொடியை நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு மூன்று கரணையளவு மென்று விழுங்கவும்.

113. பேய் நாய், பேய் நரிக் கடிக்கு

சிறுதும்மட்டி வேர், பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கு வேர், அழிஞ்சிப்பட்டை, இவை நாலும் நல்லெண்ணெயில் எரித்து ஒரு கரண்டி கொடுக்கவும். ஏழு நாள் கொடுக்கவும். ஏழு நாள் பத்தியம் மறு பத்தியம் ஏழு நாள்.

---

*செய்முறை சரியாக இல்லை.

114. மதன காமேசுரம்

சமுத்திராம சோசி	பலம் 1
நீர்முள்ளி விதை	பலம் 1
பூனை காலி விதை	பலம் 1
உளுந்து	பலம் 4
ஏலம்	பலம் 1
இலவங்கப்பட்டை	பலம் 1
குரோசானி ஓமம்	பலம் 1

இவை சூரணம் செய்து முத்திரைத் தேங்காய் கண் திறந்து தண்ணீர் ஊற்றி இந்த மருந்து அடைத்துத் தக்கையிட்டு மூடிப் பசுவின் பால் படி, தண்ணீர் படி கலந்து தேங்காய்ப் பானையில் போட்டு சுவரக் காய்ச்சி தேங்காய் எடுத்து ஒரு தட்டில் தேங்காய்க் கீறி நிழலில் வைத்துக் கொண்டு உள்மருந்துக்குச் சரி சீனிக் கூட்டி தான்றிக்காய் பிரமாணம் உண்டை செய்து வைத்துக் கொண்டு சாயங்காலம் ஒரு உண்டையும் உண்ணவும். ஒரு கீற்று சுக்கையும் கூட்டி பசும்பாலில் கொடுக்கவும். புளி தவிர்க்கவும்.

115. நேத்திர வாய்வு தலையிலுள்ள வியாதிக்கெல்லாம்

வேப்பெண்ணெய்	படி 1
நல்லெண்ணெய்	படி 1
விளக்கெண்ணெய்	படி 1
வெள்ளாட்டுப்பால்	படி 1
எலுமிச்சம்பழம்	21
ஆகாசத்தாமரை சாறு	படி 2
தண்ணீர்	படி 1

இவையெல்லாம் ஒன்றாய்க் கூட்டி எலுமிச்சங் காய் அறுத்துப் போட்டு சீரகம் திப்பிலி சுக்கு கருஞ்சீரகம்.

தும்புராட்டகம்
கோட்டம்
அதிமதுரம்
சதகுப்பி

வகைக்கு வராகனெடை 1. இதனுடன் கூட இடித்துப் போட்டுக் காய்ச்சிப் பதத்தில் குடுவையில் வைத்துக் கொண்டு தலை முழுகவும். இரவு மிளகு சுட்டு முகரவும்.

116. தலைவலி, சயித்தியம், இதுக்கு நாசிப்புகை

சுக்கு, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் வற்றல், கருஞ்சீரகம், ஓமம், வேப்ப முத்து, அதிமதுரம், வெள்ளுள்ளி, வேப்பம்பட்டை, எல்லாம் சூரணம் செய்து மெல்லிய துணியில் வைத்து சூரணம் செய்து திரிதிரித்துக் கொளுத்தி நாசிக்குப் புகைப் பிடிக்க தலையிலுள்ள வியாதி எல்லாம் தீரும்.

117. ஒரு விதை வாதம் இசிவுக்கு அண்டை வாதத்துக்கு

பச்சை கச்சக்காய், தோலுரியாமல் சாணியில் வைத்துப் புடம் போட்டு செய்து சாராயத்திலாகுதல் சுக்குக் கசாயத்தில் கொடுக்கவும். சூரணத்தைச் சாராயத்திலாவது பூசவும். புளி புகை ஆகாது. கிரந்திப் பண்டம் ஆகாது.

இதுவும் ஒரு விரைவாதத்துக்கு (வேறு)

விளக்கெண்ணெய்	படி 1
வெள்ளுள்ளி தைலம்	படி 2
பெருங்காயம் காசிடை	1

எரித்து உள்ளுக்குக் கொடுக்கவும். மேலுக்குப் பத்து கட்டுக் கொடி வேர், தொட்டா சுருங்கி வேர், சார் வேளை வேர், முடக் கொத்தான் வேர், கழக்கொடி வேர், கழுதை லத்தி, கழப்

பருப்பு, வசம்பு, வெள்ளுள்ளி, திப்பிலி, அரத்தை, மிளகு, சரியெடை, கூட்டி வேப்பெண்ணெயில் காய்ச்சிப் பூசவும்.

118. கண் வியாதிக்கு

சிறுபுள்ளடி முலைப்பால் வார்த்து இடித்து ரசம் பிழிந்து கொண்டு பசுவின் வெண்ணெய் காவி தாம்பாளத்தில் போட காலி செம்பாலிழைத்து மூன்று நாளிழைத்து சிமிழில் வைத்துக் கொண்டு கண்ணுக்குப் போடவும். கண் வியாதி எல்லாம் தீரும்.

119. நாவறட்சி தாகத்துக்குக் கசாயம்

தண்ணியிலே இருக்கும் அட்டை 34 கொண்டு வந்து மஞ்சள் பலம் 1/4 நெல் பொரி பலம் 3 இந்த மூன்றும் சட்டியில் போட்டு தண்ணீர் விட்டுக் காய்ச்சிக் கொடுக்க நாவரட்சித் தாகம் தீரும்.

120. தாமிர பற்பம்

வெள்ளைப் பூண்டு உரித்து நசுக்கிக் குகையிலே வைத்து அதின் பேரில் தகடு வைத்து மேலே மேலே வெள்ளைப் பூண்டு வைத்து முள்ளிக் கீரை சாறு விட்டுக் குகை மூடி சீலை செய்து 10 விராட்டியில் வைக்கப் பற்பமாம் எந்த வியாதிக்கும் கொடுக்கவும்.

121. காதில் சீ விழுகிறதுக்கு

எலுமிச்சஞ்சாறு ஆழாக்கு
நல்லெண்ணெய் ஆழாக்கு

எரிநாகப் பாம்பு 20 கூடப் போட்டு எரித்துக் காதுக்குள் விடவும்.

பூவரசம் பூ, உள்ளி, வசம்பு, நல்லெண்ணெயில் காய்ச்சி காதுக்கு விடவும்.

122. ஆக்கிராணம், சகல சன்னி, தோசத்துக்கு

கடல் தேங்காய் படி காரம் பொரிச்சு தூள் வெள்ளை மிளகு, குங்குமப்பூ, இலவங்கம், கோதளங்காய், வகைக்கு வராகனெடை 4, சூரணம் செய்து வைத்துக் கொண்டு மூக்கில் முகரவும்.

123. ஒரு விரை வாதத்துக்கு

முருங்கை வேர்ப் பட்டை, மாவலிங்கவேர்ப்பட்டை வகைக்கு பலம் ர வெள்ளாட்டுப் பாலிலரைத்துக் கொடுக்கவும். 3 நாள் வெள்ளாட்டுப் பாலும் சோறும் உப்பு வறுத்துக் கூட்டவும்.

ஒரு விரை வாதத்துக்கு (வேறு)

பொடியாக அரைத்துக் கோழி முட்டை வெள்ளைக்கருவைத் தள்ளி, சிகப்புக் கருவைக் கூட்டி, வெங்காயமும், போட்டுப் பொரித்து மூணு நாள் கொடுக்கவும். உப்பு வறுத்துப் போடவும். எண்ணெய் தடவவும்.

124. மாந்தங் கணம் அட்சரம்

வெங்காயம் ஒரு சிரங்காய்	
மெருகு கிழங்கு	பலம் 1,
சங்கம் வேர்	வராகனெடை 2
பூத கரப்பான் பட்டை	பலம் 3/4
செங்கதாரி பட்டை	பலம் 3/4
விளக்கெண்ணெய்	சேர் 1

மருந்து அரைத்துப் போட்டு வெங்காயமும் அரிஞ்சுப் போட்டு எண்ணெய் எரித்து கொடுக்கவும். உப்பு ஆம்.

125. கட்டிப்புண், பவுத்திரத்துக்கு

தேனைக் கொதிக்க வைத்துச் சீலையிலூட்டிப் புண்ணில் போட்டு அதின் மேல் நேர்வேளம் பட்டை வைத்துக் கட்டவும். அரைத்து வைத்துக் கட்டவும்.

இதுவும் புளி சர்க்கரை கத்திரிப் பிஞ்சு கும்பியில் வேக வைத்து எல்லாம் அரைத்து வில்லை செய்து சீலைபோட்டுக் கட்டவும். பத்தியம் வெந்நீரும் சோறும் புசித்து வரவும். வராமல் போனால் புளியரணை இலை கருங்குறுவை அரிசி இரண்டும் அரைத்து அடை சுட்டு 3 நாள் தின்னவும். உப்பு வறுத்துக் கூட்டவும். பவுத்திரம் குணமாம்.

113. வாயில் இரத்தம் விழுகிறதுக்கு

முசுமுசுக்கைச் சாறு	படி 1/4
பசுவின் பால்	படி 1/4

இரண்டும் மத்திச்சுக் கொடுக்கவும். உப்பு வறுத்துக் கூட்டவும். புளி புகை மோருமாகாது.

114. மதன சூரணம்

சீரகம்	பெருஞ்சீரகம்
அதிமதுரம்	சந்தனம்
சதகுப்பை	வெட்டிவேர்
விலாமிச்சுவேர்	செண்பகப்பூ
கோட்டம்	இலவங்கம்
சிறுநாகப்பூ	பெருலவங்கப்பட்டை
மிளகு	தேத்தங்காய் கொட்டை

வகைக்குச் சரி கூட்டிச் சூரணம் செய்து கலக்கினறு கூட்டி சாப்பிடவும் இதுக்குத் தீரும் வியாதி வாந்தி ஆரோசிகம், தாகம், மூர்ச்சை, கிறுகிறுப்பு, உட்டிணம் மாரெரிவு, மயக்கம், காலெரிவு, கையெரிவு, கண்ணெரிவு நித்திரை நன்கு வரும்.

பத்தியம் : புளி, புகை, மோர் ஆகாது.

115. விக்கலுக்கு மருந்து

மயிலெறகு, சுட்ட சாம்பல், கடுகுரோகணி, திப்பிலி, இவைகளைப் பொடி செய்து தேனில் கொள்ளவும்.

116. எரிகுன்மத்துக்கு

ஒரு தேங்காய்ப் பால் புளிகோந்து வெந்தயம் 1/4 படி போட்டு வேகவைத்து தின்னவும். புளி மோராகாது.

117. குன்மத்துக்கு

நெற் பொறி	பச்சைப் பயறு
வில்வ வேர்	முல்லை வேர்
சீரகம்	ஏலம்
மிளகு	சுக்கு

வகைக்கு வீசம், 1 படி இளநீரில் கசாயம் வைத்துக் கொடுக்கவும். 5 நாள் கொடுக்கவும் புளி, புகை தளளவும்.

118. காதில் நாய் ஈ புகுந்தால்

வெள்ளரி விரை, எலி புழுக்கையும், அரைத்துக் காதில் விடவும்.

செருப்படைசார்

விழுதி இலை குப்பை மேனி இலை

நல்லெண்ணெயில் காய்ச்சி காதில் விட்டுக் குழம்பை வைத்து உரியவும்.

119. சிறுபிள்ளையின் நரம்பு போலே இளைத்தால்

அரசம் வேர்ப்பட்டை தண்ணீர் விட்டான் கிழங்கு, உள்ளி, வசம்பு, இவைகளை நறுக்கி நல்லெண்ணெயில் எரிக்கும் போது ஒரு கரட்டு ஓணானை உரித்துக் கூட எரித்துப் பிள்ளைக்குப் புகட்டவும்.

120. மலட்டுப் பூச்சி விழ

புழுங்கலரிசி, உப்பு, மிளகு, உள்ளி, கையான்தகரைக் கூட்டித் தலை முழுக்கு வந்த 3ம் நாள் கொடுக்கவும். வயிற்று வலியும் நீங்கும்.

பச்சைக் கற்பூரம்	வராகனெடை	2
திப்பிலி	,,	2

சற்றே வெதுப்பி பொடித்துத் தேனில் கொள்ளவும்.

121. பூப்பு ஆகாத பெண்ணுக்கு

தண்ணீர்விட்டான் கிழங்கு	1/4 பலம்
நெல்லிவத்தல்	1 பலம்

முள்ளித் தோலும் போட்டு ஊற வைத்து 30 முப்பது நாழிகை நேரம் அரைத்து ர படி பசுந் தயிரில் மூணு காலம் கொடுக்கவும்.

122. சூலை கிரந்தி மேகரணத்துக்குப் புகை

இலிங்கம் வராகனெடை 2, எருக்கம் பூவும் போட்டு அரைத்துப் புகையிலையும் போட்டு சுங்கானில் புகை பிடிக்கவும்.

உப்பு வறுத்துக் கூட்டவும். வாய் பிடித்தால் கறுவேலம் பட்டை வேகவைத்துக் கொப்பளிக்கவும்.

123. அண்ட வாதத்துக்கு, ஒரு விரை வாதத்துக்கு

வேப்பெண்ணெய்	சேர் 1
ஈசுர மூலி வேர்	பலம் 5

பொடிபண்ணிப் போட்டு எரித்து ஒரு சின்னக் கரண்டி கொடுக்கவும். உப்பு வறுத்துக் கூட்டவும். வாய் பிடித்தால் கறுவேலம் பட்டை வேக வைத்துக் கொப்பளிக்கவும்.

124. பிரமியம், பெரும்பாட்டுக்கும் மேகத்துக்கு

மூன்று வாழைப்பூ கொண்டு வந்து உரித்து அடிப்பூவை அரைத்து

ஏலம்	பலம் 1/2
இலவங்கம்	பலம் 1/4

கூடப் போட்டு வாயடைத்துப் புடம் வைத்து ஒரு வெடித்து உடனே. மருந்து தேங்காயரைத்துப் பச்சரிசி அரைப்படி கூட வைத்தரைத்து மூன்றுநாள் சாப்பிடவும். பாலாகும். உப்பு வறுத்துக் கூட்டவும்.

125. அட்ட குன்மத்துக்கு மருந்து

பிரண்டைச் சாம்பல்
அலரிப் பழுப்புச் சாம்பல்
கள்ளிச் சாம்பல்
நாயுருவிச் சாம்பல்
எருக்கம் பழுப்புச் சாம்பல் வகைக்கு பலம் 1

வெங்காயம்	பலம்	2
சீனி சர்க்கரை	பலம்	2
இந்துப்பு	பலம்	2
பொட்டுலுப்பு	பலம்	2
வளையலுப்பு	பலம்	2
கல்லுப்பு	பலம்	2

இவையெல்லாம் ஒரு குடுவையில் பொடி செய்து போட்டு மேலே ஒருமூடி சீலை செய்து எருமுட்டை புடம் போட்டு அந்தப் பற்பம் ஒரு காசிடை தேனில் கொள்ளவும். வாயுப் பண்டமாகாது.

126. சகல கிரந்திக்கு

கருஞ்சீரகம்	பலம்	1
கார்போக அரிசி	பலம்	1
சேராங் கொட்டை	பலம்	1

சாணியில் வேக வைக்கவும்.

சிறுகுறிஞ்சா வேர்	பலம்	1
காட்டு மல்லிகை வேர்	பலம்	1
சீரகம்	பலம்	1
இரசம்	வராகனெடை	1 1/2

சுத்தி செய்து கூடப் போட்டு எல்லாம் இடித்து வேளைக்குக் கச்சக்காயளவு தின்னவும்.

இச்சாப் பத்தியம். வாயு பதார்த்தம் தள்ளவும். புளியை அரை அளவு கூட்டவும். உப்பு வறுத்துக் கூட்டவும்.

127. ஆக்கிராணம்

மயில் துத்தம் வேண்டினது. வாங்கி நல்லெண்ணெயில் முப்பது நாழிகை ஊற வைத்து நெருப்பில் பொரித்துத் தூளாக்கி நாசியில் முகரவும். சகல சன்னி தலைவலி சயித்தியம் எல்லாம் போம்.

128. தலைப் புற்றுக்கு மருந்து

இரசம் வராகனெடை	3
வெற்றிலைச் சாற்றில் சுத்தி செய்து	
பச்சை வெற்றிலைச்சாறு	படி 1/4
கருனொச்சி சார்	படி 1/4
வேப்பெண்ணெய்	படி 1/2

எல்லாம் போட்டு எரித்து வைத்துத் தலைக்குத் தேய்க்கவும். துவரை மாவு பண்ணித் தலைக்குத் தேய்த்து முழுகவும். பத்து முழுக்கு முழுகவும்.

129. வயிற்று வலி குன்மத்துக்கு

சிவலை வேர் வேண்டு மட்டும் கோமியத்தில் ஊற வைத்து நடு நரம்பு எடுத்து பாலில் வேக வைத்துக் காய வைத்து சூரணம் செய்து

கசகசா	பலம்	2
கருப்பட்டி	பலம்	3

போட்டு இடித்துக் கச்சக்காய் அளவு உண்டை செய்து வைத்துக் கொண்டு ஒரு உண்டை கொடுக்க பேதியாகும்.

மிளகு நீர் சாதம்

இரவு சுக்குக் கசாயம் கொடுக்கவும்.

130. சகல வியாதிக்கும் சுவாச காசம் மந்தார காசம் குன்மம்

இதுக்கு தாளம்,சீனிக்காரம் இரண்டும் தேவையான மட்டும் வாங்கிச் சமம் பொடி செய்து ஆகலில் வைத்து அம்மான் பச்சரிசிச் சாறு விட்டு மேல் சட்டி மண் சீலை செய்து புடம் போட பற்பமாம். தேனில் பணவிடை கொடுக்கவும். நெய், பால் கூட்டவும்.

பத்தியம் : இச்சா பத்தியம்.

131. வெள்ளி பற்பம் மஞ்சிலை பிரமியத்துக்கு

வெள்ளியூர் சட்டியில் போட்டு அடுப்பில் வைத்துச் சென்னாயுருவியை, சிறுகச் சிறுகக் கத்திரித்துப் போட்டு உருக்கிச் சேர் கருஞ்சீரகம் பலம் 1 போட்டுக் கிளறிக் கொடுக்க பற்பமாகும். பணவிடை தேநீர்க் கொள்ளவும். கிரந்தி வஸ்து தள்ளவும். நெய் பால் கூட்டவும்.

132. வாத வியாதிக்குச் சூரணம்

இலவங்கம், இலவங்கப்பத்திரி, இலவங்கப் பட்டை, நெல்லிப் பருப்பு, வாய் விளங்கம், முத்தக்காசு, கடுகு ரோகணி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், வகைக்கு பலம் 1/4 , சிவதை வேர் சூரணம் பலம் 5, இவையெல்லாம் இடித்து வடித்துக் கொண்டு வெள்ளைச் சர்க்கரை கூட்டி வெருகடி கொள்ளவும்.

இதுக்கு தீரும் வியாதி: மேக குன்மம், முன்னிசு, பின்னிசு, பீனிசம், சூலை வாதம், பயித்தியம், தலைவலி, பாண்டு, மார் நோவு, இவையெல்லாம் தீரும். சிவதை வேரைப் பாலில் சுத்தி செய்யவும்.

133. லோக மண்டூரம் சகல பாண்டு காமாலைக்கு

கிட்டம் பலம் 6

தூள் பண்ணி கரிசிலாங்கன்னிச் சாறுவிட்டு ஒரு சாமமரைத்து இப்படி மூன்றுநாள் அரைத்து 3 புடம் போட்டு நாகப்பட்டை சாறு விட்டு ஒருசாமம் அரைத்துப் புடம் போட்டு எடுத்துக் கொண்டு இரண்டு காசிடை தேனில் கொடுக்கவும். புளி தள்ளவும்.

134. பவுத்திரத்துக்கு மருந்து

அல்லி வேர் பட்டை
தென்னம் பருப்பு

இவை இரண்டும் மை போல் அரைத்து வில்லை தட்டி சிலதின் பேரில் வைத்து மேலே சில்லு வைத்து மூன்றுநாள் கட்டவும். கடும் பத்தியம்.

135. நஞ்சு தின்னவர்க்கு

முள்ளிலவம் பிசின்
வெந்நீரில் அரைத்துக் கொடுக்கவும்.

பாவட்டம் இலையை இடித்து காடியில்
கொடுக்கவும்.

குப்பைக் கீரை வேர் காடியில் அரைத்துக்
கொடுக்கவும்.

பருத்திக் கொட்டை இளம் பருப்புக் காடியில்
அரைத்துக் கொடுக்கவும்.

எலுமிச்சம் சாறு மஞ்சளும் காடியில் அரைத்துக்
கொடுக்கவும்.

136. கோரோசனை மாத்திரை சிறுபிள்ளைக்கு

கோரோசனை	வராகனெடை	3
திப்பிலி	,,	3
பச்சை வெற்றிலைக்காம்பு	,,	3

இவைகளை கல்வத்தில் போட்டு முலைப்பால் விட்டு அரைத்துப் பயறளவு உருண்டை செய்து கொண்டு முலைப்பாலில் பற்றுப் போடவும். கண் காய்ச்சல் மாந்தம் அச்சரம் இதுகள் போம்.

137. சகல நஞ்சு பாசாணம் தின்னவர்க்கு

பேய் பீர்க்குத் தூளாய் இடித்துத் தண்ணீரில் பிசைந்து கொடுக்கவும். நாயுருவி வேர் அரைத்துக் கொடுக்கவும். சிறுகீரைக் கசாயம் கொடுக்கவும்.

138. எரி குன்மத்துக்கு

வேலி பர்சி ஒரு குத்து

நிலைத் தண்ணீர் தெளித்து இடித்து அந்த சாற்றைப் பிழிந்து கொண்டு வெள்ளைச் சர்க்கரை பலம் 1/4 போட்டு 3 நாள் காலையில் கொடுக்கவும். புளி புகை தள்ளவும்.

139. மண்டை நோவுக்கு

வசம்பு, பூண்டு, கத்தூரி மஞ்சள், எருக்கம் பழுப்பு, எருக்கம் வேர்ப்பட்டை, நல்லெண்ணெயில் காய்ச்சி முழுகவும்.

140. சகல விசக்கடிக்குப் பெரு வியாதிக்கு

குப்பை மேனி இலை கொண்டுவந்து மிளகு 5, வெள்ளுள்ளித் திரி 5, சேர்த்து அரைத்து நித்தம் பாக்களவு தின்னவும். 10 நாள் தின்னவும்.

141. பித்த வாந்திக்கு

விளாம் இலை	நெற்பொறி
பேய்ப் புடல்	வில்வ வேர்
சீரகம்	ஏலம்

கசாயம் வைத்து தேன் சேர்த்துக் கொடுக்கவும்.

142. போசனம் ஆரோக்கியத்துக்கு

இஞ்சி, மிளகு, உப்பு கூட்டி அரைத்து எலுமிச்சம் புளியில் கொடுக்கவும். வெந்நீர் கொப்பளிக்கவும்.

143. வாயில் இரத்தம் விழுகிறதுக்கு

முசுமுசுக்கைச் சாறு

பசுவின் பாலில் கலந்து 3 நாள் கொடுக்கவும் அருகம் புல்லும் அரைத்துக் கழுநீரில் மூன்று நாள் கொடுக்கவும். புளி புகை ஆகாது.

144. மேக வெட்டைக்கு

அருகம் வேர் கணுத் தள்ளி ஒரு பிடி, மிளகு 25 ஒரு சட்டியில் போட்டு 4 படி தண்ணீர் விட்டு 4 ஐ ஒன்றாய்க் காய்ச்சி உழக்குக் கசாயத்தில் வெண்ணெய் போட்டுக் குடிக்கவும்.

145. வீரியம் உண்டாக

நிலப்பனைக் கிழங்கில் மயிராயிருக்கும் அந்தக் கிழங்குத் தாளை வராகனெடை 18 பழய நல்ல வெல்லம் வராகனெடை 18 இது இரண்டையும் ஒன்றாயிடித்து நேர் பலம் 1, பசுவின் பாலில் கொடுக்கவும்.

146. மாரெரிவுக்குப் பித்த வெட்டைக்கு

காட்டு இலவம்பட்டை, நீராகாரத்தில் இடித்துக் கொடுக்கவும். மணத்தக்காளி சமூலம் இடித்துத் தூள் பலம் 3, பால்படி 2, சட்டியில் காய்ச்சி சூரணம் போட்டுக் கிளறி நெய், தேன், சர்க்கரை போட்டு லேகியம் செய்து வேளைக்குக் கச்சக்காய் அளவு கொள்ளவும்.

147. அப்பிரக பற்பம்-சலக்கழிச்சலுக்கு

அப்பிரக தகடு இதழாகி எடுத்து ஒரு சட்டியில் பரப்பி அதன்மேல் உப்பு தூவி இப்படி அடுக்கு அடுக்காக வைத்து உப்புத் தூவி மேல்சட்டி மூடி சீலை செய்து புடம் போட பற்பமாகும்.

கொத்தமல்லி, சீரகம் பொடிசெய்து சர்க்கரையும் கூடக் கலந்து பற்பம் கொடுக்கவும்.

மேக வெட்டை, நீரிழிவு, மாந்தம் தீர 1/4 பணவிடை பற்பம் கொடுக்கவும். இது கிராணிக்கு ஒரு சட்டி நன்றாய் காயவைத்து 1/4 படி உப்பு வறுத்துப் போட்டு பற்பமாக வறுத்துக் கொட்டி போட்டு காட்டி விராட்டித் தூள் 1/4 பற்பமாக்கிக் கொட்டி போட்டு காடிப் பானை சோறு ஒரு பிடி பற்பமாக்கி கொட்டி போட்டு 1/4 படி தண்ணீர் விட்டு ஒரு உழக்கு தண்ணீர் கொடுக்கவும்.

பேதி கட்டும். 5 பொழுது கொடுக்கவும்.

148. பித்த வாதக் கழிச்சலுக்கு

நில விளா இலையும் நெற் பொரி, சுக்கும், கசாயம் வைத்துக் கொடுக்கவும். கரிசிலாங்கன்னியைச் சட்டியைக் காயவைத்துப் பற்பம் செய்து 1/2 படி தண்ணீர் விட்டுக்

காய்ச்சி குறுகினவுடனே அரைக்கால்படி கசாயம் 3 நாள் கொடுக்கவும்.70. பித்தவெட்டையின் பேரில் கண் எரிச்சல் பொன்னாங்காணிச் சாறு சிறுகீரைச் சாறு இரண்டும் சரி சமமாகச் சாறுபிழிந்து நல்லெண்ணெய் விட்டுச் சூரிய புடம் வைத்துப் பத்து முழுக்கு முழுகவும்.

149. கிராணி

ஒரு எலுமிச்சம்பழம், நாலு பிளப்பாய் பிளந்து சாதிக்காய் 1, 4 –ஐ வெட்டி பிளந்து எலுமிச்சங்காய்க்குள்ளே வைத்து நூலாலே கட்டி நீர் வத்த ஊற வைத்து உணர்ந்த உடனே எடுத்து சாதிக்காய் பிளப்பு நாலும் நாலு வேளைக்குக் கொடுக்கவும். புளி தவிர்க்கவும்.

150. பித்த காரகத்தினாலே தீபனமில்லாதுக்கு

கரிசலாங்கன்னிச் சமூலம், மிளகு வெள்ளைப் பூண்டு கூட்டி அரைத்து சுண்டைக்காய் மாதிரி உண்டை செய்து ஐந்து நாள் இரண்டு வேளையும் தின்னவும். அறுபது நாழிகையில் சற்றே சுடவைத்துச் சாற்றில் சாப்பிடவும்.

151. அண்ட பற்பம் தலை வியாதி சுரத்துக்கு

அண்டம் ஓடு 8, 10, எறு முட்டையில் புடம் வைத்து இரண்டு ஆறா ரெண்டு முறாமெடுத்து விசரி கறுகாமல் வெள்ளையம் கல்வத்தில் அரைத்துச் சிமிழில் வைத்துக் கொண்டு சன்னிசுரம் வாதசுரம் இதுக்கு முருங்கைப் பட்டைச் சாற்றில் பணவிடை கொடுக்கவும்.

இருமலுக்குத் தேனில் கொடுக்கவும். சிலேத்தும சரீரத்துக்கு வெண்ணையில் கொடுக்கவும்.

சயத்துக்கு : முள்ளிப் பழம் விசையில் வறுத்துப் பொடி செய்து தேன்விட்டு லேகியம் செய்து கொடுக்கவும். (பற்பம் கலந்து) கழிச்சலுக்குற் வெண்ணையில் கொடுக்கவும்.

நேத்திர வியாதிக்கு பூவந்தித் தோலும், குங்குமப் பூவும் அரைத்து முலைப்பாலில் நசியம் விடவும்.

வாய் அரோசிகத்துக்கு

நிலவிளாவிரையும் அரிசியில் தீட்டிக் கஞ்சி பண்ணிக் குடிக்கவும். ஆறியும் அது படி பற்பம் பண்ணி விட்டு 1/4 படியாகக் கொள்ளவும்.

152. வாதம், குன்மத்துக்கு பேதி

வெள்ளை நாபி பலம் 1, ஒரு படி பாலில் சுத்தி செய்து கொள்ளவும் வாளம் பலம் 1/2 பலம் சுத்தி செய்து. மிளகு பலம் 1/2, இது மூன்று பால்விட்டு அரைத்து ஒரு சாமம் மிளகு பிரமாணம் உண்டை செய்து தேனில் கொடுக்கவும். பேதி யாகும். தயிர் மோர் போட்டு சாப்பிடவும்.

ராத்திரிக்கு சுக்குக் கசாயம் போட்டுக் கொடுக்கவும்.

153. கலைமான் கொம்பு பற்பம்

கலைமான் கொம்பு உளியாலே, பிளந்து பசும் பாலில் 90 நாழிகை ஊற வைத்து சாணுயரம் முட்டை அடுக்கி அதின் மேல் வைத்து மேலும் ஒரு முட்டை அடுக்கி புடம் வைத்து ஆறின பிறகு எடுத்து அகத்திச் சாறு விட்டு அரைத்து வில்லை தட்டி உணர்த்தி சீலை மண் செய்து முழுப்புடம் போடவும். இப்படி மூன்று தரம் அரைத்து மூன்று தரம் புடம் போட்டு இந்தப் பற்பம் 1/4 பணிவிடை

மேகத்துக்குக் கொடுக்கவும். துளசிச் சாற்றில் கொடுத்தால் அதிகம் வெள்ளை கண்டால் நுணா இலைச்சாற்றில் கொடுக்கவும். அதன் சாறு படி 1/2, நல்லெண்ணெய் படி 1/2, கலந்து பற்பம் வராகனெடை 1/4 கொடுக்கவும். பத்தியம்.

பித்த சுரத்துக்கு துளசிச் சாறு, சுக்குக் கசாயம்

இருமலுக்கு சீந்தில் தண்டு, சித்தரத்தை, கடுக்காய், சிறுகீரை வேர், பீர்க்கு, விட்ணு கிரந்தி, இவை 1/4 வராகனெடை கசாயம் வைத்து இந்தப் பற்பம் 5 பணவிடை சேர்த்தக் கொடுக்கவும்.

கிராணிக்குச் சுக்குக் கசாயம். மிளகுக் கசாயம், இவைகளில் நைத்து, பணவிடை கொடுக்கவும். எலுமிச்சங்காய் சாதிக்காயைப் புடம் வைத்துக் கொடுக்கவும்.

குருவே துணை

பெரிய அட்டவணைச்சுவடி - செய்யுள் பகுதி

நோயியல் – நாடியால் அறிதல்

ஒட்டியதோர் வாத நாடி
உதித்திடும் பித்தத் தோடே
முட்டியே நடக்கு மாகில்
முகிழ்ந்திடும் பிணியே கேளீர்
அட்டியாம் கால் ரெண்டும்
அசைந்திடும் உளவுண்டாகும்
கொட்டிய பித்த வாதம்
கொதித்திடுந் திரேகந்தானே.

மின்னிய வாத நாடி
மிகுந்திடும் பித்தத் தோடே
மின்னிய நரம்பு ரெண்டும்
பின்னியது போலே, தோன்றில்
சென்னியில் திமித்து நிற்கும்
சரீரமும் தளர்ந்து வாடும்
அன்னிய கால்கள் ரெண்டும்
அசைந்திடும் இவற்றை யாமே. 1

பற்றிடும் வாத நாடி
பகிர்ந்திடும் பித்தத்தோடே
சுற்றியே இடது பக்கம்
சூழந்தங்கே பாங்கு மாகில்
நெற்றியும் பிடிக்க எண்ணும்
நெருப்பெனச் சூடுண் டாகும்
சித்தியா யிரும லுண்டாம்
குறுத்து விலா, சித்தீரத் ஊடே. 2

அங்கிடும் வாத நாடி
அடித்திடும் பித்தத் தோடே
தூங்கியே அட்டை போலே
கூனியே நிமிர்ந்து வாங்கில்
அங்கிடும் வலது பக்கம்
உதிர மேல் சகுணம்
பங்கிடும் வாத பித்தம்
பறந்தே லழுத்துந் தானே. 3

துடியிடை வாத நாடி
துயர்ந்திடும் பித்தத் தோடே
வெடிபுறம் சுண்டு மாகில்
மிகுந்த சிலேத்தும மேயாகு
திடியிற ....மெல்லாம்
தினவுண்டாங் கண்ணுங் காந்தும்
வடியொரு வருச மொன்றில்
மாய்த்திடும் வன்மை தானே. 4.

நாடியே துயர்ந்த நாடி
நயந்திடும் பித்தத் தோடே
ஆடியே அன்னம் போலாயி
அமந்தமந் தோடு மாகில்
நீடியச் சுரமும் உண்டு
நித்திரை தான்வாராது
கூடியே திரைக்கு மெல்லாம்
கொண்டிடும் பகரந் தானே. 5.

தழுவிய வாத நாடி
தளர்ந்திடும் பித்தத் தோடே
குழிநரி ஆமை போலே
கூனியே நடக்கு மாகில்

ஒழிவில்லா மலத்தைப் போக்கும்
ஒக்கவே சலத்தைச் சேர்க்கும்
பழுதில்லா தண்டு யோடே
பக்கத்தில் பொலி யாகும். 6.

செனித்திடும் வாத நாடி
சிலேத்துமம் பித்தத் தோடே
சுழித்தென நடுவே யோடில்
தூக்கமும் அசதி யுண்டாம்
கருத்திடு வலது பக்கம்
கண்களில் மாலை தோன்றும்
கழுத்துக்குக் கீழாகிக் கட்டி
கண்டநீ ராம்பல் தானே. 7

பிரித்திடும் வாத நாடி
பின்னிடும் பித்தத் தோடே
தடுத்திடும் தொந்தமாகில்
தோன்றிடும் பிணியே கேளீர்
சிரித்திடுங் கிழிக்குஞ் சீலை பார்க்கும்
... ...
பறித்திடும் முழுது நெஞ்சும்
பத்து நாள் சாவு தானே. 8.

ஓட்டிய வாத நாடி
ஒட்டிய பித்தத் தோடே
கூடியே நிற்கு மாகில்
குளிர்ந்துமேல் சத்தி யுண்டாம்
நாடியே வேர்வை யுண்டாம்
நயத்திடும் கண் மூடும்
பாடியே வாய்நீ ரூரும்
பயித்தியச் சின்னந் தானே. 9

குறுகிய வாத நாடிக்
கொண்டிடும் பித்தத் தோடே
வெருஇயே இடத்தே வாங்கி
நெடுவெடுத் தோடு கொட்டும்
உருக்கியே ஐய்ய மோடு
ஏறிடுட்டுப் பார்க்கும்
எடுத்திடு முகவாத சன்னி
தீராது சாவு தானே. 10

ஊக்கிய வாத நாடி
உகந்துசந் தோடு மாகில்
ஏக்கமும் மூச்சு முண்டாம்
ஏகமாய் நரம்பு கூடும்
மூக்கணாங் கயிறு போலே
முன்பின்னி முத்து வாங்கும்
தாக்கிய மருந்து சொல்லும்
தனிவாத சன்னி தானே. 11

பழுதில்லா வாத நாடி
பாய்ந்திடும் பித்தத் தோடே
தளிரில்லாக் காகம் போலே
குதிகுதித் தோடு மாகில்
விழுதில்லா வாத நாடி
மேனியிற் பரந்து நிற்கும்
முழுதில்லாக் கால்கை தேகம்
முடக்கிடும் வாய்வு தானே. 12

தாரிச வாத நாடி
தண்ணீர் போலே குளிர்ந்து வாங்கில்
நேரிசம் போலே கால்கை
நிறுத்தியே மறுத்துக் காணும்

சேரிகை இழுத்தற் தோறு
தோள்பிடித்திடும் திகையா நிற்கும்
சூரியன் உதிக்கு முன்னே
தொடர்மொழி ஊத்துண் டாகும்
பாரிசப் பக்க வாதம்
அவையெனப் பகர்வார் மேலோர். 13

ஒருபிர சாரையே பற்றி
உன்னியி முத்து வாங்கி
உரைஉரு அண்ட வாய்வு
உரைக்கலாம் பின்னு கேளீர்
இருபுறம் இழுத்து வாங்கில்
யெலும்புமா ஆனந்த வாய்வு
அரையிது மேலே குத்தி
வலிக்குமாம் பச்சை வாதம். 14

சொல்லிய வாத நாடி
கருதியே பித்தத் தோடே
மெல்லவும் சடைக்கு மேலே
மேவியே நடக்கு மாகில்
கல்லென நெஞ்சின் கீழே
கடடிநீ றாம்பல் லண்டம்
அல்பகல் தன்னிற் கேட்க
அசனம் வாங்குந் தானே. 15

உன்னிய வாத நாடி
ஊமைபோல் பித்தத் தோடே
துன்னிரு குருந்தை போலே
தோண்டிகம் நடக்கு மாகில்

மின்னிய மேலும் காலும்
பவளம்போல் வெளரிக் காணும்
பின்னையும் இன்னம் னோயாம்
பேசலா மதற்குந் தானே. 16

சீரிய வாத நாடி
சிலேத்துமத் தோடே யோடி
ஊறிடு வாய்நீர் பித்தம்
உடம்பினில் சுரமே காணும்
எட்டிய சிரசுங் கண்ணும்
இடித்திடுங் கொட்டாவி யாகும்
முண்டியே இடது சந்தில்
விளங்குவிப் புருது தானே. 17

இனித்திடும் வாத நாடி
கூட்டிடும் பித்தத் தோடே
சனித்திடு தவளைப் போலே
வேர்வையே முகத்தில் தோன்றும்
அனித்திமு இரும லுண்டாம்
மருந்திடுங் குணங்கள் தானே. 18

கட்டிய வாத நாடிக்
கடந்திடும் நரம்பி னோடே
வெட்டன நடக்கு மாகில்
விளம்பிய சோத்தை மாத்து
சிட்டன இரும லுண்டாம்
சிலந்திடும் உடம்பு முத்தும்
முட்டியே மருந்து மருந்தும்
முன்றன வருஷந் தானே. 19

சித்திய வாத நாடி
சிலேத்பனத் தோடே ஓடில்
உத்தது வயிறு முற்றும்
உலைவுடன் வலியு முண்டாம்
முத்தமு மிகுந்து வாய்நீர்
பெருந்திடும் சோர்வு ஏகும்
சத்தியில் குன்ம மென்று
திரு மூலர் உரைக்கின் றாரே. 20

நலியது வாத நாடி
நகர்ந்திடும் பித்தத் தப்பிக்
குலியது போலே சென்றுப்
பெருத்திடப் பாயு மாகில்
ஒலியது போலே சுத்தி
துகந்துமே பூளிச்ச நாளும்
வலியது குன்ம மென்று
வால் மீகர் வகுத்த வாறு. 21

உயர்த்திய வாத நாடித்
தனிமையில் நடக்கு மாகில்
வயிற்றிலே பொருமும் வாய்வும்
மனத்திலே எரிவு முண்டாம்
சயித்திய மிகுதி உண்டாம்
சரக்கும் வலியும் மட்டும்
பயித்திய மெட்டு மென்று
பலமுனி உரைத் தவாரே. 22

மிஞ்சிய வாத நாடி
இலங்கிய பித்தத் தோடே
பஞ்சிடு கோலே போலே
பக்கத்தில் நடக்கு மாகில்

நஞ்சிடு வயிற்றுள் ரோகம்
நாளிலே எதிரி காணும்
மஞ்சள் காமாலை என்று
வகுத்தனன் வான்மீகர் தானே. 23

பேசிய வாத நாடி
பித்தசிலேற்பனத் தப்பி
நீதியாய் கொக்கு போலே
நின்றசை யாதே நிற்கில்
கோதியென வீங்கும் வாடும்
தோ...விலி ருக்கும்
ஊதுகா மாலை யென்று
உரைத்தனர் வான்மீகர் தானே. 24

குதித்திடும் வாத நாடி
குன்றிடும் பித்த மே
ஏத்தியே நடக்கு மாகில்
சரீரமும் வற்றிக் காணும்
மெத்தவே வாய்நீ ரூறும்
மேனியே வெளுத்துக் காணும்
பித்தமே பாண்டு ரோகமென்று
பேசும்வான் மீகர் தானே. 25

சூதனி வாத நாடி
சுத்தியே பித்தத் தோடேல்
நீறணி ஒருநாளைப் போலே
நிமிந்தமந்தத் தோடு மானால்
ஊரிலே வாடும் கண்ணும்
உதிரமும் வற்றிப் போகும்
வாத பாண்டு ரோக மென்று
வகுத்தவான் மீகர் தானே. 26

பருதிய வாத நாடி
பகுந்திடும் பித்தத் தோடே
சுருதி கொண்டு முக்கு மாகில்
தோன்றிடும் வகையே கேளீர்
குருதியே சாய்க்கும் வாயால்
கொண்டடு விசமே நோக்கி
உதிர மண் டலினங் கம்ரெண்டு
உரைத்தவால் மீகர் தானே. 27

படையுரு வாத நாடி
பகுந்துநோய்க் கிடையே யோடில்
தடையற வீங்குங் கைகால்
தனித்தனி எலும்பு நைய்யும்
உடலசந்து மயக்க முண்டாம்
உடம்பெல்லாந் தினவு தின்னும்
புடையெனசில் விசங்க ளென்று
பேசலா மிகுந்து தானே. 28

முந்திய வாத நாடி
முடிகியே சிலேற்பனத் தோடே
மந்திபோல் குதிக்க மாகில்
வந்திடும் வகையே கேளீர்
உந்தியி லிரும லுண்டாம்
உடம்பெலாம் வற்றிக் காணும்
மந்தார காச மென்று
வகுத்தார்வால் மீகர் தானே. 29

உச்சிய வாத நாடி
ஓடிய பித்தத் தோடே
பச்சை பாம்பு போலே நின்றால்
படுத்திடும் பாடே கேளீர்

மெச்சிய பாங்கு போலே
　　மேலெல்லாந் தினவு தின்னும்
நச்சியது தீண்டித் தென்று
　　நன்முனி அருளினாரே. 30

இலங்கிய வாத நாடி
　　இலங்கிடும் பித்தத் தோடே
குலவுமுக் குருசம் போலே
　　குதிகொண்டே போகு மாகில்
தலையது நடுக்கும் வீங்கும்
　　தயங்கியே மயக்க முண்டாம்
பலயெள விசங்க ளென்று
　　பாடினார் முனிவர் தாமே. 31

மயமுரு வாத நாடி
　　வணங்கியே பித்தத் தோடே
குய மது குளிந்து நாடி
　　குறித்துனோய் வகையே கேளீர்
வியமது ரோகம் வற்றி
　　மிகுந்திடு மிரும லுண்டாம்
நயமது காலுங் கையும்
　　நாளிலே உளவுண் டாகும்
சயமிது வென்று தாமே.
　　.... ,,,, ,,,, ,,,, 32

பிறையது போலே கூனிப்
　　பின்னிட்டு வாங்கு மாகில்
குறைவிலாச் சலமே வீழும்
　　கொடிஇனிப் பின்னுண் டாகும்
பிரமிய மென்று தானும்
　　பேசலா மிதுக்குத் தானே. 33

நன்னிய வாத நாடி
நயந்திடும் பித்தஞ் சேர்ந்து
மண்ணுளி பாம்பு போலே
வளைவில்லா தமந்து வாங்கில்
தண்ணியும் மோரும் போலே
சலமது வறண்டு வீழும்
எண்ணிய புண்ணாங் கானால்
எலும்புருக்கி யெண்ண லாமே. 34

இதையினு வாத நாடி
எழும்பியே பித்தத் தோடே
அசைந்தசைந் தோடு மாகில்
அன்பற உடலும் வற்றி
அசந்திடுங் காலுங் கையும்
உறாதியே கருத்துக் காயும்
கசமிது யென்று சொல்லிக்
காட்டினாற் முனிவர் தாமே. 35

அருந்தியே வாத நாடி
அடுத்தியசி லேற்பத்தி னூடே
பொருந்தியே ஒன்று போலே
பூனைபோல் நடக்கு மாகில்
திருந்திய காலும் மேலுஞ்
சிரசுமே யுள்ள மன்றே
கிரந்தியின் குடோர மென்றே
கிருபையால் வைக்கு மாறே. 36

கலையில்லா வாத நாடிக்
காடிபோல் கவிழ்ந்து வாங்கி
நிலையில்லா சிரசி னுள்ளே
செனிக்கிற வாய்வுண் டாகும்

உலையில்லா தீமைக்குங் கண்ணுள்
உற்றிருந் தோடும் புண்ணும்
தலையானக் கைகால் வாய்வு
பித்தமு மெண்ணு லாமே. 37

தாளிசை வாத நாடி
தனித்தனி நடுவே யோடில்
தாளிசை மண்டைக் குள்ளே
சலமூட மூளும் புண்ணாம்
ஊனிசை வற்றும் போது
உள் சிறாய் மூக்கால் வீழும்
பீனிச மென்று தானும்
பேசலா மதற்குத் தானே. 38

வினிட்ட வாத நாடி
வெஞ்சினர் தோடி யானால்
அதனிட்ட உடலி லூடே
அமைந்திடு தின்ன மதாம்
அதனிட்ட காமம் வத்தி
வேண்டுனச் செய்யா னென்பார்
பதினெட்டுக் குட்ட மான
பதிவெல்லா மிதுக்குள் தானே. 39

அரிய வாத நாடி
அணிப்பிள்ளை போலே கூனி
கனிதுபோல நின்றால் அப்போ
கதித்திடும் திரேகம் வீங்கும்
உதிரமூ நீருங் கூடில்
உறவுசேர் சயத்தில் நிற்கும்
பெருவயி றக்கம கோதரம்
பேசலா மிதுக்குந் தானே. 40

முந்திய வாத நாடி
தவிலடி போலே யோடில்
வெந்திடும் உடம்புங் கையும்
விளயன் பச்சைத் தோன்றும்
உந்தியி லிரும லுண்டாம்
உளமனிற் தொன்று வேண்டாம்
செந்திரு வானை சொன்னோம்
சீக்கிரம் சாவு தானே. 41

நீதியாய் வாத நாடி
நெளிந்துமுன் நிறுத்து வாங்கில்
பாதியாய் பாம்பு வேர்க்கும்
பல்லடி கருப்புண் டாகும்
சோதியும் பிளவை யுண்டா
பின்முட்டி கறக்க முண்டாம்
ஆதிமா லீச னாணை
அஞ்சுநாள் சாவு தானே. 42

தருவது வாத நாடி
தண்ணீபோல் கரந்து வாங்கில்
இருவகை நாடி ரெண்டும்
தழுவியே சூடு கண்டால்
பரபர வென்று பார்க்கும்
பஞ்சிடுங் கண்கள் ரெண்டும்
பெருவிரல் விதத்தில் பித்தம்
பிரித்திடு சாவு தானே. 43

காலொடு வாத நாடி
கட்டெடும் இருக்கை யினால்
பாவொடு ரெண்டு நாடி
பக்கமே மறைந்து நிற்கும்

தாகமே யெடுக்கும் நெஞ்சில்
தனித்ததை அடைந்து நீக்கும்
தேவற கான சொன்னோம்
சென்றநாள் சாவு தானே. 44

வணங்கிய வாத நாடி
வாளந்தை போலே ஊர்ந்தால்
பிணங்கியே இண்டு நாடி
எழும்பியே அடங்கி நின்றால்
பிணங்கிய மத்த சிலேத்துமம்
பின்னது நெஞ்சில் நிற்கில்
மணங்களும் மருந்து வேண்டாம்
மற்றநாள் சாவு தானே. 46.

முற்ற குருவே துணை

முற்றும்.

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

பூரணமா மாதாரன தன்னில் நின்ற
புரியட்ட திசை வாய்வின் பேர்தான் கேளு
வரமாம் பிராணனோடு அபானன் தானம்
மகற்றா தன்னுடன் சமானன் வியானன்
காரணமாம் நாகனொக கூர்மன் றாறும்
கனமான கிரிகாணுந் தேவ தத்தன்
ஆரணமாம் தன்னாலே யனுமத்து னைச்சு
அப்பனே வசவையினின் றையு ளேனே.

அரையிரே னிடை பின்னுஞ் சுழினை யாகி
அப்பனே காந்தாரி யத்தி போடு
இரையிரேன் சுவனியும் அலம்புருடன் றானும்
இன்பமுள்ள சதிர்முகனே தோத்தி ரந்தான்

நிரையுரேன் தொக்குவேர் சாச்சு ரெண்டும்
நேர்மையுள்ள சிங்குவையு மாக்கிராணம் பத்து
முறையுடனே இதையறிந்து நீலிதானங் கண்டு
மூர்க்கமுள்ள குருநாடி அஞ்சும்நீதான் கேளே.

அஞ்சாகிப் பத்துமாகித் திசை நாடிக்கும்
அப்பனே ரவிமதியும் நெருப்பு மாடு
மிஞ்சாத வாதபித்தம் சேற்பன மாகி
மிகாமல் மூன்றினிலே வியாதி யாகி
நெஞ்சாறக் காணுதற்கு வகையைக் கேளு
நேர்மையுள்ள தத்துவத்தை நினவாய்ப் பார்க்க
செஞ்சாரைப் போற் பாயும் நாடி தன்னை
திறமாகக் காணாதற்கு வகையைக் கேளே. 2

புருடருக்கு நாடிப் பார்க்க வலது கை

கேளப்பா புருடருக்கு வலது கையை
கிருபையுடன் தான்பிடித்து நெட்டி வாங்கி
சூளப்பா பெருவிரலே அங்குலத்திக் கப்பால்
சுகமாக மூவிரலே யழுத்திப் பாரு
வாளப்பா முதல்விரலோ வாத நாடி
வன்மையுடன் நடுவிரலோ பித்த நாடி
கேளப்பாக் கடைவிரல் சிலேத்தும நாடி
திறமாக நின்னறிவால் தெரிந்து காணே. 3

காணவே புருடனுக்கு வாத நாடி
கானகத்து மயில்போலு மன்னம் போலும்
தோணவே கோழிநடை நடக்குஞ் சொன்னேன்
துரியமென்ற பித்தத்தின் நாடி கேளு
எனவே ஆமையுட நடையைப் போலும்
என்மகனே அட்டையைப்போல் நடக்கும் பாரு
வேனவே சிலேத்துமந்தான் பாம்பு போலும்
வேன்பிடி தவளைபோல் குதியாம் பாரே. 4

பார்க்கவே பெண்களுக்கு இடது பக்கம்
பதிவாகப் பார்த்திடவே பார்க்கக் கேளு
காக்கவே வாதமது சர்ப்பம் போலாம்
கண்மணி பித்தமது தவளை போலாம்
சேர்க்கவே அய்யமென்று நாடி தானும்
சிறுநடையா யன்னம்போல் செனிப்பாய்க் காணும்
ஆரக்குமே தோணுமிந்த நாடி மூன்றும்
அனுதினமு மனதறிவா லறிந்து ஏகு. 5

தேரவே சந்திரனும் வாத நாடி
திறமான சூரியனும் பித்த நாடி
மீறவே அக்கினியும் சிலேத்தும நாடி
விளங்கவே வியாமைதில் அங்கி மீறும்
அமந்தன் சேர் ரவி மூன்றுங்
குணமான சூரியனும் குமரி யொடும்
மென்றவே திங்கள் புதன் வெள்ளி தானும்
இன்பமுள்ள சந்திரனும் யோகி தானே. 6

காணவே இரவியிலே வாத மோடில்
கனமான சளிஇரும லிளப்புண்டாகும்
நாணவே செவ்வாயில் வாத மோடில்
நன்மையாய் முறைச்சுர நான்குஞ் சொன்னோம்
தோணவே மந்தனிலே வாத மோடில்
துணிந்ததொரு புதன் முழுகு சன்னி யெய்தும்
வேணவே வியானமதில் வாத மோடில்
விலாவொடு உடம்பெல்லாம் வலியுண் டாமே.7

உண்டான திங்களிலே பித்த மீறில்
உத்தமனே சலதோச முடனே காணும்
பிண்டான புத்தியிலே பித்த மோடில்
பாரமுடன் நீரேத்தந் தலைக்குத் துண்டாம்

அன்பான வெள்ளியிலே பித்த மோடில்
அப்பனே கண்ணாவுங் காது னோயா
தண்டாமல் குருவினிலே பித்த மோடில்
தன்மையுடன் தாபசுரம் தலைனோக் காடே. 8

நோக்காட்டை அறிந்துரைக்கும் வயித்தி யற்கு
துள்ளரியாய்ச் சொல்லிவிட னென்னு தெல்லாம்
பாற்காட்டால் தெரியாது பழக்க மாகப்
பாத்தரிந்தோர் தனையடுத்துப் பதிவாய் கேளுக்
கேட்காட்டால் தெரியாது உலகத் துள்ளே
கிருபையுடன் மனதுறுதி யாக நீயும்
வாய்க்காட்டா லின்னூலில் வாய்க்கும் பாரு
வன்மையுள்ள குருநாடி வகையைப் பாரே. 9

பாரப்பா குருநாடி அஞ்சுக்கும் நடுவாய்
பாரி நிற்கும் வரலாறு தன்னைக் கேளு
சீறப்பாய் பித்தத்தில் நிற்குந்
திசைநாடிப் பத்துக்குத் தானாய் நிற்கும்
ஏரப்பா வாதமென்ற சொல் மூட
றயித்திரியங் கேப்பார் பரினில் வேறாய் நிற்கும்
தாரப்பா கொண்டகுரு நாடி நேர்மைத்
தனையறிய வகையுனக்கு சாற்று வேனே. 10

சாத்துரேன் பெருவிரல் பூத நாடி
சங்கையில்லா ஆழத்தூண்டி வாத மென்க
ஏத்தமுள்ள நடுவிரல்தான் பித்த மாகும்
மிகைந்ததொரு பௌத்ரமே அய்ய மாகும்
தோத்துகின்ற சிறுவிரல்தான் மரண நாடி
சுத்தமுள்ள குருநாடி யஞ்சுஞ் சேரு
மாத்துமே குருநாடி யஞ்சுஞ் சேர்த்து
வளர்த்துநிற்கும் பேர்பெரிய வண்ணம் தானே.11

ஏற்பரிய குருநாடி குணமே தன்னில்
புரண்டுவரும் வாதத்தி யட்டை போலே
சீறரிய வாய்வு மிகுவிருத்தி ரோமாகும்
சூறரிய பித்தத்தின் ஆமை போலே
தோன்றிடி லோர் ஞாரமிகுக்குங் சுழட்டும்
வாயநீர காற பெருகி
வருவது போல வேர்வை காட்டும்
கதித்திடு கில நீர்க் கட்டும்
காலசலத் தைப் போமே. 12

சிலேறபனத்தில் குருநாடி சிங்கம் போலே
சீறிநிற்கில் தினங்குணந்தான் சன்னி தோன்றும்
ஆற்பனத்தை ஊகுருவத் தவரு மாகில்
அசாத்தியமாம் மரணகுறி தப்பி தப்பி
இலாற்பனவே குருநாடி குன்னிப் போகில்
வயிறுகழியும் கடுப்பெடுக்குங் கைகால் வீங்கும்
மேற்பனவு மில்லையில்லை திட்டஞ் சொன்னேன்
இசைந்தகரு நாடிநிலை யிருத்திப் பாரே. 13

பாரப்பா குருநாடி பக்கம் பாயில
பாரித்த சிலேற்பனந்தான் குநீரே போதும்
கூரப்பா குருநாடி நேரே நிற்கில்
குத்தமில்லை வாதபித்த மிரண்டுஞ் சேரும்
நேரப்பா குருநாடி மின்னே வாங்கி
தப்பாது அசாத்தியங்கள் தானுண் டாகும்
காரப்பா உடலுயிரா யாக்கி நின்ற
கருவான குருநாடி ஒன்றுங் காணேன். 14

ஒன்றுக்கு எட்டாத நாடி நேர்மை
ஊடுருவி தானிருக்கு உண்மை கேளீர்
வண்டுகள்தான் மதுவருந்தும் நேர்மை போலே
வாதபித்த சிலேற்பனத்தில் மதுவை யுண்ணும்

என்றைக்கும் வாதபித்தம் நடுவே நிற்கும்
ஏறுவதும் குறைவதும் இல்லை யப்பா
கன்றுக்கும் பாலிரங்கும் பசுவைப் போலே
காத்திருக்கும் குருநாடி காலைப் பாரே. 15

குருநாடி நிலையறியாக் குருட ரெல்லாம்
கூட்டமிட்டுச் சாத்திரக் குவமை சொல்வார்
மறுநாடி வாதபித்த சிலேற்பன மூன்றில்
மதநீச மென்றிதையார் வார்த்தை சொல்வார்
குருநாடி யாய்க் காணும் கைமுறை
குருதொட்டுக் காட்டத் தோணும்
பரு நாடிச் சாத்திரத்தில் மயங்கி டாதே
புலத்தியனே குருநாடிப் பின்னல் பாரே. 16

பாரப்பா வாதபித்தம் நடுவில் பார்க்கில்
வண்டதுபோலே மதுவுண்ணு மீத்தி சத்தில்
போதப்பா மூவிரலும் உருவித் தாண்டி
பூரணமாய் மூலமுத லுருவிப் பாய்ந்து
சாத்தப்பா விசநரம்பு னூடே சேர்ந்து
சந்திரமண் டலமேவிசைச் சார்ந்து பின்னும்
நாத்தமுத்த குருநாடி எங்கு சுத்தி
நடுவில்வரும் நேர்மைதன்னை நாடிப் பாரே. 17

பம்பரம்போல் குருநாடி சீறுகிற என்று
பத்திநிற்கும் வாதபித்த நடுவி லேதான்
அம்பரம்போல் குமரியெழும் வாத பித்தம்
ஐமென்ற நாடிமுத லாடி யோடி
கம்பமென்ற மண்டலங்கள் மூன்றுஞ் சுத்தி
கத்திரிக்கோல் மாறலெனக் காட்டிச் சேர்த்து
தம்பமுடன் வாதபித்தம் நடுவி லேதான்
தமரகம்போ லாடிநிற்கும் குருவ தாமே. 18

குருநாடி வாதத்தில் நிற்கும் போது
கோழியுட னன்மையில் குறியா மென்ன
வருநாடிப் பித்தத்தில் நிற்கும் போது
வளமை அட்டையென வகுக்க லாமே
திருநாடி சிலேற்பனத்தில் நிற்கும் போது
தெரிந்துவிழும் விட்டிலைப்போல் தெரிந்து காணும்
பருநாடி சாத்திரத்தி லலைய வேண்டாம்
பிள்ளைகளே தனையறிந்து மரணம் பாரே. 19

மரணமது அறிவதற்குக் குறியே கேளு
வருவாதே விசை நரம்புங் குளிர்ந்து காணும்
இரண்டுமணற் பொறிகளெல்லாந் தளர்ந்து மெத்த
விசைநரம்பு தான்தளர்ந்து விரைந்து வாங்கி
நறநறயெனப் பல்கடித்து மணியும் நட்டு
நாவுலர்ந்து மூர்ச்சித்து நடுக்க முண்டாம்
திரணமெனும் வாதபித்த சிலேற்பன மெல்லாம்
சேர்த்தியம்பாற் விட்டிலைப்போல் துடிக்கில்
சாவாம். 20

துடிகொண்ட சிலேத்துமந்தான் வெள்ளம் போலும்
சுருசுருக்கா மடமடென ஓடு மாகில்
அடிகண்டு மற்றாநாள் மரண மாகும்
அப்பனே பித்தமது சீறி ஓடில்
முடிகொண்ட மூன்றாநாள் சாவாம் சொன்னேன்
முழுமையுமே வாதமது சிதறி யோடில்
இடிகண்ட எட்டாநாள் மரண மாமே
இன்பமுடன் கண்டறிந்து இடைஞ்சி நில்லே. 21

நில்லப்பா வாதபித்த மிரண்டுங் கூடி
நிலைதப்பிச் சிதறியது ஓடு மாகில்
கொல்லுமப்பாப் பதினஞ்சு நாளில் தானும்
குணமாக இதினுடனே ஐந்தும் கூடில்

வெல்லுமப்பா மண்டலத்தில் ஆக்கை பாழாம்
விதமாக மூன்றுமே ஒன்றாய்க் கூடி 22

அல்லப்பா அரணைவால்துடியே காண்கில்
அப்பனே அவர்பிழைப்பார் அறிந்து பாரே
பிழையாத வாதபித்த சிலேற்பனங் கூட
புரண்டுகருந் தேள்கொடுக்கும் போலே யாடி
உலையாத ஓடம்போ லோடு மாகில்
உத்தமனே திங்களிலே மரண மாவார்க்
குலையாத நாடியுடக் குறியைச் சொன்னார்
கூட்டலிட்டுக் குறிவெனவேப் பிரசங் கிப்பார்
விழியான கண்ணுஇரண்டும் தக்கல் காணும்
விதியறிந்தால் சனியனுமே விலகு வானே. 23

சன்னியெழும் போதுவந்து நாடி மூன்றும்
சாதகமாய்ச் சுழல்வண்டு தண்ணீர் மீதில்
உன்னியது படபடத்து ஓடுனாப்போல்
ஓடிநிற்கும் வாதபித்த சிலேற்பன மெல்லாம்
கன்னியது சாதகமாய் வருமே யாகில்
கதிப்பாகும் வாதபித்தம் பாம்பாம் போலே
பின்னியது விட்டிலைப்போல் தெரிந்து வீழில்
பேச்சில்லை மரணமென்றுத் தெரிந்துச்சொல்லே. 24

சொல்லப்பா வாயுக்கும் மந்தத் துக்கும்
துணையாக அமர்ந்துமே தனியா யோடும்
அல்லப்பா பசித் தற்குத் தங்கி யோடும்
அப்பனேசன் னிக்கி த்தப் பைம்புழுபோ லோடும்
நில்லப்பா வயிற்றுவலி கண்ட பேர்கு
நேராத உள்ளுவால் வாங்கி யோடும்
கல்லப்பா கிரந்தியென்ற நோய்த னக்கு
கரையுடைந்த அருவியைப்போல் காணுந்
தானே. 25

கரணத்தில் வாதமென்றால் சிலேற்பன வாதம்
காணுமடா சூலையென்றால் சேற்பன பித்தம்
விரணமுடன் புண்புரைக்கு வாத பித்தம்
விதியறியாப் பிணிதந்தான் பித்த சிலேற்பனம்
துரணமுடன் நீர்ப்பாடு சேற்ப்பா டானால்
சொல்லுகிறேன் நாடியெல்லாம் சுழன்று காணும்
கிரணமென்ற பாம்புவிசந் தாது வெல்லாம்
கதிகெட்டுக் காணுங் விகர்ப்ப மாமே. 26

கர்ப்பிணிக்கு வாதபித்தங் கலந்து காணும்
கிராணி அதிசார மென்றால் தழைந்து காணும்
உற்பவித்த சயமீளை காச ரோகம்
முத்திடியோ சிலேற்பனந்தான் மிகுதி காணும்
பிற்பிடித்த விசந்தீரும் சோகை பாண்டும்
பலமானால் குழகனைபோல் மீட்டும் பாரு
பிற்பிடித்த மேகமென்றால் பித்த மீறும்
பாலகனே காங்கைகொண்டு நீளும் பாரே. 27

நீர்மேக மானவர்க்கு நாடி தானும்
நின்னயமாய் நாடி யெல்லாம் நீங்குந் தானே
....

முத்துமே கருவெல்லா இனிமேல் சொல்வேன்
முடிந்ததொரு தண்டகத்தின் வரலா றெல்லாம்
அத்துமே நூறுக்குள் வாத ஞானம்
அப்பனே அதற்குமேல தற் கணங் கேளும்
கொத்துமே அஞ்சன வித்தை கேளு
கருவான பிண்ட வாய்களில் வர்த்து
மத்துமேச் சன்னியுடை தீட்டுச்சீலை
மைந்தனே திரிதிரிச்ச யகலில் போடே. 1

போட்டுமே தலைப்பிண்ட கபால மூடி
புகலான திலதத்தை யேத்திக் கொள்ளு
ஆட்டுமே திரிசாமம் எரித்திட் டாக்கால்
அப்பனே நெல்கனம்போல் அடையாய்ப் பத்தும்
நாட்டுமே மைதனைச் சுரண்டிக் கொண்டு
நலமான ஐங்கோலத் தயிலம் விட்டு
வாட்டுமே மத்தித்துச் சிமிழில் வைத்து
வளமான அஞ்சனா தேவினா யாமே. 2

ஆமென்ற தேவிக்குப் பூசை பண்ணி
அப்பனே அறிங்கிரிங் மறிங்கென் றேதான்
வாமென்ற லெச்சம் உருச் செய்து கொண்டு
வளமான தேவியைத்தான் உச்சரித்து
காமென்ற இடதுயில் தடவிக் கொண்டு
கண்மணியே கண்ணோட்டிப் பாரு பாரு
நாமென்ற மூன்றுலோகம் முந்தாந் தேத்தும்
நன்மையுள்ள பொருளெல்லா மெடுத்தக் கொள்ளே.3

கொள்ளவே பொருளெல்லா மெடுத்துக் கொள்ளு
குணமான என்மகனே உனக்கீ டில்லை
அள்ளவேக் குபேரனுந் தானக்கீ டில்லை
ஆச்சரியம் லட்சுமிதன் கடாட்ச மெய்தும்
வள்ளவே சகலகலை உன்கருவி லெய்தும்
வளமான அட்ட பாக்கியங்க ளெய்தும்
கள்ளவே நான்முகவன் கடாச்சம் செய்வான்
நல்மான காட்சியெய்தும் நன்மை தானே. 4

வசியமை

காணவே வசியமென்ற மையைக் கேளு
கண்மணியே கன்னியுட முதல்தூசை வாங்கி
ஆணவே திகைப்பூடை நடுவில் வைத்து
அப்பனே திரியாகத் திருத்திக் கொண்டு

மானவே அகல்தனிலே திரியைப் போட்டு
        மைந்தனே ஐங்கோலத் தயிலம் வார்த்து
வானவேட்டப் பால்லொடு மேலே மூடி
        வளமான தீபமதைக் கொளுத்திப் போடே. 5

போடவே சாமமது எரித்திட் டாக்கால்
        புகலான அடைபோலே பத்தும் பாரு
ஆடவே அம்மையைச் சுரண்டி கொண்டு
        அப்பனே புனுகுக் கத்தூரி போட்டு
ஆடவே மத்திச்சுச் சிமிழில் வைத்து
        நலமான தேவிமுன் வைத்துப் போட்டு
வாடவே பணவிடைதான் திலதம் போட்டு
        வளமான ஸ்த்ரீகள் உன்னைப் பணிவார் பாரே.6

பாரென்ற இன்னமொரு மையைக் கேளு
        பண்பான நெரிஞ்சிலுடன் பூனைக்காலி
ஆரென்ற மதுரமுடன் நாபி சூதம்
        அன்பான கந்தியிது சமனாய்ச் சேர்த்து
வாரென்ற கபாலத்தில் போட்டுக் கொண்டு
        வளமான அடுப்பேத்தித் தீயை மூட்டி
காரென்ற சரக்கெல்லாம் கருக்கிக் கொண்டு
        கண்மணியே கல்வத்தில் போட்டு மைந்தா. 7

மைந்தான பிண்டமதில் நெய்யை வார்த்து
        மைந்தனே ஆட்டயிலே மையாய்ப் போகும்
ஐந்தான புனுகுகத்தூரி வாசங் கட்டி
        அப்பனே கரிக்கொம்பு சிமிழில் வைத்து
வைந்தான தேவிக்குப் பூசை பண்ணி
        வளமான மையெடுத்துத் திலதம் போட்டு
கைந்தான ராசரண்டே செல்லு செல்லு
        கண்மணியே உனைஅழைத்துப் போற்று
                                        வாரே.8

வாரான ராசர் வறசரணஞ் செய்வார்
வாவையா வென்றுனக்கு வணங்கு வார் பார்
காரான வசியமடா கனகங் கோடி
காட்சியிது மோட்சமேய் துஞ்சுடுத்தி லெண்ணு
மாரான வசியத்தினா லெல்லா மாச்சு
மயக்கமிதி லுண்டாச்சு மாய்கை யாச்சு
நரவு ராசருக்கு குடுத்தா னானாய்
நன்மையுள்ள காரியத்தின் குருவா னாலே. 9

குருவான் யென்றூலில் தேறிக் கொண்டு
குணமான சாரணையைக் கேசரத்தில் பூட்டி
வருவான வாழவிக னாதி யென்று
வளமான உத்தியாய் தேச முண்டு
கருவான அவிடத்தில் வந்தா யானால்
காட்சியடா அம்மனிதர் நம்மிடத்தைச் சொல்லுவார்
மருவான நம்மிடத்தில் வந்தா யானால்
பரன்பே ரிட்டு வரங்க ளீய்வேன். 10

வரமான யெந்நூலில் தேறி னாற்கு
வரமான முத்தியுடன் மோட்ச மெய்தும்
கரமான அ.....வருமா யெந்நூல் கருவா மெந்நூல்
காட்சியிலே மோட்சமடாக் கருவா மெந்நூல்
விறமான வித்தில்லாப் பயிரு மில்லை
விளங்கியதோர் மண்ணில்லாத் தண்ணி யில்லை
அரமான சேடமில்லாச் சிவனில்லை
அரகரா அன்னமில்லா ஆத்துமா யில்லை. 11

யில்லான சகலசீவ னெடுத்த கூறு
இயல்வாக நடக்குமாறு நின்று தையா
கல்லான ஆண்பெண் ரெண்டில்லா விட்டால்
களமான உலகமில்லை பூமி யில்லை

புல்லான வானமில்லை பூமி யில்லை
விளங்கியதோர் வித்துவுடன் நிலமில் லாட்டில்
மல்லான பாடிநரக மதுபோ லாகும்
மகத்தானத் தீவினை யோடொக்கச் சேரு. 12

சேரான நிலமிருந்து விதையில் லாட்டால்
செயமில்லை வன்மையில்லை ஒன்று மில்லை
வாரான ஒன்றிருக்கு ஒன்று விடலாகா
வளமான ஆணிருந்தால் பெண்ணிருக்க
வேணும்
காரான சிவமயத்தான் சக்திக் கூறு
கண்மணியே சத்தியம் சிவத்தின் கூறு
வேரான விலையில்லா மாணிக்க விந்து
விளனாலே மைந்தா வளமான பொய்க்கூது
களவுண்டாச்சு
கயமான தேகமதுக் கழிவுண் டாச்சு
கசமான திரேகமதுக் களம்போ லாச்சு
நயமான பரவனணணிய மிரண்டுண் டாச்சு
நணிபாக இரப்பது யுமிதுனா லாச்சே. 13

மூடர் செய்யு வகை வாடை

ஆச்சென்ற மூடரவற் செய்யும் மார்க்கம்
அசடானக் குழிதனிலே விழுந்த லைந்து
காட்சென்ற காட்சியிது மோட்ச மென்பார்
கசடர்செய்யும் ஊக்கமதில் கண்கோ யில்லை
வாச்சென்ற ஞானத்தோர் சுமைனைத்தான் போக்கி
வளமான காமத்தால் வைய்யகத்தா னாச்சு
மரச்சென மாண்பறுக்கு மயக்கத் தாலே
மாண்வற வர் புத்திகெட்டு மயங்கு வாரே. 14

வார் பெறுஞ் சிமையம்
வாழ்க்கை யதுனாலேதான்
கார் பெருகும் வையகம்
கணத்த தொரு நாடதில்
நார்பெருகு ந்நதிய வர
னால் துரையும் கண்டவர்
மால் பெருகு மன்பவருக்கு
மகிழ்ந்து ரைத்த நூலிதே. 15

நூலான ஆடையொன்று சொல்லக் கேளு
நுணுக்கமடா ஆரறிவார் நுண்மை தன்னை
வாலான வால்நீண்டான பிச்சு வாங்கி
வளமான இந்திரகோபம் நான்பிந்தும் வாங்கு
சாலான வெட்டுண்ட குமரன் பித்து
சமத்தான கன்னியுட னாதங் கூட்டு
காலான யிதுவைந்தும் நிழலு லர்த்தி
கண்மணியே விராகனெடைச் சமனாய்ச்
சேரே. 16

சேருகின்ற வெட்டிவேர் விலாமிச் சோடுச்
செயமான கத்தூரி புனுகு சட்டம்
ஆறுகின்ற தேவதாரம் சவ்வாது கூட்டு
ஆச்சரிய மனைவணங்கிப் பிச்சுங் கூட்டு
நேரான சிறியாநங்கை பெரியா நங்கை
மாறுகின்ற மதிமயக்கிப் பூடுஞ் சேரு
.. ..
மகத்தான யிது வெல்லாம் ரவியு லத்தே. 17

உலத்தவே யிதுவெல்லாஞ் சமனாய்க் கூட்டி
உத்தமனேப் பிடித்திதனை யிடித்துக் கொண்டு
கலத்தவே புதுக்கலையந் தன்னில் போட்டு
களங்கமற மறுபடியும் வாசங் கட்டி

வலத்தவே தேவிமுன் வைத்துக் கொண்டு
வாக....ற னாதியென்ற தேவி தன்னை
மலத்தவே மனதிலெண்ணி பூசை பண்ணு
மகத்தான தேவியுட மகிமை தானே. 18

காணவே வாரைதனை சிமிழில் வைத்துக்
கண்மணியே தேவிதன்னைத் தோத்திரம் பண்ணி
வாணவே கன்னிகைகள் மீதில் வீசு
வளமாக மதிமயங்கி மோகங் கொண்டு
மாணவே உன்பின்னே வருவாள் கோடி
மைந்தனே வாடையிது மகிமை மெத்த
ஆனவே ஆச்சரியம் வாடைச் சித்து
அரகரா சீரை அறிந்து கொள்ளே. 19

கொள்ளென்ற யீடுதனைச் செல்லக் கேளு
குருவான யீடுதனை யார்தான் காண்பார்
வள்ளென்ற கைட னாதம் வாங்கி
வளமான ஐயங் கோலத் தயிலம் சேர்த்து
மள்ளென்ற ஐயங்காயங் கூடக் கூட்டி
மத்தித்துப் பாக்கதிலே ஊறப் போட்டு
அள்ளென்றே ஸ்ரீகளுக்கு ஒருபாக் கீந்தால்
அன்றதமது வந்தாற்போல் மயங்கிப் போவார். 20

வசியம்

வாரான அவரவர் தன்கருக சேத்தீ
யவன்மயக்க மயங்கிடுவா ர்உலக மெல்லாம்
கூறான வசியமடா கனக மீய்வார்
கைகண்ட யிருசித்துக் கண்டு கொள்ளே
ஆறான யினமறிந்து மாட்டு மாட்டு
ஆச்சரிய மாட்டிவோர் அகத்தை மைந்தா
மாறான மாய்கையிது வசிய மெல்லாம்
மாண்பருக்குத் திரைச் சாட்டும் கீழ்ந்துபாரே. 21

154. சன்னிக்கு மாத்திரை-மருந்து செய்முறை

பாரென்ற சன்னிக்கு மாத்திரைதான் கேளு
பண்பான இரதமுடன் கந்தியுடன் லிங்கம்
நாரென்ற நாபியுடன் தார சிங்கி
நலமான வெட்பால வரிசி சேரு
காரென்ற சரக்கெல்லாஞ் சுத்தி செய்து
கண்மணியே வகைக்குஒரு வராகனெடை
கொண்டு
வாரென்ற தயிலமதில் போட்டுக் கொண்டு
வளமானப் படிச்சாத்தால் சாம மாமே. 22

ஆமென்ற முலைப்பாலால் பயன்போல் மைந்தா
நாமென்ற உருண்டையதப் பாய் செய்து கொண்டு
நலமான ரவிதனிலே உலரப் போட்டு
நாமென்ற செப்புதனில் பதனம் பண்ணி
கண்மணியே தேவிமுன் வைத்துப் போற்றே.
.... 23

போந்தென்ற மாத்திரையைத் தேனில் கொள்ளப்
பேறான சன்னிபதி னெட்டில் போகும்
ஆற்தென்ற முலைப்பாலில் கொடுத்து விட்டால்
அசடாநீ சுரமறு பத்தி னாலும்
வாற்தென்ற வழிகாணா தோடிப் போகும்
வளமான நோயெல்லாம் வழிகேட் டோடும்
மாற்றென்ற மாத்திரைக ளிதுக்கீ டில்லை
மகத்தான மாத்திரையை மருவிச் செய்யே. 24

155. இரணத்துக்கு மாத்திரை

செய்யான சூலைரணம் கிரந்தி போகச்
செயலான மாத்திரைதான் ஒன்று சொல்வேன்
அய்யான கிரந்தமுடன் ரசசெந் தூரம்
அப்பனே பூரமுடன் லிங்கங் கந்தி

வாய்ப்பான திதுவெல்லாஞ் சுத்தி பண்ணி
வளமான வகைக்கு ஒருவராகன் கொண்டு
கைப்பான கலயத்தில் போட்டுக் கொண்டு
கண்மணியே சுத்தசலந் தன்னா லிட்டே. 25

ஆட்டவே கரியுப்புப் பரங்கிச் சக்கை
அன்பான கருஞ்சீரகந் தாளகந்தான் கூட்டு
நாட்டவே கல்வத்தில் போட்டுக் கொண்டு
நயமான புங்கன்பால் தன்னா லாட்டு
மாட்டவே கையாஞ் சார் தன்னாலாட்டு
மகத்தானக் குமரிப்பால் தன்னாலாட்டு
காட்டவே மெழுகுபதம் தன்னைப் பார்த்து
கண்மணியே குண்டுமணி போலுண்டை
செய்யே.26

செய்யவே நிழல்தனிலே உலத்திக் கொண்டு
செயமான பரணிதனி லடைத்துக் கொண்டு
அய்யவே யிருஉண்டை யிருபோ துண்டால்
ஆக்கைதனில் சூலைபதி னெட்டும் போகும்
வைய்யவே கிரந்தியேழும் கதிகெட் டோடும்
வளமான புண்புரைகள் சிலைக ளெல்லாம்
அய்யனே மடிந்துவிடும் வியாதி யெல்லாம்
மகத்தான நோயெல்லாம் மடிந்து போகும். 27

போமப்பா கடும்பத்தியம் மரணத்துக் கெல்லாம்
பேரான வாதத்துக் இச்சா பத்தியம்
ஆமப்பாப சயமுடனே மந்தார காசம்
அப்பனே குட்டமுடன் பெருவி யாதி
நாமப்பா கரப்பானொடு வாத மெல்லாம்
நலமாக வோடுமடா வழிகா ணாமல்
ஆமப்பா மாத்திரையைப் பதனம் பண்ணு
வளமான மருத்திதுதான் வன்மைதானே. 28

காணப்பா வயித்தியற்கு இரக்கம் வேணும்
கசடான பொய்யுடனே சூதா காது
வாணப்பா மோசமது அதிக மாகா
வள்மான களமுடன் திருடு மாகா
மாணப்பா பெண்மாய்கைப் பொருளின் மாய்கை
மயக்கமது இதுரெண்டு மாகா தைய்யா
ஆணப்பா ஒருவர்பேரில் பண்ட மாகா
அன்பாக யிதுவெல்லா மாகா தென்றே. 29

ஆகாது வயித்தியர்க்கு யிதுவெல் லாம்தான்
மாய்கையத்த வயித்தியற்கு மனவோ டாது
ஆகாது யிவ்விதமா யிருந்தோ னுக்கு
அழும்பில்லை ஒருநாளும் தாழ்வு மில்லை
நாகாது சிதம்பரத்தின் காட்சி யெய்தும்
நலமான சிவயோக காட்சி யெய்தும்
நீங்காது நிலைவிட்டு நிலைபேராது
நிலைக்காத புரியவட்டம் நிலைத்துப் போமே. 30

போமப்பா யிந்நூலைத் தேடி வாங்கு
பூதலத்தில் கிட்டாது புகழோ கோடி
நாமப்பா யிந்நூலார் கொடுக்கப் போறார்
,,, ,,, ,,, ,,,,
போமப்பா கசடாருக்கு யிந்நூல் கிட்டா
கண்மணியே சிவயோகம் செய்து பாரு
ஆமப்பா யின்னூலாரார் காணப் போறார்
ஆச்சரியங் கண்டவர்க்கு மோட்ச மாமே. 31

ஆமேதா னேச்சி வசனஞ் சொல்வேன்
ஆச்சரிய மாறறிவார் சுண்ண மார்க்கம்
காமேதான் கம்பியுப்பு கந்தியுப்புக்
கண்மணியே கல்லப்புப் பிண்ட முப்பு

நாமேதான் சொல்லுகிறோம் சிவவாக்கி யத்தால்
நலமான வாக்கியமடா சீவனத்தின் கூறு
வாமேதான் வகைக்குஒரு பலமே வாங்கி
வளமானக் கல்வத்தில் போட்டுக் கொள்ளே, 32

கேளாதான் சொல்லுகிறோம் மைந்தா மைந்தா
கடியான பனிநீரை விட்டு ஆட்டு
வாளேதான் விந்தாலே சாம மாட்டி
விதியான அண்டநீர் தன்னா லாட்டு
மாளேதான் ஆட்டியிதை வழித்துக் கொண்டு
மைந்தனே வில்லையதாய் செய்து கொண்டு
நாளேதான் ரவியுலர்த்தி யெடுத்துக் கொண்டு
நலமான விந்தாலே சீலை செய்யே. 33

செய்யவே மண்ணாலே சீலை செய்து
செயம்பெறவே கசபுடத்தில் போடு போடு
அய்யவே புடம்போட்டு யெடுத்துக் கொண்டு
அப்பனே சீலையைத்தான் தட்டிப் பாரு
நய்யவே காந்தியது யென்ன சொல்வோம்
நலமான கடுங்காரச் சுண்ணாம் பாச்சு
மய்யவே சுண்ணமிதும் மகத்தாஞ் சுண்ணம்
மடையறவர் களானார்கள் மட்டி மாண்பர். 34

மடியென்ற அன்னத்தில் கோடா கோடி
மருத்துவங்கள் காணுமடா மருவிப் பாரு
அட்டியென்ற ஞானமுடன் யோக மார்க்கம்
அப்பனே கிரிகையுடன் வாத மாகும்
நட்டியென்ற நூல்துயை மாடுஞ் சுண்ணம்
நலமான வழிக்கெல்லா மிஞ்சுண் ணந்தான்
கட்டியென்ற கனகசபை யிதிலே தோன்றும்
கைலாச முத்தியெய்துங் கண்டு கொள்ளே. 35

கொள்ளவே இந்நூலைக் காட்ட வேண்டா
குகையில்வைத்துப் பூசைசெய்த குருவாய் எண்ணு
அள்ளவே இந்நூலார் காணப் போறார்
அசடருக்குக் கிட்டாது இந்நூலய்யா
மள்ளவே மடையருக்குக் கிட்டாதிந்நூல்
மகத்தான புத்தியுள்ள யோகிக் கெய்தும்
வள்ளவே நந்தியவர் யெனக்குச் சொன்னார்
வளமாகக் கேட்டுணர்ந்துத் தண்டகத்தைச்
சொன்னேன். 36

சொன்னேனடா நூற்றி நாற்பதுக்குள் மைந்தா
சொற்பெரிய சூட்சமெல்லாஞ் சூட்டி னேன்பார்
வன்னேனடா வகையாக இந்நூல் சொன்னேன்
வளமான சூட்சதண் டகமா மிந்நூல்
கன்னேனடா யான்சொன்ன நூலுக் கெல்லாம்
கருக்கிடையாங் கலைக்கியானத் தண்டகமா
மிந்நூல்.37

மன்னனடா இந்நூலில் கேளு
ஆறவே உத்திரத்தி 'அங்-பிங்-மங்'
ஆன தொரு 'சிங்'கென்று போவாய் நீ
மாறவே தேடி நீ சனத்தில் கூவும்கேளு
மகத்தான "நிங்" கென்றும் "றிங்" கென்றுந்தான்
நாறவே "சிங்" கென்றும் "வங்" கென்றேதான்
நலமாக யிதினிலே சொல்லக் கேளே.
.... 38

சிவமயம்

வான்மீகர் காவு

கேளப்பா கிழக்கினிலே வடுக்காயர் என்று போடு
கணிதமுடன் மேற்கதாய் சொல்லக் கேளு
வாரிப்பா வறிம் மிறிம் மென்று போடு
மானமென்றும் ஊனமென்றுந் தான்
நாளப்பா நல்ல திறமாயிப் போச்சி
நளமான ஊவரையில் நாட்டக் கேளு
தாளப்பா யிரண்டுண்டு வேலைப்பாடுன்
தளமான வீடதிலே சொல்லு வேனே. 7

சொல்லவே ராவென்ற அட்சரத்தைப் போடு
சொற்பெரிய நடுவேழத்துலா வென்று போடு
அல்லவே கீழ்மேலாய்ச் சுழியைச் சுற்றி
அப்பனே வாசல்முனையில் சூலம் போடு
நல்லவே ஆலத்தில் ரிங்காரம் போடு
நலமாக இம்மென்று ராவில்ப் போடு
வெல்லவே ஊமையெழுத் திதுதான் பாரு
வளமான வடமொழியில் திறந்திட் டேனே. 8

திறக்கவே இவ்விதமாய்ச் செடித்தி லுண்டு
தெரியாத மூடர்களே இருத்திப் பாரு
வார்க்கவே சக்கரத்தைப் போட்டுக் கொண்டு
வளமான உத்திர முகமாய்க் குந்து
ஆர்க்கவே அப்பாயிசங்கள் பலகா ரங்கள்
அப்பனே தூபமொடு தீபம் போடு
நாற்கவே ஆறுபத்தி னஞ்சுக் குள்ளே
நளமாகச் சித்திப்பாள் நவினபாரே. 9

பாடல் எண். 1 என்பது சுவடியில் 7 என்பதாக உள்ளது.

நவிலவே சித்தித்தால் கர்ம நோய்கள்
நலமாக உன்முகத்தைக் கண்ட போது
அவிளவே ஓடிவிடு நோய்கள் பாரு
ஆனதொரு நோய்கள் உன்னைக் கண்டு தானால்
வலவே சொப்பனந்தான் வருகு தென்று
வளமாக ஓடிவிடும் வல்வினையாம் நோய்கள்
கவிலவே வடிமொழியைக் கண்டா ரானால்
கருவான உலகத்தில்ச் சித்த னாமே. 10

சித்தனாற்ச் சடமெடுத்தால் எல்லாஞ் சித்தி
சிறப்பான மற்றோற்குச் சித்தி யாமே
அத்தனாய் மூன்றெழுத்து ஊமை தானடா
அப்பனே அஞ்செழுத்தும் ஊமை யாலே
அத்தனாய் எட்டெழுத்து ஊமை யாலே
வளமான அன்பத்தோறுசரமும் ஊமை
பத்தனா யிருந்தோருக் கெல்லாம் சித்தி
பரிவான வாதத்தில்கேட் டழிவார் பாரே. 11

பாரெனவே ஞானத்தைப் பார்கா மோடர
பவமான பாகத்தால் செய்வா ரைய்யா
ஆரெனவே ஞானமொடு வயித்தியம் யோகம்
அப்பனே பார்த்தாக்கால் பாவம் போகும்
நாரெனவே ஒன்றமில்லை யேது மில்லை
நலமான அறுபத்து நாலுஞ் சொல்வார்
வாரெனவே சடிதியில் ஓடிப் போகும்
வளமான கர்மத்தா லோட லாச்சே. 12

ஆரென்ற யோகத்தைப் பார்த்தா னானால்
பண்பான ஞானமொடு வாதஞ் சித்தி
வாரென்ற வாதத்தால் எண்ணா வாகும்
வளமான ஞானத்தைப் பாரு பாரு

நாரென்ற ஞானத்தை அறிந்த யானால்
நலமான சிவயோகம் பதிவ யாவாய்
சீரென்ற பொருளறிந்தேன் சித்தன் சித்தன்
சிறப்பான மத்தோற்கு சித்தி யாதே. 13

சிறப்பான வடிவையுட மார்க்கங் கேளு
அத்தென்ன வயித்தியத்தின் வழலை கேளு
அன்பான பூமியுட நாத மப்பா
சுத்தனா இருந்தாக்கால் சொல்வேன் பாரு
சொற்பெரிய உவர் பூவைக் கொண்டு வந்து
நத்தென்ன படிஒன்று அளந்து கொண்டு
நலமான எட்டாந் திங்கள் பாரே. 14

பாரப்பா பனிநீரைக் கொண்டு வந்து
பரிவாக ரெண்டுபடி அதனில் வாத்து
ஆரப்பா கலக்கியே அடுப்பி லேத்தி
அன்பான குழம்புபோ லாகும் போது
வாரப்பா இறக்கியதை வைத்துக் கொண்டு
வளமாக அறிவரும் பதத்தைக் கேளும்.
சீரப்பா பிஞ்சான் தான்கல மாகச்
சிறப்பாகக் கொண்டுவாந்து அதனில் ஊற்றே.15

ஊற்றிய தோர் பீங்கான் இல்லத் தில்வை
உணர்வான வாலையைத்தான் லட்ச மோது
ஆற்றியதோர் நெய்வேத்திய தீபங் காட்டு
அன்பான பால்பழங்கள் வத்து வைத்து
நாட்டியதோர் நாற்பது நாள் சென்றதானால்
நலமான பூப்பூத்துக் காய்க்கும் பாரு
வாத்தியதோ ரஞ்சுநா ளான பின்பு
வளமான காய்காசுப் பழம் பாரே. 16

பழமாகும் நாற்பத்தி அஞ்சுக் குள்ளே
பரிவாகப் பூவெடுத்துப் பதனம் பண்ணு
அடிமாகந் தூபமொடு தீபங் காட்டு
அப்பனே வயித்தியமுப்பு இதுதான்பாடு
நலமாகு முப்பூவின் அன்னங் கேளு
நலமான கல்வத்தில் முப்பு விட்டு
கலமாகும் குக்குடத்தின அண்டம் வாங்கி
கனமாகப் பிளந்ததிலே விந்தை வாரே. 17

யாரப்பா சாமமது ஒண்ணு மாட்டு
வளமான பனிநீரால் சாமமாட்டு
ஆரப்பா வில்லைசெய்து நிழலு லத்தி
அப்பனே விந்தினா லேழு சீலை
நாரப்பா ஆறவைத்துக் கோழிப் புடந் தான்பொன்
நலமாகச் சுண்ணமதாய் வெண்ணீ றாகும்
காரப்பா சுண்ணத்தை யெடுத்துக் கொண்டு
கணக்காக வயிரவர்க்குப் பூசை பண்ணே. 18

பண்ணவே குப்பிதனில் பதனம் பண்ணு
பண்பான ஔடத்தில் கூடச் சேரு
அண்ணவே உக்கிராணங் கலிங்கத் தோடு
அனதொடு கட்டுவகைச் செயநீர் போக்கு
மென்னவே செந்தூர பற்பந் தோடு
மேலாக மாத்திரைகள் எண்ணெய் போக
கண்ணவே தயிலமொடு சூர ணங்கள்
கனமான லேகியங்கள் கிருதந் தானே. 19

தானான வாதமொடு ஞானம் போக்கே
தனமான தீட்சை எடு சாமான் தானும்
வானான கருக்கிடை சூத்திரத்தில் சொல்வேன்
வளமான வடமொழிதானின் நூல் பாரும்

மானாய காயாதி கற்பத் தோடும்
மகத்தான மந்திரங்கள் சக்கரங்கள் தானும்
தேனான நந்தீசர் கடாச்சத் தாலே
திறமாக விரித்துரையான் சொல்வேன் பாரே.20

156. சுரமாருத மாத்திரை

சொல்லவே மாத்திரைதா னொன்று கேளு
சுளுகான வாளமது பலந்தா னொன்று
வெல்லவேப் பூரங்கால் ......சி வேற்பட்டை
மேலான கொடிவேலிப் பட்டை காலாம்
அல்லவே இதுவெல்லாஞ் சுத்தி பண்ணி
அப்பனே கலவத்தில் போட்டு ஆட்டு
வெல்லவே முலைப்பாலால் சாமம் ரெண்டு
வேதாந்தக் கையானில் சாமம் ரெண்டே. 21

ரெண்டானலச்சாம மரைத்துக் கொண்டு
ரேசக்கும்பக முடனே பூசை பண்ணு
வண்டான துவரைபோல் மாத்தி ரைதான் பண்ணு
வளமாக உலர்த்தி நன்றாய்ச் செப்பில் வைத்துக்
கண்டான தேனில் கொடுத்துப் போடு
கைகண்ட சுரமெல்லாம் ஓடிப் போகும்
அண்டான சுரமாறு மாத்திரை தானப்பா
அனதொரு யிம்மருந்தைச் செய்து கொள்ளே. 22

157. குங்கும ரத்தினக் குளிகை

கொள்ளவே குங்குமத்தின் குளிகை கேளு
கொடிதான குங்குமப்பூ பலந்தா னொன்று
மள்ளவே திரிகடுகு திரிபலாதி
மகத்தான சாதிக்காய் கிராம்பு ஏலம்

விள்ளவே சந்தனத்தூள் மருதம் வேரும்
விதமான கடுகு ரோகணியுங் கூட்டு
அள்ளவே இதுவெல்லா மரைதான் கூட்டு
அப்பனே கல்வத்தில் போட்டுக் கொள்ளே.23

கேளான பழச்சாற்றால் சாமம் மொண்டு
கெடியான இஞ்சிச்சாறு சாமம் ரெண்டு
வாளென்ற கண்டங்கத்திரிப் பழச்சாற்றால்ச் சாமம்
வளமான அரைத்ததனை வழித்தெடுத்து
அளென்ற சிறுபயறு பால் குளிகை செய்து
அப்பிரேகம் மந்தபின்பு செப்பில் வைநீ
மானென்ற அனுபான மறிந்து செய்தால்
மகத்தான சுரம்குளிர்சன்னிச் சுரங்கள் போமே.24

158. வயிரவ மாத்திரை

போமென்ற வயிரவமாத் திரைதான் கேளு
புகழான லிங்கமொடு ணாவி கந்தி
வாமென்ற வெங்காரம் நவச்சாரம் வீரம்
வளமாக இதவெல்லாம் விராகன் ரெண்டு
காமென்ற சுத்திசெய்து கல்வத் திட்டு
கனமான லவங்கமொடு பத்திரியுஞ் சுக்கு
ஆமென்ற கைய்யானில் ரெண்டு சாமம்
அப்பனே மங்கையர்தன் பாலால் ரெண்டே.25

இரண்டான குமரிச்சா சாறும் ரெண்டு
ரேகித்து அரைத்ததனை வழித்தெ டுத்து
அண்டான பனிப்பயர்போல் மாத்திரைதான் செய்து
அப்பனே ரவிதனிலே உலர்த்திக் கொண்டு
வண்டான மனிதருக்கு அனுபா னத்தில்
வளமாக மாட்டிடவே சொல்லக் கேளு
தண்டான குழல்சன்னி சிலேட்டும சன்னி
சன்னமா கும்மைமுதல் சுரங்கள் போமே.26

159. சஞ்சீவி மாத்திரை

போமப்பா சஞ்சீவி மாத்திரைதான் கேளு
புகழான நாபியுடன் சூதம் லிங்கம்
வாமப்பா அரிதாரம் பூரங் கந்தி
வளமான மசத்தினுட செந்தூரம் கூட்டு
காமப்பா சுத்திபண்ணி யிதுவெல் லாந்தான்
கனமான பலமரைதான் கல்வத் திட்டு
நாமப்பா கிராம்புடனே பத்திரியு மேலம்
நலமான திரிகடுகு திரிபலாதி யென்னே. 27

என்னவே நேர்வாளம் சுத்தி பண்ணி
இயல்பாகப் பலமரைதான் கூடச் சேரு
வன்னவே நிம்பக்காய்ச் சார்தான் சாமம்
வாகான கன்னிப்பாய்ச் சாமம் ரெண்டு
மண்ணவே குமரிச்சாறு சாமம் நாலு
மகத்தான கொன்றைப்பட்டை சாறுதான் சாமம்
அன்னவே சாமமது எட்டு மாட்டி
அப்பனே ஆட்டினபின் மாத்திரைதான் செய்யே. 28

செய்யவே அனுபான மறிந்து செய்தால்
செயலான சன்னியொடு சுரங்கள் தோடம்
மய்யவே மாண்டுவிடும் நேர்ய்க ளெல்லாம்
மகத்தான தேனில் கொள்ளும் போது
வய்யவே செத்தபிணம் எழுந்து குந்தும்
வளமாக விதியிருந்தால் பிழைப்பா னப்பா
கய்யவே விதியில்லா விட்டாக் காலத்தான்
கனமான மூணரைநாழிக் குள்ளே போமே. 29

போமப்பா வயித்தியரே இம்முறைபோல் சொல்லார்
புகழான என்நந்தி உரைத்தா னப்பா
வாமப்பா வழிதுறையாய்ச் சொல்லி விட்டேன்
வளமான நந்தீச ருள்தன் னாலே

காமப்பா கிரந்தியிலே யேழுக் குந்தான்
கனமான மாத்திரைதான் ஒன்று சொல்வேன்.
நாமப்பா பூரமுடன் கந்தி சேரு
நலமான கருஞ்சீர கந்தான் சேரே. 30

160. கிரந்தி ஏழுக்கும் மாத்திரை

சேரப்பா பரங்கிச்சக்கை யிதுமூ ணுந்தான்
செயலாகச் சுத்திபண்ணிக் கல்வத் திட்டு
வாரப்பா சீரகமும் போட்டு
வளமாகக் கையாஞ்சாறு தன்னா லாட்டி
ஆரப்பா தானிக்காய்போ லுண்டை செய்து
அப்பனே யெடுத்துநன்றாய் நோய்கட் கீய்ந்தால்
நாரப்பா சித்துவிட்டு உதிர்த்து போகும்
நலமான பத்தியந்தா னுப்பும்புளிப்பும் தள்ளே. 31

மேலான முத்தமொடு வெடியுப் போடு
மேன்மேலும் பூரமுடன் கவுரி கூட்டே
கூட்டப்பா அதிமதுரம் அக்கிராக் காரம்
குணமான கஞ்சாவும் கற்கடகசிங்கி யப்பா
வாட்டப்பா முச்சரக்கும் சுத்தி செய்து
வளமான மருந்தெல்லாம் கல்வத்திட்டு
காட்டப்பா எலுமிச்சம் படிச்சாறு சாமம்
கனமான இஞ்சிநீர் சாமம் நாலு
ஆட்டப்பா முலைப்பாலால் சாம மாட்டே
அப்பனே ஆட்டினபின் மாத்திரைதான் செய்யே. 32

33. 34.35. ....

செய்யப்பா இதுக்கெல்லாம் உப்புப் போடு
செயமான உப்புப்போட்டால் சரக்கெல்லாங் கொல்லும்
வைய்யப்பா ஒருருரைப்புத் தேனில் கொள்ளு
வளமான சன்னிபதின் மூன்றும் போகும்

அய்யப்பா அனுபான மறிந்து கொள்ளு
ஆனதொரு விடசன்னி ஓடிப் போகும்
கைய்யப்பா ஏழையுந்தான் வயித்தியஞ் செய்வான்
கருதியதோ ரைழையுந்தான் வயித்தியஞ் செய்வானே.36

வானென்ற மாத்திரைக ளிதுதான் போதும்
வளமான வயித்திரே உங்க ளுக்கு
நானென்ற ஆணவத்தால் சொல்லி விட்டேன்
நலமான கருக்கலெல்லாம் அதிலே சொல்வேன்
ஆனென்ற மேகமது இருவத் தொன்று
அப்பனே மேகத்தா லெழுந்த ரோகம்
தானென்ற சயமொட்டு நீரழிவு எட்டு
தாக்கான சூயைது பதினெட் டாமே. 37

161. மேகராங்க எண்ணெய்

ஆமப்பா மேகத்தா லெழுந்த ரோகம்
ஆனதொரு வியாதியைத்தான் சொல்லப் போமோ
காமப்பா மேகரா சாங்கத் தெண்ணை
கருவாகச் சொல்லுகிறோங் கேளு கேளு
வாமப்பா கருநொச்சிச் சாறுபடி யொண்டு
வளமான சங்கஞ்சாற் படிதா னொன்று
காமப்பா கருநொச்சிச் சாறுபடி யொன்று
இசவல்லிச் சாறுபடி தானொண்ணே. 38

ஒண்ணான கோவைக்சாறு படிதா ஒண்ணு
உத்தமனே நெல்லிக்காய்ச் சாறுபடி ஒண்ணு
வண்ணான வாகைசாறு படிதா ஒண்ணு
வளமான தழுதாழைச் சாறுபடிதா ஒண்ணு
கண்ணான கருப்பஞ்சாறு படிதா ஒண்ணு
கனமான ஆவாரம் சாறுபடி ஒன்று
அண்ணான அத்திப்பால்படி அரைதா னப்பா
அப்பனே அரைக்கீரைச் சாறுபடி ஒன்றே.39

ஒன்றான தக்காளிச் சாறுபடி ஒன்று
உத்தமனே குமரிச்சாறு படிதா ஒன்று
வன்றான ஆவின்பால் படிதா ஒன்று
வளமான தென்னங்காய்ச் சாறுபடி யொண்டு
கன்றான கன்னிமுலைப்பால் படிதா னப்பா
கன்னவே வெள்ளாட்டின்பால் படிதா ஒன்று
நன்றான ஒதிவிருட்சச் சாறுபடி ஒன்று
நலமான விசிறிச் சாறுபடிதா னான்றே. 40

ஒன்றப்பா கன்னிமுலைப்பால் படிதா னொன்று
உத்தமனே சித்தரெண் டெண்ணை ரெண்டு
வன்றப்பா எள்ளெண்ணெய் படிதா னொன்று
வளமான கற்கவகை சொல்லக் கேளு
அன்றப்பா திரிகடு திரிப லாதி
ஆனதொடு ஏலமொடு கிராம்பு பத்திரி
நன்றப்பா வெட்டிவேர் விலாமிச் சோடு
நாதாந்த சந்தனத்தூள் தேவதாரம் தானே. 41

தானான இவையெல்லாம் தேங்காய்ப் பாலில்
தனதாக அரைத்தெண்ணை அதில்க ரைத்து
வேணான சாறுபால் எண்ணெய் கற்க மொன்றாய்
வேதாந்த சட்டிதனில் கலக்கிக் கொண்டு
வானான அடுப்பேத்தித் தீயை மூட்டி
வளமான சாமமது பன்னிரண் டப்பா
கானான சாமமது எரித்துக் கொண்டு
கனகமதை இறக்கிநன்றாய்ப் பதியில் வையே. 42

வைய்யப்பா எண்ணெதனை வடித்துக் கொண்டு
வளமான வயிரவற்குப் பூசை பண்ணி
கைய்யப்பாக் கரண்டிநிறை நாற்பதுநாள் கொள்ளு
கனமான மேகரோகம் தவறுண் டேபோம்

மையப்பா வாதசயம் பித்தசய மெல்லாம்
மகத்தான சிலேட்டும சயமெல்லாம் போக
நையப்பா கர்மவினை மேக ரோகம்
நலமாகப் பறந்துவிடும் கர்ம நோயே. 43

நோயான் வகையேது கர்மத் தாலே
நேரான கர்மத்தால் வாதநோய் தான்
வாயான வாதராசா யங்கங் கேளு
வளமான யெண்ணையப்பா யார்தான் சொல்வார்
நாயான உள்ளபடி நான்தான் சொல்வேன்
நலமான அறிவாலே கண்டு சொல்வாய்
காயான கனிபழம் போலென் நூலப்பா
கனிவாக இருநூற்றில் சொல்வேன் பாரே. 44

162. வாத ராசாங்க எண்ணெய்

பாரப்பா கண்டங்கத்திரிச் சாறுபடி யொன்று
பரிவான இளகருணைச் சாறுபடி யொன்று
காரப்பா வாகைச் சாறுபடிதா னொன்று
கனமான மாவு லிங்கம் படி அரை தானப்பா
ஆரப்பா கொன்றைச் சாறுபடிதா னொன்று
அப்பனே வெள்ளறுகுச் சாறுபடி யொன்று
நாரப்பா வாதநாராயணன் மூலிச் சாறு
நலமாகப் படியொன்று கூட்டஞ் சேரே. 45

சேரப்பா இதுகளுட கனல் தணிய
செயமான வெள்ளாட்டின்பால் படிதான் கூட்டு
நாரப்பா கற்கவகை சொல்லக் கேளு
நலமான் முருங்கைவேர் சங்கம் வேரும்
ஆரப்பாக் கொடிவேலி வேரு கூட்டு
அப்பனே வெள்ளெருக்கு வேருங் கூட்டு
காரப்பா திப்பிலியுஞ் சுக்கு ஓமம்
கருவான கருஞ்சீ ரகமுங் கேட்டே. 46

கூட்டப்பா கிராம்புடனே காயும் பத்திரி
குருவாக இவைவகைக்கு விராகன் ரெண்டு
வாட்டப்பா முன்கற்கம் வகைக்கு மைந்தா
வளமாகப் பலமரைதான் கல்வத் திட்டு
ஆட்டப்பா வேறுவகைக் கடைச்சரக் கெல்லாம்
அப்பனேவெள் ளாட்டின்பாலா லாட்டிக் கொண்டு
நாட்டப்பா சித்தர் எண்டெண் ணெய்படி ஒன்று
நலமாக சாறுடனே யெண்ணெகற்கம் சேரே.47

சேத்தப்பா சட்டிதனில் வார்த்துக் கொண்டு
செயலான கற்கத்தைக் கலக்கிக் கொள்ளு
வாத்தப்பா அடுப்பேத்திச் சாம மஞ்சு
வளமாகக் காய்ந்துதெண்டால் கடுகுதிரளும் பாரு
ஆத்தப்பா மெழுகுபதம் தனில்வ டித்து
அப்பனே வயிரவற்குப் பூசை பண்ணு
காத்தப்பா எண்ணெயைத்தான் காசிடை கொள்ளு
கனமான வாதமெண் பதுவும் போமே. 48

போமப்பா நாற்பதுநாள் கொள்ளு கொள்ளு
புகையான பத்தியந்தான் காரு காரு
வாமப்பா வாதமெண்பதினால் வந்த
வல்வினையைச் சொல்கிறேன் கேளு கேளு
காமப்பா மண்டைக்குத் தல்கழுத் திசிவு
கனமான கால்கை உடம்புக் குத்தல்
நாமப்பா மின்னிசிவு பின்னிசிவு வாயு
நலமான கழல்வாத அண்டவாதம் பாரே. 49

பாரப்பா நடுக்குமுதல் வாதம் தீரும்
பரிவான இடுப்புநோவு குடல்வாதம் பறந்து போகும்
ஆரப்பா கைகாலில் திமிர்த்த வாயு
அப்பனே கைமுடக்கல் கால்முடக்கல் தீரும்

வாரப்பா எண்பதினால் வளர்ந்த தெல்லாம்
வளமாகப் பொடிப்பொடியாய்ப் பறந்து போகும்
நாரப்பா இந்தஎண்ணெய் பத்தியங் காரு
நலமாக ஆள்திடமுங் குணத்தைப் பாரே. 50

பாரென்ற கண்பார்த்து முகத்தைப் பாத்துப்
பரிவான அவனுடைய பலத்தைப் பார்த்து
ஆரென்ற வியாதியுட பலத்தைப் பார்த்து
அப்பனே நாடியுட பலத்தைப் பாரு
ஏரென்ற இதுகளெல்லா அறிந்து வைத்தியம் பாரு
என்மகனே குணம்பாற்கா மோடர் தானும்
சாரென்ற நரகில்விழுந் தலைவார் பாரு
நமன்வந்து உருதமுடன் கோபஞ்செய் வானே.51

வானென்ற நாடிகளில் யாரு சொல்வார்
வளமான என்நந்தி சொன் னாரைய்யா
ஆனென்ற யான்கேட்டுப் பன்னீரா யிரத்தில்
அப்பனே குருடனுக்குந் தெரியச் சொன்னேன்
பானென்ற வடிமொழியார் காணப் போரார்
பரிவான யெந்நூல்போல் சொல்வா ரைய்யா
தானென்ற உள்ளபடி அறிந்து சொன்னேன்
தனதான அறிவுள்ளோர் தேர்வார் பாரே. 52

பாரான நடுக்கு வாதமுடக்கு வாதந் தீரப்
பரிவான தயிலமொன்று சொல்லக் கேளு
ஆரான எண்ணெயது கால்படிதான் வாங்கி
அப்பனே வாகைச் சாறு கால்படியுங் கூட்டு
வாரான தில்லைப்பால்படி அரைக் கால்
வளமான முருங்கச்சாறுபடி அரைக் கால்
நாரான கற்கவகை சொல்லக் கேளு
நலமான கறியுப்பு ....ட்டாச்சேரே. 53

இந்தான வெள்ளுள்ளிக் காயங் கூட்டு
இதமான மாவுலிங்கவேர் சித்திர மூலம்
வந்தான வசம்புடனே திப்பிலியுங் கூட்டு
வளமான இதுவெல்லாம் அரைத்து எண்ணெய்தனில் கரைத்து
கந்தான அடுப்பேத்திநீர் சுண்டக் காச்சி
கனமாக எடுத்ததனை நோய்களெலாந் தடவிப் போடு
அந்தான நிமிசத்தில்நோய் வீக்கம் வாங்கும்
ஆனதொரு நடுக்குடனே திமிரும் போகும். 54

163. கரப்பனெண்ணெய்

போமப்பா இதுரெண்டுஞ் செய்தி ருந்தால்
பொல்லாத பிணிவாயு தீரும் பாரு
வாமப்பா வழியாகச் சொல்லி விட்டேன்
வளமான வயித்தியரே அறிந்து செய்வீர்
காமப்பா கரப்பனெல்லாந் தீரு தற்கு
கனமான எண்ணெய்என்று சொல்லக் கேளு
நாமப்பா எண்ணெய்படி முக்கால் வாங்கு
நலமான சின்னிச்சாறு கூந்தல் சாறே. 55

சாறான செருப்படிச்சாறு கருநொச்சிச் சாறு
சமத்தான செலையனாயகன் பூண்டுச் சாறு
வாரான சங்கஞ்சாறு சாரணையின் சாறு
வளமான வெள்ளறுகு சாறுங் கூட்டு
நாறான இதுவெல்லாங் கூடச் சேரு
நலமாக வகைக்குப்படி கால்தான் கூட்டு
ஆறான கற்கவகை சொல்லக் கேளு
அப்பனே சீரகந்தா னிரண்டு கூட்டே. 56

கூட்டடா கடுகுரோ கணியுங் கூட்டு
கூறான வாதகரப்பான் பட்டை கூட்டு
வாட்டடா கண்டங்கத் திரியுங் கூட்டு
வளமான அண்ணெரிஞ்சான் பூண்டுங் கூட்டு
காட்டடா வேம்பாடம் அரத்தை சுக்கு
கனமான பரங்கிச்சக்கைக் குமிள் வேரும்
நாட்டடா இதைஎல்லாந் தூளாய்ப் பண்ணி
நலமாக வகைக்கு அரைப் பலமுஞ் சேரே.57

58
''' '''' '''''   ''''''

சேரடா எண்ணெய்தனில் கலக்கிக் கொண்டு
சிறப்பாக நேர்வாளம்பலமரை பொடித்துப் போடு
வாரடா நீர்ச்சுண்டக் காய்ச்சிக் கொண்டு
வளமான மெழுகுபதந் தன்னைப் பாரு
வாரடா இறக்கியதை வடித்துக் கொண்டு
சுனகமன நாற்பதுநாள் கொடுக்கச் சொல்லு
நாரடா பத்தியந்தா ணிச்சா பத்தியம்
நலமாகக் கொண்டுவிடத் தீரும் நோய்
கேள். 59

கேளப்பா வீக்கமுடன் கொள்ளி சுட்டான்
குறியான வாதசி லேட்டும கரப்பான்
வாளப்பா பித்தாலே முந்தப் புடைக்க ரப்பான்
வளமான செங்கரப்பான் சொரிக ரப்பான்
ஆளப்பா இலிங்கப்புற்று யோனிப் புற்று
அப்பனே கிரந்திவலி கொருகாய்ப் புண்
நாளப்பாப் பித்தத்தால் எழுந்த தேமல்
நலமான வெடிகிரந்தி இதுவெல்லாம்
போமே.60

164. மேகத்தினெண்ணெ

போமப்பா மேகத்தி னெண்ணெய் கேளு
புகழான அத்திப்பால் கால்படிதா னப்பா
வாமப்பா தேங்காய்ப்பால் செவ்விளநீர் தண்ணீர்
வளமான பனமரத்தி நுங்கு நீரும்
ஆமப்பா ஒதியம்பட்டைச் சாறுங் கூட்டு
அப்பனே ஆவின்பாலாவி நெய்யும்
காமப்பா எண்ணெய்படி ஒன்ணரையுங் கூட்டு
கனமான வகையெல்லாம் படிமுக்கால்
கூட்டே.61

கூட்டடா கற்கவகை சொல்லக் கேளு
குணமான முல்லைவேர் குவளம் வேரும்
வாட்டடா கொடிவேலி வேருங் கூட்டு
வளமான சாதிக்காய் கிராம்பு ஏலம்
நாட்டடா பத்திரியுந் தாளிச் சந்தான்
நலமான கோரோசனை சந்த னத்தூள்
ஆட்டடா வெட்டி வேர் விலாமிச்சம் வேர்
அப்பனே இதுவெல்லா ஆவின்பால் தன்னி
லாட்டே.62

ஆட்டவே எண்ணெய்பால் தனில்க ரைத்து
அப்பனே அடுப்பேற்றித் தீயை மூட்டு
காட்டவே மெழுகுபதந் தன்னைப் பார்த்து
கனகமதை வடித்ததனைப் பதனம் பண்ணு
மாட்டவே மண்டலந்தான் கரண்டி கொள்ளும்
மகத்தான வங்கபற்பம் போட்டுக் கொள்ளே
நாட்டவே நீரழிவு குட்டசொறி யெல்லாம்
நலமாகப் பறந்துவிடும் சலவை தானே.63

தானான எண்ணெக்குப் பத்தி யந்தான்
தனதாக புகையோடு பெண்ணு மாகா
வானான கொள்ளுடனே அகத்திக்கீரை
,,,, ,,,, ,, ,,,
தேனான எள்ளெண்ணெ இதவெல்லா மாகா
திறமான பத்தியத்தின் பதார்த்தங் கூட்டு
ஆனான பெரும்பாடி னெண்ணெ கேளு
அப்பனே எள்ளெண்ணெய்படி முக்கா லாச்சே. 64

ஆச்சப்பா நாகப்பட்டைச் சாறுபடி முக்கால்
அப்பனே ஓதியம்பட்டைச் சாறுதான் முக்கால்.
வாச்சப்பா அத்திப்பட்டைச் சாறுபடி முக்கால்
வளமான நெல்லிக்காய்ச் சாறுபடி முக்கால்
நாச்சாப்பாப் படிச்சாறுப் படிதான் முக்கால்
நலமான ஆவின்நெய் படிதான் முக்கால்
காய்ச்சப்பா கருப்பஞ்சாறு முக்கால் விட்டு
கனமான கற்கவகை சொல்லக் கேளே. 65

கேளப்பா பலமுக்கால் தாளிசந்தான் தேடி
பாகமான சாதிக்காய் ஏலங் கிராம்பு
வாளப்பா அரத்தையொடு அதிமதுரங் கூட்டு
வளமான நிலப்பனைக் கிழங்கு கூட்டு
ஆளப்பா கையான்சாறு கல்வத்திட்டு
அப்பனே தென்னங்காய்ப் பாலா லாட்டு
காளப்பா எண்ணெயதில் கலக்கிக் கொண்டு
கருவாக அடுப்பேற்றித் தீயைச் சாடே. 66

165. ரசத்தயிலம் கீரை

சாடையிலே கடுகுசுண்டி நீர்தி ரண்டால்
சமத்தான கைபாக மென்றிறக்கு
வாடயிலே எண்ணெய் அதை இறக்கிக் கொண்டு
மாளமா வடுகனுக்குப் பூசை பண்ணி

காடயிலே கரண்டிவீதங் கொண்டிட் டாக்கால்
கனமான பெரும்பாண்டு ரத்தப் பாடு
நாடயிலே வெள்ளையொடு நீர்ச்சுருக்கு
நலமான நீர்க்கட்டு சதையடைப்பும் போமே.67

166. எட்டி வித்துத் தைலம்

போமென்று தயிர்பால் கூட்டு
புகழான உப்பைத்தான் வறுத்துக் கூட்டு
ஆமென்ற மற்றதெல்லாந் தள்ளிப் போடு
அப்பனே எண்ணெயுடன் மருத்துவஞ் சொன்னேன்
வாமென்ற புடத்தயில மகிமை கேளு
வளமான எட்டிவித்துத் தயிலஞ் சொல்வேன்
நாமென்ற எட்டிவித்துப் படிதா னாலு
நலமான புங்கவித்துப் படிநாலு சேரே.68

சேரென்ற குவளத்தின் பழம்நூறு கூட்டு
செயமான இதுமூன்றும் புடத்தயிலம் வாங்கி
வாரென்ற மனிதருக்குக் கொடுத்தா யானால்
வளமான குட்டமுதல் பாண்டு தீரும்
ஆரென்ற தலைக்குத்தான் தேய்த்து மூழ்கு
அப்பனே பித்தச்சுட்டால மயிருந்தால் முளைக்கும் பாரு
நாரென்ற சொறிசிரங்கு ஆறாப் புண்ணும்
நலமாக ஓடிவிடும் நவின்றிட் டேனே .69

நவிலவே இன்னமொரு தயிலங் கேளு
நலமான புங்கம்வித்தும் தயிலஞ் சொல்வேன்
அயலவே புங்கம்விரை படிதா னெட்டு
அப்பனே அழிஞ்சிவித்துப் படிதா னொன்று

கவிலவே முல்லைவேர் வீசை ரெண்டு
　　கனமான குமரிக்கிழங்கு வீசை யெட்டு
மவிலவே யிதுவெல்லாம் பாண்டத் திட்டு
　　மகத்தான குழித்தயிலம் தன்னை வாங்கே. 70

167. புங்கம் வித்துத் தைலம்

வாங்கவே கடுகளவு உள்ளுக் கொள்ளு
　　வளமாக மேலுக்குப் பூசி வாநீ
ஆங்கவே நரைதிரை கள்இதனால் போகும்
　　அப்பனே காயமது இறுகிப் போகும்
நாங்கவே பாண்டுடனே மேகம் போகும்
　　நலமாக இத்தனையு இதனால் போகும்
சாங்கவே இன்னமொரு தயிலங் கேளு
　　சாத்தான் அறுகம்வேர் தயிலங் கேளே. 71

168. அறுகம் வேர்த் தைலம்

கேளப்பா அறுகம்வேர் வீசை யெட்டு
　　கெடியான முத்தமது வீசை எட்டு
ஆளப்பா புங்கம்வேர் வீசை எட்டு
　　அப்பனே இதுவெல்லாம் பாண்டத் திட்டு
வாளப்பாக் குழித்தைலம் தன்னை வாங்கி
　　வளமாகத் தயிலத்தைப் பதனம் பண்ணி
நாளப்பா உள்ளுக்குக் காசிடைதான் கொள்ளு
　　நலமாக சிரசுக்கு முழுகு வாயே. 72

முழுகிடவே தீருமது பித்தப்பாண்டு
　　முக்கியமுள்ள பித்தவெட்டை பித்தச் சூடு
அழுகிடவே உடல்எரிவு கைகால் காந்தல்
　　அப்பனே நெஞ்செரிவு மூக்கெ ரிச்சல்

பழுகிடனே கபாலத்தின் மண்டைக் குத்தல்
பரமான அக்கினியா மந்தந் தீரும்
வழுகிடவே புளிபுகையும்ஆகா தப்பா
வளமானப் பத்தியத்தைச் செவ்வையாய்ச்
செய்யே.73

169. ஆறா இரணத்துக்குத் தயிலம்

செய்யப்பா ஆறாத ரணத்துக் கெல்லாம்
செயமான தயிலமொன்று சொல்லக் கேளு
வைய்யப்பா சங்கம்வேர் வீசை ரெண்டு
வளமான பூவரசம் பட்டை ரெண்டு
கைய்யப்பா சிவன்வேம்பு வீசை ரெண்டு
கனமான வாலுளுவை வீசை ரெண்டு
நைய்யப்பா இதுவெல்லாம் நறுக்கிக் கொண்டு
நலமாகப் பாண்டத்தில் போட்டி டாயே. 74

போடப்பா குழித்தயிலந் தன்னை வாங்கி
புகழாகச் சீசாவில் பதனம் பண்ணு
ஆடப்பா மனிதருக் குள்ளுக் கீய
அப்பனே புண்ணறைகள் ஆறாப் புண்ணும்
வாடப்பாப் பதினெட்டில் பிறந்த ரோகம்
வளமாகப் பறந்துவிட்டு ஓடிப் போகும்
நாடப்பா ரெணத்தின்மேல் தயிலம் போடு
நலமாகப் பறந்துவிடும் ரெணாங்கள் தானே. 75

170. சயம் தீரத் தைலம்

தானான ரணத்தயிலஞ் சொன்னே னப்பா
தயவான சலத்துக்குத் தயிலங் கேளு
சேனான செம்முள்ளிவேர் வீசை ரெண்டு
செயமான சங்கம்வேர் வீசை ரெண்டு

ஆனான ஆடாதோடை மூலி வேரும்
அப்பனே வீசையது ரெண்டுங் கூட்டு
வானான இதுமூன்றுங் குழித்தயிலம் வாங்கு
வளமான தயிலத்தைப் பதனம் பண்ணே. 76

பண்ணப்பா பணவிடைதான் கொள்ளச் சொல்லு
பரிவாக யிருபோ முள்ளுக் கேத்து
சண்ணப்பா சஞ்சாரம் சிலேட்டும ரோகம்
சமத்தான இளைப்போடு சுவாச காசம்
மண்ணப்பா மாண்டுவிடும் இருமல் ரத்தம்
மகத்தான கொறுகொறுப்பு மேல்சு வாசம்
கண்ணப்பா கண்காணாது ஓடிப் போகும்
கனமான மேகத்தால் எழுந்த தாச்சே. 77

171. மூலம் தீரத் தைலம்

ஆச்சப்பா சயத்தினுட தயிலஞ் சொன்னேன்
அப்பனே மூலச்சூ எல்லாம் போக
வாச்சப்பாத் தயிலமொன்னு சொல்லக் கேளு
வளமான தயிலமடா ஆருஞ் சொல்லார்
மாச்சப்பா மிளகரணை முக்கத் தாரி
மகத்தான தென்னம்வேர் பனையின் வேரும்
காச்சப்பாக் கைய்யானுங் கொழுஞ்சி வேரும்
கனமான இலந்தைவேர் முசுட்டை வேரே. 78

வேரப்பா கீழாநெல்லி சித்தா முட்டி
வேதாந்த நெல்லிப்பட்டை ஆனைப் பட்டை
காரப்பா இதுவெல்லாம் வீசை யொன்று
கனமான பாண்டத்தி லிட்டுக் கொண்டு
ஆரப்பாக் குழித்தயிலம் தன்னை வாங்கி
அப்பனே அடக்கமதாய்ப் பதனம் பண்ணு
காரப்பா மனிதருக்குக் காசிடை தானீய்ந்தால்
வலமான மூலமெல்லாம் பறந்து போமே.79

172. சகல வாதத்துக்குச் சூரணம்

ஆமப்பா வாதமெல்லா மொழிந்து போக
அப்பனே சூரணந்தா னொன்று சொல்வேன்
வாமப்பா கொன்னையொடு மாவு லிங்கம்
வளமான கொடிவேலி கண்டங் காலி
காமப்பா வாதத்தின் கரப்பான் பட்டை
கனமான தூதுவளை சங்கம் வேரே. 80

வேரான வெள்ளெருக்கின் வேருங் கூட்டு
விதமான இதுவகைக்குப் பலந்தா னஞ்சு
ஆறான பூண்டுடனே காயஞ் சுக்கு
அப்பனே இந்தப்பு வளையலுப்பு
காரான கம்பியுப்புக் கல்லுப் போடே
கனமான உப்பெல்லாஞ் சுத்தி செய்து
வானான மோரெல்லாங் கல்லுரலிற் தூளாய்ப் பண்ணி
வளமான கடைச்சரக்குந் தூளாய்ப் பண்ணே.81

பண்ணவே இரண்டு ஒண்டாய்க் கலந்து கொண்டு
பண்பான சூரணத்தைப் பதனம் பண்ணு
கண்ணவே ஒருகடிதூள் உள்ளுக் கேற்று
கனமான வாதத்தால் வந்த பீடை
அண்ணவே சூரணத்தைக் கண்ட போது
அப்பனே கண்காணாது ஓடிப் போகும்
வண்ணவே வாதத்தின்சூரணந்தான் சொன்னேன்
வளமான சயத்துக்குச் சூரணந்தான் கேளே.82

கேளப்பா செம்முள்ளி ஆடாதோடை
கெடியான சங்கோடு ஈய வேரும்
வாளப்பா திரிகடுகு ஏலத் தோடு
வளமான கண்டங்கத்திரி அரத்தை

நாளப்பா கடுக்காயுஞ் சித்திர மூலம்
நலமான கைய்யானுந் தாளி கந்தான்
ஆளப்பா இதுவெல்லாம் பலந்தான் ஒன்று
அப்பனே கல்லுரலில் தூளதாக்கே.83

தாக்கென்ற சூரணத்தை வடித்துக் கொண்டு
தனதாகச் சீனியதில் மூணும் சேரு
வாக்கென்ற சூதமொடு தாளகந்தான்
வளமான பற்பத்தி லெதுவானாலும்
நாக என்ற பணவிடைதான் வைத்தக் கொள்ள
நயமான சயகாச்ச ஈளை போகும்
ஆக் கென்ற பத்தியந்தான்புகை புளியந் தள்ளு
அப்பனே அரைக்கீரை துவரை தானே. 84

173. மேகத்துக்குச் சூரணம்

தானான கடல் மச்ச வற்றல் கூட்டு
தனதான மற்றதெல்லா மாகாதப்பா
வேணான இன்னமொரு சூரணந்தான் கேளு
வேதாந்த தாளிசபத்திரயின் சூரணந்தான் சொல்வேன்
கானான வலைபோன்ற தாளி சந்தான்
கருத்தான திரிகடுகு திரிப லாதி
ஆனான ஏலமொடு கிராம்பு பத்திரி
அப்பனே இதவெல்லாம் பலமரைக் கூட்டே. 85

கூட்டவே இடித்ததனை வடிகட்டிக் கொண்டு
கூறான சீனியதில் பலமூன் றிட்டு
வாட்டவே ஒருகடிதூள் உள்ளுக் கொள்ளு
வளமான மூலத்தில் கடுப்பு ரெத்தம்
மாட்டவே மேகமொடு மூலக் கடுப்பும்
மகத்தான வரட்சியொடு ரெத்த பாண்டு
நாட்டவே நீர்க்கட்டுக் கல்லடைப்புப் போகும்
நலமான மேகவெள்ளை பறந்து போமே.86

174. பித்தச் சூரணம்

போமப்பா இன்னமொரு சூரணந்தான் சொல்வேன்
புகழான பித்தத்தின் சூரணந் தான்கேள்
வாமப்பா ஆவாரம் பட்டை வேரும்
வளமான ஓரிலைத்தாமரைக் கீழா நெல்லி
ஆமப்பாக் குவளம்வேர் சித்தா முட்டி
அப்பனே இலவம்வேர் வேலிப் பாசி
காமப்பா நரிப்பயத்தம் நன்னாரி வேரும்
கனமான விலாமிச்சம் வேருங் கூட்டே. 87

கூட்டடா எலுமிச்சம் வேருங் கூட்டு
கூறான இதுவகைக்குப் பலந்தான் ரெண்டு
ஆட்டடா கடுக்காயும் ஏல மாஞ்சி
அப்பனே சந்தனத்தூள் தேவ தாரம்
வாட்டடா இதுவெல்லா மரைப்பலந்தான் கூட்டி
வளமாக இடித்ததனை வடித்துக் கொள்ளு
காட்டடா சீனியுடடான் சீரகமுங் கூட்டு
காசினியி லாரறிவார் சூரணத்தின்
மகிமைதானே. 88

175. பீனிச சூரணம்

தானான சூரணத்தை யிருபோ துண்ணா
தனதானப் பித்தெரிவு கண்பு கைச்சல்
வானான பித்தவாயு பித்தத்தாலெழுந்த தெல்லாம்
வளமாக மாண்டுவிடும் சத்தியம் சொன்னேன்
கானான பீனிசங்கள் எல்லாம் போக
கனமான சூரணந்தான் ஒன்று கேளு
கனமான சூரணந் தானொன்று கேளு
மகத்தான செண்பகப்பூ பெருமருந்து தானே.89

தானென்ற திரிகடுகு செங்கத்தாரி
தனதான கொடிவேலி கண்டங் காலி
வேனென்ற சங்கம்வேர் சீரகந்தான் ரெண்டு
விதமாக இதுவெல்லாம் பலமென் றாக்கு
கோனென்ற கல்லுரலில் இடித்துக் கொண்டு
கனமாக எடுத்ததனை வடித்துக் கொண்டு
நானென்ற ஒருகடி தூ ளிருபோ துண்ணா
நலமான ஏழுநாள் கொள்ளு கொள்ளே.90

கொள்ளப்பா மேகசூலை பீனி சங்கள்
கொடிதான சீலேத்தும நாசி நாற்றம்
வள்ளப்பா உடம்பெல்லாந் தினவு குட்டம்
வளமான பொருமலுடன் விம்மல் விக்கல்
கள்ளப்பா காதிலுடன் சீழ் மூற்றும்
கனமான பீனிசங்க ளெல்லாம் போகும்
அள்ளப்பா பீனிசத்தின் சூரணந்தான் சொன்னேன்
அப்பனே யின்னமொன்று அருளு றேனே.91

176. மூலத்துக்கு சூரணம்

அருளவே மூலமது ஒன்ப துந்தான்
அருளுறேன் சண்டமாருத சூரணந்தான்
சொல்வேன்
வருளவே கொடிவேலி சுக்குங் கூட்டி
வளமான மிளகரணை முத்தக் காசு
கருளவே கடுக்காயும் கடுக்காய் பூணம்
கனமான புளியாரை சிற்ற ரத்தை
மருளவே குங்குமப்பூ சாதிக் காயும்
மகத்தான பிரண்டையொடு கொழுஞ்சி
வேரே.92

வேரான சரக்கொன்றை வேரும் வாங்கி
வேதாந்தப் பச்சையொடு மரம்வேர்ப் பட்டை
ஆறான இதுவெல்லா உலர்த்தித் தூளாய்ப் பண்ணி
அப்பனே ஒருவகைக்குப் பலம்இரண்டு வாங்கு
வாரான இதவெல்லாம் ரேகித்துக் கொண்டு
வளமான சீனியதிற் கலந்து கொள்ளு
நாரான யிருபோது மண்டலந்தான் கொள்ளு
நலமான மூலமொண்பதுவு மோடிப் போமே.93

177. வல்லாரைக் கிறுதம்

போமப்பா சூரணத்தின் மருந்துஞ் சொன்னேன்
பொருளான கிருதனெய்யி நடவைக் கேளு
வாமப்பா வல்லாரைக் கிருதஞ் சொல்வேன்
வளமான வல்லாரைச் சாறுபடி ஒன்று
நாமப்பா ஆவாரஞ் சாறுபடி யொன்று
நலமானக் கோவைச்சாறு படிதா னொன்று
காமப்பா தக்காளிச் சாறுபடி யொன்று
கனமான ஆவினெய் படிதா னொன்றே. 94

ஒன்றான ஆவின்பால் படிதா னொன்று
உத்தமனே கற்கவகை சொல்லக் கேளு
நன்றான திரிபாலை சாதிக்காய் கிராம்பு
நல்லமண்கல் வத்திலாவின் பால்தன்னா லாட்டி
வன்றான நெய்தனிலே கலக்கிக் கொண்டு
வளமாக அடுப்பேத்தித் தீயை மூட்டி
கன்றான நீர்சுண்டிக் கிருத மாகும்
கனமான சர்க்கரை தான்பலம் ரெண்டே. 95

போட்டப்பா அடிப்பத்தாமல் கிண்டிக் கிண்டி
பேரான கிருதத்தைப் பதனம் பண்ணு
வாட்டப்பா பூசித்து மனித ருக்கு
வளமான.........படிவீதம் இருபோ துண்ண

ஆட்டப்பா மேகமொடு கிரந்தி ஊறல்
அப்பனே சொறிசிரங்கு வெள்ளை ரத்தம்
நாட்டப்பா சதையடைப்பு.....எல்லாம்
நலமாக ஓடிவிடும் நவிலொண் ணாதே.96

178. முயல் ரத்த நெய்

ஒண்ணாத நெய்யொன்று சொல்லக் கேளு
உத்தமனே முயல்ரத்த நெய்யைச் சொல்வோம்
வண்ணாத முயல்ரெத்தம் படிஅரை தான் வாங்கி
வளமாக வெள்ளாட்டின் நெய்யும் வாங்கு
கண்ணாத துவளைச்சாறு படியொன்றுக் குத்தான்
இஞ்சி நீர்ச் சாறுபடி யொண்ணு
அண்ணாத ஈசச்சாறு படிதா னொன்று
அப்பனேசங்குச் சாறுபடி ஒன்று வாங்கே. 97

வாங்கவே கற்கவகை சொல்லக் கேளு
வளமான ஏலமொடு தேக்கு வசகம்
ஆங்கவே கற்கவகை பாங்கி யோடு
அப்பனே வாலுளுவை கண்டங் கத்திரி
நாங்கவே இதுவகைக்குப் பலந்தா னொன்று
நலமாக அரைத்ததிலே கலக்கி டாநீ
சாங்கவே அடுப்பேத்திநீர் சுண்டக் காய்ச்சி
சமத்தான நெய்யைத்தான் வடித்துக் கொள்ளே. 98

கொள்ளவே புசித்து இருபோ துண்ண
குருவான சயமொட்டும் பறந்து போகும்
விள்ளவே சுவாசமொடு கோச மாந்தை
விதமான இருமலோடு ஈளை கம்மல்
கள்ளவே குறுகுறுப்பு மேல்சு வாசம்
கனமான சுரங்களுடன் பிணிக ளெல்லாம்
மெள்ளவே ஓடிவிடும் குத்தவ மெத்த
மகத்தான முயல்நெய்யின் பெருமை தானே.99

179. பிரம்ம லேகியம்

தானான லேகியந்தான் பிரம்ம லேகியம்
தனதான லேகியந்தான் சொல்லக் கேளு
வானான நன்னாரி நத்தைச் சூரி கொன்றை
வளமான சங்கு சங்குப்பி கூட்டு
கானான செம்முள்ளி ஆனை நெருஞ்சி
கனமான மேனி ....த்தாரி
ஆனான குவளம்வேர் குன்றி வேரும்
அப்பனே செவ்வல்லி நெருஞ்கில் செப்பே. 100

செப்பாத கைய்யானும்பொற் தாளிங் கூட்டு
செயலான மருதம்வேர் சின்னி வேரும்
வப்பாத ஆகாசக் கருடன் கூட்டு
வளமான விட்ணுமூலி கீழா நெல்லி
கப்பான மாந்தையொடு பொன்னாங் காணி
கனமான இலந்தை வேர் முசுமுசுக்கை
அப்பாத சேர்வையுட கிழங்கு புங்கு
அப்பனே விளாம்பிசினும் விலாமிச் சென்னே.101

ஆச்சென்ற அத்திப்பிஞ்சு இலவம் பிஞ்சு
அனதொரு கொன்றைப் பிஞ்சு
வாச்சென்ற பூவரசம் பூவு கூட்டு
வளமான நிலப்பணைக் கிழங்கு கூட்டு
நாச்சென்ற கொடிவேலி குமரி கூட்டு
நலமான கூந்தலொடு வேலிப்பருத்தி கொற்றான்
காச்சென்ற யிதுவெல்லாம் ரவி உலத்தி
கனமான வகைபலந்தான் மூன்று வாங்கே.102

வாங்கியே இடித்ததனை வடித்துக் கொண்டு
வளமான கடுக்காயும் கடுக்காய்ப் பிஞ்சும்
நாங்கியே சாதிக்காய் ஏலங்கிராம்பு குங்குமப்பூ
நலமான பத்திரியும் செண்பகப்பூ

ஆங்கியே திரிகடுகு இதுவெல் லாந்தான்
அப்பனே பலமொன்று தூள் பண்ணிச் சேரு
தாங்கியே பனவெல்லாம் பாவு செய்து
தளராத சூரணத்தைக் கொட்டிக் கிண்டே.103

கிண்டிவே மெழுகுபோல பதந்தான் பாரு
கெடியான லேகியத்தை இறக்கிக் கொண்டு
விண்டவே பூசித்து பாடம் வைத்து
வளமான இருபொழுது பாக்களவு கொள்ளு
நண்டவே பாண்டுடனே காசம் சூலை
நலமான வெட்டையொடு இரும லும்போம்
கண்டவே கன்னவிப் புருதி சூலை
கனமான கண்டமாலை வெண்குட்டம் போமே.104

போமப்பா கிராணியொடு இருமல் குட்டம்
பேரான கிரந்திஅரை யாப்புப் புண்ணும்
வாமப்பா வயிற்றுவலி வாத ரோகம்
வழிகாணா தோடுமடா வகுத்திட் டேனே
நாமப்பா நவப்பிரம்ம லேகியந்தான் சொன்னேன்
நலமான கர்ம நோய் லேகியந்தான் கேளு
காமப்பா கொடிவேலி வெள்ளறுகு முத்தக்காசு
கனமான சிவன்வேம்பு சங்கங் குப்பி. 105

180. கர்ம நோய் லேகியம்

குப்பென்ற வேலம்வேர் சின்னி வேரும்
குருவான குன்றிவேர் அரத்தைச் கச்சூரம்
அப்பென்ற கருவேலன் காயும்பொற் கையான்
அப்பனே வாதகரப்பன் பரங்கிச் சக்கை
,,, ,,,,, ,,,,, ,,,,, ,,
நலமான கண்டங்கத்திரி சங்கு மூலம்
தப்பென்ற தழுதாழை கொன்றை மின்னி
தரிதான கரையோடு விலாமிச்சம் வேரே. 106

வேரென்ற அமுக்குரா இலவன் வேரும்
வேதாந்த திரிமூலி சிவன்மூலி வேரும்
ஆரென்ற பூவரசம் வேரின் பட்டை
அப்பனே கொள்ளுக் காலானை மூலம்
நாரென்ற தூதுவளை புங்க வேரு
நலமான பொற்கையான் வேருங் கூட்டு
காரென்ற பாதிரியுங் குருந்தல் அல்லி
கனமான அத்திநாவல் ஆல விழுதே. 107

விழுதான இலுப்பை யொடு வெள் ளரிவேர்
வேதாந்த நாற்த் தனொடு நல்துளசி மூலம்
தழுதான பிசின்வகைதான் சொல்லக் கேளு
தரிதான புங்கனொடு அத்தி மாவும்
மழுதான கருவேலும் ஆல்அரசு கூட்டு
மகத்தான வேம்புடனே கொன்னைப் பிசினும்
அகழுதான மூலிவகை உலத்திக் கொண்டு
அப்பனே பலமூன்று இடித்துத் தானே. 108

தானான பிசின்வகையை உலர்த்திக் கொண்டு
தப்பாமல் பலமரைதான் இடித்துக் கூட்டு
உப்பாமல் சீனியுடப் பாவு செய்து
வளமாக சூரணத்தைக் கொட்டிக் கிண்டு
அப்பாமல் கடைச்சரக்கு சரியாய்க் கேளு
அப்பனே திரிகடுகு திரிப லாதி
மப்பாமல் சாதிக்காய் ஏலம் கிராம்பு
மகத்தான வாலுளுவை லவங்கம் பட்டை. 109

தானென்ற பலமரைதான் இடித்துத் தூவி
தப்பாமல் கிண்டிவர மெழுகாம் பாரு
வானென்ற இறக்கியலதப் பரணில் வைத்து
வளமான இருபாக்களவு கொள்ளு

நானென்ற பத்தியந்தான் புளிபுகையுந் தள்ளு
நலமான எண்ணையொடு பெண்ணுந் தள்ளு
ஆமென்ற கர்மத்தால் மேக ரோகம்
அப்பனே ததிவெட்டை மேலெரிவு கைகால்
காந்தல் போமே.110

ஆமப்பா வயிற்றுவலி குன்ம மெட்டும்
அத்தி ரணம் சூலைபதி னெட்டும்
காமப்பா காமாலை பவுத்தி ரங்கள்
கண் காணா தோடுமடா கன்மனோய்கள்
வாமப்பா அவரவர்தம் கன்மத் தாலே
வளமான சித்தித்த கன்ம நோய்தான்
நாமப்பா அத்தனையு இதனால் தீரும்
நலமான வடமொழி தான்இந்நூல் பாரே. 111

181. நூல் பெருமை

பாரப்பா வயித்தியரே உங்க ளுக்குப்
பரிவாக வாய்திறந்து சொல்வே னென்பார்
காரப்பா என்னூல்தான் எழுவத் தொன்றில்
காட்டான்என வாய்திறந்து அளுகாயப்பா
வாரப்பா அறுவத்தி நாலு சித்தர்
வளமாக நாடுதற்குக் கலைக்கியானஞ்
சொன்னேன்
ஆரப்பா அறிவார்கள் நிகண்டின் போக்கு
ஆதவன்போல் அத்திரிமூலாங் காணு
காணே.112.

காணப்பா வேத வியாசர் தானும்
கண்ணாடி முகம்போலே நாடிச் சொன்னார்
ஆணப்பா அதுதாண்டா எழுவத் தொன்று
அப்பனே ஆடவர்கு நாடி நோயும்

வாணப்பா பெண்ணுடைய நாடி பாரு
வளமான தத்துவங்கள் நாடித் தோயும்
மாணப்பா மடையர்களுக்கு நூல்கள் கிட்டா
மகத்தான சிவயோகி காண்பான் பாரே. 113

பாரப்பா ஆயிரத்திரு நூற்றில்தான்
பண்பான கருக்கிடைகள் வயித்தியந் தென்று
ஆரப்பா அறிவார்க ளிந்நூலைதான்
அப்பனே முழுதுமுத்துங் கண்ட பேர்க்கு
மாரப்பா வயித்தியனே யெதுக்க மாட்டான்
மகத்தான பி...... வயித்திய னாவான்
காரப்பா கருவாளி யென்றால் பார்ப்பான்
கருத்தறியாக் கழுதைகளே பாரார் தானே. 114

கானப்பா கருத்தறிய வேணு மென்றால்
கைகண்ட முப்பூவின் கருவைப் பாரு
வானப்பா சாகாமல் இருக்க வென்றால்
வளமான வாசியுட வளப்பங் காணு
கானப்பால் மூர்த்துமதைக் கொள்ள வெண்டால்
கண்மணியே கண்ணோட்டக் கனவைப் பாரு
மானப்பா மதியமுற்தந் தன்னைக் கொள்ளும்
மகத்தான சஞ்சீவிதிலைகப் பூட்டைக் காணே. 115

காணப்பா பூட்டுடனே திறவு கோல்தான்
கனமான ஆயிரத் தெட்டண்ட மாச்சி
வாணப்பா வழலையுட மகிமை கண்டால்
வளமான உப்பெல்லாம் கண்ணில் காணும்
மாணப்பா மகத்தான சித்தன் காண்பான்
மற்றோர்கள் மடையரவர் காணார் பாரு
ஆணப்பா ஆதி யந்தச பீசம்
அப்பனே அடிமுடியும் பிண்ட மாச்சே. 116

ஆச்சப்பா அயந்தருவு மண்ட மாச்சு
ஆகான வெளிமாச்சு ....ச்சு
மாச்சப்பா மதியமுதம் நாத விந்தும்
மகத்தான கண்ணிகடை சமாதி யாச்சு
காய்ச்ப்பா கற்பமென்ற வல்லாரை யாச்சு
கண்மணியே .....செங் கமல மாச்சு
நாச்சப்பா நந்தியென்ற அண்ட மாச்சு
நாதாந்த சித்தமுட மூலங் காணே. 117

காணப்பா சிவதீட் சைத்தி யானம்
கனமான தீட்சையெல்லாம் முப்புவாச்சு
ஆணப்பா வழலைஎன்ற அண்ட முப்பு
அப்பனே இதனாலே எல்லா மாச்சு
வாணப்பா இவ்விர....ண மூலம்
வளமான மூலமெல்லாம் பிரமனோடு விட்ணு
ருத்திரன்
மாணப்பா மண்டையென்ற கபாலந் தன்னை
மகத்தான சிவனெடுத்து உண்ணார். 118

182. திருமூர்த்தித் தைலம்

உண்ணப்பா அதுவிட்டா எல்லாம் போச்சு
உத்தமனே காயாதி கற்ப மில்லை
வண்ணப்பா காயென்ன கபாலந் தன்னில்
வளமான சரக்குத்தான் கபால முத்து
மண்ணப்பா அப்புவாச்சு உப்பு மாச்சு
மகத்தான அண்டமென்ற பிண்ட மாச்சு
கண்ணப்பாக் கலவிநோவு மாச்சு
கண்மணியே யோகமுடன் ஞானாச்சே. 119

ஆச்சப்பா சமாதிநிட்டை மார்க்கஞ் சொன்னேன்
அப்பனே தயிலத்தின் மார்க்கங் கேளு
வாச்சப்பா மும்மூர்த்தித் தயிலஞ் சொல்வேன்
வளமான புங்கம்வேர் சாறுபடி ஒன்னு
காய்ச்சப்பா பாதிரியின் வேர்ப்பட்டைச் சாறு
கனமான கோவையுடக் கிழங்குச் சாறு
நாச்சப்பா வாழைக்கட்டை எருக்கஞ் சாறு
நலமான வில்வவேர் கைப்படிச் சாறே. 120

சாறப்பா நெல்லிச்சாறு வல்லாரைச் சாறு
சதாசிவன் தன்மூலியுட தண்டுச் சாறு
ஆறப்பா கற்பூர வல்லிச் சாறு
அப்பனே சங்கஞ்சாறு செருப்படைச் சாறு
நாரப்பா நல்துளசி மாசிப் பத்திரி
நலமான சாறுடனே கைய்யான் சாறு
வாரப்பாக் குமரிச்சாறு கவுத்தும்பைச் சாறு
வளமான மாசிபத்திரி சாறுங் கூட்டே. 121

கூட்டப்பா இதுவெல்லாம் படிதா ஒன்று
குறியறியச் சீத றெண
வாட்ப்பா சக்கமூலி விபரஞ் சொல்வேன்
வளமான கீழா நெல்லி
ஆட்டப்பா சந்தனத்தூள் கற்கடக சிங்கி
அப்பனே வால்மிளகு சீர கந்தான்
நாட்டப்பா சாதிக்காய் ஏலங் கிராம்பு
நலமான லவங்கப்பட்டை மாசிக் காயே. 122

காயொடு இதுவெல்லாம் பலந்தா னொன்று
கனமான ஆவின்பால் தன்னா லாட்டி
வாயொடு எண்ணெயிலேகலக்கிக் கொண்டு
வளமாக அடுப்பேத்தித் தீயை மூட்டு

நாயொடு நீர்ச்சுண்டி மெழுகுபதத்தைப் பாரு
நலமான தயிலத்தை எறக்கிக் கொண்டு
ஆயோடு நெல்பானை தன்னில் வைத்து
அப்பனே ஏழுநாள் சென்றெடுத்துப் பாரே. 123

பாரப்பா தயிலத்தை மூழ்கி னாக்கால்
பதமான கிழவன் குமர னாவான்
ஆரப்பா நரைதிரையும் மறைஞ்சு போகும்
அப்பனே சூலையொடு இரணங்கள் கட்டி
நாரப்பா மேககன்ம வியாதி யெல்லாம்
நலமாகப் பொடிப்பொடியாய்ப் பறந்து போகும்
காறப்பா கன்மபாண்டு கன்ம மூலம்
கைகடந்த மூலகூ டெல்லாம் போமே. 124

183. கண்டா அவிழதம்

போமப்பா கண்டவிழ்தஞ் சொல்லக் கேளு
பொருளான காக...ம்பு ஆனைக் கொம்பு
நாமப்பா காண்டா மிருகத்தின் கொம்பு
நலமான அதிமதுரம் அக்கிராக் காரம்
காமப்பா கோட்டமுடன் ஏலம்கி ராம்பு
கனமானதும் பராடகமுஞ் சேரு
வாமப்பா சன்னதும்ப ராடகமுஞ் சேரு
வளமான திப்பிலியும் மாதுளம் விரையே. 125

விரையான பொரியுடனே சீனி கூட்டு
விதமான தேனிலே குழைத்துக் கொண்டு
அரையான நாவுதனி லேத்தின் னாக்கால்
அப்பனே தோழமுடன் குளுமை சன்னி
கரையான தோழமெல்லாம் கரைகெட் டோடும்
கனமான நோயயெல்லாங் கண்டு போகும்
நரையான நாவரச்சி சுரங்கள் போகும்
நலமான தாகமுடன் உழலைப் போமே. 126

போமப்பா என்னைப்போ லார்தான் சொன்னார்
புகழான யென்நந்தி அருளி னாலே
காமப்பா கணக்காக்கைப் பாகஞ் சொன்னேன்
கண்மணியே அறுவுனருளாந் தேறுவீரையா
வாமப்பா பன்னாயிரம் போலய்யா
வளமாகஆர் சொன்னார் வகுத்துப் பாரு
நாமப்பா என்நந்தி அருளி னாலே
நலமாகச் சொல்லிவிட்டேன் அவனியே
கேனே.127

கேளப்பா கிருதமொடு நெய்யுஞ் சொன்னேன்
கெடியான ஞானமொடு ஏகாந்தஞ் சொன்னேன்
வாளப்பா வழிதுறைகள் காணச் சொன்னேன்
வளமாக அறிவுடனே வீயாகஞ் சொன்னேன்
காளப்பா எண்ணெயுட தயிலஞ் சொன்னேன்
கண்மணியே என்னைப்போ லார்தான்
சொன்னார்
ஆளப்பா கலகரு தோயச் சொன்னேன்
அப்பனே மாத்திரைகள் களக்குஞ்
சொன்னேன். 128

சொன்னேனப்பா லேகியங்க ளெண்ணை சொன்னேன்
சொற்பெரியப் புடத்தயிலஞ் சக்கரங்கள்
சொன்னேன்
வன்னேனப்பா யோகமுடன் வாசி சொன்னேன்
வளமான தேவதைகள் வசியஞ் சொன்னேன்
கண்ணேனப்பா ஊமையெழுத் ததனைச் சொன்னேன்
கனமான வழலைமுப்புக் கருக்கள் சொன்னேன்
அன்னெனப்பா யோகநிட்டை யமுதஞ் சொன்னேன்
அப்பனே யினிமேலே சொல்லக் கேளே. 129

184. தோசம் 64க்கும் கியாழம்

கேளப்பா கியாழத்தின் பெருமை கேளு
கெடியான முத்தமொடு அக்கிராகாரம்
வாளப்பா அதிமதுரம் கோட்டம் ஏலம்
வளமான லவுங்கமொடு சித்திர மூலம்
னாளப்பா திரிகடுகு திரிப லாதி
நலமான வெடிப்பாலுஞ் சீரகத் தான்ரெண்டு
ஆளப்பா மிளகத்தனை பற்பம் பண்ணி
அப்பனே சீரகத்தைப் பொரிய வைய்யே. 130

வைய்யப்பா மத்ததெல்லாம் பொடித்துக் கொண்டு
வளமான தயிலந்தன்னைப் படியளந்து வார்
அய்யப்பா யெட்டொன்றாய்க் காய்ச்சி கொண்டு
அப்பனே மனிதருக்கு முப்பொழுது வாரு
கைய்யப்பா கையைவிட்ட தோழ மெல்லாம்
கைகடந்த தோழமுடன் அறங்கன் போகும்
மெய்யப்பா எலும்புரத்த மாங்கிழத்தில் வந்த
மேலான அறவைத்து நாலும் போமே. 131

185. சன்னிக்குக் கியாழம்

போமப்பா இன்னமொரு கியாழஞ் சொல்வேன்
புகழான கியாழமடா ஆருஞ் சொல்லார்
வாமப்பா வாலுளுவை சிவனார் வேம்பு
வளமான கண்டங்கத்திரி அரத்தை
நாமப்பா நஞ்சுமுறிக் கழுதைப் பாலை
நலமான திரிகடுகு வசம்பு வெள்ளுள்ளி
காமப்பாக் கொடுவேலி கஞ்சாங் கோரை
கனமான போழக்காய் மாசிக் காயே. 132

காயப்பா சாதிக்கா ய்சிட்டி ஏலம்
கனமான வங்கமொடுப் பரங்கிச் சக்கை
வாயப்பா வால்மிளகு சங்கம் பட்டை
வளமான நாயுருவி புளியம் பட்டை
நாயப்பா தூதுவளை முக்கதாரி
நலமான பேய்ப்புடலும் குவளம் வித்தும்
ஆயப்பா ஓமமுடன் கருஞ்சீரகமுங் கூட்டு
அப்பனே மாவுலிங்கம் வேருஞ் சேரே. 133

சேரப்பா வால்மிளகு மிளகு இரண்டும்
செம்மையுடன் பற்பமதாய்ச் செய்து கொண்டு
வாரப்பா மருந்தெல்லா மிடித்துக் கொண்டு
வளமாகக் கூடச்சேர் தண்ணியடி ரெண்டு
ஆரப்பா யெட்டொன்றாய்க் காய்ச்சிக் கொண்டு
அப்பனே சன்னிகண்ட மனிதர் சீய
ணாரப்பா சன்னியொடு விழ தோழங்கள்
நாடாது கியாழங்கண்ட போது தானே. 134

186. பித்தத்துக்குக் கியாழம்

தானப்பா மாத்திரைக ளனுப்பான மாக
தனக்கீய னோய்களெல்லாம் தவறுண் டேபோம்
வானப்பா இன்னமொரு கியாழஞ் சொல்வேன்
வளமான கியாழந்தான் மெத்த நன்று
ஆனப்பா அத்திப்பட்டை ஓதியம் பட்டை
அப்பனே சித்தாமுட்டிப் பேரா முட்டி
கானப்பா வில்வவேர் நெல்லி ஈர்க்கு
நலமான நரிப்பயத்தன் இலவன் வேரே. 135

வேரப்பா நெருஞ்சில்வேர் நெல்பொரியுங் கூட்டு
வேதாந்த ஓரிலைத்தாமரைக் கீழா நெல்லி
னாரப்பா ஆவாரம் வேருங் கூட்டு
நலமான தானியுடன் சீரகந்தான் கூட்டு

ஆரப்பா சீரகத்தைச் சட்டிதனில் போட்டு
அப்பனே பொரிய வைத்து மருந்தெல்லா
மிடித்துப்போட்டு
காரப்பா தண்ணீர்படி முக்கா லிட்டு
கனமாகத் தீயெரித்து எட்டொன் றாக்கே. 136

ஆக்கப்பா சிங்கிபற்பம் போட்டுக் கொண்டு
ஆனதொரு மேலெரிவு கைகால் காந்தல்
வாக்கப்பா வயிற்றெரிவு நெஞ்செரிவு போகும்
வளமான கண்ணெரிச்சல் மண்டைக் காந்தல்
காக்கப்பா சஞ்சார பித்த நோய்கள்
கடிதான நோயெல்லாங் கண்டு போகும்
நாக்கப்பா நந்தீசர் அருள்தன் னாலே
நலமாகப் போகுமடா நவின்றிட் டேனே. 137

187. ஆக்கிராணம்

ஏனப்பா ஆக்கிராண மகிமை சொல்வேன்
என்மகனே என்னைப்போ ல்ஆர்தான்
சொல்வார்
வானப்பா தும்பைவேர் வெண்மிளகு கூட்டு
வளமான முருங்கைவேர் பழம்புண் ணாக்கு
ஆனப்பா இதுவெயில் முகத்தில் கொண்டு
அப்பனே பலமொன்று தூக்கி வாங்கு
நானப்பா தூள்பண்ணிக் கூட்டிக் கொண்டு
நலமாகப் பரணிதனில் பதனம் பண்ணே. 138

பண்ணப்பா பூசித்து சன்னி நோய்க்கு
பணவிடைதூ எடுத்து குழா தன்னிற் சாடு
அண்ணப்பா சன்னிதோஷம் நாவரச்சி போகும்
அப்பனே குளிருடனே காய்ச்சல்தலை நோவும்

கண்ணப்பா விண்ணைவிட்டு ஓடிப் போகும்
கனமான பீடையோ எல்லாம் போகும்
மன்னப்பா ஆக்கிராண மறைப்போ இல்லை
மகத்தான வயித்தியரே மகிழ்ந்து பாரே. 139

பாரப்பா இதுக்கெல்லா முப்புப் போடு
பண்பாக முப்புப் போட்டால் வயித்தி யனாவாய்
காரப்பா மூப்பு விட்டால் விடாது
கனமான சிவநிட்டை முப்பு வய்யா
ஆரப்பா முப்புவாடா சினத்தி லாகும்
அப்பனே முப்பூவை வேண்டிக் கொள்ளு
நாரப்பா வயித்தியற்கு இன்னூல் போதும்
நாதாந்த போதமடா நவின்று கேளே. 140

கேளப்பா தேறுவோர்க் என்னூல் வேணும்
கெடியான வைத்தியர்க்கு என்னூல் வேணும்
ஆளப்பா வாதிகளுக்கு என்னூல் வேணும்
அப்பனே ஞானத்தோர்க் கென்னூல் வேணும்
வாளப்பா என்நூலுங் கற்கா மூடர்
வளமான செய்முறைகள் பலியா தைய்யா
நாளப்பா கருக்களுடன் செய்பாகந் திறந்து
சொன்னேன்
நலமான வைத்தியத்தின் தன்மை பாரே. 141

பாரப்பா வேண முறை யதிலே சொன்னேன்
பண்பாக கருக்க ளெல்லா இதிலே சொன்னேன்
ஆரப்பா அ........கள் கருக்கிடை சூத்தி ரத்தை
அப்பனே முழுதுமுற்றுங் கண்ட பேர்க்கு
வளமான சக்கரம்போல் இந்நூலப்பா
நாரப்பா ஆயிரத் தறுநூறுக்கு
நலமான இன்னூல்தான் திறவு கோலே
.... 142

188. அகத்தியரின் நூல்கள்

கோலான முத்தான காவியஞ் சொன்னேன்
குருவான பிற்பாடு கலைக்கியானஞ்
சொன்னேன்
வாலான பன்னீராயி ரந்தான் சொன்னேன்
வளமான நூலந்த தேறச் சொன்னேன்
காலான கால்தலையாய் மறைத்த தெல்லாம்
கனமான நிகண்டுமுன்னுந் திறந்து விட்டேன்
ஆலான முன்னூற்றைக் கொடுக்கப் போறார்
அப்பனே நிகண்டைத்தான் தேறக் கேளே. 143

கேளப்பா நான்சொன்ன முபபு வைதான்
கேள்வி கேட்ட ....ரிக்கள... ரைய
வாளப்பா நவகோடி சித்த ரெல்லாம்
வாங்கிமிகத் தேர்ந்தார்கள் வன்மை வன்மை
காளப்பா கனகசபை நடனங் கேட்டு
கனிவர்க்க மெனக் கனிந்தார் சித்தர்
நாளப்பா செய்நீரின் பெருமை கேட்டால்
நாதாந்த நாளதிலே நன்மை யாமே. 144

பாரப்பா வெகுகோடி சித்துக் கெல்லாம்
பண்பான செயநீரில் எடுத்து ஆடு
வாரப்பா வடமொழியில் நவகோடி பேர்கள்
வளமான செயநீரா என்நூலை யர்
காரப்பா என் பேரன் பொதிகைச் சித்தர்
கனமான பதினெண்பேர் குருநூ லென்னூல்
ஆரப்பா சித்தர்கள் பதினெண் பேரும்
அப்பனே வடதேசம் இருந்தோ ராச்சே. 145

ஆச்சப்பா ஈசனுட சாபத் தாலே
அப்பனே என்னாளும் பொதிகை சரந்தான்
காச்சப்பா சித்தர்களுங் கூடப் போனார்
கருவான பொதிகையிலே கருத்தை வைத்தார்
நாச்சப்பா தென்பொதிகை நார்க்கெல்லாம்
நாதாந்த என்னூல்தான் தாய்நூ லப்பா
மாச்சப்பா வடமொழியோன் தர்ம புத்திரன்
மகத்தான யென்னுடைய வாக்கியந் தானே. 146

தாளான மடையர்களே இன்னங் கேளு
தாக்கான என்னூல்தான் செப்போ டய்யா
வானான செப்போலை தன்னி லய்யா
வளமாகத் தேறுவோர்க் கெழுதி விட்டேன்
கானான கருவாளித் தேறுவா னென்று
கனமான நால்யுகமுந் தேறச் சொன்னேன்
ஆனான தர்மவான் தேறுவா ரப்பா
அப்பனே கருமிகளோ தேறார் பாரே. 147

189. வல்லாரை கற்பம்

பாரப்பா கற்பத்தின் மகிமை கேளு
பண்பான வல்லாரைக் கொடிமூலம் வாங்கி
சேரப்பா சுத்திசெய்து உலர்த்திக் கொண்டு
சேரான கல்லுரலில் தூளாய்ப் பண்ணி
வாரப்பா கரண்டிநிறை சூர ணத்தை
வளமான ஊசிநீர் தன்னில் கொள்ளு
ஆரப்பா யோகநிட்டை யமுந்த மூறும்
அப்பனே சாண்வயிறும் துந்து போமே. 148

போழப்பா நிட்டையுட கற்பஞ் சொன்னேன்
புகழான ஞானத்தின் கற்பங் கேளு
ஆமப்பா அடிமூலந் தன்னை வாங்கி
அப்பனே சுத்திபண்ணி உலத்திக் கொண்டு

காமப்பா கல்லுரலில் தூளாய்ப் பண்ணி
கரண்டிநிறை உள்கொள்ள ஞானப் போக்கு
வாமப்பா ஞானமது மாண்ப றுக்கும்
வளமாக சித்திக்கும் வகுத்துப் பாரே. 149

190. நிட்டைக்கு ஞான கற்பம் வங்கபற்பம்

பாரப்பா வங்கபற்பஞ் சொல்லக் கேளு
பரமான னாதாக்கள் மறைத்தா னப்பா
ஆரப்பா கடுகாய் பலந்தா னெட்டு
அப்பனேசுத்த சலந்தன்னி லுருக்கிச் சாய்ப்பாய்
வாரப்பா வஞ்சு தரமுருக்கிச் சாய்க்க
வளமான வங்கமது வெள்ளை யாகும்
நாரப்பா முன்சொன்னேன் சிவன்வேம்புத் தயிலம்
நலமாக அதில்உப்புப் போட்டுக் கேளே. 150

கேளப்பா ஆட்டியே மெழுகு போலாம்
கெடியான மெழுகதனைக் கவசம் போடு
வாளப்பா விந்ததுனால் கவசம் போலே
வளமாக மண்சீலை யேழும் போடு
னாளப்பா ரவியுலத்திக் காயப்போடு
நலமான முப்பத்தி ரெண்டருவில் போடு
ஆளப்பா அரனுதித்தாய் போலே வெள்ளை
அப்பனே போட்டெடுத்துக் கவசம் வாங்கே. 151

வாங்கப்பா யெழுகதுவும் கருகி நிற்கும்
வளமான வங்கமது வென்னீர் போலாம்
ஆங்கப்பா வென்னீரை யென்ன சொல்வேன்
அப்பனே வங்கபற்பந் தேனில் கொள்ளே

காங்கப்பா சயகாச மீளை ரெத்தம்
சண்டாள சயமெட்டுஞ் சாந்தமாகும்
நாங்கப்பா வெண்ணை நெய்யில் பணவிடை தான்
கொண்டால்
நலமான மேகமது இருவத் தொன்றும்
போமே.152

191. தாம்பர வெள்ளை

போமப்பா அனுப்பான மறிந்து கொண்டால்
புகழான சூலை பதினெட்டும் போகும்
ஆமப்பா பீனிசங்கள் கபாலச் சூடெல்லாம்
அப்பனே அகண்டுவிடும் னோய்கள் பாரு
காமப்பா தாம்பிரத்தின் வெள்ளை கேளு
கனமான தாம்பரந்தான் பலந்தானஞ்சு
னாமப்பாக் காச்சியதை ஊசி நீர் தன்னிலது
றாதாக்க நீளமாகப் பன்னிரெண்டு ந்தான்
தோயே. 153

தோயப்பா செம்பதுவின் களிம்பு போச்சு
துய்ய நிறமான அயச் செம்பைத் தான்
ஆயப்பா முப்புச் சுன்னாங் காரங் கொண்டு
அப்பனே கலவத்தில் பலம் ரெண்டிட்டு
னாயப்பா அண்டநீர் தன்னாலாட்டு
நலமான மெழுகது போலாகுமப்பா
மாயப்பா வழித்தெடுத்து செம்பின் மேலேபூசி
மகத்தான ரவிதனிலே சாமம் வைய்யே.154

வைய்யப்பா கிடுகிடைன்று நடுங்கிச் சாகும்
வளமான செம்பதின் மேலேழு சீலை
கைய்யப்பாப் பிலாமரத்தைத் தோண்டிக் கொண்டு
கனமான செம்பை வைத்தாப்படித்து

நய்யப்பா அதின் மேலே மண்ணுஞ் செய்து
நலமான போட்டெடுத்துப் பாரு
மெய்யப்பா வெள்ளை நிற மென்ன சொல்வேன்
மேலான தாம்பிர வெள்ளைப் பதனம் பண்ணே. 155

192. ஆனைக் கால் வியாதிக்கு

பண்ணப்பா பவகர்ம பாவிகளுக்குப்
பான அபானனுடன் வியானன் கூடி
அண்ணப்பா ஆனைக்கால் வியாதியாகும்
அப்பனே அவர் செய்த பாவரோகம்
கண்ணப்பா னாற்பது னாள் பற்பங் கொள்ள
கனமான அனுபான மாகக் கொள்ளு
விண்ணப்பா மண்ணை விட்டு ஓடிப் போகும்
வேதாந்த பற்பத்தின் மகத்துவங் காணே. 156

காணப்பா உதானனுடன் சமானன் கூடி
கனமான கர்மிகட்கு வாதமாகும்
வீணப்பா மகா கோடி பாவஞ் செய்தால்
வினையான விரைவாதம் வந்து சேரும்
ஆணப்பா அனுபானஞ் சூரணத்தில் கொள்ள
அப்பனே வாயுவெல்லாம் நிலை கெட்டோடும்
மாணப்பா சடத்திலுள்ள எண்பத்தி னாலும்
மதி கெட்டு ஓடிவிடும் மகத்துவம் பாரே. 157

பாரப்பா பற்பத்தைச் செய்தோர்க் கெல்லாம்
பண்பான நல்வினைகள் வந்து சேரும்
ஆரப்பா அறிவார்கள் கர்மந் தீர்ந்தால்
அப்பனே அது தர்ம மிவற்கே யெய்தும்
வாரப்பாப் பித்தளையின் வெள்ளை கேளு
வளமான பித்தளையைக் காச்சு காச்சு
நாரப்பா மூன்று தரம் விந்தில் தோய்க்க
நலமான பித்தளையின் களிம்பு போச்சே. 158

193. பித்தளை பற்பம்

போச்சப்பா அண்ட மெழு கைதான் பண்ணிப்
பொருளானப் பித்தளையைக் குகைக்குள் வைத்து
ஆச்சப்பா முந்திரிகை வித்துத் தயிலம் வாங்கி
அப்பனே குகைக்குள்ளே தயிலம் ஊத்தி
வாச்சப்பா மேல் குகைதான் வலுவாய் மூடி
வளமான சந்துவாய் மண் சீலை செய்து
னாச்சப்பாப் புடம் போட் டெடுத்துப் பாரு
நலமான வென்னீரும் நவின்று கேளே. 159

கேளப்பா குகையுடைத்துப் பாரு பாரு
கடியான பற்பத்தைப் பதனம் பண்ணு
வாளப்பா பற்பத்தை னோயிக் கீய
வளமான கர்ம னோய் நாடாதையா
நாளப்பா நாள் செல்ல மாட்டாதையா
நலமான சலுதியிலே னோய்கள் தீரும்
அளப்பா வயித்தியற்கோ பற்பம் வேணும்
அல்லாட்டால் வயித்தியற் கோ பலிதமில்லை. 160

194. அய பற்பம்

இல்லாப்பா அயபற்பம் சொல்லக் கேளு
இதமான அயத்தை நன்றாய் நெல் கனமாய்தட்டி
வல்லப்பாப் பனி நீரில் காய்ச்சித் தோய்க்க
வளமான யெட்டுத்தரம் காச்சித் தோய்நீ
அல்லப்பா அயனிறம் போலயந்ததை னாகும்
அப்பனே அயத்தகடு வெட்டை யாச்சு
கல்லப்பா முப்புடனே முப்புச் சுன்னம்
கனமாக வாய் நீரால் குழைத்துக் கேளே. 161

கேளப்பாத் தட்டின் மேல் கவசஞ் செய்து
கடியான மண்சீலை வலுவாய் செய்து
ஆளப்பா றவியுலத்திப் பிடத்தைப் போடு
அப்பனே பிரியதுவென்னீருகும்

வாளப்பா வென்னீத்தை யெடுத்துக் கொண்டு
வளமானப் பணிவெடை தானோகைக்கீய
நாளப்பா நசித்து விடும் பாண்டு வெல்லாம்
நலமான பற்பமடா நலமதாமே. 162

195. வெங்கல பற்பம்

ஆமப்பா வெங்கலத்தின் பற்பஞ் சொல்வேன்
அப்பனே புளியிலைச் சாறு பிழிஞ்சு கொண்டு
வாமப்பா முப்புச் சுன்னம் களஞ்சி போட்டு
வளமாக வெங்கலத்தைக் காய்ச்சித் தோய்க்க
னாமப்பா வெங்கலத்தை துருப்புப் போச்சு
னலமான வெங்கலத்தை யெடுத்துக் கொண்டு
காமப்பா புளியை நன்றாய் குளகமாய்ப் பண்ணி
கனிவான வெங்கலத்தைத் தனியே வைய்யே. 163

வையப்பா மேல் குகையை மூடி நன்றாய்
வளமான மண்சீலை யேழுரு செய்து
கைய்யப்பா ரவியுலத்திப் புடத்தைப்போடு
கனமான வீறியது வெளுமை யாகும்
கைய்யப்பா குகை தட்டி எடுத்துக் கொள்ளு
நலமான பற்பமடா எடை போகாது
நய்யப்பா னோய்களுக்குக் குடுத்துப்பாரு
நசையாத னோயெல்லாம் அகன்று போமே.164

196. திராயி பற்பம்

போமப்பா திராயினுட பற்பஞ் சொல்வேன்
பொருளான பற்பமதை ஆருஞ் சொல்லார்
வாமப்பா ஆராயைத் தான் காச்சிக் கொண்டு
வளமான யிலையின் சாறுபிடித்து

காமப்பா முப்பதுவும் விராகன் போட்டு
கனமான யேழுதிறந் தராயைத் தோய்க்க
ஆமப்பா துறாயது அங்கண் விட்டுச் சுத்தியாகும்
அப்பனே பற்பமது ஆக்கக் கேளே. 165

கேளப்பா வழலை மெழுகதனைப் பூசி
கடியான விந்தாலே சீலை செய்து
ஆளப்பாப் புடம் போட்டெடுத்துப் பாரு
அப்பனே நீறியது வெண்ணீறாய்ப் போம்
வாளப்பா மேக னோய்க் கெல்லாமீய
வளமான னோயயெல்லாம் பறந்து போகும்
நாளப்பா உந்தனுக்குத் துன்பந் தானும்
நாடாது ஒரு நாளும் நன்மை பாரே. 166

பாரப்பா குருச்சேர்த்து வயித்தியம் செய்தால்
பண்பான வயித்திய னென்ற பேருமாகும்
ஆரப்பா உடம்பதுவும் வளையார மூடர்
அப்பனே முழுப் பூசை செய்யாமல் தான்
நாரப்பா நாடதிலே பொய்கள் சொல்லி
நளின மெனுந் தழைச் சாத்தால் வயித்தியஞ் செய்வார்
காறப்பா கிறுமிகளாங் கால் வந்து
கடினவே சித்திக்குங் கண்டு கொள்ளே. 167

கொள்வே வாதமப்பா முப்பு வாகல்
கடிதான ஞான மெல்லாம் முப்புவாலே
அள்ளவே தந்திர மொடு இந்திர சாலம்
அப்பனே முப்புவாலாச்சுதப்பா
நள்ளவே யோகமுடன் வயித்தியப் பேர்
நலமான முப்பூவா லதைப்பார்
கொள்ளவே யான் விண்டனார் தான் விண்டார்
கோதரவே ....அறிந்து கேளே. 168

கேளப்பா முதல் மொழிதான் தட்சணத்தில்
கடியான காவிய நூல் தன்னைச் சொன்னான்
ஆளப்பா சகலகலை அதனால் விண்டான்
அப்பனே அம்மொழி போலாவரீர் சொல்வார்கள்
தேளப்பா கொட்டுதற் போல் சீக்கிரத்தில்
தேறவரா ......றெண்ட காவியம்பார்
வளமான நூலது தான் முச்சூடும் பாரே. 169

பாரப்பா கற்பங்கள் நன்றாய்ச் சொன்னான்
பண்பான சகந்தி னுட்ன் னீளமானநீ
நிகண்டப்பா ஆறுதிறன்காண்பாற்
நாரப்பா பேர் நிகண்டைப் போலே உண்டோ
நலமான நிகண்டப்பா அடக்கம் சொன்னேன். 170

பண்ணுவது பேயன்றன் காவியத்திலே
பண்பான குகையில் வைத்துப் பூசை பண்ணு
அண்ணுவது என்னுடைய சாத்திர மெல்லாம்
அப்பனே அடக்கமாகப் பூசை பண்ணு
வண்ணுவது வதித்துழையாய்ச் சொல்லிவிட்டேன்
வளமான அறிவுள்ளோர்க் கெரசை கொள்ளும்
அண்ணுவது செய்பாகஞ் செய்தக மெல்லாங்
கருத்தாகச் சொல்லிவிட்டோங் கண்டு கொள்ளே.171

ஒரு ஏடு சில பாடல்கள் பூச்சி அரித்துவிட்டன்

197. கந்தகச் செந்தூரம்

போடப்பா பொற்கைய்யான் சாத்தாலாட்டு
புகழான ஆவின் பால் சாமமாட்டு
வாடப்பா முருங்கப்பூ சாற் னால் சாமம்
வலமாக ஆட்டி பரமெழுகு போலாகும்

ஆடப்பாப் புளியாலே குகைதான் பண்ணி
அப்பனே குகையதனை யுலர வைத்து
நாடப்பா கந்தியதை வில்லை செய்து
நலமாக உலரவைத்து குகைக்குள் வைய்யே.178

வைய்யப்பா மேல் குகைதான் கொண்டுமூடி
வளமாக மண் சீலைதான் செய்து
கைய்யப்பா காடை பிலந் தன்னில்ப் போட்டு
கனமான செந்தூர மென்ன சொல்வேன்
நய்யப்பா நாத செந்தூரம் போலே
நாடதிலே சித்தர்கள் தான் சொல்லா ரய்யா
மெய்யப்பா சொல்லிவிட்டேன் விதியே மக்காள்
மேதினியில் மனிதர்களே செய்து கொள்ளே. 179

கொள்ளப்பா மண்டலந்தான் கொண்டாரானால்
குறை னோகும் குட்டமுடன் சூலை போகும்
விள்ளப்பா நரை திரைக ளெல்லாம் போகும்
விதமான காலத்துக் குருதி கற்பம்
அள்ளப்பாக் கட்டுவகைச் செயநீர் சேர
அப்பனே செல்லுகுறற் பூரண னறிவாய்
கேளப்பா தலைப் பிண்டத்தை வாங்கி நீயும்
நலமான கோரையுடன் வீரம் போச்சே. 180

போக்கப்பா முனையை நீ வாங்கிக் கொண்டு
புகழான பீங்கானைக் கலைத்துப் போட்டு
ஆக்கப்பா சுத்த சலம் உப்புப் போட்டு
அப்பனே ரவிதனிலே சதுர்நாள் வைக்க
நாக்கப்பா நல்ல தண்ணி அமுதம் போலாம்
நாதாரச் செய் நரைப்பதனம் பண்ணு
வாக்கப்பா யென்வாக்கு அமுத வாக்கு
வளமான சத்தியமாய்ச் சொல்லி னேனே. 181

198. லிங்கக்கட்டு தாளகக்கட்டு

சொல்லாப்பால் லிங்கத்தைத் தோய்ச்சு வாட்ட
சொற்பெரிய லிங்கமது முழுக் கட்டாகும்
அல்லப்பா மனிதருக்குச் சண்டாள தோஷம்
அப்பனே சன்னியுடன் றவத்தினாலும் போகும்
மல்லப்பா தாளகத்தைக் கட்டக்கேளு
மகத்தான தாளகத்தைச் செயநீரில் தோய்த்து வாட்டி
நல்லப்பா வெடியுப்பைச் சயநீரிலரைத்துப்பூசி
நலமாகப் புடம் போட கப்பால் பாரே. 182

பாரப்பா தாளத்தைத் திருப்பினாலே
பண்பான மேகமது யிருவத் தொன்றும்
ஆரப்பா அறிவார்கள் மேக மெல்லாம்
அப்பனே ஓடிவிடு மறிந்து பாரு
நேரப்பா தாளகத்தி னுப்பாற் சொல்வார்
நேரான உப்பிது தான் செய்து கொள்ளு
வாறப்பா வீலத்தின் கட்டைக் கேளு
விதமான செயநீரில் தோய்த்துக் கொள்ளே.183

கொள்ளப்பா கொடி வேலியிலை யரைத்துக் கொண்டு
அப்பனே துரித்தக் கொண்டு ஊதினாக்கால்
வள்ளப்பா வீரமது உருக்கிக் கட்டாம்
வளமான கட்டதனைப் பூசைபண்ணு
நள்ளப்பா கட்டெடுத்துக் தோச சன்னி
நலமாக ஓடுரைப்பு ரைத்தார் கேளே. 184

கொள்ளப்பா உறுடையுடன் விழச் சன்னி போகும்
வேதாந்த வீரத்தின் பெருமை பெத்த
அள்ளப்பா பூரத்தின் கட்டைக் கேளு
அப்பனே பூரத்தின் கட்டி வாங்கி

னள்ளப்பா ஓட்டில் வைச்சு செயநீரால் சுருக்குதற்கு
நலமான பூறமது உருக்கிக் கட்டு
வள்ளப்பா சுரமுடனே குளிறு காய்ச்சல்
வளமான பூரத்தால் போகும் பாரே. 185

பாரப்பா வெள்ளையுட கட்டுக் கேளு
பண்பான கைச்சாறும் னாகச் சாறும்
ஆரப்பா செப்பில் வைத்து சுருக்கு தாக்க
அய்யனே சினத்திலே உருகிக் கட்டும்
நாரப்பா குருக்கட்டு இவைக ளெல்லாம்
நலமான கட்டதனை எடுத்துக் கொண்டு
வாரப்பா மனிதருக்குக் கொடுத்திட்டாக்கால்
வளமான அறுபத்தி னாலும் போமே. 186

199. அப்பிரகச் செந்தூரம்

போமப்பா அப்பிரேக செந்தூரம் கேளு
பேரான கிஷ்ணனப் பிரேகம் வாங்கி
வாமப்பா அத்தினனி மண்ணைப் போக்கி
வளமான கலவத்தில் பலமஞ்சிட்டு
ஆமப்பா கேந்தியது பற்பம் ரெண்டிட்டு
அப்பனே கட்டு வகை நூறெட்டு
ஓமப்பா சொல்லுகு றோம் கைய்யான் சாற்றால்
நலமாகச் சாமமது ரெண்டு மாட்டே. 187

ஆட்ட வேறாக சார் சாமம் ரெண்டு
அப்பனே பொற் கையான் சாற்றான்ச் சாமம்
மாஆட்டவே படிச்சாத்தால் சாமம் மூணு
வளமான முலைப் பாலால் சாமம் மூணு
காட்டவே முப்பூ சின்னம் பலந்தான் போடு
கனமான அல்லிச்சாற் சாம மூணு
னாட்டவே ஆட்டியதை வில்லை செய்து
நலமாக ரவிதனிலே யுலத்திடாயே. 188

ஆயப்பா அன்டோடாட்டத் தூளாய்ப் பீனி
அப்பனே தெள்ளியதை மாவதாக்கு
வாயப்பா சுத்த சலந் தன்னிலிட்டு
வளமாகப் பிசைந்து அதைக் கையாய்ப் பண்ணி
னாயப்பா மேலுக்குக் குகைதான் பண்ணி
நலமாக ரவி தனிலே உலத்திக் கொண்டு
கொயப்பா வில்லை தனைக் குகையில் வைத்து
கனமாக மேலுமந்தக் குகையை மூடே. 189

மூடப்பா சீலை மண்ணேழுஞ் செய்து
முக்கிய முள்ள புடமிதுதானிடுப்பளவு போடு
காட்டப்பா காடக்கினியாய் வேகுமதுபாரு
கனமான செந்தூரம் என்ன சொல்வேன்
வீடப்பா அருளணைப் போல் காந்தி வீசும்
வளமான செந்தூரம் பணிவிடை தான் கொள்ள
மாட்டப்பா மக கேட்ட மேக னோய்கள்
மகத்தான நீரழிவு தித்திப்பு நீரே. 190

நீரான மேக ரெத்தப் பிரமியங்கள்
நிலை கெட்டு ஓடுமாம் நிகழ்த்தினேன் பாரு
வாறான வசியத்தினதிலதஞ் சொல்வேன்
வளமான யிந்திரசோபம் குழியான் மின்னி
காரான சுழல்வண்டு ஈப்போல் நடந்து
கனமாக பொடிபண்ணி முத்தூசிலூட்டி
ஆறான தலை................வாங்கி
அப்பனே கபாலத்தில் சேர்த்துக் கொள்ளே. 191

கொள்ளப்பா திரியதனைக் கொளுத்தி வைத்து
குணமான தலைப் பிண்ட ஓடு கவுழ்க்க
வெள்ளப்பா எரியிட்டு மைதான் பத்தும்
வளமான மையதனைச் சுரண்டி வைத்து

நள்ளப்பா புழுகுடனே கஷ்தூரி கூட்டி
நலமான முப்பூவது களஞ்சி போட்டு
மெள்ளப்பா மத்தித்து சிமிளில் வைத்து
மேலான லாடமதில் பணவிடைதான் போடே.192

போடப்பா திலத்தின் வசியஞ் சொல்வேன்
பேரான ஸ்ரீகளுக்கு 'கிம்' மென்றே சொல்லி
ஆடப்பாப் புருசருக்கு 'நம்' மென்றே சொல்லி
அப்பனே ராசருக்கு "மங்சிங்" கென்று
நாடப்பா சனங்களுக்கு "வங்" கென்று சொல்லி
நாறான மிருகமது மாமா வென்று
வாடப்பா வசியமது அஞ்சுஞ் சொன்னேன்
வளமானப் பயித்தியத்தியற்கு வேணும் பாரே.194

சொன்ன தொரு யென் மொழிதான் மூன்று லெட்சம்
சொற் பெரிய காவிய நூல் முதல் மொழி
தானப்பா
அன்ன தொரு அன்னாருக் கலைக் கியானம்தான்
அப்பனே கலைக் கியான சித்த ரென்ன
சொல்வேன்
நன்னதொரு வாதமொடு ஞானப் போக்கு
வளமான கிருகை யுட னிந்திர சாலம்
கன்ன தொரு கர் நடத்திலனந்தம் பேர்க்கு
அன்ன தொரு மோடியிலே அனந்தம்
பேர்க்கே.194

நய்யவே பிராமணரை வய்ய வேண்டாம்
நலமான பெரியோரைக் கெஞ்ச வேண்டாம்
கைய்யவே தர்மமிது மகவே பண்ணு
கனமான தளவாசம் பழிக்க வேண்டாம்
அய்யவே சன்னாசர் போல் குருக்கள்
அப்பனே யிவர்களைத் தான் பழிக்க வேண்டாம்.195

196 ....

பழிச் சாக்கால் வர் பிழைச்ச பிழைப் பெல்லாம் போம்
பரிவாக அன்னமிட்டார்க்கு மோசம் செய்தால்
அழிச்சாக்கா லென்னலடர் மோசம் வேண்டாம்
அப்பனே நெட்டுடைத்தாலச் சரிபமெய்தும்
நழிச்சாக்கால் பெரியோரைப் பழித்த கற்பம்
நலமாக எத்தேசம் போனால் தீரும்
வழிச்சாக்கால் வல் வினைகள் வந்து சேரும்
வளமான பாவமடா வகுத்துப் பாரே. 197

பாரப்பா நால்வேதத் தொகுப்பைக்காணு
பண்பான வேதாந்தக் குறியைக் காணும்
ஆரப்பா வாசியுடக் குரியைக் காணும்
அப்பனே கண்ணோட்ட மறிந்து பாரு
நேரப்பா நின்ற நிலை தன்னைக் காணு
நேரான கருவிக ளோடொக்கக் காணு
னாறான நாதாந்த வயித்தியந் தானின்னூல்
நலமான கருக்கிடை தானின்னூல் முத்தே. 198

முற்றும்

சரசுவதி மகால் நூலக வெளியீடுகள்

தமிழ் எண்ணும் எழுத்தும்	150-00
தமிழ் ஆய்வுக் கடடுரைகள்-1	100-00
தமிழ் ஆய்வுக் கட்டுரைகள்-2	150-00
சரபேந்திர பூபால குறவஞ்சி	100-00
தமிழறி மடந்தை கதை	80-00
அறப்பளீசுர சதகம்	150-00
திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்	160-00
தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு	450-00
பாபநாச க்ஷேத்திர மகாத்மியம்	250-00
கணபதி உபாசனை	120-00
தல வரலாற்று ஆய்வுக்கட்டுரைகள்	180-00
காலவிதான பத்ததி	150-00
காலப்பிரகாசிகை	250-00
பலதிரட்டு வைத்தியம்	140-00
அகத்தியர் ஆயுர்வேத சாத்திரம்	400-00
வைத்திய பலதிரட்டு	200-00
மகாமகம் - 2016 சிறப்பு மலர்	250-00
அருணாசல புராணம்	150-00
மதுரைவீரன் அம்மானை	120-00
கர்ப்பிணி பால ரோக சிகிச்சை	300-00
சரநூல்	200-00
சிற்ப ரத்தினம்	500-00
நட்சத்திர சிந்தாமணி பாகம்-1	310-00
நடசத்திர சிந்தாமணி பாகம்-2	200-00
நடசத்திர சிந்தாமணி பாகம்-3	250-00
வராகர் ஓரா சாத்திரம்	500-00
அகத்தியர் லோக மாரணம்	150-00
நீதித்திரட்டு	600-00
காலவிதான பத்ததி	150-00
கார்த்தவீர்யார்ஜுன-உபாஸ-பத்ததி	100-00
நீதி நூல்	100-00

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், மருத்துவக் குறிப்புகளையும், இன்ன பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. அச்சுவடிகள் பழுதடைவதற்குள் சரசுவதி மகால் நூலகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பெரிதும் பயன்படும்.

இந்நூலகத்திற்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் நூலகம் உள்ளளவும் பெறுவர். அவை நூல் வடிவில் பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு. அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகால் நூலகத்திற்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்

இயக்குநர்,

சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம்,

தஞ்சாவூர்.

0 5 7 7